தமிழ் நூல் விவர அட்டவணை
ஞானசம்பந்தன் (அ.ச)


பொதுப் பதிப்பாசிரியர்
அ. ச. ஞானசம்பந்தன்



தமிழ்நாட்டு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற
வெளியீடு
1965

TAMIL NŪL VIVARA AṬṬAVAṆAI

# தமிழ் நூல் விவர அட்டவணை

## The Madras State Tamil Bibliography

## 1901-1910

இரண்டாம் தொகுதி — முதற் பகுதி

(Volume II—Part I)


பொதுப் பதிப்பாசிரியர் :

**அ. ச. ஞானசம்பந்தன்**

*தனி அலுவலர் & செயலாளர்*

**தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம்**

*கல்வி சுகாதாரத் துறை*

*பதிப்பாசிரியர் :*

**மு. சண்முகம்**

*கண்காணிப்பாளர்*



தமிழ்நாட்டு அரசினர் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்ற வெளியீடு

1965

விலை ரூ. 6.

116/1—A

முதற் பதிப்பு—1965

தமிழ்நாட்டு அரசாங்கத்திற்காகத் தமிழ்நாட்டு எழுதுபொருள்
அச்சுத்தொழில் நெறியாளரால் பதிப்பிக்கப்பெற்றது.

1965

# பதிப்புரை

தமிழ் நூல் விவர அட்டவணையின் இரண்டாம் தொகுதி, 1901-ஆம் ஆண்டு முதல் 1910-ஆம் ஆண்டு வரையில் சென்னை மாநிலத்தில் அச்சிடப்பட்டுப் பதிவு செய்யப்பெற்ற தமிழ் நூல்களுக்கு உரிய விவரங்களைத் தருவதாகும். இவற்றுள் இப்பொழுது கிட்டியுள்ள நூல்களுக்கு இரு பகுதிகளும், கிட்டப்பெறாத நூல்களுக்கு ஒரு பகுதியும் ஆக மூன்று பகுதிகளில் இது அமைந்துள்ளது.

இம் முதல் பகுதியில் டியூவி தசாம்சப் பொருட் பாகுபாட்டின்படி 700 எண் பகுதிகள் வரையில் குறிக்கப்பட்டுள்ள பொருள்கள் அடங்கியுள்ளன. 1,124 தனி நூற்படிகளுக்குரிய விவரங்கள் உள. இவற்றுள் சில நூல்களோடு இணைந்துவந்த தனி நூல்கள், அதாவது தொடர் எண் பார்க்க என்னும் குறிப்பினால் சுட்டப் பெற்றவை 208. ஆக 1,332 நூல்களுக்குரிய விவரங்கள் இதில் காணப்படும்.

இதன் அமைப்பு முறை முதல் தொகுதியின் அமைப்பு முறையினை அடியொற்றியே அமைந்துள்ளது. ஒரு நூலோடு சேர்ந்து அமைந்துள்ள பிற நூல்களுக்குரிய வடிவ அளவும், விலையும் அவை இணைந்துள்ள முதல் பகுதி நூல்களுக்கு உரியவாம். ஆதலின், தொடர்ச்சி எண் பார்க்க எனச் சுட்டப்பெற்ற சேர்க்கை நூல்களுக்கு இவ்விரண்டு விவரங்களும் கொடுக்கப்படவில்லை. நூல் விளக்கக் குறிப்புக்கள் முதல் தொகுதியைப் பார்க்கினும் சற்று விரிவாகவே பெரும்பான்மை நூல்களுக்கும் இத் தொகுதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாம் பகுதியில், இலக்கிய நூல்களும் இவ்விரு பகுதிகளிலும் அமைந்துள்ள பொருளகராதி, நூல்களுக்குரிய ஆசிரியர் அகர வரிசை, நூல் அகர வரிசை ஆகியவையும் அமைந்துள்ளன. இவற்றின் பின்னர் வரவிருக்கும் மூன்றும் பகுதியில், 1901 முதல் 1910 வரையுள்ள காலப் பகுதியில் கிட்டப் பெறாத நூல்களின் விவரமும், அவற்றிற்குரிய அகராதிகள் முதலியனவும் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

பதிப்பாசிரியர்.

## பொருள் அட்டவணை


| டியூவி எண். | பொருள். | பக்க எண். |
|---|---|---|
| | **000—பொது நூல்கள்** | |
| 001 | பொது அறிவு .. .. .. | 1 |
| | **100—தத்துவம்** | |
| 133 | சித்தியல் .. .. .. | 1 |
| 133·[1] | சித்தர் பாடல்கள் .. .. .. | 1 |
| 133·4[1] | மாந்திரிகம், ஜாலவித்தை .. .. | 2 |
| 133·5 | சோதிடம் .. .. .. | 4 |
| 133·5[1] | தொடுகுறி சாத்திரம் .. .. | 13 |
| 133·5[1] | நிமித்த நூல் .. .. .. | 13 |
| 133·5[1] | பட்சி சாத்திரம் .. .. .. | 14 |
| 133·5[1] | பல்லியடி சாத்திரம் .. .. | 15 |
| 133·6 | கைரேகை சாத்திரம் .. .. | 15 |
| | **170—அற நூல்கள்** | |
| 170 [1] | பொது அற நூல்கள் : கவிதை .. | 16 |
| 170·[1] | பொது அற நூல்கள் : உரைநடை .. | 17 |
| 170·[1] | குழந்தைகட்கான அற நூல்கள் .. | 21 |
| 170·[1] | சதகங்கள் .. .. .. | 25 |
| 170·[1] | திரட்டு நூல்கள் .. .. .. | 28 |
| 181·43 | தருக்கம் .. .. .. | 29 |
| 181·48 | வேதாந்த தத்துவம் .. .. | 30 |
| 181·48[1] | சைவ சித்தாந்த சாத்திரம் .. .. | 59 |
| 181·48[1] | சைவ சித்தாந்த தத்துவம் .. .. | 61 |
| 181·48[1] | வைணவ தத்துவம் .. .. | 68 |
| 181·482 | சங்கராச்சாரியரின் நூல்கள் .. .. | 71 |

# 200—சமயம்

## 220–284—கிருத்துவம்


| டியூவி எண். | பொருள். | பக்க எண். |
|---|---|---|
| 220.95[1] | விவிலிய நூற் கதைகள் | 73 |
| 221·4 | பழைய ஏற்பாடு | 73 |
| 221·95[1] | பழைய ஏற்பாட்டுக் கதைகள் | 74 |
| 223·2 | தோத்திரப் பாடல்கள் | 74 |
| 225·4 | புதிய ஏற்பாடு | 82 |
| 225·92 | புதிய ஏற்பாட்டு மாந்தர் வரலாறு | 82 |
| 226·2 | சுவிசேஷம்—மத்தேயு | 83 |
| 226·6 | அப்போஸ்தலர் நடவடிக்கைகள் | 83 |
| 230 | கொள்கை விளக்கும் வேத சாத்திரம் | 83 |
| 232·9 | கிறிஸ்துவின் வாழ்க்கை | 89 |
| 242 | தியானம் | 89 |
| 242·2 | நித்திய தியானம் | 91 |
| 252 | பிரசங்கங்கள் | 91 |
| 291 | சர்வ சமயம் | 92 |
| 294 | இந்து சமயமும் பௌத்த சமயமும் | 93 |
| 294·3 | பௌத்த மதம் | 93 |
| 294·5 | இந்து சமயம் : பொது | 94 |
| 294·53 | யோகம், நிஷ்டை, விக்கிரக வழிபாடு | 95 |
| 294·535 | தலபுராணம் | 99 |
| 294·536 | விழாக்கள் | 120 |
| 294·538 | விரதங்கள் | 121 |
| 294·551 | சக்தி தோத்திரம் | 124 |
| 294·551 | சைவ சமயம்—துதி நூல்கள் | 128 |
| 294·551 | முருகன் தோத்திரம் | 139 |
| 294 551 | விநாயகர் தோத்திரம் | 146 |
| 294·551 | சைவ சமய நெறிகள் | 148 |
| 294·551 | சைவ புராணங்கள் | 153 |
| 294·552 | பிரம்ம சமாசம் | 159 |
| 294·554 | வைணவ சமயம் : சமய நெறிகள் | 159 |
| 294·554 | வைணவ சமயம் : தோத்திரம் | 160 |

| டியூவி எண். | பொருள். | பக்க எண். |
|---|---|---|
| | 220-284—இருத்துவம்—தொடர்ச்சி. | |
| 294·554 | வைணவ புராணங்கள் .. .. | 167 |
| 294·592 | புனித நூல்கள்—உபநிடதம் .. | 168 |
| 294 592 | பகவத்கீதை .. .. .. | 168 |
| 297 | இசுலாம்—பொது .. .. | 171 |
| 297·2 | இசுலாமியக் கொள்கை விளக்கம் .. | 176 |
| 297·3 | சமய வழிபாடு, தோத்திரம்.. .. | 179 |
| 297·5 | சமய ஒழுக்க நூல்கள் .. .. | 181 |
| 297·63 | நபிகள் வரலாறு .. .. | 181 |
| 297·64 | இசுலாமியப் பெரியார் வரலாறு .. | 182 |


## 300—சமுதாய சாத்திரங்கள்


| | | |
|---|---|---|
| 301 | சமூக இயல் .. .. .. | 183 |
| 301·426 | மனையற இயல் .. .. .. | 183 |
| 301·4520954 | இந்திய சாதிகள் .. .. .. | 189 |
| 320·9 | இராச்சிய பரிபாலனம் .. .. | 196 |
| 320·954 | இந்தியா அரசியல் .. .. | 197 |
| 330 | பொருளாதாரம் .. .. .. | 200 |
| 332·4 | பணம் .. .. .. | 200 |
| 338·0954 | தொழில் முறை .. .. .. | 200 |
| 342·42 | இங்கிலாந்து அரசியல் .. .. | 201 |
| 343·0954 | கிரிமினல் சட்டம் .. .. .. | 201 |
| 347·2 | நில உரிமை .. .. .. | 203 |
| 347·6 | இந்து சட்டம் .. .. .. | 203 |
| 349·54 | இந்தியச் சட்டம் .. .. .. | 203 |
| 349·54[1] | முகமதிய சட்டம் .. .. .. | 206 |
| 352 | இராச்சிய அரசாங்க பரிபாலனம் .. | 206 |
| 352·2 | போலீஸ் இலாக்கா .. .. | 206 |
| 355·54 | இராணுவப் பயிற்சி .. .. | 207 |
| 371·3 | போதனு முறை .. .. .. | 208 |
| 371·73 | உடற்பயிற்சி .. .. .. | 211 |
| 372·3 | இயற்கைப் பாடம் .. .. .. | 212 |

| டி.டூ.வி எண். | பொருள். | பக்க எண் |
|---|---|---|
| | **400—மொழியியல்** | |
| 428·64 | ஆங்கிலம்-தமிழ்ப் பாடப் புத்தகம் | 212 |
| 494·8112 | எழுத்து-சொல் இலக்கணம் | 213 |
| 494·8112 | யாப்பிலக்கணம் | 214 |
| 494·8112 | பாட்டியல் நூல்கள் | 216 |
| 494·8112 | அணியிலக்கணம் | 218 |
| 494·8112 | பொது இலக்கண நூல்கள் | 219 |
| 494·8113 | தமிழ் அகராதி | 219 |
| 494·8114 | நிகண்டு | 220 |
| 494·8115 | இலக்கணம்—பாடப் புத்தகம் | 220 |
| 494·8118 | தமிழ் கற்க உதவும் நூல்கள் | 224 |
| 494·81186 | பாடப் புத்தகங்கள் | 224 |
| | **500—விஞ்ஞானம்** | |
| 500 | விஞ்ஞானம்-பொது | 257 |
| 510 | கணித இயல் | 258 |
| 511 | எண் கணிதம் | 258 |
| 520 | வான நூல் | 261 |
| 540 | இரசாயனம் | 261 |
| 580 | தாவர இயல் | 261 |
| 590 | விலங்கு இயல் | 262 |
| | **600—தொழில் நுட்பமும் பயனுறு கலைகளும்** | |
| 610·3 | மருத்துவ அகராதி | 262 |
| 610·73 | தாதியர் பயிற்சி | 262 |
| 612 | மானிட உடலியல் | 263 |
| 614 | சுகாதாரமும் தடுப்பு முறைகளும் | 264 |
| 615 | நோய் தீர்க்கும் முறைகள் | 265 |
| 615·1[1] | ஆயுர்வேத வைத்தியம் | 269 |
| 615·1[1] | சித்த வைத்தியம் | 271 |
| 615·942 | விஷ வைத்தியம் | 273 |
| 618·2 | பிரசவ வைத்தியம் | 274 |
| 618·9 | சுகாதாரமும் குழந்தை நோய்களும் | 275 |

| டியூவி எண். | பொருள். | பக்க எண். |
|---|---|---|
| | 600—தொழில் நுட்பமும் பயனுறு கலைகளும்—தொடர்ச்சி. | |
| 630 | விவசாயம் .. .. .. | 276 |
| 641·5 | குடும்பக்கலை .. .. .. | 279 |
| 646·4 | தையற்கலை .. .. .. | 280 |
| 653·1 | சுருக்கெழுத்து .. .. .. | 280 |


## 700—நுண் கலைகள்


| | | |
|---|---|---|
| 728 | கட்டிடக்கலை .. .. .. | 280 |
| 741·29 | சித்திரக்கலை .. .. .. | 281 |
| 745·5 | கைத்தொழில்கள் .. .. .. | 281 |
| 770 | புகைப்படக் கலை .. .. .. | 281 |
| 780 | இசைக்கலை .. .. . | 282 |
| 784·0954 | வாய்ப்பாட்டு, கீர்த்தனம் .. .. | 282 |
| 784·0954 | பதங்கள் .. .. .. | 305 |
| 784·0954 | வழிநடைப் பதம் .. .. .. | 307 |
| 784·0954 | ஜாவளி .. .. .. | 308 |
| 793·73 | விடு கதைகள் .. .. .. | 308 |

# கோலன் பகுப்பு முறையில் பொருள் அட்டவணை.

---

Z பொதுவியல்
1 பொது அறிவியல்
2 நூலக இயல்
3 புத்தக இயல்
4 செய்தித் தாளியல்
A அறிவியல்
B கணிதம்
C பௌதிகம்
D பொறி இயல்
E இரசாயனம்
F தொழில் இயல்
G உயிர் நூல்
H புவி இயல்
HZ சுரங்க இயல்
I தாவர இயல்
J விவசாயம்
K விலங்கு நூல்
L மருத்துவம்
M பயனுறு கலைகள்
Δ சித்தியல்
N அழகுக் கலைகள்
O இலக்கியம்
P மொழி இயல்
Q சமயம்
R தத்துவம்
S உள நூல்
T கல்வி
U நில நூல்
V சரித்திரம்
W அரசியல்
X பொருளியல்
Y சமூக இயல்
Z சட்டம்

# குறியீடுகளும் அவற்றின் விளக்கமும்.

| | | |
|---|---|---|
| உ.ப. .. | .. | உரைநடை நூல் பக்கங்கள். |
| உ.ப.+செ.மூ.எ. | .. | உரைநடை பக்கங்கள், செய்யுள் மூலம் எண்ணிக்கை. |
| உ.ப.+செ.மூ.ப. | .. | உரைநடை பக்கங்கள், செய்யுள் மூலம் பக்கங்கள் (அல்லது) உரை நடையும் செய்யுளும் சேர்ந்து பக்கங்கள். |
| செ.மீ. .. | .. | சென்டி-மீட்டர். |
| செ.மூ.எ. .. | .. | செய்யுள் மூலம் எண்ணிக்கை |
| செ.மூ.உ.எ. | .. | செய்யுள் மூலமும் உரையும் எண்ணிக்கை. |
| செ.மூ.ப. .. | .. | செய்யுள் மூலம் பக்கங்கள் |
| செ.மூ.உ.ப... | .. | செய்யுள் மூலமும் உரையும் பக்கங்கள். |
| தொ.எ. .. | .. | தொடர் எண். |
| தொ.து. .. | .. | தொகுத்தது. |
| மொ.து. .. | .. | மொழிபெயர்த்தது. |
| i. .. | .. | நூலின் பெயர். |
| ii. .. | .. | பதிப்பாசிரியரின் பெயரும் பதிப்பகமும். |
| iii. .. | .. | நூல் பதிப்பித்த ஆண்டு. |
| iv. .. | .. | நூலின் அளவு (உள்ளடக்கம்). |

v. .. .. நூலின் வடிவ அளவு.

vi. .. .. விலை.

vii. .. .. விளக்கம்.

viii. .. .. நூலின் பதிவு எண் குறிப்பு.

[ ] .. .. இவ்விதம் பகர அடைப்புக்குள் உள்ளவை ஒரு நூலோடு இணைந்துள்ள வேறு நூல்களின் பெயர்கள்.

. . . . இவ்விதம் புள்ளி இட்ட இடங்கள் விவரம் தெரிய இயலாத பகுதிகளும் விளக்கம் எழுதப்பெறாத பகுதிகளும் ஆகும்.

& .. .. ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர், பதிப்பாசிரியர், பதிப்பகங்களைக் காட்டும்.

குறிப்பு.—ஒவ்வொரு நூலுக்கும் i முதல் viii எண் அளவாக மேற்குறித்த விவரங்கள் தரப் பெற்றிருக்கும். இவற்றுள் ஏதேனும் ஓர் எண் பகுதியின் விவரம் தெரியாவிடின், அங்கே புள்ளிகள் இட்டுக் காட்டப்பட்டிருக்கும். ஒரு நூலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புப் படிகள் காணப்படின், முதற் படிக்கே எட்டு எண் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கும். பிந்திய படிகளுக்கு முந்திய பதிப்பில் இல்லாத புது விவரங்கள் மட்டுமே சுட்டப்பெற்றிருக்கும். பிந்திய படிகளில் விடுபட்டுள்ள எண்களுக்கு உரிய பொருள்கள் முதற் படியில் கண்டனவேயாம் என்பது குறிப்பு.

இத் தமிழ் நூல் விவர அட்டவணை வெளியீட்டில் மேற்கொண்ட பொருளடைவு, நூற் பொருளடைவு, நூற் பொருட் குறிப்பின் அடைவு முதலியன பற்றிய செய்திகளை முதல் தொகுதியின் முதற் பகுதியில் உள்ள முகவுரையில் (xv-xx) காணலாம்.

# தமிழ் நூல் விவர அட்டவணை

## தொகுதி II

### பொருளடைவு

## 000—பொது நூல்கள்

### 001—பொது அறிவு

**கிருஷ்ணசாமி அய்யர், வி. எஸ்., கயத்தாறு.**

1. i. *பொது அறிவு வினு விடை—இரண்டாம் பாகம் : மூன்றுவது பதிப்பு;* ii. *விவேக பாநு அச்சியந்திரசாலை, மதுரை;* iii. 1910; iv. *உ.ப.* 62 ; v. 16×13 *செ.மீ.*; vi. 0–3–0 ; vii. *மரஞ் செடி, கொடி, பிராணிகள் பற்றிய பொது விவரங்களும், ஸ்தல அதிகாரிகளின் கடமை முதலிய அரசியல் செய்திகளும் விளக்கப் பெற்றுள்ளன.* viii. 365/1910/II.

## 100—தத்துவம்

### 133—சித்தியல்

### 133.[1]—சித்தர் பாடல்கள்

**நாகரத்தினம் பிள்ளை, வே., சிந்தாதிரிப் பேட்டை.**

2. i. *சித்தர் வணக்கம்;* ii. *ஸ்ரீ லட்சுமி நாராயண விலாசம் பிரஸ், சென்னை ;* iii. 1910 ; iv. *செ.மூ.ப.* 1+59+24=84 ; v. 14×11 *செ.மீ.*; vi. .......... ; vii. *அகத்தியர் முதலாக உள்ள சித்தர்களுக்கு வணக்கம் கூறும் நூல். இவ்வணக்கப் பாடல் விருத்தங்களாலானவை. இதனபின் கண்ணிகள் என்னும் பகுதியும், சித்தர் வணக்க ஏலப்பாட்டு என்பதும் உள்ளன.* viii. 839/1910/III.

## 133.4 [1]—மாந்திரிகம், ஜாலவித்தை

**ஆத்மநாத சுவாமி—மொ. து.**

3. i. *அனுபவ மாந்திரீக சாஸ்திரம்* ; ii. எஸ். முத்தையா பிள்ளை ; ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை ; iii. 1906 ; iv. உ.ப. 24 ; v. 18×11 செ.மீ.; vi. 0–2–0 ; vii. மலையாளத்தில் அனுபவமாயச் செய்து வருகிற பற்பல மாந்திரீக முறையை விவரிப்பது. தத்தாதிரேய மஹரிஷியால் ஸம்கிருதத்தில் அருளிச் செய்யப்பட்டது. நாராயண விஷ்ணு நம்பூதிரியார் அவர்களால் மலையாள மொழியில் மொழி பெயர்த்த நூலின்படி அமைந்த தமிழ் மொழிபெயர்ப்பு. viii. 334/1906/IV.

△,87

**இராமஸ்வாமி ஐயர், சு.**

4. i. *சுப்பிரமணியர் ஸர்வரோக நிவாரண மாந்திரீகம் : முதல் பதிப்பு* ; ii. ஆரியன் அச்சியந்திரசாலை, கும்பகோணம் ; iii. 1910 ; iv. உ.ப. 141 ; v. 21×13 செ.மீ.; vi. 1–8–0 ; vii. மந்திரம் மூலம் சிகிச்சை செய்வது பற்றிக் கூறுவது. இம்மந்திரங்கள் சிருஷ்டி காலத்தில் உமாதேவிக்கு உபதேசிக்கபபட்டு அதர்வண வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறதாம். கந்தரநுபூதியில் மந்திரங்கள் வந்துள்ளன என்கிறார். சுப்பிரமணியர் அருளால் தாம் பெற்ற பேற்றைப் பிறர்க்கும் பயன்பட நூல் வடிவாக்கியுள்ளார் ஆசிரியர். சில வியாதிகளுக்குரிய சிகிச்சை முறைகள் தரப்பட்டுள்ளன. இந்து தூக்க சிகிச்சா சாஸ்திரமும் இதில் கவனிக்கத்தக்கது. மகாமந்திரங்கள் பற்றி 27 பாடங்கள் உள. viii. 187/1910/II.

△,87

**ஏகாம்பர முதலியார், செஞ்சி.**

5. i. *பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு—1500* ; ii. ஜி. ஆர். பாலைய நாயுடு ; பாலவிர்த்தி போதினி அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1907 ; iv. உ.ப. 396 ; v. 21×14 செ.மீ.; vi. 0–12–0 ; vii. 'பிரபஞ்ச மிரட்டு' என்றும் 'பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு' என்றும் இது கூறப்பெறும். பீதாம்பர ஐயர் மாணுக்கருக்கு மாணுக்கராகிய சி. பாஷிய ஐயங்கார் அனுக்கிரகத்தின்படி எழுதப் பெற்றது. 1500 கண் கட்டு வித்தைகள் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 1/1907/II.

△,87

6. i. *மணிமந்திர வைத்திய சேகரம்* ; ii. ந. முருகேச நாயகர்; கோல்டன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 200 ; v. 21×14 செ.மீ.; vi. 1–4–0 ; vii. இராசி, நாட்பலன் முதலியனவும் மருந்துவகைகளும் விவரிப்பது. viii. 40/1902/IV.

△,87

புலிப்பாணி முனிவர்

i. சிதம்பர பூசை—25 : முதற் பதிப்பு (தொ. எ. 8 பார்க்க); ii. நரசிம்மலு செட்டி அண்டு கம்பெனி, சென்னை ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ. உ.எ. 26 ; vii. இந்நூலுக்கு மா. வடிவேலு முதலியார் அவர்கள் உரை எழுதியுள்ளார். viii. 31/1906/II.

△,87

i. பலதிரட்டு ஜாலம்—200—மூலமும் உரையும் : முதற் பதிப்பு (தொ. எ. 8 பார்க்க) ; ii. எம். நரசிம்மலு செட்டி அண்டு கம்பெனி, சென்னை ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.உ.எ. 202 ; vii. கண்கட்டு வித்தை, எலுமிச்சம்பழ வித்தை, நோக்கு வித்தை, ஜலஸ்தம்பனம் முதலிய பல ஜால வித்தைகள் பற்றிப் பேசுவது. சிதம்பரபூசை (25), விநோத ஜாலத்திரட்டு (11) என்னும் வேறு இரண்டு நூற்பகுதிகளும் இதன்கண் உள. இவற்றிற்கு மா. வடிவேலு முதலியார் எழுதிய உரை அமைந்துள்ளது. viii. 31/1906/II.

△,87

i. விநோத ஜாலத்திரட்டு : முதற்பதிப்பு (தொ. எ. 8 பார்க்க) ; ii. எம். நரசிம்மலு செட்டி அண்டு கம்பெனி, சென்னை ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ. உ.எ. 11 ; vii. இந்நூலுக்கு மா. வடிவேலு முதலியார் உரை எழுதியுள்ளார். viii. 31/1906/II.

△,87

7. i. மாந்திரீக தீபம்—முதற்பாகம் ; ii. ப. சுப்பிரமணிய முதலியார் ; ஞானசம்பந்த அச்சுக்கூடம், சென்னை ; iii 1906 ; iv. செ.மூ.உ.எ. 53 ; v. 21×13 செ.மீ.; vi. 0–6–0 ; vii. மாந்திரீகம் பற்றிய பல செய்திகளையும் விளக்கும் செய்யுள் நூல். இதன் இறுதியில் சகல தோஷக குறிகள் பற்றி உரை நடையில் தரப்பெற்ற பகுதியும் உளது. இதனை நீககும் வகை குறித்து இரண்டாம் பாகத்தில் கூறுவதாக ஆசிரியர் குறித்துள்ளார். viii. 178/1906/IV.

△,87

முத்து வீரராம முனிவர்

8. i. ஜாலத்திரட்டு [பலதிரட்டு ஜாலம், சிதம்பர பூஜை, விநோத ஜாலத் திரட்டு] : முதற் பதிப்பு ; ii. எம். நரசிம்மலு செட்டி அண்டு கம்பெனி, சென்னை ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.உ.எ. 100 ; vii. சிற்சில வசியம், ஆரூடம், கண்கட்டு வித்தை முதலியன பற்றி உரைப்பது. இதற்கும் இதனோடு சேர்ந்துள்ள பிற நூல்களுக்கும் மா. வடிவேலு முதலியாரின் உரை அமைந்துள்ளது. viii. 31/1906/II.

△,87

**வேலாயுத சுவாமி, ம.**

i. மலையாள மாந்திரீக ஹரிச்சுவடி—முதற் பாகம்; ii. திரு வேங்கட முதலியார், மயிலை; ஸ்ரீ மாதவ விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. உ.ப. 58; v. 18×11 செ.மீ.; vi. 0–4–0; vii. மந்திரங்கள், சக்கரங்கள், அவற்றால் உள தாம் பயன் ஆகியவை தரப்பட்டுள்ளன. viii 119/1909/IV.

△,87

**ஹக்கீம் முஹம்மது நிஜா முகையிதீன் சாஹிபு**

10. i மஹாஜால ரஹஸ்ய விளக்கம்: முதற் பதிப்பு; ii. வெள்ளைய நாடார்; ஜூபிலி அச்சுயந்திரசாலை, சென்னை; iii. 1901; iv. உ.ப. 105+10=115; v. 21×14 செ.மீ.; vi. 0–12–0; vii. 29 ஜால வித்தைகள் படங்களுடன் விளக்கப் பெற்றுள்ளன. மஹாதேவ முதலியாரால் யுக்தி செய்து கண்டுபிடிக்கப்பட்ட நீரேற்றும் இயந்திரம், பாட்டரியிலால் இல்ட்டு கொடுக்கும் முறை ஆகியவை அனுபந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 237/1901/III.

△,87

## 133.5—சோதிடம்

**அய்யாசாமி பிள்ளை, டி. எஸ்.**

11. i. ஜாதக விளக்க சோதிட அரிச்சுவடி என்னும் சுந்தர சேகரம்—முதற்பாகம்; ii. தி. சபாபதி பிள்ளை; ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், சென்னை; iii. 1903; iv. உ.ப. 96; v. 21×14 செ.மீ.; vi. 0—8—0; vii. சோதிடம் கற்றுக்கொள்ள விரும்புவோர் எளிதில் உணரும் பொருட்டு அகஸ்தியர், இடைக்காடர், குமாரசுவாமி தேசிகர், ரோமரிஷி, புலிப்பாணி, ஆதி சங்கராச்சாரியார், நந்தி தேவர் முதலிய மகான்கள் இயற்றிய சோதிட சாஸ்திரங்களிலிருந்து திரட்டிச் சேர்த்து, சோதிட பிரதம சிக்ஷையாக இயற்றப்பெற்றது. உரைநடையில் உள்ளது. viii. 9/1904/II.

△2:864

**அனுமந்த செட்டியார்**

12. i. சார்வரி வருஷ யோக ஜாதகங்கள்; ii. வைஜயந்தி அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1901; iv. உ.ப. 52; v. 22×14 செ.மீ.; vi. 0—4—0; vii. சார்வரி வருஷத்தில் பிறந்திருக்கின்றவர்களுடைய 2448 விதமுள்ள ஜாதகங்களின் யோகங்களையும் அவற்றின் பலன்களையும் நன்கு விளக்கி இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. ஜோதிடர்களுக்கும் மற்றவர்களுக்கும் மிகவும் உபயோகமானது. viii. 251/1901/II.

△2:864

**ஆதி சங்கராசாரிய சுவாமிகள்**

13. i. *புத்திர பாவகம்* ; ii. எம். சுப்பிரமணிய பிள்ளை & த. குப்புசாமி நாயுடு; iii. விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 623 ; v. 22×14 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. . . . . . . ; viii. 538/1908/IV.

△2:864

**ஆறுமுக செட்டியார், தே., திருப்பாதிரிப்புலியூர்.**

14. i. *ஜோதிட சாஸ்திரம்* ; ii. விக்டோரியா பாண்டியன் அச்சுக் கூடம், ஆணிக்காரன் சத்திரம் ; iii. 1904 ; iv. உ.ப. 108 ; v. 21×15 செ.மீ. ; vi. 2—0—0 ; vii. சோதிட சாஸ்திரத்தை வசன நடையில் தருவது. சோதிடம் பொய் நூலல்ல என்பது குறித்து ஆசிரியர் தமது முகவுரையில் விரிவாக எழுதியுள்ளார். இந்நூல் பதினாறு அத்தியாயங்கள் கொண்டது. viii. 161/1904/II.

△2:864

**இராம தேவர்.**

15. i. *சோதிடத் திறவுகோல்* [சோதிட சிந்தாமணி]: முதற்பதிப்பு; ii. நாராயணசுவாமி முதலியார் ; வாணி விலாச அச்சுக்கூடம் ; iii. 1903 ; iv. செ.மூ.எ. 310 ; v. 22×14 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. இந்நூலுக்குச் செஞ்சி ஏகாம்பர முதலியார் எழுதிய உரையுள்ளது. viii. 217/1903/IV.

△2:864

**இராமலிங்கம் பிள்ளை**

16. i. *சோதிட பால சிட்சை* ; ii. மனோன்மணி விலாச அச்சுக் கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.ப + உ.ப. 80 ; v. 21×14 செ.மீ. ; vi. 0—6—0 ; vii. உரைநடையாகவும், செய்யுளாகவும் சோதிடம் பற்றிய செய்திகளை விவரிப்பது. சோதிடம் பயிலப் புகுவார்க்குத் துணை நூல். viii. 281/1907/IV.

△2:864

**உரோமரிஷி**

i. *சோதிட சிந்தாமணி* (தொ.எ. 15 பார்க்க) ; ii. நாராயணசுவாமி முதலியார் ; வாணி விலாச அச்சுக்கூடம் ; iii. 1903 ; iv. செ.மூ.உ.எ. 210; vii. இந்நூலுக்குச் செஞ்சி ஏகாம்பர முதலியார் செய்த உரை உள்ளது. viii. 217/1903/IV.

△2;864

**ஏகாம்பர முதலியார், செஞ்சி.**

17. i. அனுபோக ஆரூட சிந்தாமணி : முதற்பதிப்பு ; ii. இரத்தினவேலு முதலியார் ; வாணி விலாச அச்சுக்கூடம், ஆ புரி ; iii. 1907 ; iv. செ.மு.உ.ப. 63 ; v. 22×14 செ.மீ. ; vi. 0—8—0 ; vii. சில சோதிட நூல்களின் உதவியால் எழுதப்பெற்றது. பல் வகையான ஆரூட விவரங்கள் உள்ளன. viii. 66/1908/I.

△2:864

18. i. அனுபோக சோதிடப் பலதிரட்டு—முதற்பாகம் : முதற் பதிப்பு ; ii. ப. எதிராஜுலு நாயுடு ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம் ; iii. 1906 ; iv. செ.மு.ப. + உ.ப. 87 ; v. 21×14 செ.மீ. ; vi. 0—10—0 ; vii. பற்பல சோதிட கிரந்தங்களிலுள்ள இரகசியங்களை ஆராய்ந்து எழுதப்பெற்றது. உரைநடையும் செய்யுளுமாக நூல் அமைந்துள்ளது. viii. 249/1906/IV.

△2:864

19. i. அனுபோக சோதிடப்ரம்ம ரஹஸ்யம்—முதற் காண்டம் ; ii. மசு. பாலகிருஷ்ண முதலியார் ; ஸ்ரீமாதவ விலாச அச்சுக் கூடம், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 120 ; v. 22×14 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. 'ஜாதக சித்தி என்னும் அனுபோக சோதிடப்ரம்ம ரஹஸ்யம்' என்பது நூலின் முழுப் பெயர். பன்னிரண்டு பாகங்களாகப் பாகுபடுத்தப் பெற்றுள்ளது இந்நூல். இதன் பொருள் அட்டவணை அகராதி அடைவில் முகப்பில் தரப்பெற்றிருக்கிறது. நட்சத்திர பலாபலன், கிரகப் பிரவேசம், விவாகம் முதலிய சுபகாரியங்களுக்குரிய காலங்கள் முதலியவை பற்றி விவரிக்கின்றது. viii. 545/1910/IV.

△2:864

20. i. ஆரூட அலங்காரம் ; ii. அரங்கநாத முதலியார், கன்னிப் புத்தூர் ; பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ.மு.உ.ப. 180 ; v. 22×14 செ.மீ.; vi. 1—0—0 ; vii எட்டுப் பிரதியும் அச்சுப்பிரதியும் தற்காலம் சோதிடர்கள் அனுபோகமாகச் சொல்லிக் கொண்டுவரும் ஆரூடங் களைக் கேட்டு வாங்கியும் ஆராய்ந்தும் எழுதப்பெற்றது. உத்தம, மத்திய ஆரூடம் முதல் ஜாமங்களின் ஆரூடம் வரையில் 20 பகு திகளாகப் பாகுபடுத்தப்பெற்றுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் ஆரூடச் சக்கரங்களின் படங்களும் உள்ளன. இதற்குச் சித்தர் ரஹஸ்ய மென்னும் ஆரூட அலங்காரம் என்றும் பெயர் உண்டு. viii. 181/1907/II.

△2:864

21. i. ஆரூட சேகரம்—முதற் பாகம் : முதற்பதிப்பு ; ii. ப. சுப்பிரமணிய முதலியார் ; கணேச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1903 ; iv. செ.மூ.ப. + உ.ப. 98 ; v. 21×14 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. இராசி, கிரகம், திசை, பஞ்சபட்சி முதலியவை பற்றிய ஆரூடங்கள் உரைப்பது. viii. 97/1903/II.

△2:864

22. i. சோதிட கோட்சார சிந்தாமணி ; ii. கண்ணய்யா அண்டு கம்பெனி ; கிளாட்ஸ்டன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902; iv. உ.ப. 120 ; v. 21×14 செ.மீ. ; vi. 0—12—0 ; vii. பற்பல கணித நூல்களைக் கொண்டு ஆராய்ந்து எழுதப் பெற்றது. பொருளட்டவணை அகராதி நூல் முகப்பில் உள்ளது. கிரகங்களின் நிலை, பலாபலன் ஆகியவற்றை உரைப்பது. viii. 223/1902/III.

△2:864

23. i. சோதிட நூலாதாரம் ; ii. டி. கோபால் நாயகர் ; கோல்டன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 46 ; v. 21×14 செ.மீ. ; vi. . . . . . . ; vii. வருடப் பெயர், நாள், திதி முதலியவற்றின் பெயர், ஜாதகத்தில் திசை முதலியன அறியும் வகை ஆகியவை பற்றி வகுத்துரைப்பது. பல சோதிட நூல்களின் விளம்பரங்களும் இறுதியில் உள்ளன. viii. 42/1902/IV.

△2:864

24. i. சோதிடப் பிரகாசம்—மூலமும் உரையும் : முதற் பதிப்பு ; ii. ஜி. ஆர். பாலைய நாயுடு ; பாலவிர்த்தி போதினி அச்சுக் கூடம் ; iii. 1906 ; iv. செ.மூ.உ.எ. 415 ; v. 21×14 செ.மீ. ; vi. . . . ; vii. பற்பல சோதிட கிரந்தங்களிலுள்ள இரகசியங்களை ஆராய்ந்து எழுதப்பெற்றது. திதி, நட்சத்திரம், யோகம் முதலியவற்றின் பலன் உரைப்பது. நூல் முழுமைக்கும் உரை உள்ளது. viii. 245/1906/IV.

△2:864

25. i. சோதிட பிரபஞ்ச சேகரம்—முதற் பாகம் : இரண்டாம் பதிப்பு ; ii. தி. மு. முருகேச முதலியார் ; ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 96; v. 21×14 செ.மீ.; vi. 0–12–0 ; vii. கிரகம், இராசி, நட்சத்திரம் ஆகியவை பற்றிய பலன் உரைப்பது. viii. 199/1901/II.

△2:864

26. i. சோதிட மர்ம சாஸ்திரம்—முதற் பாகம் ; ii. வித்யாரத் நாகரம் பிரஸ், சென்னை ; iii. 1902; iv. செ.மூ.ப. 106; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. பதினெண் சித்தர்கள் செய்த

சோதிட நூற்களைப் பின்பற்றிச் செஞ்சி ஏகாம்பர சோதிடரால் எழுதப்பெற்றது. இராசி, பலாபலன், இலக்கின பாவம் முதலிய பலவற்றையும் விவரிப்பது. viii. 237/1902/IV.

△2:864

27. i. சோதிட ரஹஸ்யமென்னும் ஆயுள் கணித மூலமும் உரையும் : முதற் பதிப்பு ; ii. பி. எம். பொன்னுசாமி முதலியார் ; அமெரிக்கன் டைமண்டு பிரஸ், சூளை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.ப. 181 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. ஒருவரது ஆயுள் நாள் அளவு அறியும் கணிதம் பற்றி விவரிக்கின்றது. viii. 184/1908/III.

△2:864

28. i. ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல் ; ii. திரிபுரசுந்தரி விலாச அச்சுக்கூடம் ; iii. 1905 ; iv. உ. ப. 112 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ..; vii. ஸ்திரீ ஜாதகத் திறவுகோல், புருஷ ஜாதகத் திறவுகோல் என இருபெரும் பகுதியாகவுள்ளது. இராசி, நட்சத்திரம் முதலியவற்றின் நிலை, பலாபலன் ஆகியவை பற்றி விவரிப்பது. viii. 241/1905/II.

△2:864

29. i. கந்தராரூடம்—முதற்பாகம் 305 [கூப சாஸ்திரம்] ; ii. தி. சபாபதிப் பிள்ளை ; ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், திருச்சி; iii. 1907 ; iv. செ.மூ.எ. 305 ; v. 22×14 செ.மீ.; vi. ....... ; vii. சுப்பிரமணியக் கடவுள் அகஸ்திய மகா முனிவருக்கு உபதேசித்தருளிய சோசிய மலையாரூடம் என்றும் இதற்குப் பெயர் உண்டு. கிரக பலன் முதலியன கூறுவது. viii. 252/1907/IV.

△ 2:864

**கலியபெருமாள் பிள்ளை, டி.எஸ்.**

30. i. நஷ்ட ஜாதக தீபிகை—மூலமும் உரையும் ; ii. எஸ். கேட்ஸ் கம்பெனியார் ; இந்தியா முத்திராட்சர சாலை, தஞ்சை ; iii. 1907; iv. செ.மூ.உ.ப. 97; v. 18×11 செ.மீ.; vi ........ ; vii. முதலில் நஷ்ட ஜாதக ஆரூடமும், அதன் பின் வாக்கிய கிரக கணிதமும் வேண்டிய அளவாகச் சுருக்கி உரைப்பது. viii. 163/1908/III.

△2:864

**குமார தேவர்**

31. i. சுத்த சாதகம் ; ii. கல்யாண சுந்தர முதலியார், பூவை ; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.உ.எ. 93 ; v. 17×13 செ.மீ. ; vi. ... ....; vii. இது குமார தேவர் அருளிய பதினாறு சாஸ்திரங்களுள்

ஒன்று. இதற்குத் திருக்கைலாய பரம்பரைத் திருத்துறையூரா தீனம சொக்கலிங்க சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் இயற்றிய விருத்தியுரை தரப்பெற்றிருக்கிறது. ‘ திருத்துறையூராதீன வரலாறு’ முகப்பில் உள்ளது. viii. 277/1909/IV.

△ 2:864

32. i. **கோடங்கி மாலை** ; ii. சி. குப்புசாமி பிள்ளை ; ஜி. எஸ். கிருஷ்ணய்யர் அச்சுக்கூடம், ஈரோடு ; iii. 1901 ; iv. செ.மூ.ப. 38 ; v. 21×14 செ.மீ. ; vi. ........; vii. பன்னிரண்டு ராசிகளின் பலன் கூறுவது. viii. 242/1901/I.

△ 2:864

**சகாதேவர்**

33. i. பாச்சிகை சாஸ்திரம் [தேவதா சக்கரத் தொடு குறி]; ii, ஏகாம்பர முதலியார், செஞ்சி; ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம், பூவிருந்தவல்லி ; iii. 1905 ; iv. செ.மூ.உ.எ. 60 ; v. 21×13 செ.மீ.; vi. 0-1-0 ; vii. பாச்சிகை உருட்டிப் பலன் பார்க்கும் முறையினை வெளியிடுவது. மூலமும் உரையுமாக உள்ளது. viii. 194/1907/I.

△ 2:864

**சிவசுப்பிரமணியர், மா. வெ.**

34. i. சுப்பேயம் என்னும் பிரச்நை சாஸ்திரம் ; ii. லக்ஷ்மி விலாசம் பிரஸ், இராமநாதபுரம் ; iii. 1907 ; iv. செ.மூ.உ.ப. 68 ; v. 15×12 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. ஹோரா சாஸ்திரம், தந்திர சாஸ்திரம், சமிதை என்னும் சோதிட சாத்திரப் பகுப்பு மூன்றனுள் இந்நூல் ஹோரா சாஸ்திரத்தின் பகுதியாய் அமைந்துள்ளது. வடமொழியில் பிருதுயசஸ் என்பார் செய்த ஷட்பஞ்சசிகை என்பதே இதற்குரிய மூலநூலாம். பிற சோதிட நூலின் உதவியில்லாமலே எளிதில் உணருமாறு பொழிப்பும், விசேடக் குறிப்புக்களும் காட்டப்பெற்றுள்ளன. செய்யுளகராதி, பொருளகராதிகளும் இடம் பெற்றுளளன. viii. 28/1908/IV.

△ 2:864

**சுப்பராய பிள்ளை, பு.சி.**

35. i. ஜோசிய ரகசியம்—ஸ்தானாதி பத்திய காண்டமும் கிரக காரக காண்டமும் ; ii. டெம்பிள் அண்டு கம்பெனி, சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 25 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. லக்ன ஸ்தானாதிபத்ய பலன், கிரகங்கள் கொடுக்கும் பலன் ஆகியவை பற்றி உரைப்பது. viii. 121/1906/III.

△ 2:864

**தியாகராஜ பிள்ளை, திருச்சிறுப்பள்ளி.**

36. i. *தியாகராஜ சோதிட ஆனந்தக்களிப்பு*—300 : *இரண்டாம் பதிப்பு* ; ii. *ஜோசியம் கோவிந்தசாமி பிள்ளை; ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், திருச்சி* ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 680 ; v. 21×14 செ.மீ. ; vi. ...... ; vii. *கிரகங்களின் நிலை முதலியனவும் அவற்றுன் உளதாகும் பலன்களும் பற்றிக் கூறுவது. ஆனந்தக்களிப்பு மெட்டில் அமைந்துள்ளது இந்நூல்.* viii. 253/1907/IV.

△2:864

**துரைசாமி அய்யங்கார், தி.**

37. i. *ஜோதிஷம் : முதற் பதிப்பு* ; ii. *ஸ்ரீ ஹயவதன விலாஸ அச்சியந்திரசாலை, கும்பகோணம்* ; iii. 1909 ; iv. உ.ப. 34+44+32+30+42=182 ; v. 25×17 செ.மீ. ; vi. 3-8-0 ; vii. *'பிரகஸ்பதி பகவான் சுக்கிரனுக்குக் கிரந்த சுலோகத்தில் உபதேசித்த கிரமத்தைத் தமிழ் அர்த்தத்துடன் வெளியிடலானது' என்று முகப்பில் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். பதின்மூன்றுவது அத்தியாயம் 'புத்ர பாவ கவிபரம்' தொடங்கி பத்தொன்பதாம் 'திசா புக்தி பலன்' வரை இதில் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயம் பற்றிய கிரந்தப் பகுதியும், தமிழ் மொழிபெயர்ப்பும் தரப்பட்டிருக்கின்றன. இது பகுதி பகுதியாய் வெளியிடப்பெறும் இந்த நூலின் ஒரு பகுதியாகும்.* viii. 154/1909/IV.

△2:864

**நடராசர், கீரனூர்.**

38. i. *சாதகாலங்காரம்—மூலமும் உரையும்* ; ii. *கோல்டன் அச்சியந்திரசாலை, சென்னை* ; iii. 1902 ; iv. செ.மூ.உ.எ. 1145 ; v. 21×14 செ.மீ. ; vi. 1-8-0 ; vii. *கிரகம், இராசி, நட்சத்திரம் ஆகியவற்றின் பலாபலன் உரைப்பது.* viii. 21/1904/III.

△2:864

39. i. *சாதகாலங்காரம்* ; ii. *கொ. லோகநாத முதலியார் ; மநோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1903 ; iv. செ.மூ.உ.எ. 1146 ; v. 17×14 செ.மீ. ; vi. 0-12-0; vii. 12 *பாவகங்களாக உள்ளது. இராசி, நட்சத்திரம் முதலியவற்றின் பலன் உரைப்பது.* viii. 24/1904/II.

△2:864

**நந்திகேசுரர்**

40. i. *நந்தி வாக்கியம் எனும் சோதிட சாத்திரம்—இரண்டாம் பாகம்* ; ii. *ஆர். அப்புசாமி பிள்ளை & வெ. வாசுதேவம் பிள்ளை ; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை* ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 178 ; v. 22×14 செ.மீ. ; vi. 1-8-0 ;

vii. இடபம் முதல் மீனம் ஈறுன பன்னிரண்டு ராசிகளின் பலன்கள் உரைப்பது. பின் பிரச்னே அல்லது ஆரூட பலன் பற்றிய பகுதி உள்ளது. இறுதியில் மனே முகூர்த்த லக்கின பலன் உள்ளது. பூசல்லியமும் நீர்சல்லியமும் சொல்வது பற்றிய ஒரு சிறு பகுதியும் தரப்பெற்றிருக்கிறது. viii. 124/1909/III.

△2:864

**நம்பெருமாளேயர், சேலம் டவுன்.**

41. i. ஜோதிட ஜாதகாரூட சாரம்—மூலமும் உரையும்; ii. வெங்கட கிருஷ்ணய்யர், சேலம் செவ்வாய்பேட்டை & மாரிமுத்து நாயகர், சேலம் யூனியன் அச்சுக்கூடம், சேலம்; iii. 1902; iv. செ.மூ. உ.ப. 96; v. 22×14 செ.மீ; vi. 0–12–0; vii. பிறர் உதவியின்றிச் சோதிட நஷ்ட ஜாதகாரூட பாவ விஷயங்களே ஒவ்வொருவரும் செவ்வையாய் அறிந்துகொள்வதற்கு உதவியான கணித நூல். ஆறு அத்தியாயங்கள் கொண்டது. viii. 125/1903/I.

△2:864

**நாராயணதாசர், புதுவை.**

42. i. நஷ்ட சிந்தனே என்னும் களவு காணும் சாஸ்திரம்; ii. டி. கோபால் நாயகர்; கோல்டன் அச்சியந்திரசாலே, சென்னே; iii. 1901; iv. உ.ப. 38; v. 21×14 செ.மீ.; vi. 0–4–0; vii. களவினுலோ, பிறவற்றுலோ கைவிட்டுப்போன பொருள் திரும்புமா, திரும்பாதா என்னும் விவரங்கள் குறித்தது இந்நூல். viii. 43/1902/IV.

△2:864

**பொன்னுசாமி பிள்ளே, தி.**

43. i. பெரிய கோடங்கி மாலே; ii. இ. ராம. குருசாமிக் கோனர்; மதுரை ஸ்ரீ மீனும்பிகை அச்சாபீஸ்; iii. 1906; iv. செ.மூ.ப. 71; v. 21×13 செ.மீ.; vi. 0–4–0; vii. 'பூசாரிகள் குறி சொல்லுகிற பெரிய கோடங்கி மாலே' என்பது இதன் முழுப்பெயர். தேவதையை அழைப்பது, பேயோட்டுவது, கேட்பார்க்கு உளம் அறிந்து வழி கூறுதல் முதலியனவும், பன்னிரண்டு ராசி முத்துக் குறி பார்க்கிற ஆரூட சாஸ்திரமும் இதில் உள்ளன. viii. 257/1906/IV.

△2:864

**மச்சமுனி**

44. i. சோதிடம்; ii. த. குப்புசாமி நாயுடு; நிரஞ்சன விலாச அச்சியந்திரசாலே, சென்னே; iii. 1903; iv. செ.மூ.எ. 186; v. 21×14 செ.மீ.; vi. ......; vii. இராசி, கிரக சம்பந்தமான சூத்திரம் இந்நூல். கிரக சேகர சூத்திரம், சம்பந்த சூத்திரம், ராசி சூத்திரம் என்னும் மூன்று பிரிவுகள் கொண்டது. viii. 203/1903/IV.

△2:864

**வயித்திலிங்க பத்தர்—மொ. து.**

45. i. *மங்களேஸ்வரியம்* ; ii. நா. இராமசாமிப் பிள்ளை ; ஸன் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. செ.மு.உ.எ. 1302 ; v. 21×14 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. வராஹமிகிராச்சாரியார் இயற்றியுள்ள பிருஹத் ஜாதகம் சுலோகமும் ஆந்திர பாஷையில் திருவேங்கடாசாரியாரால் செய்யபபட்ட உரையும் தமிழில் முறையே பாடலாகவும் உரைநடையாகவும் மொழி பெயர்க்கப்பெற்றுள்ளது. இருபத்தேழு படலங்களில் சோதிடம் பற்றிய செய்திகளை விவரித்துரைப்பது இந்நூல். இது 'பிருஹஜ் ஜாதக' மென்றும் வழங்கும். viii. 263/1905/II.

△2:864

**வேலு நாயகர், வி. கு.**

46. i. *மாதர் ஜாதகத் தருப்பணம் : முதற் பதிப்பு* ; ii. வை. செ. குப்புசாமி முதலியார் ; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1908 ; iv. செ.மு.ப.+உ.ப. 52 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. அனைவருக்கும் ஸ்திரீ ஜாதக பலனை இது எளிதில் விளக்கும். viii. 2/1908/IV.

△2:864

**ஸ்ரீனிவாஸராகவய்யங்கார், ஸி. ஏ., கும்பகோணம்.**

47. i. *ஸர்வ ஜெயகாலபோதினி* ; ii. ருக்குமா பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 15 ; v. 12×9 செ.மீ. ; vi. ...... ; vii. பல சோதிடப் புத்தகங்களில் மறைந்து கிடந்த இந்த ஸருவ ஜெய காலங்களைக் கண்டு இதில் எழுதியுள்ளார். viii. 114/1909/IV.

△2:864

**ஸாமி ஐயங்கார், புதுக்கோட்டை சமஸ்தானம், காரையூர்.**

48. i. *கணந விளக்கம்—மூலமும் உரையும்* ; ii. சிந்நயவேள், காரையூர் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மு.உ.ப. 190 ; v. 22×14 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. 'கணந விளக்கம்' என்பது வடமொழியில் பாஸ்கராச்சாரியார் முதலாயினோர் இயற்றிய ககோள நூல் பலவற்றை நன்கு ஆராய்ந்து, தமிழ் மக்களும் பயனுறும் வண்ணம் விருத்தப்பாவினால் இயற்றப்பெற்றது. இது பாயிரம் முதலிய 7 உறுப்புக்களை உடைத்து ; உரையுடன் கூடியது. viii. 543/1908/III.

△2:864

## 133·5 [1]— தொடுகுறி சாத்திரம்

49. i. **எக்ஷணியாரூடமென்னும் மலையாளி குறி சாஸ்திரம் ;** ii. ஏகாம்பர முதலியார், செஞ்சி ; ஸ்ரீசுந்தர விலாச அச்சுக்கூடம் ; iii. 1903 ; iv. செ.மூ.ப. 24 ; v. 20×13 செ.மீ. ; vi. ......; vii. ஏட்டுப் பிரதியைக்கொண்டு எழுதி வெளியிடப்பெற்ற நூல். viii. 196/1907/I.

△2:864

i. **தேவதா சக்கரத் தொடுகுறி** (தொ. எ. 33 பார்க்க) ; ii. ஏகாம்பர முதலியார், செஞ்சி ; ஸ்ரீ சுந்தர விலாச அச்சுக் கூடம், பூவிருந்தவல்லி ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 20 ; vii. 20 சக்கரங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஒரு தேவதை யின் பெயர் குறிக்கப்பெற்றிருக்கிறது. இந்த 20 சக்கரம் பற்றியும் 20 பாடல்களும் உள. சக்கரத்தில் ஒன்றைத் தொடச் சொல்லி, தொட்ட தேவதைக்குரிய பாட்டை எடுத்து வாசித்துப் பார்க்க நினைத்த காரியம் ஆகும் ஆகாது என அறிந்து கொள்ளலாம். viii. 194/1907/I.

△2:864

50. i. **நிமித்ய குறி சாஸ்திரம் ;** ii. ஏகாம்பர முதலியார், செஞ்சி; சுப்பராய முதலியார் அண்டு கம்பெனி ; திரிபுரசுந்தர விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.உ.எ. 108 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. நவக்கிரகச் சக்கரத்தில் ஒன்றைத் தொடச்சொல்லிப் பலன் உரைப்பது. வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் தனித்தனிச் சக்கரங்கள் உள்ளன. vii. 98/1905/IV.

△2:864

## 133·5 [1]—நிமித்த நூல்

### ஹபிலுகரதிபு கோசு முகம்மது ஹுசைன் ஆலிம் சாகிபு

51. i. ஜனனுகூல மஞ்சரி ; ii. முகம்மது ஜெயினுல் கவுஸ் பாவலர் ; விநாயக சுந்தரம் விலாச பிரஸ், சிதம்பரம் ; iii. 1907 ; iv. உப. 36 ; v. 16×13 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. உடலுறுப்புக்கள் துடித்தலான் உளதாகும் பலாபலன் கூறுகிறது. வைத்தியம் சம்பந்தமான சில செய்திகளும் ஈற்றில் தரப்பெற்றிருக்கின்றன. முக்கியமாக கர்ப்பப் பெண் களுக்குரிய வைத்திய வகையே அதிகமாகச் சுட்டப்பெற்றிருக் கிறது. அரபு கித்தாப்புக்களிலிருந்தும், தமிழ்க் கிரந்தங்களி லிருந்தும் தொகுத்து எழுதப்பெற்றது. viii. 328/1908/IV.

△2:864

## 133·5 [1]—பட்சி சாத்திரம்

**அகத்தியர்**

52. i. பஞ்ச பட்சி சாஸ்திரம்—மூலமும் உரையும் [சங்கரனுர் அருளிய சர நூல், ஔவையார் உயர்ஞான சர நூல், தினக் கிரமாலங்காரச் சுருக்கம், திரு மெஞ்ஞான சர நூல்] ; ii. தேவேந்திர நாத பண்டிதர், செழுமணவை ; ஆயுர்வேத அச்சுக்கூடம், சூளை, சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.ப. 82 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. இது பத்து அதிகாரங்கள் கொண்டது. இந் நூற்குச் சாந்தலிங்க சுவாமிகள் நூதன உரை இயற்றியுள்ளார். வாக்கிய சக்கரம், எழுத்துமுறைச் சக்கரம் முதலிய சக்கரங்களும் உள்ளன. ஆக 157 செய்யுட் களும், 59 சக்கரங்களும் இடம் பெற்றுள்ளன. viii. 297/ 1907/II.

△2:864

**உரோம ரிஷி**

53. i. விநாடி பஞ்ச பட்சி—மூலமும் உரையும் [பஞ்ச பட்சி பல திரட்டு] ; ii. ஆயுர்வேத அச்சுக்கூடம், சூளை, சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.எ. 603 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்பனவே பஞ்ச பட்சியாகும் ; இவைகளினுல் நேரும் பலாபலன் பற்றி உரைப்பது. பூர்வ பட்சப் படலம், அமரபட்சப் படலம், சிந்தனைப் படலம், ஜாதகப் படலம், பிணிப் படலம், யாத்திரைப் படலம், மனைப் படலம், நலந்தீங்குப் படலம், வெற்றி தோல்விப் படலம், அஷ்டகன்மப் படலம் முதலிய பல படலங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இதற்குத் தஞ்சை கருணுநிதிப் பிள்ளை என்பார் நூதனமாக உரை வரைந் துள்ளார். viii. 296/1907/II.

△2:864

**குழந்தைவேல் பிள்ளை, தி. த., திரிசிரபுரம்—தொ.து.**

54. i. பஞ்ச பட்சி சாஸ்திர சந்திரிகை ; ii. வீ. சுப்பிரமணியப் பிள்ளை, தென்னூர், திரிசிரபுரம் ; டிஸில்வியா அண்ட் கோ., திருச்சிராப்பள்ளி ; iii. 1902 ; iv. செ.மூ.ப. 48 ; v. 25×17 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. பஞ்ச பட்சி சாத்திரம் குறித்து அகஸ்தியர், ரோம ரிஷி, சோதி ரிஷி, இராம தேவர் ஆகிய வர்களின் நூற்களினின்றும், குமாரசாமியம், உள்ளமுடையான் முதலிய நூற்களினின்றும் தெரிந்து தொகுக்கப்பெற்றது; பூர்வ பட்சப் படலம், அமர பட்சப் படலம் என்னும் இரு பெரும் பகுதியாக உள்ளது. viii. 106/1903/III.

△2:864

i. **நிமிஷ பஞ்ச பட்சி என்னும் சுருக்கு பஞ்ச பட்சி** (தொ.எ. 55 பார்க்க) ; ii. அண்ணாமலை முதலியார், சிறுமணவூர் ; ஆயுர். வேத அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 31 ; vii. இதில் ஆருட காண்டம் மட்டும் விவரிக்கப்பட்டுள்ளது. 2-ம் அத்தியாயம் ஜாதக காண்டம் பின்னும் வரும் என்னும் குறிப்பு இதன் இறுதியில் உள்ளது. viii. 180/1905/II.

△2:864

i. **பஞ்ச பட்சி பல திரட்டு**—மூலமும் உரையும் (தொ.எ. 53 பார்க்க) ; ii. ஆயுர்வேத அச்சுக்கூடம், சூளை, சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.எ. 88 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. வெண்பா முதலிய செய்யுட்களால் இயற்றப் பெற்றது. இதற்குத் தஞ்சை கருணாநிதிப் பிள்ளை செய்த நூதன உரை உள்ளது. viii. 296/ 1907/I.

△2:864

**போகர்**

55. i. போகர் பஞ்ச பட்சி சாஸ்திரம் [நிமிஷப் பஞ்ச பட்சி] ; ii. அண்ணாமலை முதலியார், சிறுமணவூர் ; ஆயுர்வேத அச்சுக் கூடம், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.உ.எ. 292 ; v. 23×14 செ.மீ. ; vi. ........ ; vii. போகர் செய்த கீர்வாண நூலின் மொழி பெயர்ப்பாக உள்ளது இந்நூல். இதற்குத் தேவேந்திரம் என்பார் எழுதியுள்ள உரையும் காணப் படுகிறது. viii. 180/1905/II.

△2:864

## 133·5 [1]—மனையடி சாத்திரம்

i. கூப சாஸ்திரம் (தொ.எ. 29 பார்க்க) ; ii. ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், திருச்சி ; iii. 1907 ; iv. செ.மூ. உ.ப. 6 ; vii. கிணறு வெட்டுவதற்குரிய காலம் முதலியன அறிவிக்கும் நூல். viii. 252/1907/IV.

△2:864

## 133·6—கைரேகை சாத்திரம்

**வால்மீக மஹரிஷி**

56. i. ஆண்பால் இரேகை சாஸ்திரம் ; ii. கோபால சோதிடர் ; நிரஞ்சனா விலாச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 567 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. ஆண்பாலின் உடல் இரேகைகளைப் பற்றிப் பாட்டில் அமைந்த நூல். பல வகையில் அமைந்த ரேகைகளினால் உளதாகும் பலன்கள் பற்றிக் கூறுவது. viii. 237/1905/IV.

△2:8627

## 170—அற நூல்கள்

### 170.[1]—பொது அற நூல்கள் : கவிதை

**அப்துல் மஜீது, மு. க. அ.**

57. i. ஆசாரக் கோவை [சங்கீர்த்தன மஞ்சரி]; ii. கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902 ; iv. செ.மூ.எ. ‍i+100+2 ; v. 17×12 செ.மீ. ; vi. ........ ; vii. பற்பல நீதிகளை எடுத்துரைக்கின்றது ; சதக நூல்களைப் போன்று உள்ளது. ‘ முகம்மதுத் தம்பிமா மரைக்காய சகாயனே ’ என்னும் விளித் தொடர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் வருகின்றது. viii. 54/1903/IV.

R4

**அழகப்பெருமாள் பிள்ளை, எம்.ஏ.**

58. i. புலான் மறுப்பு ; ii. வி. கோவிந்தன் அண்ட் பிரதர்ஸ் ; ஸ்ரீ வித்தியா விநோதினி அச்சுக்கூடம், தஞ்சை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 9+5+231+4 ; v. 21×14 செ.மீ. ; vi 0–4–0 ; vii. புலால் உண்ணலை மறுத்தல் வேண்டும் என அறிவுறுத்துவது. சாந்தலிங்க முனிவர் இயற்றிய கொலை மறுத்தல் என்னும் நூலின் பொருளை ஆராய்ந்து பாடப் பெற்ற செய்யுள் நூல். viii. 232/1906/III.

R4

**அனந்த நம்பியார், பி.எஸ்.**

59. i. மாதர் நீதி மாலை ; ii. விக்டர் பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.ப. 34 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. தெய்வ வணக்கம், பெரியோர் வணக்கம், தரணிச்சிறப்பு, மாதர் நீதி என்னும் தலைப்புக்களில் கும்மி, ஆனந்தக் களிப்பு, நொண்டிச்சிந்து என்னும் இவை விரவி வரக் கூறுகிறது. viii. 170/1905/I.

R4

**சோம சுந்தரம் பிள்ளை, கு., வரகனேரி, திரசிரபுரம்.**

60. i. ஆசார விளக்கம் ; ii. முத்து ராஜ மகா ஜன சங்கம் ; வெட்னஸ்டே ரெவ்யூ பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 103 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. இந்நூல் பெருவாயின் முள்ளியார் அருளிச் செய்த ஆசாரக் கோவைக்குச் சார்பு நூல். சிற்சில இடங்களில் பழையன விடுத்து புதியன புகுத்தியுள்ளார். இந்நூலில் துயிலெழுதல், ஸ்நானம் செய்தல், உண்ணல், உடுத்தல், நித்திரை புரிதல், பெரியோர், சிறியோர், அரசர் முதலியோரோடு பழகுதல் முதலிய விஷயங்களைப் பற்றிய விதிகளும், நீதிகள் பலவும் கூறப் பட்டுள்ளன. இவைகள் எல்லாம் வேத சாரங்களாயுள்ளன என்றும், இவைகளைச் சரிவரக் கைக்கொண்டால் அறம், பொருள்,

இன்பம், வீடு ஆகிய புருஷார்த்தங்கள் நான்கினையும் ஒருங்கே பெறலாம் என்றும் கூறுகின்றனர். ஆசிரிய நடையில் நூல் அமைந்துள்ளது ; 103 பாடல்கள் கொண்டது. குரு. சுப்பிரமணிய ஐயர் பாடிய சிறப்புப் பாயிரமும், இராமலிங்கம் பிள்ளை முதலியோர் சாத்துக்கவிகளும் உள்ளன. viii. 758/1910/II.

R4

**தங்கக்காசிம், பாலப்பாளையம்.**

61. i. தெய்வ பக்தி விவேக ' விளக்கம் ; ii. தங்கக் காசிம் ; சுதேசாபிமானி அச்சுக்கூடம், சேலம் ; iii. 1909 ; iv. செ. மூ.எ. 106+1=107 ; v. 20×14 செ. மீ. ; vi. ........ ; vii. எல்லாம் தெய்வத்தால் ஆம் என்பதை விளக்குவது; சன்மார்க்க ஒழுக்கம், தத்துவ உண்மைகள், மானிடர் ஒழுக்கம் முதலியன பற்றிக் கூறுவது. பொருள் அட்டவணை முகப்பில் அகராதிக் கிரமத்தில் தரப்பட்டிருக்கிறது. ' இனிமேல் இரண்டாம் பாகமும் கூடிய சீக்கிரத்தில் அச்சிடப்படும்' என்னும் குறிப்பு ஈற்றில் காணப்படுகிறது. viii. 148/1909/II.

R4

**நூர்யிஸ்மால் சாயபு**

62. i. தருமக்காதல் ; ii. ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை மதுரை ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 15 ; v. 23×14 செ.மீ. vi. 0–2–0 ; vii. ' தருமத்தின் காதலைக் கொள்ளுங்கள், புவி மனுவோர் தக்க புண்ணியத்தைக் கொள்ளுங்கள் ' என்னும் பல்லவியோடு நூல் தொடங்குகிறது. உலகியல் அறங்களை உரைப்பதோடு, இசுலாமியருக்குச் சிறப்பான சில அறங்களையும் அங்கங்கே எடுத்துக் காட்டுகின்றார். viii. 168/1910/II.

R4

## 170.[1]—பொது அற நூல்கள் : உரைநடை

**இராகவுலு நாயுடு**

63. i. பதி விரதா பூஷணம் என்னும் ஸ்ரீகளுக்கு ஞான போதினி; ii. எம்பிரஸ் ஆப் இன்டியா அச்சு யந்திரசாலை, சென்னை ; iii. 1902 ; iv. உ.ப. 48 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–2–6 ; vii. மங்கையர்க்கு நீதி புகட்டும் வகையில், கற்புடை மங்கையர் சிலர் வரலாறுகளும் வேறு பல ஒழுக்க நெறிகளும் உரைப்பது. viii. 127/1902/IV.

R4

**இராமலிங்க சுவாமிகள், சிதம்பரம்.**

64. i. உண்மை நெறி ; ii. ம. ரா. குமாரசாமிப்பிள்ளை ; புஷ்பாலயம்பாள் விலாச அச்சுக்கூடம், திருக்கோவலூர் ; iii. 1910 ; iv. உ.ப. 8 ; v. 14×11 செ.மீ. ; vi. ...... ; vii. நான்கு

புருஷார்த்தங்கள் பற்றியும், இந்திரிய ஒழுக்கம், கரணவொழுக்கம், ஜீவவொழுக்கம், ஆன்மவொழுக்கம், அநுஷ்டான விதி ஆகியவை பற்றியும் விவரிப்பது. viii. 132/1910/III.

R4

**ஐயாசாமி முதலியார், ஆ., பெங்களூர்.**

65. i. தெய்வகுண வெளிச்சம்; ii. முனிசாமி முதலியார், சிறுமணவூர்; சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1906; iv. உ.ப. 184; v. 21 × 14 செ.மீ.; vi. 0–8–0; vii. 'உலக குணக் கண்ணுடி என்னும் தெய்வகுண வெளிச்சம்' என்பது இதன் முழுப்பெயர். உலகத்தில் நிலவும் நற்குண துர்க்குணங்களைக் கண்ணுடி போன்று காண்பிப்பது. காஞ்சி மண்டலம் வித்துவ சிரோமணி வேங்கடாசாரியார் வடமொழியில் சுலோகமாகச் செய்த "விஸ்வகுண தெரிசனம்" என்னும் நூலின் மொழி பெயர்ப்பு இந்நூல். சமஸ்கிருத பண்டிதர் கொ. ஒ. ஆதி நாராயண சாஸ்திரி என்பாரின் ஒத்துழைப்புடன் ஆசிரியர் இந்நூலை மொழிபெயர்த்துள்ளார். viii. 45/1906/III.

R4

**கனகவல்லி அம்மாள், கோ.**

66. i. கற்புடைய மாதர் நீதி சார சங்கிரகம்; ii. ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சேந்திர சாலை, தஞ்சை; iii. 1908; iv. உ.ப. 16; v. 21 × 14 செ.மீ.; vi. ......; vii. கற்புடைய மாதரின் சிறப்பும் ஒழுக்கமும் பற்றிப் பற்பல மேற்கோளுடன் விவரித்துக் கூறுவது. viii. 207/1908/III.

R4

**கிருஷ்ணஸ்வாமி ஐயர், ஏ., திருநெல்வேலி.**

67. i. ஆரியமத உபாக்கியானம்; ii. வி. குப்புஸ்வாமி ஐயர், மயிலாப்பூர்; ஜெனரல் ஸப்ளைஸ் கம்பெனி & திருவல்லிக்கேணி ருக்மா பிரஸ், சென்னை; iii. 1907; iv. உ.ப. 42; v. 22×14 செ.மீ.; vi. 0–2–0; vii. புத்திரர் கடமை, பெற்றோர் கட்டளைக்கு உட்பட்டு நடத்தல் முதலிய 50 தலைப்புக்களில் அமைந்த சிறு கதைகளின் தொகுப்பு. இக்கதைகளில் பெரும்பாலனவும் புராண இதிகாசங்களைத் தழுவி எழுதப் பெற்றுள்ளன. குழந்தைகளும் படித்து மகிழத் தக்கவை. viii. 76/1907/I.

R4

**சுந்தர ராஜம் ஐயர், ஆர்.—மொ. து.**

68. i. ஸநாதன தர்மம்; ii. காசிப் பிரதான ஹிந்து வித்யாசாலைக் கமிட்டி; மினர்வா பிரஸ், சென்னை; iii. 1907; iv. உ.ப. 10+326; v. 18×12 செ.மீ.; vi.........; vii. காசிப் பிரதான ஹிந்து வித்தியாசாலையின் சம்ரக்ஷணைக் கமிட்டியார்

தம் ஆட்சிக்குட்பட்ட வித்தியாசாலைகளில் படிக்கும் சிறுவர்க்கு மதம், நீதி முதலியவற்றைக் கற்பிப்பதற்காக இயற்றப்பெற்றது. இதன் தமிழாக்கமே இந்நூல். இதில் மூன்று பாகங்கள் உள. இவை முறையே ஹிந்து மத மூல தத்துவங்கள் பற்றியும், ஹிந்துமத பொதுக் கர்மானுஷ்டானங்களும் விதிகளும் பற்றியும், தர்மாதர்ம உபதேசங்கள் பற்றியும் அமைந்துள்ளன. சிறுவர்களேயன்றி யாவரும் படித்துத் தெரிதற்குரிய பொது நூல். viii. 396/1908/I.

**R4**

**நாராயண ஐயர், ப.—மொ. து.**

69. i. சநாதந தர்மம்–3-ஆம் பிரிவு; ii. ஆநந்தா அச்சுக்கூடம், சென்னை; iii. 1905; iv. உ.ப. 458; v. 19×13 செ.மீ.; vi. 1-0-0; vii. ஆரிய மதக் கொள்கைகள், தருமங்கள் இவைகளின் சாராம்சங்களை வேத சாஸ்திர புராணாதிகளிலிருந்து எடுத்துத் தொகுத்துக் கூறுவது. இது ஆங்கிலத்தில் காசிப் பிரதான ஹிந்து வித்தியாசாலைச் சபையாரால் வெளியிடப் பெற்றது. இந்நூலின் மூன்றும் பிரிவின் தமிழ் மொழி பெயர்ப்பு இந்நூல். viii. 77/1906/I.

**R4**

70. i. பிராசின தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும்: முதற் பதிப்பு; ii. மதுரை பிரஹ்மஞான மந்திரம்; தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை; iii. 1905; iv. உ.ப. 187; v. 16×13 செ. மீ.; vi. .....; vii. காசிப்பட்டணத்தில். 1900-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 'பிரஹ்மஞான' சபையின் 25-ஆம் ஆண்டு நிறைவிற் கூடிய மகா சபையில் அன்னி பெஸண்டு அம்மை ஆங்கில மொழியில் நிகழ்த்திய நான்கு சொற்பொழிவுகளின் தமிழ் மொழிபெயர்ப்பு. (1) நான்கு ஆச்சிரமங்கள் (2) ஆலயம், பூஜை, பூஜகர்கள், (3) ஜாதி முறைகள், (4) ஸ்திரீ தர்மங்கள் என்னும் நான்கு பொருள் பற்றிய சொற்பொழிவுக் கோவை இந்நூல். viii. 202/1905/IV.

**R4**

**மணமங்களார், பி.**

71. i. வீண்பக்தி வேஷதாரி; ii. சமரபுரி அண் கோ, சென்னை; சண்முக முத்திராக்ஷரசாலை; iii. 1907; iv. உ. ப. 46; v. 18×11 செ.மீ.; vi. 0-4-0; vii. மணமங்களமாலிகா மலர் வரிசையில் இது மூன்றாவது நூல். வீண் பக்தி வேஷம் நன்மை தராது என்பதைக் கதை மூலம் விவரிப்பது. பற்பல இலக்கிய மேற்கோள்களுடன், அறிவுரை கூறும் நோக்கத்துடன் இயற்றப் பெற்றது. viii. 77/1907/II.

**R4**

**மிக்கேல் சாமி பிள்ளை, பா., மயிலை.**

72. i. பெற்றோர் ஒழுக்கம்—முதல் புஸ்தகம்: முதல் பாகம்; ii. விவேகாநந்த அச்சுக்கூடம், சென்னை; iii. 1904; iv. உ.ப. 158; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. சன்மார்க்க சங்கிரகம் என்னும் வரிசையில் இது முதல் புத்தகம். பெற்றோர்கள் மக்களை எவ்வாறு வளர்த்தல் வேண்டும் என்பது பற்றி உரைப்பது. ஒன்பது அதிகாரங்கள் கொண்டது. viii. 190/1904/III.

R4

73. i. பெற்றோர் ஒழுக்கம் (சன்மார்க்க சங்கிரகம்) முதல் புத்தகம்: இரண்டாவது பாகம்; ii. விவேகாநந்த அச்சுக்கூடம், சென்னை; iii. 1904; iv. உ.ப. 172; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. சன்மார்க்க சங்கிரகம் என்னும் நூலின் பிற்பகுதி 11-ஆம் அதிகாரம் தொடங்கி 21-ஆம் அதிகாரம் வரை உள்ளது. பெற்றோர் மேன்மையும் குழந்தைகளைப் பரிபாலிக்க வேண்டும் வகையும் பற்றி விவரிப்பது. viii. 219/1905/I.

R4

**முனிசாமி முதலியார், சிறுமணவூர்.**

74. i. குடும்ப சனியன் என்னும் அகட விகட சம்சாரி; ii. சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1905; iv. உ.ப. 53; v. 21×14 செ.மீ.; vi. 0-4-0; vii. இல்லறத்தில் கணவன் மனைவி முதலியோர் கடமைகள் பற்றி வேடிக்கையாக உரைப்பது. சில நூலாசிரியரின் துணைகொண்டு தயார் செய்யப் பெற்றது. viii. 55/1906/I.

R4

**விஸ்வநாத முதலியார், சி.**

75. i. பிரபஞ்ச பாவ புண்ணியம்; ii. கோ. பெருமாள் முதலியார்; பால கமலாம்பாள் அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. உ.ப. 80; v. 22×14 செ.மீ.; vi. 0-8-0; vii. நல்வினை தீவினைகள் பற்றி முன்னோர்கள் எழுதியுள்ள சகல நூல்களையும் ஆராய்ந்து, கதைவடிவில் ஆசிரியர் இதில் அமைத்துள்ளார். பிரபஞ்ச பாவ புண்ணியம், தீவினைத் தண்டனைப் படலம், எமலோகப் படலம், நரக வதைப் படலம், நல்வினைப் படலம் என்னும் பகுதிகளாகப் பாகுபடுத்தப் பெற்றிருக்கிறது. ஆழ்வார், நாயன்மார் முதலியோர் அருளிச் செயல்களினின்றும் பட்டணத்தார் பாடல், ஔவையார் பாடல் முதலியவற்றிலிருந்தும் அங்கங்கு தக்க மேற்கோள்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. viii. 107/1909/IV.

R4

## 170. [1]—குழந்தைகட்கான அறநூல்கள்

**அதிவீரராம பாண்டியன்**

76. i. *நீதி நூற்றிரட்டு விருத்தியுரை—நறுந்தொகை மூலமும் விருத்தியுரையும் : முதற் பதிப்பு ;* ii. *எஸ். குமாரசுவாமி பிள்ளை ; பண்டிதமித்திர யந்திரசாலை, சென்னை ;* iii. 1906 ; iv. *செ. மூ. ப.* 16 ; v. 19×13 *செ.மீ.* ; vi. ....; vii. *வெற்றி வேற்கை என்னும் நறுந்தொகை நூலில் முதல் எட்டு வாக்கியங்களுக்கு உரிய உரை இந்த நான்காம் சஞ்சிகையில் உள்ளது. நீதி நூல் திரட்டு காஞ்சீபுரம் இராமசாமி நாயுடு உரையுடன் சஞ்சிகையாக வெளியிடப்பெற்று வருவதில் இது நான்காம் சஞ்சிகை.* viii. 283/1906/II.

**R4**

**இராமதாஸ் பிள்ளை**

77. i. *ஒழுக்க நெறி;* ii. *பு. ஆறுமுகம் பிள்ளை & இராமதாஸ் பிள்ளை; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ;* iii. 1906 ; iv. *செ.மூ.ப.* 15 ; v. 20×12 *செ. மீ.* ; vi. 0–2–0 ; vii. *கொன்றைவேந்தன் நீதி வாக்கியங்கள் போன்று அகரம் முதலிய எழுத்து வருக்க வரிசையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வருக்கத்திற்கும் ஒன்றுக்கு மேற்பட்ட நீதி வாக்கியங்கள் உள்ளன. ஔவையார் நீதி நூல்கள், வெற்றி வேற்கை, வள்ளுவர் குறள் முதலிய முன்னோர் நூல்களின் சொற்பொருள்களைப் பெரும்பான்மையும் தழுவிச் செல்கின்றன.* viii. 50/1906/IV.

**R4**

**ஔவையார்**

78. i. *நீதி நூற்றிரட்டு விருத்தியுரை—ஆத்திசூடி மூலமும் உரையும்: முதற் பதிப்பு ;* ii. *எஸ். குமாரசாமிப் பிள்ளை, தஞ்சை; பண்டிதமித்திர யந்திர சாலை, சென்னை ;* iii. *டிசம்பர்,* 1905 ; iv. *செ.மூ.உ.எ.* 109 ; v. 19×13 *செ.மீ.* ; vi. 0–4–0 ; vii. *ஆத்திசூடி முழுமைக்கும் மகாவித்வான் காஞ்சீபுரம் இராமசுவாமி நாயுடுவால் இயற்றப் பெற்ற விருத்தியுரை உள்ளது. இது நீதி நூற்றிரட்டு விருத்தியுரை என்னும் வரிசையில் முதல் சஞ்சிகையாகும்.* viii. 280/1906/II.

**R4**

i. *ஆத்திசூடி—மூலமும் உரையும் (தொ. எ. 792 பார்க்க) ;* ii. *சுவாமிநாத பண்டிதர் ; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம் ;* iii. 1909 ; iv. *செ.மூ.உ.எ.* 108; vii. *இதன் உரை பதவுரையாக உள்ளது. பாடபேதக்குறிப்புக்களும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன.* viii. 458/1909/III.

**R4**

79. i. ஆத்திசூடி மூலமும், பாகியார்த்தமும், அந்தரார்த்தமும்; ii. கோ. வடிவேலு செட்டியார்; சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1910; iv. செ.மூ.உ.எ. 108; v. 18×11 செ.மீ.; vi. 0-6-0; vii. விதிமுகமாகவும் மறைமுகமாகவும் நீதியைப் புலப்படுத்தும் எளிய இனிய அறநூல்; 108 வாக்கியங்கள் கொண்டது. இதற்குச் செவ்விய வெளிப்படைப் பொருளுடன் குறிப்புப் பொருளும் தக்க பிரமாணத்துடன் எழுதப்பட்டிருக்கின்றது. வெளிப்படைப் பொருளுக்குத் திருக்குறள் சந்தர்ப்பத்திற்கேற்ப பிரமாணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. இதன் உரை திருத்துருத்தி இந்திரபீடம் கரபாத்திர சுவாமிகளாதீனத்து ஓர் அன்பரால் இயற்றப்பெற்றது. இதன் உரையில் ஆசிரியர் மேற்கோள்காட்டிய நூல்களின் பெயர் அட்டவணை முதலில் தரப்பெற்றிருக்கிறது. viii. 98/1910/II.

R4

i. உலகநீதி மூலம்—நீதி நூற்றிரட்டு விருத்தியுரை (தொ.எ. 83 பார்க்க) நான்காம் பாகம்: முதற்பதிப்பு; ii. எஸ். குமாரசாமிப் பிள்ளை; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை; iii. 1906; vi. செ.மூ.எ. 13; vii. நூல் முழுமைக்கும் காஞ்சீபுரம் ராமசுவாமி நாயுடு எழுதிய விருத்தியுரை உள்ளது. ஔவையார் உலகநீதி அருளிச் செய்தார் என்றும் உலகநாதன் பாடுவித்தவன் என்றும் இதன் உரைகாரர் கருதுகின்றார். viii. 282/1906/II.

R4

80. i. கொன்றை வேந்தன்—நீதி நூற்றிரட்டு விருத்தியுரை [வாக்குண்டாம்]: முதற் பதிப்பு; ii. எஸ். குமாரசுவாமி பிள்ளை, தஞ்சை; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை; iii. ஜனவரி, 1906; iv. செ.மூ.எ. 89; v. 20×13 செ.மீ.; vi. 0-4-0; vii. கொன்றை வேந்தன் மூலமும் நூல் முழுமைக்கும் மகாவித்வான் காஞ்சீபுரம் ராமஸ்வாமி நாயுடு எழுதிய விருத்தியுரையும் உள்ளது. viii. 281/1906/II.

R4

i. கொன்றை வேந்தன்—மூலமும் உரையும் (தொ.எ. 792 பார்க்க); ii. சுவாமிநாத பண்டிதர்; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னைப்பட்டணம்; iii. 1909; iv. செ.மூ.உ.எ. 91; vii. இதன் உரை பதவுரையாக உள்ளது. பாட பேதக் குறிப்புக்களும் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன. viii. 458/1909/III.

R4

i. நல்வழிமூலம்—நீதி நூற்றிரட்டு விருத்தியுரை (தொ. எ. 83 பார்க்க) ஐந்தாம் பாகம்: முதற் பதிப்பு; ii. எஸ். குமாரசுவாமி பிள்ளை, தஞ்சை; பண்டிதமித்திர யந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ.மூ.உ.எ. 40; v. ....; vi. ....; vii. நூல் முழுமைக்கும் காஞ்சீபுரம் ராமசாமி நாயுடு எழுதிய விருத்தியுரை உள்ளது. viii. 282/1906/II.

R4

81. i. நல்வழி; ii. ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணத்து நல்லூர்; வித்தியாநுபாலன யந்திர சாலை, சென்னப்பட்டணம்; iii. 1907; iv. செ.மூ.உ.எ. 40; v. 16×12 செ.மீ.; vi. 0–1–0 vii.....; viii. 480/1908/IV.

R4

82. i. மூதுரை: முதற் பதிப்பு; ii. மீனும்பிகை அச்சுக்கூடம், மதுரை; iii. 1904; iv. செ.மூ.உ.ப. 16+47; v. 16×13 செ.மீ.; vi. 0–2–0; vii. ஔவையார் சரித்திரம் நூல் முகப்பில் உள்ளது. மதுரை, திரிசிரபுரம், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் கிடைத்த எட்டு ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்றது. ஏட்டுப் பிரதிகளுக்கும் அச்சில் வழங்கும் நூலுக்கும் காணப் பெறும் வேறுபாடுகளை ஆசிரியர் முகவுரையில் சுட்டியுள்ளார். இந் நூலின் உரை மகாவித்துவான் சரவணப் பெருமாள் ஐயர் வெளியிட்ட பழைய உரையைப் பெரும்பாலும் தழுவியுள்ளது. viii. 18/1904/II.

R4

i. வாக்குண்டாம் (தொ.எ. 80 பார்க்க): முதற் பதிப்பு; ii. எஸ். குமாரசுவாமிப் பிள்ளை, தஞ்சை; பண்டித மித்திர யந்திரசாலை; iii. ஜனவரி, 1906; iv. செ.மூ.உ.எ. 9; vii. இந்நூலின் ஒன்பது பாடல்களுக்கு உரை இந்தச் சஞ்சிகையில் உள்ளது. இதன் எஞ்சிய பகுதி அடுத்துவரும் மூன்றும் சஞ்சிகையில் (282/1906/II) உள்ளது. viii. 281/1906/II.

R4

83. i. வாக்குண்டாம் [நீதி நூற்றிரட்டு விருத்தியுரை உலக நீதி மூலம், நல்வழி]—மூன்றும் பாகம்: முதற் பதிப்பு; ii. எஸ். குமாரசுவாமிப் பிள்ளை; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை; iii. 1906; vi. செ.மூ.உ.எ. 21; v. 20×13 செ.மீ.; vi. ...; vii. வாக்குண்டாம் ஒன்பதாம் பாடல் முதல் நூல் முடிய உள்ள பகுதிக்கு காஞ்சீபுரம் ராமசுவாமி நாயுடு எழுதிய விருத்தியுரையுள்ளது. viii. 282/1906/II.

R4

84. i. மூதுரை மூலமும் உரையும் : பதின் மூன்றும் பதிப்பு; ii. க்றிஸ்டியன் லிட்ரேச்சர் சொஸைட்டி ; சி. எல். எஸ். பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.உ.எ. 24 ; v. 14×11 செ.மீ. ; vi..... ; vii. பதவுரை பொழிப்புரைகளுடன் கூடியது. 'ஔவையார் இயற்றிய மூதுரை வெண்பா மூப்பதில் அடியிற் குறித்த எண்களையுடைய பாட்டுக்கள் ஆக்ஷேபனைக்கிடமா யிருந்ததால் அவைகளை நீக்கி மற்ற 24 பாட்டுக்களை அச்சியற்றினோம் (3, 7, 19, 22, 27, 29)' என்னும் குறிப்பு நூல் இறுதியில் உள்ளது. viii. 504/1910/III.

R4

**சிவப்பிரகாச சுவாமிகள்**

85. i. நன்னெறி : இரண்டாம் பதிப்பு ; ii. விவேகபானு பிரஸ், மதுரை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.எ. 40 ; v. 16×12 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. நாற்பது பாடல்களில் நாலில் ஒரு பங்கு கடலையே உவமானமாகக் கொண்டது. சிவபுராணக் கதைகளையும் உவமானமாக எடுத்துக்காட்டியிருக்கிறார். பதவுரை கருத்துரைகளுடன் விளக்கக் குறிப்புக்களும் இதன் கண் உள. இந்த உரையினை ஆக்கியவர் அரியூர் எஸ். சாமிநாதையர் ஆவர். இவர் சரவணப் பெருமாள் ஐயர் முன்பு எழுதிய உரையைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டுள்ளார். viii. 276/1908/III.

R4

i. நீதிவெண்பாவுரை (தொ.எ. 902 பார்க்க) ; ii. வித்தியாநுபாலன அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ. உ. எ. 1+100 ; vii. பதவுரை தாத்பரியம், இலக்கணக் குறிப்பு முதலியவற்றுடன் கூடி அமைந்துள்ளது. viii. 35/1903/II.

R4

**முனைப்பாடியார்**

86 i. அறநெறிச்சாரம் ; ii. தி. செல்வக் கேசவராய முதலியார் ; சென்னை ; செங்கல்வராய நாயக்கர் ஆர்பனேஜ் பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.உ.ப. 42 ; v. 15×13 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. நாலடியாரைப் போலப் பதிப்பாசிரியர் தாமே அதிகாரப் பாகுபாடு செய்து இந்நூலைப் பதிப்பித்துள்ளார். இதனால் மூலச் சுவடியில் உள்ள பாடல் வரிசை மாறிக்கிடக்கும். ஒவ்வொரு பாட்டின் ஈற்றிலும் மூலச்சுவடி எண்ணையும் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். viii. 296/1905/I.

R4

## 170.[1]—சதகங்கள்

**அநந்த நாராயணசர்மா, சேலம்.**

87. i. *கஞ்சகிரி சித்தேசர் சதகம்* ; ii. சரவணப்பிள்ளை, சேலம் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1902; iv. செ.மூ.எ. 10+102 ; v. 17×10 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. பலவகை உலகியல் அறங்களை எடுத்துக் கூறுவது. கஞ்சகிரி மேவும் சித்தேசனைப் பாடல்தோறும் விளித்து உலகியல் ஒழுக்கங்களாகிய நீதிகளை உரைக்கின்றது. viii. 165/1902/IV.

R4

**அம்பலவாணக் கவிராயர்**

88. i. *அறப்பளீசுர சதகம்* : மூலமும் உரையும் ; ii. ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.உ.எ. 1+100 ; v. 17×13 செ.மீ. ; vi. 0–10–0 ; vii. நூலாசிரியர் அம்பலவாணக் கவிராயரின் வாழ்க்கை வரலாறு நூலின் முகப்பில் தரப்பட்டுள்ளது. பலவகை நீதிகளும் மற்றும் பல விஷயங்களும் உரைப்பது. நூல் முழுமைக்கும் காஞ்சீபுரம் மகா வித்வான் இராமசாமி நாயுடு எழுதிய உரை உள்ளது. viii. 237/1906/I.

R4

i. *அறப்பளீசுர சதகம்* (தொ.எ. 89 பார்க்க) ; ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 1+100 ; vii. சதுரகிரியில் எழுந்தருளியுள்ள அறப்பளீசுர தேவனைப் பாடல்தோறும் துதிப்பதோடு, ஈற்றில் பலவகையான உலகியல் நெறிகளையும் எடுத்துக்காட்டுகின்றது. viii. 103/1906/III,

R4

**குருபாத தாசர்**

i. *திருப்புல்வயல் குமரேச சதகம்* (தொ.எ. 89 பார்க்க) ; ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1905 ; iv. செ.மூ.எ. 2+100 ; vii. திருப்புல்வயல் முருகப்பெருமானை முன்னிலையாக்கிப் பற்பல நீதிகளையும் உலகியல் நியதிகளையும் எடுத்துக்காட்டுவது. viii. 103/1906/III.

R4

**கோபாலகிருஷ்ண தாசர்**

i. எம்பிரான் சதகம் (தொ.எ. 89 பார்க்க) ; ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ எ. 4+101 ; vii. திருமால் துதியாக அமைந்துள்ள பாடல்களைக் கொண்டது இச்சதகம். viii. 103/1906/III.

R4

89. i. சதகத்திரட்டு [அறப்பளீசுர சதகம் முதல் சிவசங்கர சதகம் ஈறாக ஏழு சதகங்கள்] ; ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 715 ; v. 17×13 செ.மீ.; vi. 0–9–0 ; vii, இதில் அறப்பளீசுர சதகம், குமரேச சதகம், திரு வேங்கட சதகம், தண்டலையார் சதகம், கோவிந்த சதகம், எம்பிரான் சதகம், சிவசங்கர சதகம் என்னும் ஏழு சதகங் கள் அடங்கியுள்ளன. இவற்றுள் முதல் ஐந்து நூல்களும் பற்பல உலகியல் நீதிகளைத் தொகுத்துக் கூறுவனவாகும். ஈற்றிலுள்ள இரண்டும் முறையே திருமால், சிவபெருமான் துதியாக அமைந்துள்ளன. viii. 103/1906/III.

R4

**சமரபுரி முதலியார்**

90. i. சுமதி சதகம் ; ii. ப. எதிராசலு நாயுடு ; கோபால விலாச அச்சுக்கூடம் ; iii. 1904 ; iv. செ.மூ.உ.எ. 110 ; v....... ; vi. 0–6–0 ; vii. 110 தெலுங்குப் பத்தியங்கள் தமிழ் லிபியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குத் தமிழில் பதவுரை, பொழிப்புரை தரப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன் றும் சுமதி என்னும் விளித்தொடரை முடிவாகக் கொண் டுள்ளன. பற்பல உலகியல் அறங்களை எடுத்துரைப்பது. viii. 38/1904/I.

R4

**சீனிவாச அய்யங்கார், எம். ஆர்.**

91. i. நன்மதி வெண்பா ; ii. வைஜயந்தி பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 109 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. சுமதி சதகம் என்பது தெலுங்கு மொழியி லுள்ள ஒரு சிறந்த அறநூல். இதனையே ‘ நன்மதி வெண்பா ’ என ஆசிரியர் பாடலாக மொழிபெயர்த்துள்ளார். முதனூல் கருத்து பெரும்பான்மையும் விட்டுப்போகாது மொழி பெயர்க் கப்பெற்றது. viii. 542/1910/I.

R4

**திருச்சிற்றம்பல நாவலர்**

i. அண்ணுமலைச் சதகம் (தொ.எ. 358 பார்க்க); ii. லோகநாத முதலியார்; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1902; iv. செ.மூ.எ. 2+103; vii. அபிஷேகவிதி, விபூதி தரிக்கும் விதி, பதினாறுபேறு, பெண் கொள்ளும் முறை முதலிய பல பொருள்களும் பற்றி உரைக்கும் உலகியல் அறநூல். viii. 131/1903/I.

**R4**

**நாராயண பாரதியார்**

i. கோவிந்த சதகம் (தொ.எ. 89 பார்க்க); ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1906; iv. செ.மூ.எ. 1+102; vii. இதில் உள்ள பாடல்கள், 'அச்சுதாநந்த கோவிந்தனே' என்னும் முடிவைப் பெறுகின்றன. ஒவ்வொரு பாடலிலும் ஒரு பழமொழி அமைந்துள்ளது. தண்டலையார் சதகம் போன்று பழமொழி விளக்கமாகவுள்ளது. viii. 103/1906/III.

**R4**

i. **மணவாள நாராயண சதகம் என்னும் திருவேங்கட சதகம்** (தொ.எ. 89 பார்க்க); ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1905; iv. செ.மூ-எ. 2+102; vii. 'அலர்மேலு மங்கை மணவாளனே, வரத வேங்கடராயனே' எனத்திருமாலை விளிக்கும் தொடரைப் பாடல் தோறும் ஈற்றில் கொண்டு வருவது. மக்கள் இயல்பு, ஒவ்வொருவரும் மேற்கொள்ளத்தக்க நெறிகள், ஒழிக்க வேண்டியவை முதலிய பலவற்றையும் விவரிப்பது. vii. 103/1906/III.

**R4**

**படிக்காசுப் புலவர்**

i. பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம் (தொ.எ. 89 பார்க்க); ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1905; iv. செ.மூ.எ. 3+100+9; vii. படிக்காசுப் புலவரின் சரித்திரச் சுருக்கம் முதற்கண் உள்ளது. ஒவ்வொரு பாடலும் ஒரு பழமொழியின் விளக்கமாய் உள்ளது. சில பிரதிகளில் அதிகமாய்க் காணப்படும் பாடல் ஒன்பது இறுதியில் தரப்பட்டுள்ளன. viii. 103/1906/III.

**R4**

**வீராசாமி உபாத்தியாயர், எழுமூர்.**

i. சிவசங்கர சதகம் (தொ. எ. 89 பார்க்க); ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ. மூ. எ. 2+101; vii. சிவ பெருமான் துதியாக அமைந்துள்ள பாடல்களைக் கொண்டுள்ளது இச் சதகம். viii. 103/1906/III.

R4

**வெங்கடசாமி அய்யர், மோசூர்.**

92. i. உத்தம நீதி—முதற் சதகம்; ii. எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1908; iv. செ. மூ. உ. எ. 100; v. 19×13 செ. மீ.; vi. 0–2–0; vii. தமிழில் இருபாலவர்க்கும் பயன் படுமாறு ஸம்ஸ்கிருதத்திலுள்ள உத்தமமான நீதிகளைத் தெளி வான நடையில் பாடிய நூறு பாக்களைக் கொண்டது. நூறு பாக்களிலுமுள்ள அரும்பதங்களை விளக்க அரும்பத விளக்க மும், ஒவ்வொரு செய்யுளின் கருத்தையும் குறிப்பிக்கப் பாடல் கருத்தின் அவதாரிகையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எம்மதத் தவர்க்கும் சமமான நீதியும் இருபாலரும் கற்கத்தக்க பொருள் களும் இதன்கண் உள்ளன. viii. 448/1908/IV.

R4

## 170.[1]—திரட்டு நூல்கள்

**ராஜரத்தினம் பிள்ளை, டி. எ.—தொ–து.**

93. i. பன்மணிக் கொத்து—முதற் பாகம்: முதற் பதிப்பு; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1908; iv. செ. மூ. ப. 39; v. 19×13 செ.மீ.; vi.. ; vii. உலகநீதி, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நீதிவெண்பா, நன்னெறி ஆகிய நூல்களினின்றும் திரட்டப் பெற்றது. அரும்பத விளக்கம் ஈற்றில் தரப்பெற்றிருக்கிறது. viii. 411/1908/I.

R4

94. i. பன்மணிக் கொத்து—இரண்டாம் பாகம்; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1908; iv. செ. மூ. உ. ப. 75; v. 19×13 செ. மீ.; vi. ..........; vii. இனியவை நாற்பது முதல் திருக்குறள் ஈறாக 12 நீதி நூல்களினின்றும் தேர்ந்து தொகுத்தவை. அரும்பத விளக்கம் ஈற்றில் அகராதியாக அமைக்கப்பெற்றிருக் கிறது. viii. 357/1908/II.

R4

95. i. **விவேக சிந்தாமணி**—முதற்பாகம் ; ii. முத்துசாமி நாயுடு, தாராபுரம் ; சாமுண்டீஸ்வரி அச்சுக்கூடம், தாராபுரம் ; iii. 1909 ; iv. செ. மூ. உ. எ. 135 ; v. 18×11 செ. மீ. ; vi. .......... ; vii. உலகியல் ஒழுக்கங்களை எடுத்துக்காட்டும் பல நீதிச் செய்யுட்களின் தொகுதி. இதற்கு உரையும் உள்ளது. இந்த உரையாசிரியரின் பெயர் தெரியவில்லை. viii. 200/1909/IV.

**R4**

## 181.43—தருக்கம்

**குப்புஸ்வாமி ராஜு, வெ.**

96. i. தருக்க கௌமுதியும் நியாய பதார்த்தமும் : இரண்டாம் பதிப்பு ; ii. வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ், தஞ்சை ; வித்தியா விநோதிநி முத்திராசாலை, தஞ்சை ; iii. 1909 ; iv. உ. ப. 75 ; v. 22×14 செ. மீ. ; vi. ............. ; vii. தருக்க கௌமுதி என்னும் வட நூலின் மொழி பெயர்ப்பு. பதார்த்தங்கள் பற்றியும் அவற்றின் குணம் பற்றியும் விவரிப்பது. நியாய நூல் கூறும் பதினாறு பதார்த்தம் பற்றியும் விளக்கி உரைக்கின்றது. அ. பாலசுப்பிரமணிய பிள்ளை, ல. உலகநாத பிள்ளை என்னும் இருவர் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். பொருளட்டவணை அகராதிக் கிரமத்தில் ஈற்றில் தரப் பெற்றிருக்கிறது. viii. 421/1909/II.

**R625**

**சிவப்பிரகாச சுவாமிகள்**

97. i. தர்க்க பரிபாஷை ; ii. வி. ச. இராமச்சந்திர சாஸ்திரியார்; கமலநாயகி அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. உ. ப. 384 ; v. 16×13 செ. மீ. ; vi. 1—0—0 ; vii. தர்க்க சாஸ்திரம் என்பதன் பொருள் பதார்த்தங்களை நன்றாய் நிரூபிக்கும் நூல் என்பதாம். இது சம்ஸ்கிருதத்தினின்றும் வசன வடிவில் மொழி பெயர்க்கப்பெற்றது. பிழைபட அச்சிட்டிருந்த இதனை இராமச்சந்திர சாஸ்திரியார் முன்னிலையில் பரிசோதித்து, இதற்குக் குறிப்புரையும் கோ. வடிவேலுச் செட்டியார் எழுதியுள்ளார். viii. 3/1909/I.

**R625**

**சோமசுந்தரப் பிள்ளை**

98. i. தருக்க விளக்கம் ; ii. சே. சோமசுந்தரப் பிள்ளை; கணேஷா பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. செ. மூ. உ. ப. 127 ; v. 16×13 செ. மீ. ; vi............. vii. சிவஞான சுவாமிகள் தமிழில் மொழி பெயர்த்துள்ள தருக்க சங்கிரகம், தருக்க சங்கிரக தீபிகை என்பன

வற்றைப் பின்பற்றிச் செய்த கருவி நூல். சூத்திரமும் வேண்டுமிடத்து இயன்றமட்டில் விளக்கமும் அமைந்துள்ளது. சிவஞான யோகிகள் வரலாறு 14 செய்யுட்களில் நூல் முகப்பில் அமைந்துள்ளது. இதற்குப் புலவர் பெருமக்கள் சிலர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். இது "மதிவனப்புச் சேய்" பிரசுர வரிசையில் முதலாவதாகும். viii. 173/1907/III.

**R625**

**நாகரத்தின நாயகர், பு.—மொ–து.**

99. i. *நியாயப் பிரகாசம்—முதற் பாகம்* ; ii. வி. முருகேச முதலியார் ; திரிபுரசுந்தரி விலாச அச்சியந்திர சாலை ; iii. 1906 ; iv. உ. ப. 136 ; v. 24×16 செ. மீ. ; vi. 4–0–0 ; vii. ஸ்ரீ ஸ்வாமி சத்கனுநந்தகிரி அவர்கள் இயற்றிய 'நியாயப் பிரகாசம்' என்னும் வட நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இதனை மொழிபெயர்த்தவரும், பரிசோதித்தவரும் ஸ்ரீ சாது ரத்தின வேதாந்த விசாரணைச் சபையாரைச் சார்ந்தவராவார். இது நூலின் முதற்பாகம் ; இதில் ஏழு பரிச்சேதங்கள் அடங்கியுள்ளன. viii. 299/1906/IV.

**R625**

100. i. *நியாயப் பிரகாசம்* ; ii. வி. முருகேச முதலியார் ; திரிபுர சுந்தரி விலாச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. அக்டோபர், 1907; iv. செ. மூ. உ. ப. 883 ; v. 25×16 செ. மீ.; vi. 4–0–0 ; vii. இது அளவை விளக்கமாகும். இது இந்நூலின் பிற்பகுதி. 137 பக்க முதல் தொடங்கி நூல் முடிய உள்ளது. ஸ்ரீ சுவாமி சத்கனுநந்தகிரி அவர்கள் இயற்றிய மூல நூலின் மொழி பெயர்ப்பு இந் நூல். viii. 55/1907/IV.

**R625**

## 181·48—வேதாந்த தத்துவம்

101. i. **அட்டாங்க யோகக் குறள்** [வருத்தமற வுய்யும் வழி] ; ii. சுப்பிரமணியக் கவிராயர் ; தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை; iii. 1905 ; iv. செ. மூ. எ. 59 ; v. 22×14 செ.மீ.; vi. 0–1–0 ; vii...... ; viii. 547/1908/IV.

**R65**

i. **அத்வைதக் கப்பல்** (தொ. எ. 462 பார்க்க) ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1900 ; iv. செ.மூ.ப. 1 ; vii. அத்வைத உண்மையைக் கப்பலாக உருவகம் செய்து பாடும் பாடல். viii. 290/1901/IV.

**R66**

**அருணகிரி முதலியார், சோ. சிவ.**

102. i சகல சமயாதீதாத்துவிதம் என்னும் சித்தாந்த விளக்கம் ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலே, சென்னே ; iii. 1901 ; iv. உ. ப. 14 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. வேதாகம புராண இதிகாசங்களில் இலை மறைகாய் போல் மறைந்து கிடக்கும் உண்மைகளைத் தொகுத்து வெளியிடப் பெற்றது. viii. 184/1901/IV.

R65

**ஆவிடையம்மாள், செங்கோட்டை.**

103. i. பிரும்ம மேகம் ; ii. நா. வைத்தியநாத பாரதி ; பிரம்மானந்த அச்சுக்கூடம், திருவாதி ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 31 ; v. 14×11 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. பிரும்ம ஞானம் பற்றியது. "சிருஷ்டிக்கு முன் சச்சிதானந்தமாகிய பிரும்ம மேகம்" எனத் தொடங்கிப் பாடுதலின், இதற்குப் "பிரும்ம மேகம்" என்று பெயரிட்டனர். நூலாசிரியரின் சரித்திரம் முதற்கண் அமைந்துள்ளது. இதனோடு தக்ஷிணு மூர்த்தி படனம், வாலாம்பிகை பந்து, துளசி என்பவருக்கு உபதேசம் என்னும் பகுதிகளும் இடம் பெற்றுள்ளன. viii. 196/1910/II.

R65

104. i. வேதாந்த வண்டு ; ii. பிரம்மானந்த அச்சுக்கூடம், திருவாதி; iii. 1909 ; iv. செ.மூ.எ. 17+29+8 ; v. 14×11 செ.மீ.; vi. 0–0-6 ; vii. 'வேதாந்த வண்டு' என்றும், 'வேதாந்த ஆச்சே போச்சே' என்றும், 'பிரும்ம ஸ்வரூபம்' என்றும் மூன்று பகுதிகள் உண்டு. இவற்றுள் முதல் பகுதி வண்டை விளித்து உரைப்பதாக உள்ளது. அடுத்த பகுதி ஆசாரியன் கிருபையினுல் ஆனதும் போனதும் உரைப்பது. viii. 424/1909/II.

R65

**இரங்காச்சாரியார், உ. ப. வே.**

i. அத்வைத கீர்த்தனம் (தொ.எ. 106 பார்க்க) ; ii. விக்டோரியா பாண்டியன் அச்சுக்கூடம், ஆணிக்காரன் சத்திரம் ; iii. 1901 ; iv. செ.மூ.ப. 4 ; vii. 'அறிவே ப்ரும மடா, அதனுல் அதை அறிய வேணுமடா' என்னும் பல்லவியைக் கொண்ட கீர்த்தனம் அமைந்துள்ளது. viii. 138/1901/I.

R65

105 i. திலகப் பிரபாவ அதிரகஸ்ய வேதாந்த உபதேச உண்மை ; ii. அ. நீ. ஸ்ரீநிவாச அய்யங்கார் ; அஷ்ட விலாச அச்சுக்கூடம், திருத்தருப் பூண்டி ; iii. 1910 ; iv. உ. ப. + செ. மூ. ப. 36 ; v. 20×15 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. வேதாந்த விஷயமாகப் பல சித்தர் பாடல்களில் காணும் செய்திகளைத் தழுவி அமைக்கப் பெற்றது. இதில் உபதேச மகாவாக்கிய சாரங்களும் பகவத் வாக்கிய சாரங்களும் அடங்கியிருக்கின்றன. viii. 808/1910/III.

R65

106. i. விஞ்ஞான ருது சோபனம் [அத்வைத கீர்த்தனம்]; ii. விக்டோரியா பாண்டியன் அச்சுக்கூடம், ஆணிக்காரன் சத்திரம்; iii. 1901; iv. செ.மூ.எ, 70; v. 15×10 செ.மீ.; vi. ....; vii. தத்துவ உண்மை உதயமாவது குறித்துச் சோபனப் பாடலாய் உரைப்பது. viii. 138/1901/I

R65

**இராமச்சந்திர சாஸ்திரியார்—மொ. து.**

107. i. வேதாந்த பரிபாஷை; ii. கோ. வடிவேலு செட்டியார் & ம. சண்முக முதலியார்; iii. 1907; iv. உ.ப. 168; v. 16×13 செ. மீ.; vi. ......; vii. வேதாந்த பரிபாஷை என்னும் வட நூலின் மொழி பெயர்ப்பு. இராமச்சந்திர சாஸ்திரியார் தமிழில் மொழி பெயர்த்ததைச் செவ்விய நடையில் கோ. வடிவேலு செட்டியாரும் ம. சண்முக முதலியாரும் எழுதி அமைத்தது இந்நூல். எட்டுப் பரிச்சேதங்கள் இதன்கண் உள. viii. 32/1907/IV.

R65

**இராமச்சந்திர சாஸ்திரியார்; வீ.ஸா.—மொ. து.**

108. i. சித்தாந்த பிந்து; ii. கமலநாயகி அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ.மூ.ப. 149+12+5; v. 16×12 செ. மீ.; vi. 0–10–0; vii. இதன்கண் அத்வைதத்தின் விஷயம் யாவும் எளிதில் அறியுமாறு சங்கிரமாகக் கூறப்பட்டிருக்கின்றன. மது சூதன சரஸ்வதி என்பார் எழுதிய சித்தாந்த பிந்து என்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பு. அப்பா சாஸ்திரி என்பார் மொழி பெயர்த்ததை கோ. வடிவேலு செட்டியாரும் ம. சண்முக முதலியாரும் செவ்விய நடையில் எழுதி அச்சிட்டுள்ளனர். அடிக்குறிப்பாக அங்கங்கே விளக்கக் குறிப்புக்களும் உள்ளன. இதில் பிற் சேர்க்கையாகத் திருவிடை மருதூர்ப் பிட்சுசாஸ்திரிகள் என்னும் உலக்நாத சுவாமிகள் சமஸ்கிருதத்தினின்றும் தமிழில் செய்யுளாக மொழி பெயர்த்த தசகம் என்னும் பகுதியும் உள்ளது. viii. 349/1906/III.

R66

**இராம சுவாமிகள்**

109. i. வேதாந்தப் பிரதீபம்; ii. கோ. வடிவேலு செட்டியார்; சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1909; iv. உ.ப. 16 + 272; v. 17×13 செ.மீ.; vi. 0–12–0; vii. இதன் ஆசிரியர் திருவிதாங்கூர் சமஸ்தானம், வர்கலை சிவகிரி மடாலயம் ஸ்ரீ நாராயண குருஸ்வாமிகளின் சீடர். தமது குருவின்

முகமாக ஓதி உணர்ந்த வேதாந்தார்த்தங்களை யெல்லாம் சுருக்கி 'வேதாந்தப் பிரதீபம்' என்னும் இதனை இயற்றியுள்ளார். அநுபந்த சதுஷ்டயப் பிரகரணம், சாதன சதுஷ்டயப் பிரகரணம், உபதேசப் பிரகரணம், சமாதிப் பிரகரணம், ஜீவன்முத்திப் பிரகரணம் என்னும் ஐந்து பிரகரணங்களைக் கொண்டது. viii. 24/1909/III.

**R65**

**இராமசுவாமி செட்டியார், தேவர்கோட்டை.**

110. i. ஞான இரகசியக் கதை; ii. ஆயுர்வேத அச்சுக்கூடம், சென்னை; iii. 1907 ; iv. உ. ப. 150 ; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0 ; vii. ஸ்ரீவசிஷ்ட முனிவரும் ஸ்ரீவால்மீகி முனிவரும் ஸ்ரீராமபிரானுக்கு உபதேசித்த ஞான இரகசியக் கதை என்று நூல் முகப்பில் குறிக்கப் பெற்றிருக்கிறது. முதலில் கடவுள் வாழ்த்தும், பின் வைராக்கியப் பிரகரணம், முமூட்சுப் பிரகரணம் எனும் இரண்டு பெரும் பகுதிகளும் உள. முதல் பிரகரணத்தில் 33 சருக்கங்கள் உள. இரண்டாவதில் நான்கு சருக்கங்கள் வரையில் உள்ளன. மற்றவை நடந்து வருகின்றன என்னும் குறிப்பு ஈற்றில் உள்ளது. viii. 103/1907/I.

**R65**

111. i. **இராமதாசர் உபதேசம்** ; ii. பெ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலர் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. உ. ப. 16 ; v. 18×11 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. 'சுந்தரி மனோகரன்' என்னும் நவீன நூலில் (வினோத கதை) அடங்கியுள்ள இராமதாசர் உபதேசத்தைத் தனிப்படப் படித்து ஆனந்திக்கும் பொருட்டு வெளியிடப் பெறுவது இச் சிறு நூல். 'ஜன்மாந்திரம் அல்லது இராமதாசர் உபதேசம்' என்பது இதன் முழுப் பெயர். viii. 193/1906/III.

**R65**

**இராம யோகிகள்**

112. i. பிரபோத சந்திரோதய வசனம் அல்லது மெய்ஞ்ஞான விளக்கம் ; ii சை. சிவசங்கர ரெட்டியார் ; ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. நவம்பர், 1902 ; iv. உ. ப. 257 ; v 21×13 செ. மீ.; vi. 1–0–0 ; vii. வேதாந்த சித்தாந்தத்தை அறிந்து கொள்ளுமாறு உருவகமாக வடமொழியில் இயற்றிய நூலை மான்தத் திருவேங்கட நாதர் செய்யுட் காவியமாய் இயற்றினர். இதனை யாவரும் உணரும்பொருட்டுத் தெள்ளிய தமிழ் நடையில் வசனவடிவமாக எழுதப்பெற்றது. viii. 167/1902/IV.

**R65**

**இராமாநந்த சுவாமிகள், நிச்சல, காஞ்சிபுரம்.**

113. i. சொரூப சித்தாந்த மாலை ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1904 ; iv செ.மூ.எ. 8+1+150+1 ; v. 17×13 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. வெண்பாவினால் அமைந்த நூல். வேதாந்த தத்துவம் பற்றி உரைப்பது. viii. 293/1904/II. R65

114. i. ஞானுயிபோதம்: இரண்டாம் பதிப்பு ; ii. கோ. வடிவேலு செட்டியார், சென்னை & ப. வரதராஜப் பிள்ளை, சென்னை ; சிங்கார அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 7+226 ; v. 17×11 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. ஞானம் பற்றிய பாடல். " ஞானுயி" யை விளித்துச் சொல்வதுபோல் அமைக்கப் பெற்றிருகிறது. கொம்மிச்சந்தம் அமைந்த பாடல்களின தத்துவ போதனைகளை வகைபடுத்தி உரைக்கின்றனர். viii. 682/1910/I. R65

115. i. மோக்ஷசாதன விளக்கம் ; ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. உ. ப. 561 ; v. 21×14 செ. மீ. ; vi. .... ; vii. ஞானசாஸ்திரங்களில் இலைமறைகாய்போல் இருக்கும் மோக்ஷ சாதனமாயுள்ள முக்கிய விஷயமெல்லாம் நன்கு விளக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு விஷயத்திற்கும் வேண்டியவளவு சுருதி, ஸ்மிருதி, புராண, இதிகாசங்களினின்றும், தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிரப்பிரபந்தம், திருக்குறள், கைவல்ய நவநீதம் முதலிய நூல்களினின்றும் பிரமாணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. விரிவான பொருளட்டவணை நூல் முகப்பில் உள்ளது. viii. 149/1906/III. R65

**ஔவையார்**

116. i. ஔவை குறள்—மூலமும் உரையும்; ii. ஸ்ரீ சுந்தர விலாச அச்சுக்கூடம் ; iii. 1906 ; iv. செ. மூ. உ. எ. 110; v. 17×12 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. ஔவையார் திருவாய் மலர்ந்த குறள் என்றும் கூறப்பெறும். பிறப்பின் நிலைமை முதலிய பதின்மூர் அதிகாரங்களும், அதிகாரங்களுக்குப் பப்பத்துக் குறள்களாக 110 குறள்களும் உள. இந்நூலுக்கு மா. வடிவேலு முதலியார் என்பார் பொழிப்புரை எழுதியுள்ளார். viii. 182/1907/I. R65

**கங்காதர தேவர், பா.**

117. i. விவேக விளக்கம் ; ii. பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 130+3 ; v. 21×14 செ. மீ. ; vi. .... ; vii. அத்துவித வேதாந்தம் பற்றியது.

வேதாந்தப் பொருளை ஆராயும் வேதியர்களுக்கும் பிறருக்கும் உதவியாக இயற்றப் பெற்றது. வெண்பாவினால் ஆகியது. பொருள் தலைப்புக்கள் உரிய இடங்களில் அங்கங்கே உள்ளன. அவையாவன: ஆசிரியர், சாத்திரம், கல்வி, நூலாசிரியர், வேதாந்தம், மாயாவாதம், மதம், ஞானம், அத்துவிதம் என்பன. viii. 209/1910/II.

R66

**கணபதிதாசர்**

118. i. நெஞ்சறி விளக்கம்—மூலமும் உரையும்; ii. துளசிங்க முதலியார் சன்ஸ், பூவிருந்தவல்லி; சுந்தர விலாச அச்சுக் கூடம்; iii. 1906; iv. செ. மூ. உ. எ. 103; v. 22×14 செ. மீ.; vi. 0–8–0; vii. நெஞ்சை விளித்து அறிவுறுத்தும் முறையில் பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்கள்தோறும் நாகை நாதரைப்பற்றிய சிறப்பும் கூறுகின்றார். இதற்கு மா. வடிவேலு முதலியார் உரை எழுதியுள்ளார். viii. 279/1907/III.

R65

**கந்தசாமி பிள்ளை**

119. i. விவேகானந்த வித்யாரச மஞ்சரி: முதற்பதிப்பு; ii. டி. வரத ராஜுலு செட்டியார்; சுவாமி நாதன் அச்சுக்கூடம்; iii. 1906; iv. உ. ப. 160; v. 21×14 செ. மீ.; vi. 1–0–0; vii. கதை வழி அறிவுரையும், தத்துவ உண்மைகளும் விளக்கிக் காட்டும் நூல். viii. 223/1907/I.

R65

**கரபாத்ர யோகீஸ்வரர், இந்திரபீடம்.**

120. i. சம்பிரதாய சிந்தனைகள் [சங்கராச்சாரிய சுவாமிகளது சரித்திரம்]; ii. பிரின்ஸ் ஆப் வேல்ஸ் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1901; iv. உ. ப. 283; v. 19×11 செ. மீ.; vi. .... vii. வினவிடை முறையில் இது அமைந்துள்ளது. இறைநிலை முதலியன பற்றி விவரிப்பது. viii. 185/1901/I.

R65

**காசி விஸ்வநாதமுதலியார்—மொ. து.**

121. i. நான்கு வேத ரகசியம்; ii. கோ. இராசகோபால பிள்ளை; ஆயுர்வேத அச்சுக்கூடம், சென்னை; iii. 1906; iv. உ. ப. 134; v. 22×14 செ. மீ.; vi 1–0–0; vii. இங்கிலீஷிலிருந்தும் கிரந்தத்திலிருந்தும் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது இந்நூல். 47 உட்பிரிவுகளில் சுருதி, மிருதி, மீமாம்சை முதலிய பலவற்றின் உட்பொருளை விளக்குவது. viii. 156/1906/I.

R65

**காளாஸ்திரி ஆசார்ய சுவாமிகள், நெல்லூர்.**

122. i. *வேதாந்த அனுபவ சாரம்* ; ii. *விஸ்வ குலோத்தாரண அச்சியந்திரசாலை, சென்னை* ; iii. 1910 ; iv. *செ. மூ. ப.* 8; v. 16×11 *செ. மீ.* ; vi. ....; vii. *பூதானந்த சுவாமிகள் முதலியோரது உபதேசங்களைத் தந்து, அவற்றை விளக்கியுரைத்துள்ளார்.* viii. 773/1910/III.

**R65**

123. i. **கீதா சங்கிரக வினாவிடை** ; ii. *கமர்ஷியல் அச்சியந்திர சாலை, சென்னை* ; iii. 1903 ; iv. *உ. ப.* 25 ; v. 21×14 *செ. மீ.* ; vi. ...... ; vii. *கீதையின் கருத்து விளங்கும் வகையில் சுருக்கமாக வினாவிடை முறையில் அமைந்த சிறு நூல். இதில் உள்ள வினாவிடைகள் பெரும்பான்மையும் இராமாநுஜ பாஷ்யத்தை அனுசரித்துள்ளன.* viii. 187/1905/IV.

**R65**

**குப்புஸ்வாமி ராஜு, வெ., தஞ்சை.—மொ. து.**

124. i. *தத்துவமஸி மகாவாக்கிய உபதேசம் : இரண்டாம் பதிப்பு* ; ii. *ஸ்ரீவித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சை* ; iii. 1908 ; iv. *உ. ப.* 57 ; v. 14×11 *செ. மீ.* ; vi. 0–2–0 ; vii. .... ; viii. 99/1908/IV.

**R65**

125. i. *பால போதம்* ; ii. *மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை* ; iii. 1902 ; iv. *உ. ப.* 8+330 ; v. 17×13 *செ. மீ.* ; vi. 1–0–0 ; vii. *இதில் ஒன்பது உபதேசப் பெரும்பகுதிகளும், 125 சிறு பிரசங்கங்களும் உள்ளன. ஆத்மா, ஈசுவரன் முதலிய தத்துவ உண்மைகளை ஆராய்வது. இது ஆசிரியரால் வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பெற்றது.* viii. 19/1903/I.

**R65**

126. i. *விசார சந்திரோதயம்: இரண்டாம் பதிப்பு* ; ii. *ஸ்ரீவித்தியா விநோதினி முத்திரா சாலை, தஞ்சை* ; iii. 1910 ; iv. *உ. ப.* 364 ; v. 17×13 *செ. மீ.* ; vi. 1–4–0 ; vii. *வேதாந்த உண்மையை ஆராயப்புகுவார்க்கு உபயோகமானது. பீதாம்பரஜீ என்பவர் ஹிந்தி பாஷையில் வெளியிட்டிருக்கும் நூலின் மொழிபெயர்ப்பு இந்நூல். வினாவிடை முறையில் உள்ளது. இந்நூலிற் கலையெனப் பெயரிய பதினாறு பிரகரணங்களிருக்கின்றன. அவற்றிற்கு ஆங்காங்கு 'டிப்பணி' என்னும் விளக்கவுரையும் செய்யப்பட்டிருக்கின்றது. இந்நூலின் விஷய அகராதி அட்டவணை நூலின் முதற்கண் இடம்பெற்றுள்ளது.* viii. 515/1910/I.

**R65**

127. i. விருத்திப பிரபாகரம் ; ii. சை. சிவசங்கர செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை ; iii. 1901 ; iv. உ. ப. 580 ; v. 23×15 செ. மீ. ; vi. 4–0–0 ; vii. வேதாநதம் பற்றிப் பலபடியாக விளக்கிச் சொல்வது. நிச்சலதாஸர் ஹிந்தியல் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் மொழி பெயர்ப்பு. viii. 211/1901/II.

R65

128. i. விருத்திரத்நாவலி ; ii. வி. கோ. விந்தன் அண்டு பிரதர்ஸ், தஞ்சை ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1902 ; iv. உ. ப. 4 + 160 ; v. 17 × 15 செ. மீ. ; vi. ...... ; vii. வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப் பெற்றது. பதினான்கு ரத்நங்கள் என்னும் பெரும் பகுதிகளும், அவற்றுள் 43 சிறு பகுதிகளும், 257 பிரசங்கங்களும் கொண்டு விளங்குவது. பிரமாணங்கள் காட்டித் தத்துவ உண்மைகளை விவரிப்பது. viii. 18/1903/I.

R65

129. i. விவேக சிந்தாமணியில் வேதாந்த பரிச்சேதம் ; ii. வி. கோவிநதன் அண்டு பிரதர்ஸ், தஞ்சை ; ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சை ; iii. 1906 ; iv. உ. ப. 109 ; v. 18 × 11 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. உபநிஷத், பிரஹ்ம சூத்திரம், பகவத்கீதை முதலிய நூல்களைப் பயிலாதவர் பொருட்டு அவற்றின் சாரமாக நிஜகுணயோகி என்பவரால் கன்னட மொழியில் இயற்றப் பெற்றது இந்நூல். இதனை நீலகண்ட சுவாமி என்பார் முதலில தமிழில் மொழி பெயர்த்தனர். அம்மொழி பெயர்ப்பில் உள்ள பிழைகளை மூல நூலுடன் ஒப்பு நோக்கித் திருத்தமாகப் பதிப்பிக்கப் பெற்றது இந்நூல். பிரகரணேற்பத்திபறறி 39 தலைப்புக்களும், வேதாந்த விஷயம் பற்றி 136 தலைப்புக்களும் உள்ளன. சிவப்பிரகாச சுவாமிகள் செய்யுள் வடிவில் இயற்றியுள்ள வேதாந்த சூளாமணி கன்னட மூல நூலின் மொழி பெயர்ப்பே. ஆயினும் அது கன்னட விவேக சிந்தாமணியிலும் குறைந்த பிரக்கிரியைகளைக்கொண்டது. viii. 57/1906/II.

R65

## குமார தேவர்

i. அத்துவித உண்மை (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904 ; iv. செ. மூ. எ. 2 + 101 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் நான்காவது. viii. 73/1904/IV.

R66

i. ஆகம நெறியகவல் (தொ. எ. 130 பார்க்க); ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. செ. மூ. ப. 3; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் பதின்மூன்றாவது. viii. 73/1904/IV.

R65

i. உபதேச சித்தாந்தக் கட்டளை (தொ. எ. 130 பார்க்க); ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1904; iv. உ. ப. 5; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் பத்தாவது. viii. 73/1904/IV.

R65

130. i. குமார தேவர் சாஸ்திரக் கோவை; ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. செ. மூ. ப. 183; v. 17 × 13 செ. மீ.; vi. 0–10–0; vii. குமார தேவரின் சரித்திரச் சுருக்கம் முதற்கண் சுருக்கமாக உரைநடையில் உள்ளது. இவர் செய்த சாத்திரங்கள் மகாராஜா துறவு முதல் சிவ சமரச வாத அகவல் ஈறாகப் பதினாறு. இவை அத்வைத சித்தாந்தம் பற்றியன. வீரசைவ சித்தாந்தமும் சிற்சில இடங்களில் விளக்கப்பட்டுள்ளன. இவர் செய்த பெரிய நாயகியம்மை பதிகமும் இதில் இடம் பெற்றுள்ளது. இந்நூலாசிரியரைக் குறித்துச் சிதம்பர சுவாமிகள் பாடிய இரு பிரபந்தங்களும் இதில் உடன் இணைக்கப்பட்டுள்ளன. viii. 73/1904/IV.

R65

i. சகச நிட்டை (தொ. எ. 130 பார்க்க); ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. செ.மூ.எ. 11; vii. குமாரதேவர் சாத்திரங்கள் பதினாறனுள் ஒன்பதாவது. viii. 73/1904/IV.

R65

i, சிவசமரச வாத அகவல் (தொ. எ. 130 பார்க்க); ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. செ.மூ.ப. 4; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் இது பதினாறாவது. viii. 73/1904/IV.

R65

i. சிவதரிசண அகவல் (தொ. எ. 130 பார்க்க); ii. கோ. வடிவேலு செட்டியார்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. செ.மூ.ப. 5; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் பன்னிரண்டாவது. viii. 73/1904/IV.

R65

i. சுத்த சாதகம் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 6 + 95 ; vii குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் இரண்டாவது. viii. 73/1904/IV.

R65

i. ஞானவம்மானை (தொ.எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ. மூ. அடி 100 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் ஆறுவது. viii. 73/1904/IV.

R65

i. பிரம்ம சித்தியகவல் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.ப. 9 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் பதினொன்றுவது. viii. 73/1904/IV.

R65

i. பிராமானுபவ அகவல் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.ப. 4 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் பதினைந்தாவது. viii. 73/1904/IV.

R65

i. பிரமானுபூதி விளக்கம் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 102 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் ஐந்தாவது. viii. 73/1904/IV.

R65

i. மகாராஜா துறவு (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii 1904 ; iv. செ.மூ.எ. 12 + 117 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் முதலாவது. viii. 73/1904/IV.

R65

i. விஞ்ஞான சாரம் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 3 + 98 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினாறனுள் மூன்றுவது. viii. 73/1904/IV.

R65

i. வேத நெறியகவல் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடி வேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.ப. 4 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினான்குள் பதினொன்காவது. viii. 73/1904/IV.

R65

i. வேதாந்த தச காரியக் கட்டளை (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. உ. ப. 4 ; vii. குமார தேவர் சாத்திரங்கள் பதினான்குள் எட்டாவது. viii. 73/1904/IV.

R65

i. வேதாந்த தசாவத்தைக் கட்டளைச் சுருக்கம் (தொ. எ. 130 பார்க்க) ; ii. கோ. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. உ. ப. 2 ; vii. குமாரதேவர் சாத்திரங்கள் பதினான்குள் ஏழாவது. viii. 73/1904/IV.

R65

i. கைவல்லிய ஓடம் (தொ. எ. 462 பார்க்க) ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1900 ; iv. செ. மூ. எ. 4 ; vii. தத்துவ உண்மையை ஓடப் பாடலில் கூறுவது; வாழ்க்கையென்னும் ஓடத்தை முத்திக் கரையில் சேர்க்குமாறு வேண்டுவது. viii. 290/1901/IV.

R65

**கோபால கிருஷ்ணையர்— மொ. து.**

131. i. சந்யாஸி கீதம் ; ii. ஸ்ரீ மீனாம்பிகை முத்திராக்ஷர சாலை, மதுரை ; iii. 1904 ; iv. செ. மூ. எ. 13 ; v. 13×11 செ. மீ.; vi. 0–0–6 ; vii. ஸ்ரீ விவேகானந்தர் ஆங்கிலத்தில் இயற்றிய கீதத்திற்குத் தமிழ் மொழி பெயர்ப்பு. துறவியின் இயல்பு கூறுவதோடு, துறவிக்குக் கூறும் அறிவுரையாகவும் உள்ளது. viii. 129/1904/III.

R65

132. i. சந்யாஸி கீதம் [பாரத ஜாதீய கீதம்] ; ii. விவேகபானு அச்சி யந்திர சாலை, மதுரை ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 27 ; v. 16×12 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. இது ஸ்ரீமத் விவேகா னந்த சுவாமிகள் இயற்றிய சந்யாசியின் பாட்டு என்பதன் மொழிபெயர்ப்பு (Song of the Sanyasin). சந்நியாசிகளுக்குரிய ஒழுக்க முறை முதலியன கூறுவது. இது சுவாமிகள் அருளிய ஆங்கில கீதங்களின் மொழி பெயர்ப்பு. viii. 172/1910/I.

R65

**கோவிந்தசாமி சுவாமிகள், மு. ஆ. வ., விஜயபுரம்.**

i. *யதார்த்த போதம் (தொ. எ. 1051 பார்க்க)* ; ii. எட்வர்ட் அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. செப்டம்பர், 1910 ; iv. செ. மூ. எ. 1+12 ; v. 19×12 செ. மீ. ; vi. ........ ; vii. நெஞ்சினுள் நிலைமைகளை ஆராய்வது ; யோக நிலை பற்றி விவரிப்பது. viii. 30/1910/IV.

R65

**சக்ரபாணி அய்யர், எஸ். ஏ.**

133. i. *கணிகா ஞானி ஸம்வாதம்* ; ii. ஸ்ரீ வித்தியா விநோதினி பிரஸ், தஞ்சை ; iii. 1910 ; iv. உ. ப. 64 ; v. 17×13 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. இது ஒரு பொது மகட்கும் ஞானிக்கும் நேர்ந்த சம்பாஷணை ; இது ஒரு வேதாந்தக் கதை. ஒரு விலைமகள் மிகுந்த சுந்தர வடிவையும் தேக வலிமையை யும் உடைய ஒரு பிராமண சிரேஷ்டரைப் பார்த்து, அவருடன் கூடக் கருதி அவர் இருக்கும் ஏகாந்தமான இடநோக்கிச் சென்று, முன்னின்று கைகூப்பி, பயபக்தியுடன் இனிமையான வசனங்களை வசனிக்கத் தொடங்கவே, அவர் அவளுரைக்கும் சிற்றின்பச் சுவை நாடிய சொற்களுக்கு எதிரிடையான பேரின்பப் பற்றுள்ள நித்தியானந்தத்தையொட்டிய அருமையான மொழிகளால் அவள் விருப்பத்தை வெறுத்து ஓடும் வண்ணம் எடுத்துக் கூறிய தத்வோபதேச வாக்கியார்த்த மகிமை. முதலில் வேதாந்த வமிசாவளியும், வேதாந்த வமிசாவளி விவரமும் உள்ளன. முத்துசாமி அய்யர் முதலிய பலர் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். viii. 678/1910/II.

R65

**சந்திரசேகர சுவாமிகள்—மொ. து.**

134. i. *வேதாந்த சாரம் (வினு விடை)* : இரண்டாம் பதிப்பு ; ii. கோ. வடிவேலு செட்டியார் & சண்முக முதலியார் ; கமல நாயகி அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1905 ; iv. உ. ப. 116 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–10–0 ; vii. சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களுக்கு விரோதமின்றியுள்ளது. பிரம ஞானிகள் அருளிச்செய்த சாத்திரங்களில் மக்கள் இன்றியமையாது அறிதற்குரியனவற்றை இந்நூல் கூறுகிறது. சமஸ்கிருதத்தி லிருந்து செவ்விய வசன நடையில் வினுவிடை வடிவாக மொழிபெயர்க்கப் பெற்றது. viii. 170/1905/III.

R65

**சற்குரு சுவாமிகள்**

**135.** i. சொரூப ஞான சங்கிரகம் ; ii. என். சுப்பராயர், அம்மாப் பேட்டை யென்னும் அர்ச்சுனன் குடி ; சண்முக சுந்தர விலாச அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. 1907 ; iv. உ. ப. 40 ; v. 21×14 செ. மீ. ; vi. 0-2-6 ; vii. ஆத்ம சொரூபம் பற்றி விளக்குவது. குருவினிடம் கொள்ளும் நிறைந்த பக்தியால் சிறந்த வீடு பேற்றைப் பெறலாம் என்பதை விளக்கிக் காட்டுவது. viii. 335/1907/IV.

R65

**சாந்தலிங்க சுவாமிகள்**

**136.** i. வைராக்கிய சதகம் ; ii. பெ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலர் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. உ. எ. 6+50 ; v. 18×13 செ. மீ. ; vi. 0-2-0 ; vii. சென்னை திராவிட புத்தக டிபோ பதிப்புக்கள் வரிசையில் வெளிவருவது; விருத்தியுரையுடன் அமைந்துள்ளது. viii. 197/1906/III.

R65

**சிந்தாமணிச் செட்டியார், ஏரியூர்.**

**137.** i. ஞான நெறி விளக்கம் [கண்மணி கும்மி] ; ii. நீல லோசனி பிராஞ்சு அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. 1909 ; iv. செ. மூ. எ. 4+1+11 ; v. 14×11 செ. மீ. ; vi.......; vii. பக்தி நிலை, யோக நிலை முதலியன பற்றி உரைப்பது. viii 131/1910/I.

R65

**சிவப்பிரகாச சுவாமிகள், கரபாத்திர—தொ. து.**

**138.** i. ஞான ஸாதக ஸஹாயம் ; ii. எ. சமரபுரி முதலியார் ; கலா ரத்னாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909 ; iv. செ. மூ. ப. 225 ; v. 13×10 செ. மீ. ; vi. 0-12-0 ; vii. வேதாந்த ஞானத்தை அடைவதற்குச் சாதகமாகப் பெரியோர்கள் பலர் அருளிய கருத்துக்களை ஒருங்கு திரட்டித் தருவது இந்நூல். முதற் கண் சில குரு ஸ்தோத்திரங்கள் உள்ளன. அடுத்து, சங்கராசாரியர் அருளிய தக்ஷிணாமூர்த்தி அட்டகம், மநிஷா பஞ்சகம், சோபான பஞ்சகம், தசகம், விவேக சட்கம், கௌபீந பஞ்சகம், சொரூப லக்ஷண விருத்தி ஆகியவையும் உள்ளன. பின் குரு சீட சம்வாத ரூபமாய் அப்பியாசத்தின் சாதக பாதக உளவுகளை உணர்த்துகின்றது. தாயுமானவர் பாடல், ஒழிவிலொடுக்கம் முதலிய நூல்களிலிருந்து பற்பல மேற்கோள்காட்டி விவரிப்பது. viii. 263/1909/II.

R65

**சிவப்பிரகாச சுவாமிகள், துறைமங்கலம்.**

139. i. வேதாந்த சூளாமணி ; ii. பி. யம். சாமிநாத பிள்ளை ; அஷ்டலக்ஷ்மீ விலாசம் பிரஸ், மதுரை ; iii. 1904 ; iv. உ. ப. 48 ; v. 21×14 செ. மீ. ; vi. 0–3–0 ; vii. வடமொழியில் அமைந்த உத்தர மீமாஞ்சையிலுள்ள பிரம காண்டத்திற்கு முரணுகாதவாறு பாடல்களாகப் பாடியவர் சிவப்பிரகாசர். இவரது நூலுக்கு அருணசல சுவாமிகள் என்பார் பதவுரையும், சச்சிதானந்தம் பிள்ளை என்பார் பொழிப்புரையும் எழுதி யுள்ளார். இவற்றையெல்லாம் நோக்கி விஞ விடையாகப் பி. யம். சாமிநாத பிள்ளையால் இயற்றப் பெற்ற நூல் இது. 'வேதாந்த சூளாமணி விஞ விடை முற்றிற்று' என்றே நூல் இறுதியில் உள்ளது. viii. 78/1904/IV.

R65

140. i. வேதாந்த சூளாமணி ; ii. கோ. வடிவேலு செட்டியார் & வே. விசுவநாத பிள்ளை ; ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1909 ; iv. செ. மூ. உ. எ. 185 ; v. 22×15 செ. மீ. ; vi. 1–4–0 ; vii. இது கன்னட மொழியில் நிஜகுண யோகி என்பார் செய்த 'வேதாந்த பரிச்சேதம்' என்னும் நூலின் மொழிபெயர்ப்பாகும். இதற்கு பிறகை அருணசல சுவாமிகள் செய்த விரிவுரை தரப் பெற்றிருக்கிறது. viii. 420/1909/III.

R65

**சிவராயர், அ.—மொ. து.**

141. i. விசார சாகரம் : இரண்டாம் பதிப்பு ; ii. வெ. குப்புஸ்வாமி ராஜு ; ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 480 ; v. 25×16 செ. மீ. ; vi. 3–0–0 ; vii. வேதாந்த விசாரம் குறித்து ஹிந்தியில் நிச்சாலதாசர் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு ; தரங்கம் என்னும் எழு பெரும் பிரிவாக உள்ளது. இவை 527 சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விளக்கம் தரப்பட்டுள்ளது. மூல நூலுக்கு வேண்டும் விளக்கங்கள் முதலியவை அடிக்குறிப்பாக அங்கங்கே அமைக்கப்பட்டுள்ளன. viii. 198/1904/I.

R65

**சுகர்**

142. i. சுகர் கைவல்லியம் ; ii. எம். வி. கோவிந்தாசாரியார் & பெ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலர் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. எ. 110 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–2–0 ; vii. சென்னை, திராவிட புத்தக டிபோ பதிப்பு வரிசை யில் வெளிவருவது இந்நூல். viii. 192/1906/III.

R65

**சுந்தர சுவாமிகள், கோடகநல்லூர்.**

143. i. சுவானுபவ ரஸ மஞ்சரி : இரண்டாம் பதிப்பு ; ii. சிதம்பரம் பிள்ளை, மாவடி ; iii. யூனியன் சென்றல் அச்சியந்திர சாலை, திருநெல்வேலி ; iii. 1904 ; iv. உ.ப. 102 ; v. 21×12 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. 22 பிரகரணங்களில் தத்துவ விஷயங்கள் விவரித்துக் கூறப்பட்டுள்ளன. கல்லிடையூர் வித்வான் சிதம்பரநாதக் கவிராஜர் முன் பரிசோதித்துப் பதிப்பித்த பிரதிக்கு இணங்க வெளியிடப்பெற்றது. viii. 130/1905/IV.

R65

144. i. நிஜானந்த விலாசம் : இரண்டாம் பதிப்பு ; ii. சிதம்பரம் பிள்ளை, மாவடி & கோ. சிதம்பரம் பிள்ளை ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1904 ; iv. உ.ப. 213+19 ; v. 22×13 செ. மீ. ; vi. 0–14–0 ; vii. 14 பிரகரணங்களில் பற்பல தத்துவ உண்மைகளை விவரிப்பது. பல மத சித்தாந்தங்கள் பற்றியும் உரைப்பது. சுவாமிகளின் மாணாக்கர் சுந்தரம் பிள்ளை முன் பதிப்பித்த பிரதிக்கு இணங்க வெளியிடப் பெற்றது. viii. 223/1905/III.

R65

**சுந்திர ராஜம்**

145. i. அத்துவித லீலாமிர்தம்—முதற் பாகம் ; ii. எம். வி. நாயுடு அண்டு கம்பெனி ; iii. 1906 ; iv. செ.மூ.ப. 16 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. பஜனைகளில் பாடத்தக்க கீர்த்தனங்கள் அமைந்துள்ளன. இவை சமரச கீர்த்தனங்களாகும். அத்துவித உண்மையை யாவரும் எளிதில் உணரும் பொருட்டுப் பாடப்பெற்றவை. viii. 81/1906/IV.

R66

**சுப்பராய ஆசாரியர், தண்டரை.**

146. i. அகம்புற ஆராய்ச்சி விளக்கம் : இரண்டாம் பதிப்பு ; ii. வடிவேலு முதலியார் ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. உ.ப.+செ.மூ.ப. 379+13 ; v. 17×13 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. நாட்ட பேத விளக்கம், ஐம்பொறி ஆராய்ச்சி விளக்கம் முதலிய பல தலைப்புக்களில் தத்துவ உண்மைகளை எடுத்துரைக்கின்றது. 24 பொருள்களைப் பற்றிய சிந்தனை உளது. viii. 544/1908/III.

R65

147. i. ஞானஞ்ஞான ரகித அகம் பொருள் விளக்கம் ; ii. வேலு தேசிகர், பாலூர் ; கணேச அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ. மூ. எ. 7+13+728 ; v. 15×12 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. இது முகவுரை, பாயிரம் உட்பட 37 பிரிவுகளை உடையது. விவேகாதி இலக்கணம், ஞானகுரு விலக்கணம், சற்குருவிலக்கணம் முதலியனபற்றி உரைப்பது. viii. 39/1904/II.

R65

148. i. புருஷார்த்த போதினி ; ii. முனிசாமிப் பிள்ளை, களத்தூர் ; iii. 1908 ; iv. உ. ப. 16+12+322 ; v. 17×13 செ. மீ. ; vi. 1–0–0 ; vii. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்கள் பற்றிப் பற்பல மேற்கோள்களுடன் விரிவாக அமைந்துள்ளது. viii. 24/1908/III.

R65

**சுப்பராய ஆசாரியர், வல்லக்கோட்டை.**

149. i. ஞாநாநுபவ போதரசம்—மூலம் ; ii. த. சுப்பராய ஆசாரியர் ; கலா ரத்நாகர அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ. எ. 2+3+37 ; v. 14×11 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. வினை இயல்பு, மண்ணாதி பூத இயல்பு முதலியன பற்றி விளக்குவது. நெஞ்சிற்கு உபதேசம் செய்வதுபோல் நெஞ்சை விளித்து அறிவுறுத்துகிறார். இதன் ஆசிரியர் ஈசூர் கணக்கு சச்சிதானந்த சுவாமிகளின் மாணாக்கரில் ஒருவராவர். viii. 206/1909/III.

R65

**சுப்பிரமணியம் பிள்ளை, எம். மைசூர்.**

150. i. ஞானப்பிரகாச விளக்கம் ; ii. டி. எம். சந்துராம் ராவ் & எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு ; பாக்கிய விலாஸ் பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1910 ; iv. உ.ப. 54 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. இது ஓர் அற்புதமான சிறு புத்தகம். துஷ்டர்களோடு சேர்ந்து சீர்கெட்ட ஒருவன் நற்குணம் நற்செயல்களுள்ள தனது நண்பனிடத்தில் சேர்ந்து, அநேக நீதி ஞானங்களைக் கற்று, தன் துர்க்கிருத்தியங்களை நிவர்த்தி செய்தான். பிறகு நற்கதியடைய அபேட்சித்து, அதற்கு அனுசரிக்கவேண்டிய ஸத்கர்மம், ஞானம், பக்தி, வைராக்கியம் முதலானவைகளைப் பற்றி அநேக திருஷ்டாந்தங்களைக் கேட்டு, ஒரு சற்குருவை அடைந்து, அவருக்குச் சிசுருஷைகள் செய்து, அவரால் ஞானோபதேசம் பெற்று நற்கதி அடைந்ததைக் கூறும் நூல். viii. 321/1910/III.

R65

**சுப்பிரமணியையர், ஆர். வையை.**

151. i. திருவருட்கோவை ; ii. கல்யாணசுந்தரம் முத்திராசாலை, தஞ்சை ; iii. 1906 ; iv. செ. மூ. எ. 8+2+100 ; v. 18×13 செ.மீ. ; vi. ......; vii. இறைவன் திருவருட் பேற்றினை அகப் பொருட் கோவையில் அமைத்துக் கூறுவது. இதில் திருவருட்பேறு, சித்தன் மகிழ்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கன் மகிழ்ச்சி, பெருமான் பிரிவு, உற்றார் மகிழ்ச்சி, பெருமான் வரவு, மகிழா மகிழ்ச்சி என்னும் எட்டுப் பெரும் பிரிவுகளும் ஒவ்வொன்றிலும் பல துறைகளும் உள்ளன. துறை விளக்கம் சூத்திர அமைப்பில் உள்ளது. viii. 249/1906/III.

R65

**சுவாமிநாதர், சிவசம்பு.**

152. i. அமிர்த வாக்கியம் ; ii. சண்முக முதலியார் முதலியோர் ; விவேக பாநு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1910 ; iv. உ.ப. 24 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. இது சுவாமிகளால் சொல்லப்பெற்ற ஓர் பிரசங்கம். உலகில் நல்லற நெறிப்படி வாழுவோர் முத்திப்பேற்றுக்குரியராவர் என்னும் உண்மையை எடுத்துக் கூறுவது. ஆலய தரிசனை பற்றியும், தெய்வம் ஒன்றே என்பது பற்றியும் இறுதியில் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. viii. 685/1910/III.

R65

**சேஷாத்திரி சிவனார்**

153. i. நாநா ஜீவ வாதக் கட்டளை ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 8+88 ; v. 16×13 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. கோ. வடிவேலுச் செட்டியாரால் இயற்றப் பெற்ற குறிப்புரையும் இதில் உள்ளது. வேதாந்தம் கற்பார்க்கு உதவும் முதல் துணை நூல். viii. 291/1904/II.

R65

154. i. நாநா ஜீவ வாதக் கட்டளை ; ii. சுப்பராய சுவாமிகள் ; ஸ்ரீ வித்யா விநோதினி முத்திரா சாலை, தஞ்சை ; iii. 1905 ; iv. உ.ப. 664 ; v. 17×13 செ.மீ. ; vi. 1–8–0 ; vii. இது வேதாந்த சாத்திரங்களுள் ஒன்று. இதற்குச் சிவானந்த சுவாமிகள் செய்த வியாக்கியானம் இதன்கண் உள்ளது. இவ் வியாக்கியானம் விரிவாயும் தெளிவாயும் எழுதப்பட்டுள்ளது. viii. 213/1905/III.

R65

155. i. நாநா ஜீவ வாதக் கட்டளை [திருமூல நாயனார் வேதாந்தத் தத்துவக் கட்டளையும்] ; ii. பொ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலர் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 19 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. ...... ; viii. 194/1906/III.

R65

156. i. நாநா ஜீவ வாதக் கட்டளை : இரண்டாம் பதிப்பு ; ii. கோ. வடிவேலு செட்டியார், சென்னை & சண்முக முதலியார், மங்கலம் ; சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 104 ; v. 16×13 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. வேதாந்தம் பயிலப் புகுவார்க்கு முதனூலாக வழங்கப் பட்டு வருவது. ஆசிரியர் சூசனையாகக் குறித்துள்ளவற்றை ஆங்காங்கு கோ. வடிவேலு செட்டியார் விளக்கிக் குறிப்புரை எழுதியுள்ளார். இப்பதிப்பினைக் குறித்துக் காஞ்சிபுரம் இராம ஸ்வாமி நாயுடு முதலிய ஐவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். viii. 433/1909/III.

R65

157. i. ஞான வாசிட்ட வமலராமாயண வசனம்; ii. பி.தெய்வசிகாமணி முதலியார் ; மநோன்மணி விலாச அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1902 ; iv. உ.ப. 2+412 ; v. 21×15 செ.மீ.; vi. 1–8–0; vii. ஞான வாசிட்ட நூலின் தமிழ் உரை நடை. ஞான வாசிட்ட நூற்கவிதைகள் ஒவ்வொன்றையும் வசனமாக முறையே அமைத்து எழுதப் பெற்றது இந்நூல். viii. 132/1903/I.

R65

### தண்டபாணி சுவாமிகள்

158. i. வேதத்தைக் குறித்த 6-வது வியாசம் : இரண்டாம் பதிப்பு ; ii. தி. உடைய நாயகம் பிள்ளை ; சென்னைப் பண்டித மித்திர யந்திர சாலை, சென்னை ; iii. 1903 ; iv. உ. ப. 81 ; v. ...... ; vi. ........ ; vii. வேதத்தைக் குறித்து வினு விடையாகப் பல செய்திகளைத் தெரிவிக்கின்றது. சீடன் வினுவுதலும் குரு விடை யளித்தலுமாக அமைந்துள்ளது. இது குமர குருதாசர் வேதத்தைக் குறித்து வெளியிடும் ஆறுவது வியாசமாகும். viii. 102/1904/I.

R65

### திரு அண்ணுமலை சுவாமிகள்

i. உடற் கூறும் ஹரிகீர்த்தனமும் (தொ. எ. 1122 பார்க்க); ii. அப்பாராவு முதலியார் ; ஹிந்து மாரல் அச்சுக்கூடம் ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 1+14+1+1 ; vii. உடலின் நிலை யாமை முதலியன கூறி அறிவுறுத்தும் கீர்த்தனமும், கண்ணனது பால லீலைகளைக் கூறும் கீர்த்தனம் ஒன்றும் உள்ளன. viii. 249/1901/IV.

R65

### திருமூல நாயனர்

i. வேதாந்தத் தத்துவக் கட்டளை (தொ. எ. 155 பார்க்க); ii. பொ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலர் ஓர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. உ. ப. 11 ; viii. 194/1906/III.

R65

159. i. **திருவருட் கைவல்யம்** ; ii. *கல்யாண சுந்தரம் முத்திரா சாலை, தஞ்சை* ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 5+111+1 ; v. 14×11 செ.மீ. ; vi. .. .. ; vii. *அத்வைத வித்தை பற்றி எளிய முறையில் விவரித்துச் செல்வது.* viii. 54/1905/III.

R65

**திருவேங்கடஸ்வாமி முதலியார், பெங்களூர்.**

160. i. *குருக்கள் யாவர் ?* ; ii. *சி. கோவிந்தராஜுலு நாயுடு; பிரமோ ஆர்பன் அசைலம் அச்சியந்திர சாலை, சென்னை* ; iii. 1903 ; iv. உ.ப. 14 ; v. 20×14 செ.மீ. ; vi. ........ ; vii. *பெங்களூர் பிரஹ்ம வேதியில் நிகழ்த்திய பிரசங்கம்.* viii. 38/1903/II.

R65

**துரைசாமி வள்ளலன்**

i. *உண்மை கூறல்* (தொ. எ. 161 பார்க்க); ii. *மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை* ; iii 1906 ; iv. செ.மூ.ப. 12 ; vii. *கீர்த்தனைக கவிதையாலும வேறு வகையான எளிய பாடல் களாலும் அமைநதது. உலகியல், உடல் நிலை, உயிர் நிலை ஆகியவை பற்றிய உண்மையை விளம்புவது. விட்டு விடப் போகுதுயிர் , இரட்டைப் பண், மாயா மனம், அறுபது மேலீடு, நாமாவளி, ஆனந்தக்களிப்பு என்னும் தலைப்புக்களில் பாடல் களாக உளளன* viii. 276/1907/II.

R65

i. *சமாதி விவேகம* (தொ. எ. 161 பார்க்க); ii. *மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1906 ; iv. உ.ப. 8 ; vii. *ஞான சமாதி இத்தன்மைத்து எனத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் விளக்கிக் கூறுவது.* viii. 276/1907/II.

R65

i. *சுரகுவேந்தன் அநுபவக் கும்மி* (தொ. எ. 161 பார்க்க); ii. *மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 12 : vii. *சுரகு வேநதன் தனது சொந்த நிலையை உணர்ந்த வகையை விளஙக உரைப்பது.* viii. 276/1907/II.

R65

i. *தத்துவாமிர்த போதம்* (தொ. எ. 161 பார்க்க) ; ii. *மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1906 ; iv. செ.மூ.ப. 10 ; vii. *தோறறுவாய் அகவலாகவும் பின்னர் வேறு வகை இசைப் பாடல்களாகவும் அமைந்துளளது. தத்துவத் தொகுதி, பறைச்சியும் பறையனும், குறவனும் குறத்தியும் என்னும் தலைப்புக்களில் தத்துவ நியதி பற்றிப் பேசியுள்ளார்.* viii. 276/1907/II.

R65

161. i. மோட்ச சாதன துறவற விளக்க வினா-விடை [சமாதி விவேகம், தத்துவாமிர்த போதம், சுரகு வேந்தன் அனுபவக் கும்மி, உண்மை கூறல்] ; ii. மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1906; iv. உ.ப.+செ. மூ. ப. 56; v. 17×13 செ.மீ.; vi. 0–4–0 ; vii. சாத்துக் கவிப் பாடல்களிலிருந்து இந் நூலாசிரியர் பெயர் துரைசாமி வள்ளலன் என்பது தெரியவரும். இவர் கோடக நல்லூர் ஸ்ரீபரம சுந்தர சுவாமிகளின் சீடர். எளிய நடையில் துறவறம் பற்றி வினு விடை முறையில் தக்க எடுத்துக் காட்டுகளுடன் விளககியுள்ளார். மோட்ச சாதன துறவற விளக்க வினாவிடை, சமாதி விவேகம் இரண்டும் உரைநடையில் உள்ளன. ஏனைய தத்துவாமிர்த போதம், சுரகு வேந்தன் அனுபவக் கும்மி, உண்மை கூறல் என்பவை செய்யுள் நடையில் இயன்றவையாகும். viii. 276/1907/II.

R65

**நடராஜ ஐயர், வி.**

162. i. தத்துவ தரிசினி : முதற் பதிப்பு ; ii. எக்கின் பாதம் அண்டு கம்பெனி, சென்னை ; iii. 1899 ; iv. உ. ப. 96+8 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–12–0 ; vii. இதனை இயற்றியவர் 'லோகோபகாரி, ஞான சந்திரிகா' பத்திரிகை களின ஆசிரியராவர். தத்துவ விஷயங்கள், தியானம், பக்தி பற்றிய குறிப்புக்கள் ஆகியவை குறித்து எளிய வசன நடையில் விளக்கங்கள் உள்ளன. viii. 79/1902/I.

R65

163. i. நவநீத சாரம் ; ii. கே. வடிவேலு செட்டியார் ; மதராஸ் ரிப்பன அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1903 ; iv. உ. ப. 149 ; v. 17×13 செ. மீ.; vi. 0–8–0 ; vii. வேதாந்த சாஸ் திரத்தில் இலைமறைகாய் போல் உள்ள அரிய பெரிய விஷயங் களை எளிதில் உணர உதவுகிறது. வைராக்கியப் பிரகரணம், முமூட்சுப் பிரகரணம், உற்பத்திப் பிரகரணம், திதிப் பிரகரணம், உப சாந்திப் பிரகரணம், நிருவாணப் பிரகரணம் என்னும் ஆறு பிரகரணங்களை உடையது. வினாவிடை வடிவமாய், அமல ராமாயணம் என்னும் ஞான வாசிட்டத்தை ஒத்திருக்கிறது. viii. 244/1903/IV.

R65

**நாராயணசாமி முதலியார், செங்கல்பட்டு.**

164. i. உண்மைப் பொருள் விளக்கம் ; ii. வைஜயந்தி பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. உ.ப. 186 ; v. 19×13 செ. மீ.; vi. ...... ; vii. வேதாந்த சித்தாந்த அத்வைத சித்தர் ஞானாதி மார்க்க நிலைமைகளையும் அவைகளின் வாய்மைகளையும்

ஓர்முகமாக மேற்கோள்களுடன் விளக்கும் வசன நூல். 256 அம்சங்கள் இதன்கண் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 113/1905 /II.

**R65**

**நாராயணசாமி ஜோசியர், டி. எஸ்.**

165. i. ஞான வியவகாரம்; ii. ஸ்ரீ வித்தியா விநோதினி அச்சுக் கூடம், தஞ்சை; iii. 1908; iv. உ. ப. 63; v. 21×14 செ.மீ.; vi. 0-8-0; vii. ஸ்ரீ சங்கராசாரியர் அவர்கள் பரம் பரையான வித்தியாரண்ணிய சுவாமிகளால் செய்யப்பட்ட 'பஞ்ச தசி' என்னும் வேதாந்த வாக்கியார்த்தமான ஸம்ஸ்கிருத பாஷை யிலிருந்து எளிதில் நன்ருய்ப் பதியுமாறு இயற்றப் பெற்றது. யாவர்க்கும் எளிதில் நன்ருய்ப் பதியுமாறு வியவகாரமாயும், யுக்தியாயும், சாதுரியமாயும் யாரும அங்கீகரித்து ஆனந்திக்கு மாறு எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஆண் பெண் இரு பாலருக்கும் படிப்பினையாயிருக்கும் பொருட்டு அமைக்கப்பட்டி ருக்கிறது. viii. 432/1908/IV.

**R65**

**நாராயணன், ப.—மொ.து.**

166. i. மனிதன் வமிசாவளியின் உண்மை; ii. விவேகபானு அச்சியந்திர சாலை, மதுரை; iii. 1909; iv. உ.ப. 250; v. 17×12 செ. மீ.; vi. ......; vii. பிரம்ம தத்துவம் பற்றி அறிய விரும்புவார்க்கு உபயோகமாக வெளியிடப் பெற்றது. இது 1903-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை அடை யாற்றின்கண்ணுள்ள பிரஹ்மஞ்ஞான சபையின் 28-ஆம் வரு ஷாந்த உற்சவ சமயத்தில் அந்நிபிஸண்ட் அம்மையார் செய்த நான்கு உபந்நியாசங்களின் மொழி பெயர்ப்பு. அவையாவன: ஜீவாத்மா தத்வ விகாசமுறை, ஸதூல தத்துவ விகாச முறை, விஞ்ஞான தத்துவ விகாச முறை, மானிட வர்க்கங்கள், ஜாதிகள் முதலியன. அனுபந்தமாக உள்ள இறுதிப் பகுதியில் தரப் பெற்றுள்ள அட்டவணைப் பகுதிகளில் பல விளக்கக் குறிப்புக் கள் தரப்பட்டுள்ளன. viii. 373/1909/III.

**R65**

**நாராயணஸ்வாமி அய்யர், அ.—மொ. து.**

167. i. விவேகானந்த ஸ்வாமிகள் உபன்னியாசம்—வேதாந்த தத்து வம்; ii. சௌத் இந்தியன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. உ. ப. 47; v. 18×13 செ. மீ.; vi. 0-4-0; vii. விவேக காநந்த சுவாமிகள் ஹார்வார்டு கலாசாலையில் 1896-ஆம் ஆண்டு செய்த பிரசங்கம்; வேதாந்த தத்துவம் பற்றியது இந்தப் பிரசங்கம். இதனை மொழிபெயர்த்தவர் நாராயண ஸ்வாமி

அய்யர் ஆவர். மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்குச் சுவாமிகள் அளித்த பதில்களும் இதில் தரப்பட்டுள்ளன. இது விவேகாநந்த பதிப்பு வரிசையில் நான்காவது புத்தகம் ஆகும். viii. 608/1910/IV,

R65

**"நிரதிசயானந்தா."**

i. சற்சங்க போதினி (தொ. எ. 465 பார்க்க); ii. எம். ஸி. எம். அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 168 ; vii. 'சத்சங்க போதினி' என்னும் உபந்நியாசத்தில் ஒரு பகுதி இதில் உள்ளது. பக்தி, யோக, ஞான விஷயங்களைப் பற்றி விவரிப்பது. viii. 560/1910/III.

R65

**பட்டினத்துப் பிள்ளையார்**

i. உடற்கூற்று வண்ணம் (தொ. எ. 1122 பார்க்க) ; ii. அப்பாராவு முதலியார், கன்னிப்புதூர்; ஹிந்துமாரல் அச்சுக்கூடம் ; iii. 1901; iv. செ.மூ எ. 1; vii. மனிதனின் தோற்றம் முதல் முடிவு காறும் வருணிக்கும் 'ஒரு மடமாது ஒருவனும் ஆகி' எனத் தொடங்கும் பாட்டு. மனிதன் உலகில் தோன்றி, வாழ்க்கைக் கடலுள் அலைபட்டு இறுதியில் தளர்ந்து மடியும் வாழ்க்கைச் சித்திரத்தைச் காட்டுவது. இறுதியில் 'ஓர் பிடி நீறும் இலாத உடம்பை நம்பும் அடியேனை இனி ஆளுமே' என இறைவனை வேண்டுகின்றார். viii. 249/1901/IV.

R65

168. i. உடற்கூற்று வண்ணம் [தாயுமானவ சுவாமிகள் வண்ணம்]; ii. ராமஸ்வாமி நாயுடு, காஞ்சிபுரம் ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 1; v. 14×11 செ.மீ. ; vi. 0-0-3 ; vii. ............ ; viii. 48/1905/I.

R65

i. பட்டினத்துப் பிள்ளையார் உடற் கூற்று வண்ணம் (தொ. எ. 1688 பார்க்க); ii. பெ. பார்த்தசாரதி ஐயங்கார் ; டெயிலி ஓர்க்ஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 1 ; viii. 195/1906/III.

R65

**பாநுகவி, ம. தி.**

i. திருத்தணி யாத்திரை (தொ. எ. 403 பார்க்க) ; ii. எம். எ. லோகநாத செட்டியார் ; ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 41 ; vii இனிய எளிய தமிழ் நடையில் இயற்றப் பெற்ற தத்துவ நூல். வேடிக்கையாக லௌகிக விஷயங்களையும் கலந்து கூறுவது. viii. 338/1906/I.

R65

**பாலதேசிக நாயனர்**

i. சிஷ்ட தேசிகத் துவய பத்ததி (தொ. எ. 469 பார்க்க); ii. பாஸ்டர் அச்சுக்கூடம், சென்னை; iii. 1903; iv. உ. ப. 202; vii. சிட்டாசாரத்தில் சற்குரு லக்ஷணம், அதிகாரி லக்ஷணம் முதலியன பற்றியும் தேசிக விலாச பத்ததியில் பல தத்துவங்கள் பற்றியும் விவரித்து உரைப்பது. viii. 4/1903/IV.

R65

i. பிரம வித்தை (தொ. எ. 710 பார்க்க); ii. பாதர் அண்டு கோ., மதுரை; பி.வி.பி. பிரஸ், சென்னை; iii. 1910; iv. உ.ப. 148-178; vii. பிரம ஞானத்தை அறிவுறுத்துவது. சிஷ்யகுரு ஸம்வாதமாக இந்நூல் உள்ளது. ஞானோபதேசப் பிரகரணம், தத்துவ சோதனைப் பிரகரணம், ஜீவன் முத்திப் பிரகரணம் முதலிய பல பிரகரணங்களாகப் பாகுபாடு செய்யப் பெற்றிருக்கிறது. பிரம வித்தை பற்றிய பகுதி இத்துடன் முடிவு பெறுகிறது. viii. 570/1910/IV.

R65

**பூரணனந்த சுவாமிகள், வட்டருப்புத்தூர்.**

169. i. உடலறி விளக்க சாரம்; ii. கை. கோவிந்தசாமிப் பிள்ளை & பொ. மாணிக்க படையாச்சி; சண்முக சுந்தர விலாச யந்திர சாலை, சிதம்பரம்; iii. 1901; iv. உ. ப. 39; v. 14×11 செ. மீ.; vi. ....; vii. மாணுக்கன் தன் ஐயங்களை வினவும் முறையிலும் குருநாதன் விடை கூறும் வகையிலும் இது அமைந்துள்ளது. இந்நூலைக் குறித்துப் பலர் பாடிய சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் முதற்கண் உள்ளன. viii. 63/1901/IV.

R65

**பொன்னப்ப பிள்ளை, டி. எஸ்.**

170. i. எமதர்ம ராஜன் அழைப்பு; ii. நூருல் இஸ்லாம் அச்சியந்திர சாலை, திருநெல்வேலி; iii. 1901; iv. செ.மூ.ப. 6; v. 14×11 செ.மீ.; vi. 0–0–6; vii. எமன் வருகை கூறி, இறைவன் நாமத்தை நினைக்குமாறு அறிவுறுத்தல். viii. 248/1901/III.

R65

171. i. மநோ போதை—மூலமும் பழைய உரையும்: முதற் பதிப்பு; ii. அ. சிவ சிதம்பரம் பிள்ளை, மதுரை; பால விர்த்தி போதினி அச்சுக்கூடம், சென்னை; iii. 1908; iv. செ. மூ. உ. எ. 99; v. 21×13 செ. மீ.; vi 1–0–0; vii. நூலாசிரியர், உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. ஒன்று முதலிய

எண்ணுப் பெயர்களேயே முறையாகப் பாடல் தொடக்கத்தில் கொண்டு பாடியிருப்பது இதன் தனிச் சிறபபு. வடமொழியி லுள்ள 'மநோ போத' என்னும் நூலை ஒட்டி அமைந்திருக்க லாமோ எனப் பதிப்பாசிரியர் ஐயுறுகின்றூர். viii. 50/1908/ IV.

R65

**முத்துக்கிருஷ்ணய்யர், வா., கல்லிடைக்குறிச்சி.**

172. i. லோகோபகாரிப் பிரசுரங்கள் என்னும் இந்து சாஸ்திராபி மானி: முதற் பதிப்பு ; ii. வைஜயந்தி பிரஸ், சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 129 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. தத்துவ சம்பந்தமாகப் பற்பல கதைகளை எடுத்துக் காட்டி விளக்கம் தருவது. புராண ஆகமங்களின் சான்றுகொண்டு விவரிப்பது. viii. 244/1905/I.

R65

**முத்துக்குமாரசுவாமி முதலியார், விச்சூர்.**

173. i. இரத்தினமாலிகை ; ii. மினர்வா பிரஸ், சென்னை; iii. 1902 ; iv. உ.ப. 96 ; v. 22×14 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. 'அஷ்டோத்தர சத பிரஸ்நோத்தர ரத்நமாலிகா' என்பது இதன் முழுப்பெயர். நூற்றேழு வினுக்களும் அவற்றிற்குரிய விடைகளும் இதன்கண் உள. அறிவை வளர்த்து அறிவு கொளுத்துவார் பலர்க்கும் உபகாரமாக இயற்றப் பெற்றது. viii. 148/1902/III.

R65

174. i. கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடராவதேன் ? ii. மெதேடிஸ்ட் எபிஸ்கோபல் பிரஸ் ; iii. 1906 ; iv. உ.ப.+செ. மு. ப. 16+88 ; v. 21×14 செ.மீ. ; vi. 6–0–0 ; vii. இது புதுவது புனேந்ததோர் ஞான நூல். ஐந்து அத்தியாயங் கள் கொண்டது. இவற்றில் முறையே கண், மனேலக்ஷணம், மனேசக்தி, மனேவசியம், ஆத்ம ஞானம், பிரமஞானம், ஐக்ய ஞானம், அத்வைத ஞானம், அற்புத ஞானம் என்னும் பொருள்கள் விவரிக்கப்பட்டுள்ளன. பல வினுக்களை எழுப்பி விடை கூறும்முகத்தான் பல எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கிச் சொல்வது இந் நூல். viii. 225/1906/III.

R65

175. i. மனேதத்வதீபிகை ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ. மு. எ. 13+8+126; v. 17×13 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. அகவிருள் ஒழிந்து மெய்ஞ்ஞானம் ஒளிவிட மனத்தை நெறிப்படுத்தும் தன்மை வாய்ந்தது. viii. 545/1908/III.

R65

i. விவேகத்தையூட்டும் சிறுகதைகள் (தொ.எ. 403 பார்க்க) ; ii. எம். எ. லோகநாத செட்டியார் ; ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 70 ; vii. விச்சூர் முத்துக் குமார சுவாமி முதலியார் இயற்றிய 'ஞான சந்திரிகை' 'இரத்தின மாலிகை' முதலிய கிரந்தங்களிலிருந்தும், அவர் பிரசுரித்துவரும் "யதார்த்த பாஸ்கரன்" எனனும் சஞ்சிகை யிலிருந்தும் எடுக்கப்பட்ட கதைகள் இங்குத் தரப்பட்டுள்ளன. viii. 338/1906/I.

R65

176. i. ஸமரஸஞான சந்திரிகை ; ii. மினர்வா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902 ; iv. உ. ப. 20+66 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. சமயப் பொறுமையை வளர்க்கும் பொருட்டு வெளியிடப் பெற்ற வைதிக தத்துவ ஞான நூல். viii. 119/1902/I.

R65

முத்தைய சுவாமிகள், விருத்தாசலம்.

177. i. சின்மய தீபிகை ; ii. கொ. சின்ன கிருஷ்ண பிரம்மம் & அப்பாதுரை முதலியார் ; பிரம்ம ஆர்பன் அசைலம் பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.எ. 114 ; v. 18×11 செ.மீ. ; vi. ............ ; vii. முத்தைய சுவாமிகள் அனுமதி கொண்டு திருவருட்பிரகாச வள்ளலார் என வழங்கும் சிதம்பரம் இராமலிங்கப் பிள்ளை அவர்களால் பரிசோதித்துப் பதிப்பித்த மூல பாடத்திற்கு இணங்க காஞ்சீபுரம் இராமாநந்தயோகிகளைக் கொண்டு உரை எழுதுவித்து வெளி யிடப் பெற்றது. இது சிறு நூலேயாயினும் மெய்ஞ்ஞானத்தை நன்கு விளக்குவது. இந்நூலின் உரை, பதவுரை, பொழிப் புரை, விரிவுரை என்னும் மூன்று வகையினும் அமைந் துள்ளது. viii. 91/1907/II.

R65

ரக்ஷயாநந்தம் திருவையாறு.

i. ஆத்மபூஜை (தொ.எ. 1339 பார்க்க); ii. கல்யாணசுந்தரம் முத்திராக்ஷர சாலை, தஞ்சை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 32; vii. ஆத்மபூஜை பற்றிக் கண்ணிப் பாடலில் உரைப்பது. vii. 152/1906/I.

R65

178. i. திருவருட்கதம்பம் ; ii. எஸ். பி. ஷி. கே. பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 5+100+1 ; v. 21×14 செ மீ. ; vi. .......... ; vii. இறைவன், உடல் உயிர், முதலியன பற்றியும், இறைவன் திருவருள் கிட்டச் செய்ய வேண்டுவனப்பற்றியும் விரிவாகப் பேசுவது. ' சின் மயமாக்கியாண்ட சிவசுப்பிரமணியன் வாழி ' என வரும் ஈற்றுச் செய்யுளின் ஈற்றடியால், சுப்பிரமணியன் என்பார் ஆசிரியன குருவாவர் போலும். viii. 187/1907/I.

R65

**வடிவேலு செட்டியார், கோ. சென்னை & சண்முக முதலியார், மங்கலம்.—தொ. து.**

179. i. ரிபு கீதைத்திரட்டு ; ii. ஷி. பி. நாராயணசாமி முதலியார் அண்டு கோ.; கமலநாயகி அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1906 ; iv. செ. மூ. உ. எ. 874 ; v. 14×11 செ.மீ. ; vi. 1-0-0 ; vii. வீடு அடைதற்குச் சாதகமாகவுள்ள செய்திகளை விவரிப்பது. வடமொழியில் சிவ ரகசியத்தின் ஆறுவது அம்சத்தில் உள்ளது இந்த ரிபு கீதை. இதனைத் திருவிடைமருதூர் பிட்சு சாஸ்திரிகள் என்னும் உலகநாத சுவாமிகள் 1924 விருத்தயாப்பில தமிழில் மொழிபெயர்த்தருளினா. இது மிக விரிந்த நூலாதலின தினந்தோறும் பாராயணம் செயயும் பொருட்டு 874 பாடலாகத் திரட்டியுளளனர். தொகுபபாசிரியர்கள் இன்றியமையாத இடங்களுக்குக் குறிப்புரை எழுதியுள்ளனர். இதன்கண் 44 அத்தியாயங்கள் உள்ளன. viii. 141/1907/II.

R65

**வரத ராஜுலு, பி.—மொ. து.**

180. i. அனுகூல மர்மம் ; ii. கார்டியன் பிரஸ், சென்னை ; iii. 1910; iv. உ.ப. 72 ; v. 19×13 செ.மீ.; vi. .... .. ; vii. ஸ்ரீ ராம தீர்த்த சுவாமிகள் பஞ்சாப் நாட்டில் பிறந்து இளமையிலே கல்வியில் சிறந்தவராய் விளங்கியவர். ஆங்கில மொழியிலும், பாரசீக மொழியிலும் மிக வல்லுநர். இவர், ஜப்பான், அமெரிக்கா, எகிப்து முதலிய நாடுகளுக்குச் சென்று அங்கங்கே வேதாந்த விஷயமாகப் பல சொற்பொழிவுகள் செய்து 1905-ஆம் ஆண்டு தாய் நாட்டிற்குத் திரும்பினர். இவர் பிற நாடுகளில் செய்த பிரசங்கங்களின் மொழி பெயர்ப்பே இந் நூல். இச் சுவாமிகள் 1906-ஆம் ஆண்டு வட மதுரையில் தமது 33-ஆம் வயதில் சமாதி ஆயினராம். ' அனுகூல மர்மம் ' என்னும் பொருள் பற்றிப பலவாறு கூறுபடுத்து விவரித்து உரைக்கின்றது. viii. 754/1910/III.

R65

i. **வருத்தமற வுய்யும் வழி** (தொ. எ. 101 பார்க்க) ; ii. சுப்பிரமணியக் கவிராயர் ; தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 25 ; viii. 547/1908/IV.

R65

**வாலாம்பாள், வி. எஸ்., சென்னை.**

i. பஞ்சீகரண மகா வாக்கியம் (தொ. எ. 191 பார்க்க) ; ii. வி. எஸ். வாலாம்பாள் ; டவுன் பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 22 ; vii. பஞ்சீகரணக் கட்டம் என்பது பற்றிய படமும் இதில் இணைக்கப் பெற்றிருக்கிறது. இந்தப் பஞ்சீகரண மகா வாக்கியத்தை பஞ்சபூதக் கட்டத்தில பகிர்ந்து வைத்து எவர்கள் ஜபிக்கிறார்களோ அவர்கள் அநேக ஜன்மங்களில் செய்த பாவங்களினின்று விடுபட்டு முத்தியடைவர் என்று குறிக்கின்றார் ஆசிரியர். viii. 292/1908/I.

R65

**வித்யாரண்ய சுவாமிகள்**

181. பஞ்சதசப் பிரகரணம் ; ii. சை. ர. சிவசங்கர செட்டியார் ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 148 ; v. 19×13 செ.மீ.; vi. .. .... ; vii. சித்திர தீபம், திருப்தி தீபம் முதலிய 15 பிரகரணங்களில் வினு–விடை முறையில் பொருள்களை விளக்கிச் செல்வது ; பதினைந்து பிரகரணங்களிலும் 613 வினு–விடைகள் உள்ளன. முன் பதிப்பிக்கப் பட்டுள்ள பல பிரதிகளிலுமிருந்த வித்தியாசங்களை ஒழித்து நன்கு விளங்கும்படி தக்கவர்கள் முன்னிலையில் பிழையறப் பரிசோதிக்கப் பெற்றது. viii. 171/1901/IV.

R66xH50,I

182. i. பிரஹ்ம விதாசீர் வாத பத்ததி மூலம் ; ii. ஸ்ரீவித்யா விநோதினி முத்திரா சாலை, தஞ்சை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 24+13 ; v. 14×11 செ.மீ.; vi. 0—1—0 ; vii. இந்நூல் பிரஹ்ம ஞானிகளின் ஆசீர்வாத முறைமையினை அறிவிப்பது. ஜீவன் முக்தீஸ்வரூபம், அதன் பிரமாணம், அதன் சித்தி, அச் சீவன் முக்தி சித்தியினுலாம் பயன் என்பனவற்றை மந்த கதியினரும் உணருமாறு எளிய வசன நடையில் இயற்றப் பெற்றது. இதில் வித்யாரண்ணிய சுவாமிகளின் சமஸ்கிருத வசன நடையும் அதற்குத் தமிழ் மொழி பெயர்ப்பும் தரப் பெற்றிருக்கின்றன. viii. 467/1909/IV.

R65

**வேங்கடப்பிரபந்ந சுவாமிகள், ராஜயோகாநந்த.**

183. i. பிரஹ்மோத்ஸவ தத்வதீபிகை—முதலாவது பாகம்—க்ஷேத்திர காண்டம் ; ii. லக்ஷ்மி விலாச அச்சுக்கூடம், திரிசிரபுரம் ; iii. 1903 ; iv. உ.ப. 3+127 ; v. 21×14 செ.மீ.; vi. 1—4—0 ; vii. பிரமோற்சவம், நித்ய பூசை முதலியவற்றின் தத்துவத்தை விளக்குவது. இது பெரும்பாலும் வைகானச பாஞ்சராத்திராதி ஆகம சாஸ்திரங்களில் கூறப்பெற்றுள்ளபடி விளக்கிக் கூறுகிறது. ஆலய அமைப்பு, அதன் உறுப்புக்கள் முதலியன பற்றி விவரிப்பது, viii. 262/1903/III.

R65

184. i. *பிரமோத்ஸவ தத்வ தீபிகை* **இரண்டாம் பாகம்—உத்சவ** *காண்டம்* ; ii. *லக்ஷ்மி விலாச அச்சுககூடம், திருச்சிறுப்பள்ளி* ; iii. 1904 ; iv. *உ.ப.* 80+8; v. 21×15 *செ மீ.* ; vi. 0–8–0 ; vii. *இது விஷ்ணு ஆலய உத்ஸவ ததவங்களை விளக்குவது. சிவாலய உத்ஸவ தத்துவம் பற்றியும் சுருக்கமாகக் கூறுகின்றது. படங்களும் இடம் பெற்றுள்ளன.* viii. 169/1904/II.

R65

**வேங்கடராவ், சிண்டியா.**

185. i. *சுருதிஸார மகா* **வாக்கிய** *உபதேசம்* ; ii. *பண்டித* **மித்திர** **அச்சியந்திரசாலை**, *சென்னை*; iii. 1904 ; iv. *உ ப.* 42 ; v. . . . ; vi. 0–2–0 ; vii. *ஸ்ரீராமபிரான் ஆஞ்சநேயனுக்கு மகா வாக்கியம் உபதேசித்ததை வசனமாக எளிய நடையில் தருவது.* viii. 101/ 1904/I.

R65

186. **i. வேதாந்தப் பாட்டுகள் ; ii.** *வி. எஸ். வாலாம்மாள் அம்மாள், சென்னை ; டவுன் பிரஸ், சென்னை* ; iii. 1907 ; iv. *செ.மூ.ப.* 28 ; v. 21×14 *செ.மீ.* ; vi. 0–1–6 ; vii. *பரமாத்மா பள்ளி யெழுச்சி முதல் வேதாந்த நொண்டிச் சிந்து ஈருக எழு பகுதி கள் உளளன. பக்தி மாாக்கமாகவுள்ள இப்பாக்களை பதிப்பா சிரியை தம்முடைய பாட்டி லட்சுமி அம்மாளிடமிருந்து தெரிந்து இதனைப் பதிப்பித்துள்ளார்.* viii. 273/1907/IV.

R65

187. **i. வேதாந்த போதினி அல்லது நாலு சிஷ்யர்களின் கதை** : *இரண்டாம் பதிப்பு* ; ii. *பெ. திருவேங்கடாசாரியார், சென்னை ; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1902 ; iv. *உ.ப.* 175 ; v. 20×12 *செ.மீ.* ; vi. 0–8–0 ; vii. *'ஏகம் ஸத்விப்ரா பஹுதாவதந்தி' எனனும் வேத வாக்கி யத்தை அனுசரித்துப் பொதுவாய் எளிய வசன நடையில் எல்லா ரும் படித்தறியுமாறு எழுதப்பட்டது. நற்குணம் வாய்ந்த நான்கு சிஷ்யர்கள் ஓர் சற்குருவை அடைந்து உபதேசம் பெற்று நற்கதியடைந்ததைக் கதையாகக் கூறுவது. கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்பவைகளைக் குறித்து அநேக உபந்யாஸங்கள் இதன் கண் உள.* viii. 129/1905/I.

R65

188. **i. வேதாந்த போதினி அல்லது நாலு சிஷ்யர்களின் கதை** : *மூன்றும் பதிப்பு* ; ii. *பெ. பார்த்தசாரதி அய்யங்கார் ; டெய்லர் பிரஸ், சென்னை* ; iii. 1906; iv. *உ. ப* 211 ; v 19×12 *செ.மீ.* ; vi. 0–8–0 ; vii. *நற்குணம் வாய்ந்த நான்கு சிஷ்யர் கள் ஓர் சற்குருவை அடைந்து உபதேசம் பெற்று நல்ல கதி யடைந்ததை ஒரு கதையாக இந்நூல் கூறும். கர்மம, பக்தி, யோகம், ஞானம என்பவைகளைக் குறித்துப் பல சொற்பொழிவுகள் இதில் அடங்கியிருக்கின்றன. இது சென்னைத் திராவிட புத்தக டிபோ பதிப்புகள் வரிசையில் வெளிவந்துள்ளது.* viii. 184/1906/IV.

R65

189. **வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ்** ; ii. ப. சுப்பிரமணிய பிள்ளை, கோட்டாறு ; திரிபுரசுந்தரி அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1908 ; iv. உ.ப.+செ.மூ.ப. 254 ; v. 22×14 செ.மீ.; vi. ........; vii. இடையிடையே பல நீதி, கதை, தருக்கம் முதலியன கலந்ததாக வேதாந்த விஷயம்பற்றி எளிய தமிழ் நடையில் இயன்றது. "தன்னைத்தான் அறிதல்" என்னும் வாக்கியத்தை மேற்கொண்டு மலையாள மொழியில் வெளிவந்த நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. போலீஸ் கோர்ட்டுகளில் நடக்கும் வியாச்சியங்கள் போலக் கேசு உருவமாக எழுதப்பட்டது. இது மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவருளொருவரான ஒரு சதாவதானியரால் எழுதப்பட்டது என்று முகப்பில் தரப்பட்டிருக்கிறது. viii. 94/1908/III.

R65

**வேலாயுதம் பிள்ளை, நெ.**

190. i. வாசிஷ்ட முக்கிய **விஷயம்—மூலமும் உரையும்** ; ii. திரு நெல்வேலி யூனியன் சென்ட்ரல் பிரஸ் ; iii. 1905 ; iv. செ.மூ. உ.எ. 407 ; v. 19×12 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. ஞான வாசிட்ட நூலின சுருக்கம். தளவாய் இராமசாமி முதலியார் இயற்றிய வாசிஷ்ட வசனம் என்னும் நூலின் முக்கியாம்சங்களைக் கொண்டு இயற்றப்பட்டது இந்நூல். வாசிஷ்டக் கதை நாற்பத்து மூன்றுள் ஆங்காங்குள்ள பாகங்களைத் திரட்டி அவற்றை 407 செய்யுட்களில் அமைத்து உரையுடன் இந்த வாசிஷ்ட முக்கிய விஷயம் என்னும் இந்நூல் செய்யப்பட்டிருக்கிறது. viii. 131/ 1905/IV.

R65

191. i. **ஜீவநாடகம் முதலிய அத்வைதப் பாட்டுகள்** [பஞ்சீகரண மகாவாக்கியம்] ; ii. வி. எஸ். வாலாம்பாள், சென்னை ; டவுன் பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.ப. 40 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–4–6 ; vii. 'வேதாந்தப் பாட்டுகள்' என முன்பு வெளி வந்த நூலின் தொடர்ச்சியாக வெளிவரும் இரண்டாவது தொகுதி. ஸ்ரீலலிதாம்பாள் திருவனந்தல், ஸ்ரீமீனாட்சிசுந்தரேசர் திருப்பள்ளியெழுச்சி, ஜீவநாடகம், அத்வைத கொட்டைமுத்துக் கும்மி, வேதாந்தக் கப்பல் என்னும் பகுதிகள் உள. இதனோடு பஞ்சீகரண மகாவாக்கியம் என்பது ஒன்றும் உடன் உள்ளது. இந்தப் பாட்டுக்களைத் தமது பாட்டியின் வாயிலாகக் கேட்டு இதனை எழுதிப் பிரசுரித்துள்ளார். viii. 292/1908/I.

R65

**ஜெயராம செட்டியார்**

192. i. ஞானநுபவரசம் ; ii. வேலுதேசிகர், பாலூர் ; கணேச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 354 ; v. 16×12 செ.மீ. ; vi. 0–4–0; vii. தத்துவச் செய்திகளை வெண்

பாவினால் விளக்கியுரைப்பது இந்நூல். ஆசிரியர் தமது அனுப வத்தில் பட்டறிந்தவற்றை எடுத்து விளக்குகின்றார். viii. 232/1904/III.

R65

**ஸ்ரீநிவாஸாச்சாரியார், பகல்தீவட்டி, காஞ்சீபுரம்.**

193. i. தத்துவ விளக்கம்; ii. ஸ்ரீகாஞ்சிபூஷண அச்சுக்கூடம்; iii. 1902; iv. உ.ப. 67; v. 15×11 செ.மீ.; vi........; vii. கதை முறையில் எளிய அறிவுடையார்க்கும் பொருள் வெளிப்படும்படியாய் இயற்றப்பெற்றது. viii. 187/1902/I.

R65

**ஷண்முக முதலியார், ப.**

194. i. மகாவாக்கிய ரகசியம்; ii. தாம்ஸன் அண்டு கம்பெனி, சென்னை; மினர்வா அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. செ.மு. எ. 5+342+1; v. 25×16 செ.மீ.; vi. 0-4-0; vii. பெரியார்பால் அவ்வப்போது கேட்டவாறு திரட்டி ஆசிரியர் இந்நூலை இயற்றியுள்ளார். முகதிப் பேற்றை அவாவும் பெரியார்களுக்கு உதவியான நூல். இறுதியில் தத்துவ விளக்கப் படம் ஒன்றும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. viii. 816/1910/IV.

R65

**ஸத்யோ ஜாத சிவாசாரியர், பச்சரம்பேட்டை.**

195. i. வேதாகம தாரதம்யம்; ii. லக்ஷ்மிவிலாச முத்திராட்சர சாலை, திரிசிரபுரம்; iii. 1909; iv. உ.ப. 96; v. 20×14 செ.மீ.; vi. ........; vii. சைவ தூஷண நிராகரணம் என்னும் புத்தகம் பற்றியதோா ஐயத்தை நீக்கும்பொருட்டு இயற்றப் பெற்ற நூல். viii. 1/1909/III.

R65

## 181·48[1]—சைவ சித்தாந்த சாத்திரம்

**உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள், கொற்றவன்குடி.**

196. i. சிவப்பிரகாசம்—மூலமும உரையும்; ii. இராமலிங்க சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயம், திருநெல வேலி; விகடர் யந்திரசாலை, சென்னை; iii. 1908; iv. செ.மு. உ.எ. 101; v. 21×14 செ.மீ.; vi......; vii. சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கினுள் ஒன்று. இதற்கு உரை இயற்றியவர் திருவுருமாமலைச் சாரலில் வாழும் ஓர் அடிகள் ஆவர். முன்னோர் உரைகளில் விளக்கப் பெருதன இவர் உரையில் விளக்கப்பெற்றுள்ளன. viii. 65/1908/III.

R 673x2,1,6

**மெய்கண்ட தேவர்**

197. i. சிவஞான போதமும், திராவிட மாபாடியமும், உரையும்; ii. சுவாமிநாத பண்டிதர், யாழ்ப்பாணத்து வண்ணை நகர்; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ. மூ. உ. ப. 242; v. 24×17 செ. மீ.; vi. ......; vii. சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரத்திற்கும் வார்த்திகம் என்னும் பொழிப்புரையும், சிவஞான சுவாமிகள் செய்த சிவஞான மாபாடியம் என்னும் திராவிட மாபாடியமும் சிற்றுரையும் இதில் உள்ளன. viii. 70/1906/III.

R 673x2, 1

198. i. சிவஞான போத மூலமும், சிவஞான பாஷ்யமும்; ii. சுப்பிரமணிய பிள்ளை; விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை; iii. 1906; iv. செ. மூ. உ. ப. 406+6=412; v. 22×14 செ. மீ.; vi. 2-8-0; vii. மெய்கண்ட தேவ நாயனார் இயற்றிய சிவஞான போதம் சூத்திரம் பன்னிரண்டுக்கும் உரிய பேருரை. இவ்வுரையினை ஆக்கியவர் மாதவச் சிவஞான யோகிகள் ஆவர். இவ்வுரை ‘திராவிட மகாபாடியம்’ என்றும் ‘சிவஞான பாஷ்யம்’ என்றும் வழங்கபபெறும். viii. 294/1906/III.

R 673x2, 1

199. i. சிவஞான போத மூலம்—சிவஞான போத மாபாடியம்; ii. சுவாமிநாத பண்டிதர், யாழ்ப்பாணம் வண்ணை நகர்; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ. மூ. உ. ப. 342+28+18; v. 25×18 செ. மீ.; vi. 2-0-0; vii. சிவஞான போதத்திற்கு வார்த்திகம் என்னும் பொழிப்புரையும், சிவஞான சுவாமிகள் அருளிச் செய்த திராவிட மாபாடியம் என்னும் சிவஞான போத மாபாடியமும் சிற்றுரையும் உள்ளன. நூலுள்ளும் உரையுள்ளும் பொதிந்துள்ள அரும்பதம், அருந்தொடர் ஆகியவற்றிற்கு அரும்பத வகராதி, அருந்தொடரகராதிகள் பொருளுடன் தரப்பட்டுள்ளன. viii. 260/1906/IV.

R 673x2, 1

200. i. சிவஞான போதம்—மூலமும் உரையும்; ii. இராஜா ஹரிஹரபுத்திர பிள்ளை; ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், திரிசிரபுரம்; iii. 1906; iv. செ. மூ. உ. ப. 160; v. 16×12 செ. மீ.; vi. 1-8-0; vii. நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையிலிருந்து கிடைத்த உரைப் பிரதிப்படி வெளியிடப்பெற்றது. இது மிக எளிய முறையில் அமைந்த உரை ஆகும். முதலில் அதிகரணம் என்னும் கண்ணழிவும் வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் தரப்பட்டுள்ளன. ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை ஆங்கிலத்தில் எழுதிய முகவுரையும் உள்ளது. திரு. நல்லசாமிப் பிள்ளையவர்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் உடன் தரப்பெற்றிருக்கிறது. viii. 80/1907/I.

R 673x2, 1

## 181·48[1]—சைவ சித்தாந்த தத்துவம்

**ஆனந்த ஷண்முக சரணலய சுவாமி, தில்லைவளாகம்.**

201. i. சித்தாந்த சாரம் ; ii. எட்வர்ட் அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. நவம்பர், 1910 ; iv. உ.ப. 9 ; v. 16×10 செ.மீ. ; vi. ...... ; vii. சைவ சித்தாந்தம் பற்றிய ஒரு சுருக்க வுரை. இராமநாதபுரத்தில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜ குழுவினர் வேண்டுகோளுக்கு இயைய இயற்றப்பெற்றது. viii. 603/1910/IV.

**R673**

202. i. **ஆஸ்திகர் இலக்கணம்** : முதற் பதிப்பு ; ii. சுவாமி நெல்லையப்பர் தேவஸ்தானம், திருநெல்வேலி ; என. ஐ. பிரஸ், திருநெலவேலி டவுன் ; iii. 1910 ; iv. உ.ப. 4 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. நெல்லையப்பர் தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பெற்றுவரும் சிறு வெளியீடுகளில் இது 143-வது ஆகும். கடவுள், ஆன்மாக்கள், பாசங்கள், பாவ புண்ணியங்கள், சுக துக்கங்கள், சுவர்கக நரகங்கள் முதலானவற்றில் நம்பிக்கை கொண்டோர் ஆஸ்திகர் என்றும், அவர்தம் இயல்புகள் இன்னின்ன என்றும் விளக்கும் ஒரு சிறு நூல். viii. 141/1910/III.

**R673**

203. i. **கட்டளைக் கொத்து** ; ii. மனோன்மணி விலாசம் பிரஸ், சென்னை ; iii. 1903 ; iv. உ.ப. 246 ; v. 17×13 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. சமய சாத்திரங்களுக்குச் சோபானமாக உள்ளவை கட்டளைகள் ; இவை வசன நடையில் உள்ளன. இந்தக் கொத்தில் சிவப்பிரகாசக் கட்டளை, திருவாலவாய்க் கட்டளை, வேதாந்தத் தத்துவக் கட்டளை, ஆருத்தார ஜீவோற்பத்தி சிந்தாமணி, தத்துவ தீபிகை, ஞானக் கட்டளை, உபதேச உண்மைக் கட்டளை, வேதாந்த தசாவத்தைக் கட்டளை, தத்துவாமிர்தக் கட்டளை, நாநா ஜீவ வாதக் கட்டளை, வேதாந்த தசகாரியக் கட்டளை, உபதேச சித்தாந்தக் கட்டளை, சித்தாந்தக் கட்டளை, சித்தாந்த தத்துவ லக்ஷணம் என்னும் பதினான்கு கட்டளைகள் உள. இவற்றுள் சில சுத்தாத்வைதிகளுக்கும் சில கேவலாத்துவதிகளுக்கும் உரியனவாம். viii. 31/1903/IV.

**R673**

**கலியாணசுந்தர முதலியார், பூவை, அட்டாவதானம்.**

204. i. சித்தாந்த வசன பூஷணம் ; ii. பண்டித மித்திர யந்திர சாலை ; iii. 1902 ; iv. உ.ப. 325 ; v. 14 × 11 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை வசன நடையில் ஏது திருட்டாந்தத்துடனும், ஆட்சேப சமாதானங்

களுடனும் பரபட்சம் சுபட்சமாய இரு கூற்றினையும் விளக்குவது. வினவும்–விடையுமாக யாவரும் எளிதில் உணரும் வண்ணம் அமைந்துள்ளது. பதியிலக்கணம், பசுவிலக்கணம் முதலிய பன்னிரண்டு பாகுபாடுகளைக் கொண்டுள்ளது. viii. 172/1902/III.

R673

**கார்த்திகேய பிள்ளை, வ., யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி.**

205. i. சைவ சித்தாந்த சங்கிரகம்; ii. நா. கதிரைவேற் பிள்ளை கணேச அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1903; iv. உ. ப. 12+96; v. 21 × 14 செ.மீ.; vi. ......; vii. பதார்த்த நிச்சயம், பதி இலக்கணம், ஆன்ம இலக்கணம், மல இலக்கணம், கன்ம இலக்கணம், மாமாயை இலக்கணம், அசுத்த மாயா இலக்கணம், சிவஞான சாதன இலக்கணம், முக்தி இலக்கணம் என்னும் ஒன்பது பகுதிகளில் தத்துவ விளக்கம் கூறப் பெற்றுள்ளது. viii. 94/1903/I.

R673

206. i. சைவ சித்தாந்த சங்கிரகம்: இரண்டாம் பதிப்பு; ii. விநாயக சுந்தர விலாசம் பிரஸ், சிதம்பரம்; iii. ஜூன், 1908; iv. உ.ப. 86; v. 22 × 14 செ.மீ.; vi. 1–0–0; vii. சைவ சித்தாந்த சாத்திரங்களின் சங்கிரகமாய் உரை நடையில் அமைந்தது இந்நூல்; பதினோர் அத்தியாயங்கள் உள்ளன. viii. 74/1908/III.

R673

**காளமேகப் புலவர், வரகவி.**

207. i. பரப்பிரம விளக்கம்; ii. சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர்; தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை; iii. 1909; iv. செ.மூ.எ. 50; v. 21 × 14 செ. மீ.; vi. 0–1–0; vii. சிவனே பரம் பொருள் என்பதை விளங்க உரைக்கிறது. இந்நூல் முதலில் காஞ்சிபுரம் இராமலிங்க தேசிகரால் பார்வையிடப்பெற்று, சென்னை இந்து வித்தியா நிலைய அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. இந்த அச்சுப் பிரதியும் பாண்டித்துரைத் தேவர் கொடுத்த கையெழுத்துப் பிரதியும் ஒப்புநோக்கி வெளியிடப்பெற்றது இப் பதிப்பு. 'இந் நூல் வெண்பாக்கள் முற்றும் அகப்படாமையின் கிடைத்த மட்டும் அச்சிட்டனம்' என்று பதிப்பாசிரியர் நூலிறுதியில் குறித்துள்ளார். viii. 217/1909/IV.

R673

**கோவிந்தசாமிப் பிள்ளை, தஞ்சை.**

208. i. சைவ பூஷணத் திரட்டு; ii. விவேக பானு அச்சியந்திர சாலை, மதுரை; iii. 1910; iv. உ.ப. + செ.மூ.ப. 45; v. 23 × 15 செ.மீ.; vi. 0–4–0; vii. சைவ பூஷணமாகிய விபூதி,

உருத்திராக்கம் என்னும் இரண்டினையும் பற்றிய தத்துவங்களை விளக்குவது. பற்பல நூல்களினின்றும் மேற்கோள் காட்டி விளக்குவது. viii. 251/1910/IV.

R673

209. i. **சர்வஞானோத்தரம், ஞான பாதம்** : தமிழ் மூலம்; ii. மு. ரா. கந்தசாமிக் கவிராயர், மதுரை ; விவேக பாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 70 ; v. 15×12 செ.மீ.; vi.... . ; vii. இது மிக அருமையாகக் கிடைத்த சில பிரதிகளைக் கொண்டு பரிசோதிதது வெளியிடப்பெற்றது. பசு, பதி, பாசம் பற்றியும், அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் முதலியன பற்றியும கூறுகிறது. viii. 4/1909/IV.

R673

210. i. **சற்குரு தேசிகன் தரிசனம்** ; ii. பால்வண்ண முதலியார் ; ஆரியப்பிரகாசினி அச்சியந்திரசாலை, திருநெல்வேலி ; iii. 1901 ; iv. உ.ப. 64 ; v. 13×11 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. நிருவாண தீக்ஷை செய்யும் ஞானாசாரியன் தோன்றி ஒரு சீடனுக்கு அருளிய தன்மையைப் பற்றிக் கூறுவது. இது ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண குருமூர்த்திகளைச் சற்குருவாகக் கொண்டு உலகுளார் அறிந்து உய்யுமாறு ஒருவரால் கூறப்பட்டதாய்த் தோன்றுகிறது ; மெய்கண்டாரைப்பறறித் துதியாக அமைந்த பதிகம் ஒன்றும் இறுதியில் உள்ளது. viii. 73/1901/I.

R673

### சாந்தலிங்க சுவாமிகள்

211. i. **கொலை மறுத்தல்** : ஐந்தாம் பதிப்பு ; ii. சதாசிவப் பிள்ளை ; வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 81; v. 17×12 செ.மீ.; vi. 0–4–0 ; vii. கொல்லாமையை வற்புறுத்துவது. திருவள்ளுவர் கூறிய கொல்லாமை, புலால் மறுததல் அதிகாரங்களிலுள்ள குறட் பாக்கள் இந்த நூலில் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. viii. 478/1908/IV.

R673

### சிவ வாக்கியர்

212. i. **சிவ வாக்கியம்** : ஆயிரம் பாடல்; ii. தேவேந்திர நாத பண்டிதர் ; சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1903; iv. செ.மூ எ. 1014 ; v.......; vi. 0–8–0; vii. சிவவாக்கியர் சரித்திரச் சுருக்கம் முதற்கண் உள்ளது. இதன் முதல் 120 பாடல்களும் நாலாயிரப் பிரபந்தத்தில் திருமழிசையாழ்வார் பாடலாகவுள்ள திருச்சந்த விருத்தம் என்னும் பிரபந்தத்தில் உள்ளனவே. பின்னர் வருவனவும் சந்த விருத்தமாகவே உள்ளன. இறுதியில் மருத்துவச் செய்திகளும் குறிக்கப்பட்டுள்ளன. viii. 80/1904/I.

R673

**சுந்தர முதலியார், கோ. சு., புது மதுரை.**

213. i. அண்ட பிண்ட சமத்துவ விளக்கம் ; ii. சின்னைய நாடார் அச்சியந்திரசாலை, திருப்பத்தூர்; iii. 1908; iv. உ.ப. 53; v. 22×14 செ.மீ.; vi. ......; vii. சிவயோகீசுவரர் ஒருவர் அண்ட பிண்ட சமத்துவம் பற்றி எழுதிய ஒரு படத்தையும் விளக்கத்தையும் ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்றது இந்நூல். பல சாத்திர மேற்கோள்காட்டி ஒவ்வொன்றையும் ஆசிரியர் விளக்குகின்றார். viii. 419/1809/II.

R673

**செந்திநாதையர், காசிவாசி.**

i. தாந்திரிக துண்ட கண்டன கண்டனம் (தொ. எ. 214 பார்க்க) ; ii. செந்திநாத சுவாமி அச்சியந்திரசாலை, திருப்பரங் குன்றம் ; iii. 1910 ; iv. உ.ப. 15; vii. சரசுவதி என்னும் சந்நியாசி ஒருவர் சிவாகமங்களைத் தூஷித்து "தாந்திரிக துண்ட கண்டனம்" என்னும் ஒரு பத்திரிகை வெளியிட்டனர். இதில் கண்ட செய்திகளுககு மறுப்பாக எழுதியது இந்நூல். viii. 237/1910/II.

R673

214. i. வச்சிரதண்டம் [தாந்திரிக துண்ட கண்டன கண்டனம்] ; ii. செந்திநாதசுவாமி அச்சியந்திரசாலை, திருப்பரங் குன்றம் ; iii. 1910 ; iv. உ.ப. 81 ; v. 24×17 செ.மீ.; vi.....; vii. சரசுவதி என்னும் சந்நியாசி ஒருவர் சிவாகமங்களையும், சிவாச்சாரியார்களையும் தூஷித்து வந்ததோடு தேவார திருவாசகங் களையும் கண்டபடி வைது எழுதி வநதனர். இது பற்றி "ஆதி சைவ நாமக கவுலேயக முக பங்க முற்கரம்" என்னும் பத்திரிகை ஒன்றையும் பொறித்து வெளியிட்டார். இந்தப் பத்திரிகைக் குக் கண்டனமாக எழுதப் பெற்றதே 'வச்சிர தண்டம்' என்னும் இந்நூல். viii. 237/1910/II.

R673

215. i. சைவ சித்தாந்த சாரமான மரபு ; ii. சி. தாமோதரம் பிள்ளை; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1903; iv. உ.ப. 60 ; v. 18×11 செ.மீ. ; vi. 0-4-0; vii. தன்னியல்பு, பொதுவியல்பு, ஆதி தோற்றம் முதலிய 59 தலைப்புக்களில் சைவ சித்தாந்தத்தின் சாரமான செய்திகளை எடுத்துரைக்கின்றது. எளிய வசன நடையில் உள்ளது. viii. 39/1903/IV.

R673

**சொக்கலிங்க செட்டியார், ராம. சொ.**

216. i. உண்மை நாயன்மார் மகிமை ; ii. கலார்த்நாகரம் அச்சுக் கூடம், சென்னை ; iii. 1910; iv. உ.ப. 67+4=71; v. 17×13 செ.மீ.; vi.......; vii. சைவ சமய குரவர்களாகிய நாயன்மார் களின் பெருமையைக் குறித்தது இந்நூல். ஆறுமுக நாவலர்

எழுதிய பெரியபுராண வசன நூலின் முன்னுரையில் " உண்மை நாயன்மார் மகிமை" என்று விளக்கியருளியதை அடியொற்றி விரிவாக உரைப்பது இந்நூல். சரித்திர மேற்கோள் முதலியன காட்டி விவரிப்பது. viii. 750/1910/III.

R673

217. i. பிரஹ்ம வித்யா விகற்ப நிரசநம்; ii. சி. நாராயணசாமி நாயகர் ; வித்யா பாஸ்கர பிரஸ் & கே. ஆர். பிரஸ், சென்னை ; iii. 1909; iv. உ.ப. +செ.மூ.ப. 139+5; v. 21× 14 செ.மீ. ; vi. 1-0-0; vii. பிரஹ்ம வித்யா பத்திரிகையில் சித்தாந்த சைவத்தின் மேல் நிகழ்த்தப்பட்டுள்ள ஆசங்கைகளைப் பரிகரிக்கும் பொருட்டாக ஆசிரியரால் நாகை நீலலோசனியில் வெளியிடப்பட்ட அரிய விஷயங்களின் கோவையே இந்நூல். வினு விடை முறையில் பூர்வ பட்சமும் சித்தாந்தமுமாகச் செய்திகள் தரப்பட்டுள்ளன. viii. 207/1909/III.

R673

**தண்டபாணி சுவாமிகள்**

218. i. சைவ சமய சரபம் : முதற் பதிப்பு ; ii. என் சுப்பிரமணிய பிள்ளை ; புரோக்ரெஸ்ஸிவ் பிரஸ், சென்னை; iii. 1908 ; iv. உ.ப. 18+311 ; v. 22× 14 செ.மீ. ; vi. 1-12-0; vii. இது சைவ சமயத்திற்கு ஒரு பேரரணுயுள்ளது. இருக்கு முதலிய வடமொழி வேதமே தேவார திருவாசகங்களாகிய தென் மொழி வேதமாய் விளங்குகின்றது என்பதனை விளக்கும் இயல்பிற்று. இதன்கண் எடுத்தாண்ட மேற்கோட் பனுவல்களின் அட்டவணை முதலில் தரப் பெற்றிருக்கிறது. தண்டபாணி சுவாமிகள் இயற்றிய செய்யுள் வடிவான நூல்கள், உரை நடை நூல்களின் அட்டவணையும் தரப்பெற்றிருக்கிறது. viii. 10/1908/III.

R673

**நல்லசாமி பிள்ளை, ஜெ. எம்.—மொ.து.**

219. i. சைவ சமயமும், சைவ அத்வைத சித்தாந்தமும் ; ii. இந்து மிஷன் பிரஸ், சென்னை ; iii. 1909; iv. உ.ப. 45; v. 22× 14 செ.மீ.; vi.......; vii. 1909-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கல்கத்தாவில் கூடிய சர்வ சமய சமாஜத்தார் முன் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை ஆங்கிலத்தில் பேசிய பேச்சு. இதனைக் காசிவாசி செந்தி நாதையரைக் கொண்டு மொழி பெயர்த்து ஆசிரியர் வெளியிட்டுள்ளார். எல்லாரும் ஒருவாறு அங்கீகரிக்குமாறு நியாய வாயிலாகச் சைவ சமயத்தின் உத்கிருஷ்டம் எடுத்துக் காட்டப் பெற்றிருக்கிறது. viii. 60/1910/I.

R673

**பாண்டித்துரைத் தேவர், பொ., பாலவனத்தம் ஜமீன்தார்—தொ. து.**

220. i. சைவமஞ்சரி ; ii. மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசுரம் ; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை ; iii. 1904 ; iv. செ.மூ.:எ. 38+1316 ; v. 25× 17 செ.மீ. vi. 1-8-0; vii. பசு, பதி, பாசம்

சரியை, கிரியை, யோகம், ஞானம், உருத்திராக்கம், திரு நீறு முதலிய அதிகாரங்களில் சைவ புராணம், தோத்திரம் முதலியவற்றினின்றும் 1316 கவிகள் தெரிந்து தொகுக்கப்பட்டுள்ளன. "செய்யுள் விளக்கம்" என்னும் பகுதியில் அச்செய்யுள் புராணம் முதலியவற்றுள் அமைந்துள்ள இடம் முதலியன பற்றிய விளக்கம் உள்ளது. viii. 105/1904/II.

R673

**பால்வண்ண முதலியார், எஸ்., திருநெல்வேலி.**

**221.** i. சித்தாந்த ஞான ரத்நாவளி : முதற் பாடம் ; ii. ஆரியப் பிரகாசினி அச்சியந்திரசாலை, திருநெல்வேலி ; iii. 1907 ; iv. உ. ப. 24; v. 21×14 செ.மீ.; vi. 0–2–0; vii. ஆசிரியர் தாம் இந்த நூலை இயற்றத் துணிந்ததன் வரலாற்றினை விளக்கியுள்ளார். சிறுவர்களும் சைவ சித்தாந்த சாத்திரத்தை எளிதில் உணரும்படிக்கு என்பது இயல்களில் 231 வினா விடைகளில், எளிய நடையில், விளக்கியுள்ளார். viii. 32/1907/I.

R673

**முத்தைய பிள்ளை, பொ., தூத்துக்குடி.**

222. i. தசகாரிய விளக்கம் ; ii. ஸ்ரீ வித்தியா விநோதினி அச்சியந்திரசாலை, தஞ்சை ; iii. 1910 ; iv. உ.ப. 108+8 ; v. 14×11 செ.மீ.; vi. 0–8–0 ; vii. சைவசித்தாந்த சாத்திரங்களின் உள்ளவாகிய ஞான சாதனங்களுள் சிறந்ததும் பயனுமாகிய தசகாரிய ஆராய்ச்சியினைத் தனித்தெடுத்துக் கூறுவது இந்நூல். உயிர் துன்பத்தினின்று நீங்கும் போதும் இன்பத்தைச் சென்றடையும் போதும், துன்ப இன்பங்களுக்கு நிலைக்களமாயுள்ள பாச பதிப் பொருள்களிடத்தும், அப்பொருளை விடுதல் பற்றுதல் செய்யும் தானாகிய ஆன்மாவிடத்தும், உண்டாம் செயல்கள் பத்து வகைப்படும். இவற்றையே தசகாரியம் என்பர். இலக்கணவியல், அநுபவவியல், காட்சியியல் எனமூன்று கூறுபாடுகளை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூற் பொருள் பற்றி ஆசிரியர், சிதம்பரத்தில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜம் முதற் கூட்டத்தில், இலங்கை ஆனரபிள் ஸ்ரீமான் பொ. இராமநாதன் துரை அவர்களின் தலைமையில், உபந்நியாசம் செய்தனர். பலர் வேண்டுகோட்கிணங்க அதனை நூல் வடிவில் வெளியிடலாயினர். தசகாரியத்தை விளக்கும் நூல்களாகிய உண்மை நெறி விளக்கம், பதி, பசு,பாச விளக்கம், உபதேச மாலை, தணிகைப் புராணத்தில் நந்தி உபதேசப்படலம் ஆகியவை நூல் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 326/1910/IV.

R673

**முனிசாமி முதலியார்**

**223.** i. சிவசொரூப சாஸ்திரம்; ii. சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. உ.ப.+செ.மு.ப. 88; v. 22×14 செ.மீ.; **vi. 0–8–0; vii. சைவ நூற்கள் பலவற்றையுங்கொண்டு இயற்றப்**

பெற்றது. சிவதத்துவம், சிவமூர்த்தம், சிவ பராக்கிரமம் முதலியன பற்றித் தெளிவுபட விளக்குகின்றார். சிவபெருமானுக்குரிய சின்னங்களை பற்றியும் அவை ஒவ்வொன்றும் அமைந்த வகை பற்றியும் முன்னோர் நூல் கொண்டு நன்கு விளக்கியுள்ளார். சிவனுக்குரிய ரூபங்கள் முதலியன பற்றியும் தெளிவுபடக் கூறுகின்றது இந்நூல். viii. 489/1910/I.

R673

224. i. மூவகையான்மாக்களிலக்கணம் ; ii. சுப்பிரமணியக் கவிராயர், மதுரை & மு. ரா. அருணசலக் கவிராயர்; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை; iii. 1910 ; iv. உ.ப. 7 ; v. 22×14 செ மீ. ; vi. 0-1-0 ; vii. திருவாவடுதுறை, தருமபுரம் மடங்களிலிருந்து சங்கத்திற்குக் கிடைத்த இரு பிரதிகளில் உள்ளது இப்பகுதி. இதில் உள்ளவை சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திர உரைகளில் மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகிகள் முதலியோர் உரைகளிலும் காணப் பெறுகின்றன. viii. 346/1910/I.

R673

**யோகான னேந்திர சரஸ்வதி சுவாமி**

225. i. ஆதி சைவ நாமக கௌலேயக முகபங்கமுத்கரம்: முதற் பதிப்பு ; ii. இ. வெங்கடரத்னம் பந்துலு, மதராஸ் ; iii. ஜூன், 1909 ; iv. உ.ப. 158; v. 16×12 செ.மீ. ; vi.....; vii. ஆதி சைவ சித்தாந்தத்தைப் பற்றிய ஆய்வுரைகள் அடங்கியுள்ளன. viii. 179/1909/III.

R673

**வாகீச முனிவர்**

226. i. ஞானமிர்தம்—மூலமும் உரையும்: முதற் பதிப்பு; ii. ரா. சுப்பிரமணியக கவிராயர், சேற்றூர் ; தமிழ்ச சங்க முத்திராசாலை, மதுரை; iii. 1904 ; iv. உ.ப.+செ.மு. உ.ப. 16+80; v. 24×17 செ.மீ ; vi 1-0-0; vii. பல பிரதிகளின் உதவியினல் பரிசோதித்து வெளியிடப்பெற்றது. பசு, பதி, பாச உண்மைகள் பற்றி உணர்த்துவது. viii. 106/1904/II.

R673

**வீரப்ப செட்டியார், சோ.**

227. i. சைவ சித்தாந்தப் பிரசங்கக் கோவை ; ii. ஆ. மதுரை நாயகம் பிள்ளை ; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை ; iii. 1902 ; iv. உ.ப. 38 ; v. 21×13 செ.மீ.; vi.....; vii. நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையில் ஸ்ரீமத் சோ. வீரப்ப செட்டியார் செய்த பிரசங்கங்களை எல்லாம் அச் சபாங்கிகளில் ஒருவராகிய ஆ. மதுரை நாயகம் பிள்ளையால் தொகுத்து

வெளியிடப் பெற்ற நூல். பரமேஸ்வரனது பிரபுத்துவம், பதி புண்ணியம், சிவாராதனம், சைவ சமய நெறி, விரத மான் மியம், தவத்தின் மகிமை என்னும் பொருள்கள் பற்றிய சொற்பொழிவுகள் உள்ளன. viii. 96/1902/II.

R673

228. i. வேதாகம சோபான முறை—சத்தியரூபம், முதற் பாகம்:முதற் பதிப்பு ; ii. ப. மூ. சங்கரலிங்க நாடார், விருதுபட்டி; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, விருதுபட்டி; iii. 1909; iv. உ. ப.+செ. மூ. ப. 5+35+142; v. 16×11 செ. மீ.; vi. 0—12—0; vii. வேதாகமங்களுள் குறித்த சமய ஆசாரம் முதலியன பற்றிய விளக்கவுரை. பொது விலுபதேசம், பாவநரகப்படலம் என இரு பகுதிகள் உள. viii. 100/1909/III.

R673

ஷண்முக முதலியார்—ஹர., சேலம்.

229. i. சித்தாந்தத் தேன்: முதற் பதிப்பு; ii. வி. டி. பிரஸ், சேலம்; iii. மே, 1907; iv. செ. மூ. உ. ப. 32+4; v. 21×14 செ. மீ.; vi. 0—8—0; vii. நூதன அரிய அனுபவ நூல்; சித்தாந்த உண்மைகள் சிலவற்றை விளங்க உரைப்பது. இந்நூலுள் அமைந்த அரும்பதப் பொருள் இறுதியில் தரப்பெற் றிருக்கிறது. viii. 253/1907/III.

R673

## 181·48 [1].—வைணவ தத்துவம்

அழகிய மணவாள ராமாநுஜ தாஸர், புவனகிரி.

230. i. திராவிட வேத வைபவப் பிரகாசிகை; ii. ரூபாட் கம்பெனி யாருடைய ருக்மா பிரஸ், சென்னை; iii. 1907; iv. உ. ப. 124; v. 15×12 செ. மீ.; vi. 0—6—0; vii. ஆழ்வார்களின் அருளிச் செயல்களே வேதம் எனவும், தமிழ் மொழி வட மொழியோடு ஒத்தது எனவும், இந்நூற்கண் ஆராய்கின்றார் ஆசிரியர். viii. 64/1909/I.

R672

எறும்பியப்பா

231. i. விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்; ii. ஸ்ரீநிவாச அப்பங்கார் ஸ்வாமிகள் & சடகோபாசாரியர், பத்ராவி & கா. வே. திருக்கச்சி நம்பி தாஸர்; கமர்ஷியல் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1904; iv. உ.ப. 112; v. 22×15 செ. மீ.; vi. 1–0–0; vii. மோக்ஷாதிகாரிகளான விலக்ஷணருடைய ஸ்வரூபத்தை சேநாபதியாழ்வான் முதலானோர் கேட்க, எறும்பியப் பாவினால் விளக்கி உரைக்கப் பெற்றது. இது வைணவ சம்பிரதாயத்தை விளக்குவது. viii. 17/1904/II.

R672

**கிருஷ்ணமாச்சார்யர், கெ. வி.**

232. i. படியடக்கம்; ii. ஸ்ரீராமவிலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. செ. மூ. எ. 108+3=111; v. 18×12 செ. மீ.; vi........; vii. ஸதாசார்யப்படி என்னும் ஒரு சிறு சுவடிக்குச் சமாதானமாக எழுதப்பெற்றது இந்நூல். viii. 54/1909/IV.

R672

**கிருஷ்ணமாசாரியார்; ஸ்ரீபெரும்பூதூர்.**

233. i. வேத வேதாந்த புண்ட்ர விசாரதீபம்; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1909; iv. உ.ப. 13; v. 21×14 செ. மீ.; vi .......; vii. "வேத வேதாந்த புண்ட்ர விசாரம்" என்று பெயர் பெற்ற ஒரு சிறு சுவடியில் குறித்த ஊர்த்துவ புண்டரத்தைப் பற்றி எழுதிய செய்திகளுக்கு மறுப்பாக எழுதப் பெற்றது இந்நூல். viii. 193/1909/IV.

R672

**தீர்த்தப் பிள்ளை**

i. திருமுடியடைவு (தொ. எ. 234 பார்க்க); ii. வேங்கடராமையங்கார், தில்லையம்பூதூர்; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. செ.மூ.ப. 20-44; vii. எம்பெருமான் முதல் நயினாராசாரியருள்ளிட்ட குருபரம்பரை ஆசாரியர்கள் அருளிய நூல்களின் விவரங்களும் காண்கின்றன. viii. 352/1909/I.

R672

234. i. ஸாரார்த்த திலகம் [திருமுடியடைவு..........வாழித் திருநாமம்]; ii. வேங்கடராமையங்கார், தில்லையம்பூதூர்; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. உ. ப. 20; v. 18×13 செ. மீ.; vi. 0—4—0; vii. இது ஸ்ரீநிகமாந்த மகா தேசிகரின் வைபவ சாரமாயுள்ளது. viii. 352/1909/I.

R672

**நரசிம்மலு நாயுடு, சே. ப.**

235. i. நமோநாராயணாய என்னும் அஷ்டாக்ஷரமஹத்வம்; ii. கலாநிதி முத்திராக்ஷரசாலை, கோயமுத்தூர்; iii. 1901; iv. உ. ப. 8; v. 22×14 செ. மீ.; vi.......; vii. 'நமோநாராயணாய' என்னும் அஷ்டாக்ஷர மந்திரத்தின் உண்மையை வெளியிடுவது. இஃது கோயமுத்தூரையடுத்த வட்டமலைபாளையம் பிரம்ம சமாஜத்தின் பதினான்காவது வருஷ உற்சவ காலத்தில் கோயமுத்தூர் கலாநிதி பத்திராதிபர் சே. ப. நரசிம்மலு நாயுடு செய்த உபந்நியாசத்தின சங்கிரகம். இச் சொற்பொழிவு கோயமுத்தூர் கலாநிதிப் பத்திரிகையின் 22-வது புத்தகத்தின் இரண்டாம், மூன்றும் இதழ்களிலும் வந்துள்ளது. viii. 45/1901/II.

R 672

**236.** **i.** **பகவதவதார ரகஸியம்** ; **ii** ரங்கஸ்வாமி அய்யங்கார், கொடியாலம்; வெட்னெஸ்டே ரிவிய்யு பிரஸ், திருச்சிராப்பள்ளி; **iii.** **1909**; iv. செ.மூ.ப. 45; v. 22×14 செ. மீ.; vi......; **vii**. வாசுதேவன் நாகையில் பெரிய பிராட்டியார் ஸங்கற்பம் என்னும் வியாஜமாக அவதாரம் செய்து, புருஷார்த்தங்களை உபதேசம் செய்தும் பக்தியோகாதிகளைப் பிரவிர்த்திப்பித்தும் உபகரித்தருளிய செய்தியை விவரிப்பது. இது ஒரு பழையபிரதியிலிருந்து எடுத்துப் பதிப்பிக்கப்பெற்றது. **viii**· 465/1909/IV.

**R672**

**பாலகிருஷ்ண முதலியார்**

**237.** **i.** அநுபவரஸ வாக்கியங்கள்; **ii**. கமர்ஷியல் அச்சியந்திரசாலை, சென்னை; **iii.** 1901; **iv.** செ. மூ. எ. 114; **v.** 14×11 செ. மீ.; **vi**........; **vii**. உண்மையில் நிலைபெற்றுப் பரமாத்மா விஷயத்தில் படிக்கஞ் செய்யும் பரமபாகவதர்களுடைய அனுஷ்டான விதிகளுக்கு அநுகூலமான செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன. **viii.** 14/1901/II.

**R672**

**பிர்மதந்தரஸ்வந்தரஜீயர்**

**i.** வாழித்திருநாமம் (தொ. எ. 234 பார்க்க); **ii.** வேங்கடராமையங்கார், தில்லைபம்பூதூர்; கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; **iii.** 1909; **iv.** செ.மூ.எ. 17; **vi.**........ ; **vii.** ஆழ்வாராசாரியர்களின் வாழித் திருநாமப் பாட்டு நூல். நயினாராசாரியரதுவும் அடங்கியது. **viii**· 352/1909/I.

**R672**

**பிள்ளைப் பெருமாளையங்கார்**

**238.** **i.** பரப்பிரம விவேகம்; **ii.** இ. அரங்கசாமி முதலியார், செஞ்சி; உமாபதி குருப்பிரகாச அச்சுக்கூடம், சென்னை; **iii.** 1910; **iv**· உ. ப.+செ. மூ. ப. 16; **v**· 14×11 செ. மீ.; **vi**. .........; **vii.** 'விசுவரூப பசுசம்வாதம் என்னும் பரப்பிரம விவேகம்' என்பது இந்நூலின் முழுப்பெயர். இதன் ஆசிரியராகிய பிள்ளைப் பெருமாளையங்கார் திருவரங்கத்தமுதனாரின் பேரனுவார். ஒரு சமயம் இவர் திருவானைக்காவில உறையும் ஆகமவாதிகளாகிய சைவ வித்துவான்கள் கேட்ட வினாக்களுக்கு வெள்ளைப்பாவால் விடை கூறினர். ஐயங்கார் கூறிய விடைகளே இந்நூலில் அடங்கிய பொருள். இவரது விடைகளைக் கேட்டுப் பதில் உத்தரம் கூற இயலாது சைவ வாதிகள் சென்றனராம். ஐயங்கார் அருளிச் செய்த தனிப் பாட்டுக்கள் சிலவும் நூலிறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. **viii.** 699/1910/II.

**R672**

..ளாஞ்சோலைப் பிள்ளை

39. i. ஸப்த காதை—மூலமும் உரையும்; ii. சடகோப ராமா நுஜாசாரியார், திருவழுந்தூர்; ஆனந்தா பிரஸ், சென்னை; iii. 1906; iv. செ. மூ.உ.ப. 76; v. 17 × 13 செ. மீ.; vi. 0-4-0; vii. இதன்கண் ஸப்த காதை மூலமும் பதவுரையும், பிள்ளைலோகஞ்ஜீயர் அருளிச் செய்த வியாக்கியானமும் உள்ளன. ஆசாரியனின் இயல்பு உரைப்பது. viii. 305/1907/I.

R672

ஸ்ரீநிவாஸஐயங்கார்

240. i. நியாய தசகவெண்பா; ii. பூர்ணச் சந்திரோதய அச்சுக் கூடம், தஞ்சை; iii. 1907; iv. செ. மூ. எ. 10+3=13; v. 14× 12 செ. மீ.; vi. 0-1-6; vii. சம்ஸ்கிருத மொழியில் வேதாந்த மகாதேசிகரால் செய்யப்பெற்ற நியாய தசக சுலோகத்தின் மொழி பெயர்ப்பு; 10 ஆவது பாட்டில் சொல்லப் படும் நியாய விதனையின் ஐந்தகப் பொருள்களைப் பற்றி விவரமாய் சமஸ்கிருத வியாக்கியானத்தில் சொல்லியிருப்பதைப் பட ரூபமாய் விளக்கிக் காட்டியுள்ளனர். viii. 121/1907/III.

R672

## 181.482— சங்கராச்சாரியரின் நூல்கள்

சங்கராச்சாரியர்

241. i. மணிரத்னமாலை—வித்யானந்தர் மொழி பெயர்த்தது; ii. கிருஷ்ண விலாசம் பிரஸ், கோயமுத்தூர்; iii. 1910; iv. உ.ப. 32; v. 13 × 11 செ.மீ.; vi. 0-2-0; vii. பரவித்யா மொழி பெயர்ப்பு இனத்துள் இது மூன்றாவது. சங்கராசாரியரின் மூலநூல் 32 சுலோகங்களாக உள்ளது. அத்வைத வேதாந்தக் கருத்தை எல்லோரும் எளிதில் உணரும் வண்ணம் குரு சிஷ்ய சம்வாத ரூபமாகச் செய்யப் பெற்றது; ஜனனமரண சம்ஸார பந்தத்தினின்று விடுதலையடைய நாட்டங் கொண்டோர்க்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. viii. 36/1910/IV.

R66

242. i. மோஹமுத்கரம் எனும் பஜகோவிந்த ஸ்தோத்திரம்—தி. அ. ஸ்வாமி நாத ஐயர், திருவையாறு மொழி பெயர்த்தது; ii. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், சென்னை ; சிட்டிபிரஸ்; iii. 1902; iv. செ. மூ. உ. ப. 62; v. 21× 13 செ. மீ., vi. 0-6-0; vii. ஆரிய மதக்கொள்கைகளை விளக்குவது.

ஸ்ரீசங்கராசரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய துவாதச மஞ்சரிகா ஸ்தோத்திரமும் அவரது சிஷ்யர்கள் அருளிச் செய்த சதுர்தச மஞ்சரிகா ஸ்தோத்திரமும் அடங்கியது. ஸ்லோகமும் தமிழ் மொழி பெயர்ப்பும் வியாக்கியானங்களுடன் உள்ளன. viii. 56/1902/IV.

R66

243. i. மோஹமுத்கரம் என்னும் பஜகோவிந்த ஸ்தோத்திரம்; ii. சரஸ்வதி பப்ளிஷிங் ஹௌஸ், சென்னை; iii. 1909; iv. செ. மூ. உ. ப. 102; v. 18×12 செ.மீ.; vi............; vii. சங்கரர் தமது சீடர்களோடு யாத்திரை செய்த காலத்து 'டுங்ருங்கரணே' என்னும் வியாகரண சூத்திரத்தையே மந்திரமாக உருவேற்றிக்கொண்டிருந்த ஒரு மூடனைச் சந்தித்தார். அம்மூடனை முன்னிலையாக்கி அவனுக்கு உபதேசம் செய்யும் முகமாக 12 சுலோகம் செய்தார். பின் தமது சீடரையும் உபதேசம் செய்யுமாறு கூற, அவர்களில் ஒருவர் இரண்டு சுலோகமும் ஒழிந்த பன்னிருவர் பன்னிரண்டு சுலோகமுமாக 14 சுலோகம் சொல்லி முடித்தனர். ஆசாரியார் சொன்னது 'துவாதச மஞ்சரிகா ஸ்தோத்திரம்' எனவும், சீடர்கள் இயற்றியது 'சதுர்தசமஞ்சரிகா ஸ்தோத்திரம்' எனவும் பெயர் பெறும். இவ்விரண்டையும் தமிழர்கள் அறியும் பொருட்டாக மோசமுத்கரம் என்னும் பெயரால் ஆசிரியர் மொழி பெயர்த்துள்ளார். சுலோகங்களுக்கு எளிய நடையில் சிறந்ததோர் உரையும் இயற்றியுள்ளார். அனவரத விநாயகம் பிள்ளை இதற்கு நூன்முகம் எழுதியுள்ளார். மேற்கோள் நூல்கள் அகராதி, பாக்களின் முதற் குறிப்பு அகராதி ஆகியவை இறுதியில் இடம் பெற்றுள்ளன. viii. 361/1909/IV.

R66

244. i. விவேகசூடாமணி : முதற் பதிப்பு; ii. ஆனந்த அச்சு இயந்திர சாலை, சென்னை; iii. 1908; iv. உ.ப. 64; v. 22×14 செ. மீ.; vi.... ; vii. சங்கரபகவத் பாதாசார்யர் வடமொழியில் அருளி செய்த ஸ்ரீவிவேக சூடாமணி என்னும் நூலின் வசனம். viii. 201/1908/IV.

R66

245. i. விவேகசூடாமணி—உலகநாத சுவாமி, திருவிடைமருதூர், மொழிபெயர்த்தது; ii. கோ. வடிவேலு செட்டியார், சென்னை & சண்முக முதலியார், மங்கலம்; iii. 1909; iv. செ. மூ. எ. 671; v. 12×8 செ.மீ.; vi. 0–8-0; vii. வேதாந்த தத்துவம் பற்றி விளக்குவது. சாதன சம்பத்தி, குரவன் சேவை, சிரவணம், மனனம், தியானம் முதலியன பற்றி விளங்க உரைப்பது. இந்நூலின் அனுக்கிரமணிகை முதலில் உள்ளது. பிற்பகுதியில் பாடல்களில் காணும் அரும்பதங்களுக்கு உரையும் தரப் பெற்றிருக்கிறது. viii. 432/1909/III.

R 66

246. i. வேதாந்த சித்தாந்த சார சங்கிரகம் ; ii. சதானந்த சுவாமி ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1909; iv. உ.ப. 132; v. 19×13 செ.மீ.; vi. 0-8-0; vii. முமுட்சுக்களுக்கு ஞானம் வருவதற்காகக் குரு சிஷ்ய சம்வாதத்தால் ஆத்மலக்ஷணம் நிரூபிக்கப்படுகிறது. இந்தக் கிரந்தம் சாதுக்களுடைய இருதயக்கிரந்தியாகிற அஞ்ஞானம் நீங்குவதற்காகச் செய்யப்பட்டது. பழைய எட்டுப் பிரதிப்படி பதிப்பிக்கப்பட்டது. viii. 156/1909/II.

R66

# 200—சமயம்

## 220—284 கிருத்துவம்

### 220·95 [1]—விவிலிய நூற்கதைகள்

**எல்வெய்ன், எம்.**

247. i. பழைய புதிய ஏற்பாட்டின் திருப்படங்கள் : முதற் பதிப்பு; ii. ஈவரஞ்சிலிகல் லூத்தரன் மிஷன் பிரஸ், தரங்கம்பாடி ; iii. 1910 ; iv. உ.ப. 22; v. 21×14 செ.மீ. ; vi....... ; vii. பழைய புதிய ஏற்பாட்டின் சரித்திரங்களை விளக்கும் படங்கள் 22 உள்ளன. படத்தின் மேலும் கீழும் பொருத்தமான வாக்கியங்கள் தரப்பட்டுள்ளன. viii. 502/1910/II.

Q6:21

### 221.4—பழைய ஏற்பாடு

248. i. **சத்திய வேதாகம சங்க்ஷேபம்**—முதற் பாகம்—பழைய ஏற்பாட்டின் சுருக்கம் ; ஐந்தாம் பதிப்பு ; ii. செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1909 ; iv. உ.ப. 70 ; v. 16 × 11 செ.மீ. ; vi....... ; vii. கல்விச்சாலைகளில் பயிலும் சிறு மாணுக்கர் சத்திய வேத சரித்திரத்தின் கருத்துக்களைத் தெளிவாய் அறிந்து கொள்ளும் பொருட்டு இயற்றப்பெற்றது. இது ஐ. ஷஸ்டர் என்னும் ஆசிரியரால் ஜெர்மானிய பாஷையில் எழுதப்பட்ட நூலிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டின் பிரதான வர்த்தமானங்களைத் தொகுத்துச் சுருக்கமாய் உரைப்பது. 31 பகுதிகள் உள. படங்களும் அங்கங்கே உள்ளன. viii. 166/1909/III.

Q6:22

## 221·95 [1]—பழைய ஏற்பாட்டுக் கதைகள்

249. i. சுவாமி பொக்ர்ஸ் பர்த்வொய் மாமுல்த் கேள்வாம்; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1908; iv. உ.ப. 87; v. 14 × 11 செ.மீ.; vi. .... ; vii. 60 கதைகள் உள்ளன. தோடா மொழியில் சொல்லப்பெற்ற இக்கதைகள் தமிழ் லிபியில் அச்சிடப்பெற்றுள்ளன. viii. 141/1908/II.

Q6:221

## 223·2 தோத்திரப் பாடல்கள்

**அப்பாசாமிப் பிள்ளை, எஸ். எஸ்.**

250. i· நேர்த்திக்கடன் பூர்த்திமாலை; ii. ஸ்ரீவைஜயந்தி அச்சுக் கூடம், சென்னை; iii· 1901; iv· செ.மூ.ப. 8; v. 22 × 14 செ.மீ.; vi· ......; vii· நாகப்பட்டணம் வேளாங்கண்ணி ஆரோக்கியமாதாவைக் குறித்துச் செய்த துதிமாலை. viii· 46/1901/II.

Q6:222

251. i. அர்ச். அந்தோணியார் சத்துரு சங்காரமாலை; ii. டி· ஐ. சுவாமிக்கண்ணு புலவர்; பூலோக வியாசன் அச்சுக்கூடம்; iii· 1909; vi. செ.மூ.ப.+உ.ப. 48; v. 16×12 செ.மீ.; vi· ..........; vii. அர்ச். அந்தோணியார் போர்த்துகீஸ் ராச்சியத்திலுள்ள லிஸ்போ என்னும் பட்டணத்தில் 1195-ம் ஆண்டு பிறந்தவர். தேவ ஊழியம் செய்து ஏசுவின் புகழைப் பரப்பியவர். இவருடைய ஜீவிய சரித்திரம் முகப்பில் உள்ளது. இந்த அந்தோணி முனிவரின் துதியாக உள்ளது அர்ச். அந்தோணியார் சத்துரு சங்காரமாலை. 'பார் பூத்திலங்கிய சத்ரு சங்காரப் பத்து ஐந்து சொல' என்கிறார் கவி. இதில் 50 பாடல்கள் உள. மேலும், இவர் பேரில் பதின்மூன்று தேவார மன்றாட்டு, பாடல் பிரார்த்தனை, சீட்டு, ஜெபமாலை பிரார்த்தனை, மந்திரம் ஆகியவை தரப்பட்டுள்ளன. தவிரவும் அர்ச். மிக்காயேல் சம்மனசானவருடைய சத்துரு சங்காரமாலையும், சீட்டும், சத்துருக்களை ஜெயிக்கும் பல மந்திரங்களும் அடங்கியுள்ளன. இவை பல கையேட்டுப் பிரதிகளைக்கொண்டு அச்சிடப்பெற்றன. viii. 159/1910/I.

Q6:222

252. i. அர்ச். வியாகுலமாதா சபையின் கன்னியா ஸ்திரீகளுக்கடுத்த ஞான பொக்கிஷம்: இரண்டாம் பதிப்பு; ii. செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி; iii. 1903; iv. உ.ப. 309+6; v. 16×11 செ.மீ.; vi. ......; vii. இது சந்நியாசிமார்களுக்கும் கன்னியா ஸ்திரீகளுக்கும் உபயோகமாகச் செய்யப் பெற்றது. மூன்று காண்டமாக இந்நூல் உளது.

முதற் காண்டத்தில் செபங்களும், இரண்டாம் காண்டத்தில் ஞான முயற்சிகளைச் செய்யும் வகையும், மூன்றும் காண்டத்தில் சந்நி:ாச வார்த்தைப்பாடுகளின் பேரில் உபதேசச் சுருக்கமும் அமைந்துள்ளன. பொருளட்டவணை நூலிறுதியில் தரப்பெற்றிருககிறது. viii. 250/1904/II.

Q6:222

**இஞ்ஞாசியார் சுவாமிகள்**

**253.** i. அர்ச். சூசையப்பர் வணக்க மாதம் : இரண்டாம் பதிப்பு ; ii. செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1906 ; iv. உ.ப. 351 ; v. 17×11 செ.மீ.; vi. ...... ; vii. அர்ச். சூசையப்பர் வணக்க மாதம் என்பது மார்ச்சு மாதம் ஆகும். அர்ச். சூசையப்பரின வரலாறு விவரித்து உரைக்கப்பட்டுள்ளது. சூசையப்பரைக் குறித்த செபமும், தோத்திரப் பாடலும், கீர்த்தனைகளும் இறுதியாகத் தரப்பட்டுள்ளன. viii. 248/1906/I.

Q6:222

**254.** i. **இன்றிராயித்துகளும், லித்தானியாக்களும் கீதங்களும் அந்தியன்களும்** ; ii. பிரீமியர் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905 ; iv. உ.ப. 96 ; v. 18×13 செ.மீ.; vi....... ; vii. பரிசுத்த நற்கருணை ஆராதனையில் உபயோகிக்கப்பட வேண்டும் என்னும் நோக்கத்துடன் இயற்றப்பெற்றது. viii. 159/1905/II.

Q6:222

255. i. **இனிய ஞான கீதங்கள்** ; ii. ஈவாஞ்சிலிகல் லூதரன் மிஷன் பிரஸ், தரங்கம்பாடி ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 71 ; v. 22×14 செ.மீ.; vi.......; vii. தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் பாடுவதற்கும், வாத்தியஙகளில் வாசிப்பதற்கும் உதவியாக இராகங்களோடு பிரசுரம் செய்யப்பெற்றது. viii. 426/1908/II.

Q6:222

**256.** i. **கதாம்** ; ii. எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 288 ; v. 1?×9 செ.மீ.; vi. 0–0–9 ; vii. விவிலிய நூலில் ' தி புக் ஆப் ஸாம்ஸ்' என்னும் பகுதி இதில் உள்ளது. இது தோடா மொழியில் வெளியிடப் பெற்றிருக்கிறது. தோடா மொழியைத் தமிழ் எழுத்துக்களில் அச்சியற்றியுள்ளனர். viii. 336/1910/II.

Q6:222

**குழந்தைவேலுப்பிள்ளை, ஆர். எஸ்., சென்னை.**

**257.** i. ஆரோக்யமாதாவின் தோத்திரப் பனுவல் ; ii. ஸ்ரீ ஜீவரத்ன விநாயக சம்பந்தர் அச்சுக்கூடம, சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 32 ; v. 22×14 செ.மீ.; vi..... ;

vii. வேளார்காணி என்னும் தலத்தில் கோயில் கொண்டிருக்கும் அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில் பாடிய தோத்திரப் பனுவல் இந்நூல். முதலில் 'அன்னைமரியே ஆதரித் தருள்வாயே' என வேண்டிப் பாடிய புலம்பல்களும், அடுத்துச் சில தோத்திரக் கண்ணிகளும் இதில் உள்ளன. viii. 660/1910/III.

Q6:222

**சந்தியாகு சுவாமி**

258. i. தேவதாயின் அமலோற்பவ மகிமை ; ii. செயிண்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சினுப்பள்ளி ; iii. 1904 ; iv. உ.ப. 104; v. 16×11 செ.மீ.; vi..... ; vii. தேவமாதாவைக் குறித்து உரைப்பது. மாதாவின் அமலோற்பவ மகிமையை விளக்குவது. ஒரு சில படங்களும் உள்ளன. viii. 51/1904/II

Q6:222

259. i. தேவஸ்தோத்திரக் கீர்த்தனைகள் : ஆறும் பதிப்பு ; ii. செயிண்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சினுப்பள்ளி ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 114+2=116 ; v. 21×14 செ.மீ.; vi......; vii. பலர் சேர்ந்து கோயிலில் பாடுவதற்கு உதவும் பொருட்டு இயற்றப்பெற்றது. 136 கீர்த்தனங்கள் உள. கீர்த்தனங்களுக்கு இராக தாளக் குறிப்புக்கள் தரப்பெற்றிருக்கின்றன. இதன் நான்காவது பாகமாகிய நவீன கீர்த்தனு சங்கிரணம் இந்தப் பதிப்பில் புதிதாகச் சேர்க்கப்பட்ட புதுக்கீர்த்தனங்கள் அடங்கிய பகுதியாகும். viii. 163/1909/III.

Q6:222

260. i. ஞானக்கீர்த்தனைகள் : முதற் பதிப்பு ; ii. ரிலிஜியஸ் டிராக்ட் அண்டு புக் சொஸைடி ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 163 ; v. 14×10 செ.மீ.; vi. 0-4-0 ; vii. கிறிஸ்தவர்களுடைய தேவாலயத்திலும் பள்ளிக்கூடத்திலும் பாடத்தக்க ஞானக்கீர்த்தனைகளின் தொகுதி. இவை பற்பல இடங்களிலுள்ள கிறித்துவர்களாலே இயற்றப்பட்டன. எட்டுப் பெரும் பிரிவுகளில் பாடல்கள் பாகுபடுத்தப் பட்டுள்ளன. 163 கீர்த்தனங்கள் முதற்கண் உள்ளன. viii. 364/1906/III.

Q6:222

261. i. ஞானப் பாட்டுகள் ; ii. எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 322 ; v. 12×8 செ.மீ. ; vi. .... ; vii. தேவாராதனை முதலியவற்றில் பாடத்தக்க தோத்திரப் பாடல்களின் தொகுதி. ஞானப்பாட்டுக்களின் அகராதி நூல் முகப்பில் உள்ளது. அடுத்துப் பொருள் அட்டவணையும் தரப் பெற்றிருக்கிறது. viii. 185/1907/II.

Q6:222

262. i. ஞானப் பாட்டுகள் ; ii. ரிலிஜியஸ் டிராக்ட் அண்டு புக் சொஸைடி ; எம். இ. பப்ளிஷிங் ஹவுஸ் ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 322 ; v. 19×12 செ.மீ.; vi....... ; vii. தேவாராதனை பற்றியும், திரியேகர், பிதா, குமாரன் பரிசுத்த ஆவி, தேவ வசனம் முதலிய பாட்டுக்கள் இதில் உள்ளன. பாட்டுக்களின் அகராதியும் பாட்டுக்களின் மூலம் பற்றிய குறிப்பும் தரப்பட்டுள்ளன. viii. 481/1908/III.

Q6:222

263. i. ஞானப் பாட்டுகள் ; ii. ரிலிஜியஸ் டிராக்ட் அண்டு புக் சொஸைடி ; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 322 ; v. 18×11 செ.மீ.; vi. 0-4-0 ; vii. தேவாராதனைக்குரிய பாட்டுக்களின தொகுதி. பலர் பாடிய பாடல்களும் ஒருங்கு தொகுத்து வெளியிடப்பெற்றது. viii. 516/1908/III.

Q6:222

ஞானப் பிரகாசம்

264. i. அர்ச். ஜெபமாலை ; ii. எம். அய்யாஸ்வாமி ; லிட்டரரி ஸன் பிரஸ், கோயம்புத்தூர் ; iii. 1902 ; iv. செ.மூ.ப. 8 ; v. 20×14 செ.மீ.; vi..... ; vii. திருக்கோவை கரம்பூத்தமா நகர்பால் எழுந்தருளிய அர்ச். ஜெபமாலை-மாதா பேரில் பாடிய சரணமாலை என்பது இதன் முழுப் பெயர். சில தோத்திரக் கீர்த்தனைகள் உள்ளன. viii. 73/1902/IV.

Q6:222

ஞானப் பிரகாசம், என்., சேலம்.

265. i. குட்ஃபிரைடே அண்டு ஈஸ்டர் ; ii. கிரைஸ்ட் சர்ச், சேலம்; லக்ஷ்மி விலாசம் பிரஸ், சேலம் ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 15 ; v. 21×14 செ.மீ. ; vi..... ; vii. குட் பிரைடே, ஈஸ்டர் திரு நாட்களில் துதிக்கத்தக்க தோத்திரப் பாடல்கள் இதில் உள்ளன. viii. 245/1910/II.

Q6:222

தாவீதுப் பிள்ளை, அ.

i. அர்ச். வியாகுல மாதாவின்மீது சத்தாகுலப் பத்திமாலை : முதற் பதிப்பு (தொ. எ. 1071 பார்க்க) ; ii. பிரான்ஸிஸ் பிள்ளை & இராஜாராவ் பிள்ளை ; விஸ்வகுலோத்தாரண அச்சுக் கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 7+1 ; vii. சத்தாகுலப் பத்திமாலை என்னும் இத்தோத்திரம் அர்ச். வியாகுல மாதாவின் மீது பாடப்பெற்றதாகும். எழு பாடல்களைக் கொண்டதாதலின் சத்தாகுலப் பத்திமாலை என்று

பெயர் பெறுவதாயிற்று. இறுதியில் கீர்த்தனைக் கவிதை ஒன்றும் உள்ளது. **viii.** 774/1910/III.

**Q6:222**

266. **i. திவ்ய பனிமயத்தாய் மகோற்சவப் பாடல்கள்**; **ii.**......; **iii.** 1908; **iv.** செ.மூ.ப. 8; **v.** 22×14 செ.மீ.; **vi.** ...; **vii.** பனிமயத்தாயைக் குறித்த தோத்திரக் கவிகள் அடங்கியுள்ளன. **viii.** 234/1908/III.

**Q6:222**

**தேவசகாயம் போதகர், ஞா.—மொ.து.**

267. **i.** கிறிஸ்துவின் ஜெபப்பாமாலை; **ii.** ரிலிஜியஸ டிராக்ட் அண்டு புக சொஸைட்டி; எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை; **iii.** 1905; **iv.** உ.ப. 350; **v.** 18×12 செ.மீ.; **vi.**......; **vii.** மாதம் முப்பத்தொரு தேதிக்கும் முப்பத்தொரு ஜெபப் பாடங்கள் இதில் இருக்கின்றன. அந்திரேயா மரே போதகர் ஆங்கிலத்தில் எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. **viii.** 198/1905/IV.

**Q6:222**

268. **i. தேவாராதனைக் கீர்த்தனைகள்**: முதற் பதிப்பு; **ii.** பிரசிடென்ஸி பிரஸ், சென்னை; **iii.** 1907; **iv.** செ.மூ.ப.+உ.ப. 185; **v.** 18×12 செ.மீ.; **vi.**......; **vii.** 134 கீர்த்தனைகள் இதன்கண் உள. தமிழ் நாட்டு சுவிசேஷ லூத்தரன திருச்சபையார் தேவாராதனையில் பாடுதற்காக இயற்றப் பெற்றது. இதிலுள்ள கீர்த்தனைகள் தமிழ் நாட்டுக் கிருஸ்தவர்களாகிய பல விசுவாசிகள் பல காலங்களிலும் பல நிலைமைகளிலிருந்தும் பாடியவை. பண்டிகை நாட்கள், திருச்சபையும கிருபையின் எத்தனங்களும், கிருஸ்தவ ஜீவியம், கடைசிக காரியங்கள் என்னும் நான்கு பெரும் பங்குகளாகப் பிரிககப்பட்டுள்ளன. **viii.** 110/1908/I.

**Q6:222**

269. **i. தோத்திரம் முதலியன**: ஆறும் பதிப்பு; **ii.** சொசைட்டி பார் புரமோடிங் கிறிஸ்டியன் நாலெட்ஜ்; எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை; **iii.** 1909; **iv.** உ.ப. 542; **v.** 14×10 செ.மீ.; **vi.**.....; **vii.** பல்வேறு காலங்களில் செய்யும் ஜெபங்களும் தாவீதின் சங்கீதங்களும் அடங்கியுள்ளன. **viii.** 85/1909/III.

**Q6:222**

270. i. **பாலர் பாட்டுகள்** ; ii. *ரிலிஜியஸ் டிராக்ட் அண்டு புக் சொஸைடி, சென்னை* ; *ஏஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை* ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 122 ; v. 11 × 10 செ.மீ. ; vi.......... ; vii. கிறிஸ்து நாதர் தோத்திரமாக அமைந்த சிறு சிறு பாடல்களின் தொகுதி. முதலில் ஏசுநாதரைப் பற்றியும், பின் பரிசுத்த ஆவியானவரைப் பற்றியும் பாடல்கள் உள. அழைப்பு,வாக்குத் தத்தம் எனனும் பொருள்கள் பற்றியும் பாடல்கள் காணகின்றன. viii. 104/1910/II.

Q6 : 222

**பெரியசாமி உடையார், அ.**

271. i. தேவமாதாவின் பேரில் இயற்றிய பாடல் ; ii. செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் பிரஸ் ; iii. 1904 ; iv. செ. மூ. எ. 278 ; v. 21 × 13 செ.மீ. ; vi ........ ; vii. தேவமாதாவின் துதியான நான்கு பிரபந்தங்கள் இதில் உள்ளன. அவை யாவன : அந்தாதிக் கலித்துறை (1 + 100) ; அந்தாதி வெண்பா (2 + 100) ; தனி வெண்பா (60) ; தனிக் கலித் துறை (17) என்பனவாம். viii. 230/1904/III.

Q6 : 222

**பொன்னுசாமிப் பிள்ளை, வி. எம்., நீலகிரி.**

272. i. ஆரோக்கிய மாதா மாணிக்கமாலை ; ii. ஜெ. ஆர். வி. எஸ். பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 134 ; v 21 × 14 செ. மீ. ; vi........ ; vii. கட்டளைக் கலித்துறை செய்யுட்களால் ஆகியது இந்தத் தோத்திரப் பாமாலை. ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ' மாணிக்கமே ' என்னும் விளி அமைந்துள்ளது. இது பற்றியே இது ' மாணிக்க மாலை ' என்னும் பெயர் பெற்றுள்ளது. viii. 754/1910/I.

Q6 : 222

**மஸ்கெரஞஸ், எம். பி.**

273. i. ஞானசிந்தாமணி ; ii. அருணோதய அச்சுயந்திரசாலை, தூத்துக்குடி : iii. 1901 ; iv, செ.மூ.எ. 111 ; v. 20 × 14 செ.மீ. ; vi........ ; vii. திருமந்திரநகர்த் திவ்ய பனிமய நாயகியின் பேரில அமைந்த தோத்திரப் பாமாலை. viii. 165/1901/III.

Q6 : 222

**மாணிக்கம் பிள்ளை, சூ. ஆ.**

274. i. ஜேசுபெருமானின் மகிமை உத்தான சல்லாபம் ; ii. சூ. ஆ. மாணிக்கம் பிள்ளை ; வைஜயந்தி பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 1 + 12 + 7 = 20 ; v. 22 × 14 செ.மீ. ; vi.......... ; vii. நாயக நாயகி பாவத தில் பாடப்பெற்ற பாடல்களை உடையது. viii. 21/1901/II.

Q6 : 222

**யேசுடிக்ரூஸ், எஸ்., தங்கவயல்.**

i. அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில் தசமணி மாலை ; (தொ. எ. 275 பார்க்க); ii. பூலோக வியாஸன் அச்சுக்கூடம், கண்ணனூர் ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 10+1 ; vii. அன்னையின் நகர், ஆலயம், மணி, கொடி முதலியவற்றின் சிறப்புக்களும், அன்னையின் கொலுச் சிறப்பு, தரிசனைச் சிறப்பு, பவனிச் சிறப்புக் களும், அன்னையைத் துதிக்கும் முனிவர், அடியார் ஆகியோரின் சிறப்புக்களும் பாராட்டப்பட்டுள்ளன. viii. 224/1909/IV.

Q6 : 222

275. ஆரோக்கிய நாயகி சித்திரப்பாத் தீபிகை ; ii. சங். சு. பாலகுருத சுவாமி ; பூலோக வியாசன் அச்சுக்கூடம், கண்ணனூர் ; iii. 1909 ; iv. செ. மூ. எ. 20 ; v. 22 × 14 செ. மீ. ; vi. .......... ; vii. ஏகநாதபந்தம் முதலிய சித்திரக் கவிகளின் தொகுதி. அர்ச். ஆரோக்கிய மாதாவின் பேரில் தசமணி மாலை என்னும் சிறு பிரபந்தமும் இதனோடு உள்ளது. viii. 224/1909/IV.

Q6 : 222

**வில்லியம் ராபின்சன்**

276. i. சேலம் ஞானப்பாட்டு புத்தகம் : மூன்றும் பதிப்பு ; ii. எம். இ. பப்ளிஷிங் ஹவுஸ் ; iii. 1908 ; iv. செ. மூ. எ. 265 ; v. 18 × 11 செ. மீ. ; vi......... ; vii. துதியாகவும் கிறிஸ்தவ ஒழுக்கம் பற்றியும் அமைந்துள்ளன. ஆராதனையிலும் சிறப்பு நாட்களிலும் பாடுதற்குரிய பாட்டுக்களும் அமைந் துள்ளன. viii. 351/1909/I.

Q6 : 222

**வெப், இ. & வாஷ்பர்ன், ஜீ. டி.**

277. i. ஞானகீதங்கள் : முதற் பதிப்பு ; ii. ஜே. எஸ். சேண்டுலர்; எஸ். பி. சி. கே. பிரஸ், வேப்பேரி, சென்னை ; iii. 1902 ; iv. உ. ப. 32+செ.மூ.எ. 373 ; v. 19×11 செ. மீ. ; vi...... ; vii. தியானம், ஆராதனை, ஒழுக்கம் முதலிய பலவும் பற்றிய கீர்த்தனைக் கவிதைகள் உள்ளன. 109 புதுக் கீதங்கள் சேர்த்து முன்னிருந்த 300 கீதங்களுக்குப் பதிலாக 373 சேர்க்கலாயிற்று. இராக அட்டவணையும், கீதங்களில் அருஞ்சொற் பொருளகராதி யும் நூல் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 283/1902/I.

Q6 : 222

**வேதநாயக சாஸ்திரியார், திருநெல்வேலி.**

278. i. ஞானத்தச்சனுடகம் ; ii. ஜி. எஸ். மணியா அண்டு கம் பெனி, தஞ்சை ; iii. 1907 ; iv. செ. மூ. ப. 108 ; v. 18 × 11 செ. மீ. ; vi. 0-8-0 ; vii. கிறிஸ்தவமதக் கருத்துக் களுக்கு விளக்கம் தரும் வகையில் அமைந்த பலவகைப் பாடல்

களின் தொகுதி. இதன் நான்காவது பகுதியை, கி. பி. 1830 ஆம் ஆண்டிலேயே வேதநாயக சாஸ்திரியார் பாடி முடித்தார் என்று தெரிகிறது. சரபோசி மகாராசா இவருக்கு மாதாந்திர சம்பளம் கொடுத்து ஆதரித்தார் என்றும் தெரியவருகிறது. viii. 332/1907/IV.

Q6 : 222

**வேதநாயகம் பிள்ளை, பி. எஸ்.**

279. i. ஸ்தௌத்திய பூஷணம்; ii. பூலோக வியாசன் பிரஸ், சென்னை; iii. 1910; iv. செ. மூ. ப. 8; v. 21 × 14 செ. மீ.; vi........; vii. பம்பாய் பாந்திராவில் மிகுநலம் கொண்டிலங்கும் அர்ச். மோந்துமரியம்மன் பேரில் பாடிய தோத்திரங்கள் அடங்கிய நூல். பம்பாய் குலாபா பக்த பரிபாலன பஜனை சங்கத்தார் சித்ர சப்பரம் அலங்கரித்து, அம்மனின் 1910 ஆம் ஆண்டு உற்சவம் கொண்டாடிய காலத்து இயற்றப்பெற்றது. இந்நூல் ஆசிரியரால் 1910-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி ஆதிவாரம் அம்மன் சந்நிதியில் பாடிப் பிரசுரிக்கப் பட்டது. சில இசைக் கீர்த்தனைகளும் இன்னிசை விருத்தங்களுமாக உள்ளது. viii. 48/1910/IV.

Q6 : 222

**வேதநாயக வேத சாஸ்திரியார்**

280. i. செபமாலை; ii. வி. டி. எலியா சாஸ்திரி; ஜி. எஸ். மணி அண்ட் கோ; பவர் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர்; iii. 1907; iv. செ. மூ. ப. 244; v. 18 × 11 செ. மீ.; vi. 0-12-0; vii. அந்திசந்தி தேவனைத் துதிக்கிற துதிப்பாடல்கள் அடங்கியுள்ளன. இரண்டு காண்டங்களும் அவற்றுள் முறையே 31, 10 செப மாலைகளும் அமைந்துள்ளன. ஐரோப்பியருடைய பிரார்த்தனைப் புத்தகத்துக்கு ஒப்பாக இயற்றப்பெற்றது. (465 + 145) 610 செய்யுட்கள் இதன்கண் உள. அருஞ் சொற்களுக்குப் பொருள் அங்கங்கே அந்தந்தப் பாடலின் பின் தரப்பட்டுள்ளது. viii. 284/1907/I.

Q6 : 222

**ஜொசெப்டையஸ், எம்.**

i. சத்திய வேதக் கீர்த்தனைகள் (தொ. எ. 281 பார்க்க); ii. அர்ச். ஜோசப் காலேஜ் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. டிசம்பர், 1904; iv. செ. மூ. எ. 60; vii. சத்திய வேதத்தில் கர்த்தரின் பிறப்பு முதலிய பல செய்திகளைக் குறித்த தோத்திரக் கீர்த்தனைகள் இதில் உள. இதன் இறுதியில் அனுபந்தமாக வேறு ஒருசிலர் எழுதிய கீர்த்தனைகளும் தரப்பட்டுள்ளன. viii. 257/1905/III.

Q6 : 222

281. i. தேவதாயின் அமலோற்பவ மான்மிய மணிமாலையும் சத்திய வேதக் கீர்த்தனைகளும்; ii. அர்ச் ஜோசப் காலேஜ் பிரஸ், திருச்சிராப்பள்ளி; iii. டிசம்பர், 1904; iv. செ.மூ.எ. 60+60; v. 22×14 செ.மீ.; vi. ......; vii. தேவ மாதாவின் துதியாக அறுபது விருத்தப் பாடல்களும் சத்திய வேதத்தின் செய்திகள் பொதிந்த அறுபது கீர்த்தனைக் கவிதைகளும் இதன் கண் உள. இந்நூலின் அனுபந்தமாக வேறு சிலர் எழுதிய கீர்த்தனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 257/1905/III.

Q6 : 222

## 225·4—புதிய ஏற்பாடு

**திரிங்கால்சுவாமி, ஜி. பா.—மொ. து.**

282. i. யேசு கிறிஸ்துநாதருடைய பரிசுத்த புதிய ஏற்பாடு: மூன்றும் பதிப்பு; ii. செயிண்ட் சோசப் காலேஜ் பிரஸ், திருச்சிராப்பள்ளி, iii. 1906; iv. உ.ப. 703: v. 25×17 செ.மீ; vi. . . ..; vii. விவிலிய நூலின் புதிய ஏற்பாடு இதில் உள்ளது. கத்தோலிக்க ரோமன் திருச்சபையில் வழங்கிவரும் 'வுல்க்காத்தா' என்னும் இலத்தீன் பிரதியிலிருந்து மொழி பெயர்க்கப்பெற்றது. இதனை வேறு சில குருக்கள் ஆராய்ந்து பார்வையிட்டுள்ளனர். விளக்கக் குறிப்புகளும் அங்கங்கே அடிக் குறிப்பாக அமைக்கப் பட்டுள்ளன. viii. 130/1906/IV.

Q6: 23

## 225·92—புதிய ஏற்பாட்டு மாந்தர் வரலாறு

**எல்வென், எம்.**

283. i. புதிய ஏற்பாட்டின் திருச்சரித்திரங்கள்: இரண்டாம் பதிப்பு ii. எவாங் ஜூத்மிஷன் பிரஸ், தரங்கம்பாடி; iii. 1909; iv. உ.ப. 168; v. 22×14 செ.மீ.; vi. ............; vii. இயேசுவின் வரலாறும் இயேசுவின் திருச்சபை வரலாறும் யற்றி உரைப்பது. இயேசுவின் இளம் பருவம், இயேசுவின் உபதேசமும் அவர் செய்த அடையாளங்களும், இயேசு பாடுபட்டு இறத்தல், இயேசு உயிரோடு எழுந்து விண்ணுலகம் செல்லல் என்னும் பெருந் தலைப்புகளில் 80 பகுதியாக உள்ளது. இயேசுவின் திருச் சபைகளில் யூதரில் உண்டான திருச்சயையும், புறச் சாதியாரில் உண்டான திருச்சபையும் பற்றி 19 பகுதிகள் உள்ளன. viii. 675/1909/III.

Q6 : 22

## 226·2—சுவிசேஷம்—மத்தேயு

**சாமிநாதப் பிள்ளை, சே.**

**284.** i. மத்தேயு சுவிசேட வெண்பா ; ii. ஜி. ஏ. நடேசன அண்டு கம்பெனி, சென்னை ; இராமசாமி நாயுடு, காஞ்சிபுரம் ; iii. 1908 ; iv. செ. மூ. ப. 173 ; v. 18 × 12 செ. மீ. ; vi. 0–9–0 ; vii. மத்தேயுவின் சுவிசேஷத்தை வெண்பாப் பாட்டில் அமைத்துள்ள நூல். 28 அதிகாரங்கள் உள்ளன. viii. 550/1908/III.

Q6:

## 226.6—அப்போஸ்தலர் நடவடிக்கைகள்

**எட்டி, ஜி. எஸ். & ஐகில் பெல்டு, கே.**

**285.** i. அப்போஸ்தலர் நடபடிகளின் பாடங்கள் ; ii. இண்டியன் நேஷனல் கவுன்சில் ஆப் யங்மென்ஸ் கிறிஸ்டியன் அசோசியேசன்ஸ்; எம். இ. பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ. ப 7 + 150 ; v. 18 × 11 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. இதிலுள்ள பாடல்கள் மாணுக்கருக்கும் முக்கியமாய் ஊழியர்களுக்கும் உதவுமபடியாக எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகத்தில் 14 வாரத்தில் முடிக்கக்கூடிய 98 பாடங்கள் உண்டு. இது திருச்சபை சரிதத்தின் ஆதி நூலாகும். viii. 571/1908/III.

Q6 : 3

**ஐகில்டுபெல்டு, கே.**

**286.** i. அப்போஸ்தலர் நடபடிகள் என்ற ஆகமத்தின் சுருக்க வியாக்கியானம் ; ii. எவாங்லூத் மிஷன் பிரஸ், தரங்கம்பாடி ; iii. 1902 ; iv. உ. ப. 4 + 146 ; v. 22 × 14 செ. மீ. ; vi. .......... ; vii. ' எருசலேமில் செய்யப்பட்ட சுவிசேஷ பிரசங்கம் முதலிய நான்கு பெரும் பகுதிகளில் அமைந்துள்ளது. திருச்சபையின் தோற்றமும் சுவிசேஷம் பரவியதும் பற்றி விவரிப்பது. viii. 82/1903/I.

Q6 : 3

## 230—கொள்கை விளக்கும் வேத சாத்திரம்

**287.** i. ஆற்காட்டு மிஷன் ஊழியரின் வேத பரீக்ஷைப் பாடம் ; ii. விக்டோரியா பிரஸ், வேலூர் ; iii. 1909 ; iv. உ. ப. 30 ; v. 18 × 13 செ. மீ. ; vi. ........ ; vii. சேப்பனியா தீர்க்க தரிசனம், ஆகாய தீர்க்க தரிசனம், சகரியாவின் தீர்க்க தரிசனம் ஆகியவைப்பற்றிச் சுருக்கமாக எடுத்துரைப்பது. எபேசியர் நிருபமும் அதற்கு வியாக்கியானக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. வினுக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை மிஷன் ஊழியரின் பரீட்சைக்காகவே தரப்பெற்றவையாம். viii. 403/1909/II.

Q6 : 3

**இயாகப்பிள்ளை, ம. சா.—மொ. து.**

288. i. ஞானேபதேச மூன்றுங் காண்டம் : இரண்டாம் பதிப்பு ; ii. அர்ச். சூசையப்பர் கல்விச் சாலை அச்சுக்கூடம், திருச்சிராப்பள்ளி; iii. 1907 ; iv. உ. ப. 509 ; v. 22 × 14 செ. மீ. ; vi. .......... ; vii. சங். ராபர்ட்-டி.நொபிலி என்னும் தத்துவ போதக சுவாமி அவர்களால் கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. அஞ்ஞானிகளுடன் தர்க்கம் செய்வதற்குதவியான ஞானேபதேச காண்டங்கள் நான்கினுள் இது மூன்றுவதாகும் என்று முகவுரையில் காண்கிறது. இது 1675-ல் மலையாளத்தில் அச்சிட்டிருந்த பிரதிக்கு இணங்க ம. சா. இயாகப் பிள்ளை அவர்களால் இக்காலத்தில் வழங்கிவராத சில பதங்களை மாற்றித் தமிழில் அச்சிடப்பெற்றது. திருச்சி மேற்றிராணி ஆண்டவர்களின் அனுமதி பெற்று வெளியிடப்பெற்றது. இந்த மூன்றும் காண்டத்தில் 42 பாடங்கள் உள்ளன. viii. 112/1907/II.

Q6 : 3

**இராயப்ப உபதேசியார், ஜே.**

289. i. மெய்ஞ்ஞான வேத ஒளி ; ii. ஓர் சுதேச குரு ; இண்டியன் பிரஸ், சென்னை ; iii. 1904 ; iv. உ. ப. 304 ; v. 21×14 செ. மீ. ; vi. 0-10-0 ; vii. தேவமாதா விளக்கம் பற்றி எழுந்த நூலுக்கு 'தேவமாதா வணக்கத்தவறு' என்று ஒன்று புறப்பட, அதை மறுத்து திமிர பானு, திமிர தீபிகை என்பன வந்தன. மீண்டும் அஞ்ஞான சூரியன் என்று எதிராகப் புறப்பட்டது. இது முந்திய மறுப்பு நூல்களைத் தீயச் சொற்களால் நிந்திக்கின்றது; இவற்றிற்கெல்லாம் விடைபகரும் நெறியில் அமைந்ததே 'மெய்ஞ்ஞான வேத ஒளி' என்னும் இப் புத்தகம். viii. 234/1904/III.

Q6 : 3

**எட்டி, ஜி. எஸ்.**

290. i. கிறிஸ்தவ ஜீவியம் ; ii. எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1908 ; iv. உ. ப. 48 ; v. 14 × 11 செ. மீ. ; vi. 0-1-0; vii. கிறிஸ்தவ ஜீவிய வரிசையின் முதல் புத்தகம். தேவனை நேசித்து நல் வாழ்வு வாழ வழி காட்டுவது. மத ஒழுக்கத்தில் பற்றுக்கொள்ளச் செய்வதற்காக எழுதப் பெற்ற சிறு நூல் viii. 232/1908/I.

Q6 : 3

**ஏ. எஸ். ஓ. ஜி.**

291. i. கெத்சேமனே இரகசியம்; ii. சேமுவேல் பாக்கியம்; கோல்டன பிரஸ், சென்னை; iii. 1902; iv. உ. ப. 70; v. 17 × 11 செ. மீ.; vi. 0–2–0; vii. எருசலேமுக்குச் சமீபத்தில் உள்ள ஒலீவ மலையை அடுத்த பள்ளத்தாக்குக்கு 'கெத்சேமனே' என்று பெயர். அங்கே கிறிஸ்து பெருமானுக்கு நேர்ந்த நிகழ்ச்சிகள் பற்றி உரைப்பது; ஒன்பது அதிகாரங்கள் உள. viii. 104/1902/II.

Q6 :3

292. i. **கின்னரத் தோழன்**; ii. ஈவான்ஞ் லூத்மிஷன் பிரஸ், தரங்கம்பாடி; iii. 1904; iv. செ. மூ. ப. 36; v. 21× 15 செ. மீ.; vi.........; vii. தேவாராதனையில் ஞானப்பாட்டுகளுக்கு முன்பின் வழங்கும் இராகங்களும் குருவுக்குச் சுதி காட்டும் விதமும் தேவாராதனை முறைமைக்கடுத்த இராகங்களும் அடங்கிய புத்தகம். viii. 174/1904/I.

Q6 : 3

293. i. **கிருஸ்தவ ஈகை**; ii. எம். இ. பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை; iii. 1909; iv. உ. ப. 77; v. 22 × 14 செ. மீ.; vi.....; vii. கிறிஸ்தவர் செய்ய வேண்டும் ஈகை நிலை குறித்து விளக்குவது. ஈகையைக் குறித்துச் சில வேதவசனங்களை விவரிப்பதோடு உதாரத்துவத்தின் பாக்கியம் முதலியன பற்றியும் உரைக்கின்றது. viii. 568/1909/III.

Q6 : 3

**கேரி ஐயர் முதலியோர்**

294. i. கிறிஸ்தவ முயற்சி சங்கத்து சாதன நூல்: 1-ஆம் புத்தகம்; ii. ஏ. எம். லெநாக்ஸ் பிரஸ், பசுமலை; iii. 1909; iv. உ.ப. 64; v. 13 × 11 செ. மீ.; vi.........; vii. 'கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்க கைவல்ய நூல்' என்றும் இதற்குப் பெயர் உண்டு. ஆறு அத்தியாயங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு பெரியார்களால் இயற்றப்பெற்றவை. இவற்றை இயற்றினர் கேரி ஐயர் முதலியோராவர். viii. 264/1910/I.

Q6 : 3

295. **சிறுவர்க்கேற்ற வேத சரித்திரங்கள்**: இரண்டாம் பதிப்பு; ii. ii. எவாங் லூத் மிஷன பிரஸ், தரங்கம்பாடி; iii. 1908; iv. உ. ப. 51 + 4; v. 17 × 12 செ. மீ.; vi.........; vii. முதற் பங்கில் பழைய ஏற்பாட்டுக் கதைகளும் இரண்டாம் பங்கில் உலக இரட்சகரைப் பற்றிய செய்திகளும் விவரிக்கப்பட்டுள்ளன. பத்துக் கற்பனைகள் முதலியன குறித்த மூன்று அனுபந்தங்கள் இதில் உள்ளன. viii. 189/1908/III.

Q6 : 3

296. i. **ஞான உபதேச வினு விடை**—மூன்றும் பங்கு ; ii. எம். இ. பிரஸ், சென்னை ; iii. 1906 ; iv. உ. ப. 179 ; v. 18 × 12 செ. மீ. ; vi......... ; vii. கர்த்தருடைய ஜெபம், ஞானஸ்நானக் கட்டளை, கர்த்தருடைய இராப் போசனக் கட்டளை என்னும் மூன்றும் பற்றி விவரிப்பது. viii. 111/1906/I.

Q6 : 3

297. i. **ஞானசீவியம்** ; ii. செயிண்ட் ஜோஸப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1908 ; iv. உ.ப. 516 ; v. 18×11 செ.மீ. ; vi.... ; vii. கிருத்துவ சமயக் கொள்கை விளக்கும் நூல். மோக்ஷத்தில் சேரத்தக்கதாக நம்முடைய ஆத்துமத்தில் இருக்கவேண்டிய இஷ்டப் பிரசாதமாகிய ஞானசீவியத்தைப் பற்றிய சில விஷயங்களை விளக்குவது. 14 பிரிவுகளாக இது உள்ளது. viii. 465/1908/III.

Q6 : 3

**டேவிட் ஐயர், ஜே.**

298. i. **இயல் வேத—அருள்வேத ஒப்புமை விளக்கப் பொருளடக்கம்**; ii. கலாரத் நாகரம் பிரஸ், சென்னை ; iii. 1902 ; iv. உ.ப. 147 ; v. 22× 15 செ.மீ. ; vi....... ; vii. ஒப்புமை அனுமானப் பிரமாணங்களினுல் கிருத்துவ வேத தத்துவம் விளக்குவது. இரண்டாம் பங்கில் அருள்வேதம் என்னும் கிருத்துவ மார்க்கத்தின் சிறப்புக்கள் பேசப்பட்டுள்ளன. viii. 90/1902/III.

Q6 : 3

**தோம்தெயோத்தோனியு**

299. i. **ஞானுதிகார நிருபம்** ; ii. பிரிமியர் பிரஸ், சென்னை ; iii. 1902 ; iv. உ.ப. 32 ; v. 21× 14 செ.மீ. ; vi. ...... ; vii. திருமயிலை மேற்றிராசன அதிபதி பதின்மூன்றும் சிங்கராயர் பாப்பானவர் பட்டம் பெற்ற 25-ம் வருஷ ஜூபிலி மகோற்சவத்தையும் நிகழும் தபசு கால ஒழுங்கையும் பற்றி எழுதிவிடுத்த அறிக்கை நூல். viii. 202/1902/II.

Q6 : 3

300. i. **நீதிச் சொல்** ; ii. அர்ச். சூசையப்பர் கல்லூரி பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. ஜூன், 1906 ; iv. உ.ப. 58 ; v. 16×10 செ.மீ. ; vi...... ; vii. கிருத்துவப் பாதிரியார் ஒருவரால் இயற்றபெற்றது. இந் நூல் 1683-ல் எழுதப்பட்டதாகத் தெரிய வருகின்றது என முகவுரையில் பதிப்பாசிரியர் கூறுகிருர். 12 அதிகாரங்கள் இந் நூலகத்து உள்ளன. கிருத்துவ மதத்தின் உயர்வினை எடுத்துரைப்பது. viii. 311/1906/II.

Q6 : 3

301. i. **நீதி மொழிகள்** ; ii. எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 106 ; v. 12×9 செ.மீ. ; vi. ...... ; vii. விவிலிய நூலிற் காணப்பெறும் நீதி மொழிகளைத் திரட்டித்தருகின்றது. 31 அதிகாரங்கள் உள்ளன. viii. 76/1908/III.

Q6 : 3

302. i. **பிரதான மந்திரங்களின் வியாக்கியானம்** ; ii. செயிண்ட் ஜோசப் கல்லூரி பிரஸ், திருச்சினுப்பள்ளி ; iii. 1906 ; iv. உ.ப. 507 ; v. 17×11 செ.மீ. ; vi....... ; vii. இ.·.து உபதேசிமார்களின் உபயோகத்துக்காக எழுதப்பெற்றது. அர்ச்சியசிஷ்ட சிலுவை மந்திரம், பரமண்டல மந்திரம் முதலிய பிரதான மந்திரங்களுக்குரிய வியாக்கியானங்கள் தரப்பட்டுள்ளன. பொருள் அட்டவணை நூல் இறுதியில் உள்ளது. viii. 111/1907/II.

Q6 : 3

303. i. **பிரதான மந்திரங்களின் விளக்கம்** : மூன்றும் பதிப்பு ; ii. ஜோசப் இண்டஸ்டிரியல் பிரஸ், திருச்சினுப்பள்ளி ; iii. 1910; iv. உ.ப. 40 ; v. 17×11 செ.மீ. ; vi. ...... ; vii. அர்ச்சியஷ்ட சிலுவை மந்திரம் முதலிய சில மந்திரங்களிலுள்ள பதங்களின் அர்த்தமும் கருத்தும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் புரியும் வகையில் இயற்றப் பெற்றது. viii. 853/1910/III.

Q6 : 3

**பிறெங்கிள், கர்னல்.**

304. i. பரிசுத்த வழிகாட்டி ; ii. மினர்வா பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 7+106 ; v. 18×11 செ.மீ. ; vi.......; viii. 'போர் வீரரின் புஸ்தகசாலை' என்னும் வரிசையைச் சேர்ந்தது இந் நூல். கிறித்து மார்க்கத்தின் உண்மைகளை உணர்த்தும் ஒரு சிறு வழி காட்டி இது. ஆங்கில மூலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் பிரும்வெல் பூத் என்பவராவர். 13 அதிகாரங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. viii. 399/1908/I.

Q6 : 3

305. i. **புது நன்மை ஆயத்தம்** ; ii. செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1906 ; iv. உ. ப. 128 ; v. 16×11 செ.மீ. ; vi...... ; vii. புது நன்மை ஆயத்தத்திற்கு வேண்டும் காரியங்கள் பற்றி விளக்குவது. viii. 320/1906/I.

Q6 : 3

**மரிய சூசை பிள்ளை, எஸ்.**

306. i. திருஸ்தல தரிசனை ; ii. எஸ். மரிய சூசைபபிள்ளை செயின்ட் ஜோஸப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ், திருச்சினுப்பள்ளி ; iii. 1910 ; iv. உ.ப. 129 ; v. 16×10 செ.மீ. ; vi. .... ; vii. கிறிஸ்து பெருமான் வாழ்ந்த புண்ணிய பூமியாகிய

பாலஸ்தீன் நாட்டையும், பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி முதலிய தேசங்களையும் அங்குள்ள தேவாலயங்களையும் தரிசித்து வந்தவர் இவ்வாசிரியர். இவர் சென்றுவந்த இடங்களுக்குச் செல்லும் மார்க்கங்களும் பிரயாணம் செய்யவேண்டிய விதங்களும் இன்னதென்று விவரிப்பது. பரிசுத்த தலங்களைத் தரிசித்து விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு தேவ ஆசீர்வாதத்தைப் பிறகு பெறவேண்டும் என்னும் நோக்கத்தோடு ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். இந் நூலின் பொருள் அட்டவணை நூல் இறுதியில் உள்ளது. viii. 357/1910/IV.

Q6 : 3

307. i. **மனச்சாட்சி விளக்கம்** ; ii. ஈ.எல்.எம். பிரஸ், தரங்கம்பாடி; iii. 1910 ; iv. உ.ப. 179 ; v. 17×12 செ.மீ. ; vi....... ; vii. **'கிறிஸ்தவ வேதத்தின் பொருளை மனச்சாட்சிக்கு விளங்க வைத்தல்'** என்பது இதன் மற்றொரு பெயர். கிறிஸ்தவப் பொருளை அறிய விரும்புவோருக்கும் அறிவிக்க விரும்புவோருக்கும் துணையாக எழுதப் பெற்றது. கிறிஸ்தவ வேதம் சொல்லும் தியானத்தின் இயல்புகளை விளக்குவது. முகவுரையில் வேத தியானம் பற்றியும் பின் முதலாம் தியானம் தொடங்கி ஏழாம் தியானம் ஈறாக ஏழு அத்தியாயங்களில் சன்மார்க்கப் பிரகரணம் முதலியன பற்றி விவரித்துள்ளார். viii. 304/1910/IV.

Q6 : 3

308. i. **மனன வசனங்கள்** ; ii. ஏ. எம். லெநாக்ஸ் ப்ரஸ், பசுமலை ; iii. 1909 ; iv. உ.ப. 12 ; v. 18×11 செ.மீ. ; vi. ...... ; vii. மனனம் செய்யத்தக்க விவிலிய வேத வசனங்கள் 120 இதில் தரப்பட்டுள்ளன. viii. 263/1910/I.

Q6 : 3

309. i. **மெய் அளவை** ; ii. எஸ்.பி.சி.கே. பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 16 ; v. 22×13 செ.மீ. ; vi. ...... ; vii. இயேசு கிறிஸ்துவின் உயர்வையும், சத்திய வேதத்தையும் பற்றி உரைக்கின்றது. சத்திய வேத நூல்களை வாசிக்குமாறு பிறரைத் தூண்டும் நோக்கத்தோடு இயற்றப்பெற்ற தெருப் பிரசார நூல். viii. 500/1909/II.

Q6 : 3

310. i. **லூர்து தரிசனங்கள்** ; ii. செயின்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1907 ; iv. உ.ப. 75 ; v. 16×11 செ.மீ. ; vi. ...... ; vii. லூர்து மாதாவின் அற்புத வரலாறு பற்றிக்கூறுவது. viii. 247/1907/IV.

Q6 : 3

311. i. **வேத சத்தியங்கள்** ; ii. அர்ச். சூசையப்பர் கல்லூரி ப்ரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1906 ; iv. உ.ப. 145 ; v. 16×11 செ.மீ. ; vi. ...... ; vii. மனிதனின் மோக்ஷ பாக்கியத்தை அடையத்தக்கதாக வேத சத்தியங்களை விசுவசிக்கவும், தேவ கற்பனைகளை அநுசரிக்கவும், சில வழிபாடுகளை உபயோகிக்கவும் கடமைப்பட்டிருக்கிறான் என்றும், 'அக் கடமைகளைச் இச்சிறு புஸ்தகத்தில் சுருக்கமாய் வெளிப்படுத்துவோம்' என்றும் ஆசிரியர் தொடக்கத்தில் குறித்துள்ளார். இது இரண்டு பெரும் பிரிவுகளை உடையது. viii. 309/1906/III.

Q6 : 3

## 232·9—கிறிஸ்துவின் வாழ்க்கை

**சந்தோஷக்குட்டிக் கவிராயர், ஞான. மா.**

**312.** i. ஏழுரைப்பா ; ii. சைவப் பிரகாசம் ப்ரஸ், தூத்துக்குடி ; **iii.** 1909 ; iv. செ.மூ.ப. 12 ; v. 13×10 செ.மீ. ; **vi. 0–0–6** ; **vii.** இயேசு பெருமான் சிலுவைமேல் இருந்து உலகம் அறிய இயம்பிய ஏழு உரைகளைப் பாக்களாகப் பாடியுள்ளார். **viii. 61/**1909/IV.

Q6 : 33

313. i. **நீசவாகனம்** ; ii. மிஜிஷன் நத்தானியல் டேவிட் ; விக்டர் பிரஸ், சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.ப. 62 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. சேசுநாதரின் திருச்சரிதையைக் கூறுவது. சேசுநாதர் பட்டபாடுகளின் மேல் அம்மானை என்றும் இந் நூல் பெயர் பெறும். சேசுநாதரின் சரிதை அம்மானை முறைப்பாடல்களில் அமைந்துள. viii. 150/1904/II.

Q6 : 33

## 242—தியானம்

**சத்தியஜோசப்**

314. i. ஞானபத கீர்த்தனைகளும், ஞானப்பாட்டுகளும் ; ii. டவுன் பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 197 ; v. 18×13 செ.மீ. ; **vi. 0–8–0** ; vii. தமிழ் கிறிஸ்தவர்கள் வீடுகளில் செய்யவேண்டிய குடும்ப ஜெப முறைகளும், வீடுகளிலும் ஆலயத்திலும் பாட வேண்டிய ஞானப் பாட்டுக்களும் அடங்கியுள்ளன: ஜெபங்களும், பாடல்களும் கூறப்படவேண்டிய காலம், சந்தர்ப்பம் முதலியன குறித்தும் குறிப்புக்கள் உள்ளன. **viii. 335/1909/II.**

Q6 : 412

315. i. ஞான ஒடுக்கம் ; ii. செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1908 ; iv. உ.ப. 202 ; v. 17×11 செ.மீ. ; vi. ...... ; vii. சேசு சபையை நிறுவிய அர்ச். லொயோலா இஞ்ஞாசியார் மன்ரேசா குகையில் தேவ தாயாரின் உதவியினால் எழுதிய உன்னத நூல்; இதன் கருத்துக்களைக் கொண்டது இந் நூல். சங் ஹெரதோ சுவாமி இயற்றிய ஞான முயற்சிகளின் சாரம் அடங்கிய ஒழுக்கப் புஸ்தகத்தை ஆதார மாகக் கொண்டு இது எழுதப்பெற்றது. இதில் எட்டு நாள் தியானத்துக்கு வேண்டிய சகலமும் ஒழுங்காய்த் திட்டம் செய்யப் பட்டிருக்கிறது. viii. 475/1908/III.

Q6 : 412

**ஞானரத்தின உபாத்தியாயர், எஸ். பி. ஆர்., புதுப்பட்டி.**

316. i. பரம தியானம் : முதற் பதிப்பு ; ii. நூருல் அச்சியந்திர சாலை, திருநெல்வேலி ; iii. 1901 ; iv. செ.மூ.ப. 30 ; v. 22×14 செ.மீ.; vi. ....; vii. 'ஞானமதில் வளர் பரஞ்சோதி மயமே' என முடியும் 30] தியானப் பாடல்கள் உள ; இவை ஆசிரிய விருத்தத்தாலாகியவை. தாயுமானவர் பரமசிவ வணக்கம் பாடலின் சந்தத்தில் உள்ளன. viii. 45/1902/I.

Q6 : 412

317. i. பகிரங்க ஜெபங்கள் ; ii. எம். ஈ. பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 34 ; v. 18×11 செ.மீ. ; vi. ......; vii. இது வெஸ்லியின் மெத்தோடிஸ்ட் சபையின் பகிரங்க ஜெப புஸ்தகம். இதில் காலை ஜெபங்கள் அமைந் துள்ளன. viii. 430/1909/II.

Q6 : 412

**பீற்றர்சன் ஐயர், எப்.—மொ. து.**

318. i. தியான மஞ்சரி ; ii. எவாங் லூத் மிஷன் பிரஸ், தரங்கம் பாடி ; iii. 1910 ; iv. உ.ப. 474 ; v. 22×16 செ.மீ. ; vi. ...... ; vii. வீடுகளில் காலை மாலை ஜெபத்தில் உபயோ கிக்கத்தக்க செபங்களின் கோவை. இது பீற்றர்சன் ஐயரால் ஜெர்மானிய பாஷையில் இயற்றிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் சங். எம். வான்ஸகே, ஏ. வி. செபஸ்தியான் என்ற ஐயர்மார் ஆவர். இந்தியானப் புத்தகத்தில் ஒவ்வொரு சனிக்கிழமைக்கும் ஞானோபதேசத்தின் ஒரு பாகம் விஸ்தரிப்புக்காகக் குறித்திருக்கிறது viii. 541/1910/IV.

Q6 : 412

## 242·2—நித்திய தியானம்

**கொரநலியஸ், ஜே.—மொ. து.**

319. i. *காலை தியானம் : மூன்றும் பதிப்பு* ; ii. *ரிலிஜியஸ் ட்ராக்ட் அண்டு புக் சொஸைட்டி; மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை*; iii. 1909 ; iv. *உ.ப.* 367 ; v. 18×12 *செ.மீ.*; vi........; vii. *ஸ்மித்ஸ் என்பார் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. வேத வசனத்தைத் தினந்தோறும் தியானிக்கத்தக்க வாக்கியங்கள் அடங்கிய புத்தகம் இது. காலை தியானமாகிய இந்த நூலில் ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வேதவாக்கியமும் அதன் பேரில் செய்யப்பட்டிருக்கும் சுருக்கமான தியானமும் அடங்கி யிருக்கிறது.* viii. 31/1910/I.

**Q6 : 412**

320. i. **மாமரியின் மைந்தர் பொக்கிஷம்** ; ii. *ஜோசப் இண்டஸ்டிரியல் ப்ரஸ், திருச்சி* ; iii. 1910 ; iv. *உ.ப.* 412 ; v. 12×9 *செ.மீ.*; vi. ......; vii. *தினமும் செய்யவேண்டிய முக்கிய செபங்கள் அடங்கிய தொகுதி இந்த மந்திரமாலை. இந்தப் புஸ்தகத்திலே நல்ல கிறிஸ்துவனுக்கு வேண்டிய செபங்களெல்லாம் ஏராள மாய்க் கொடுத்திருப்பதுமன்றி, தேவ தாயின் சபையோருக்குப் பிரயோசனமான விஷயங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதற் பிரிவில் சபைகளின் உற்பத்தி வரலாறும் அவற்றால் விளையும் நன்மைகளின் விவரமும் சொல்லப்பட்டுள்ளன. பின், மந்திர மாலை, செபம், பூசை காணும் வகை, பக்தி வணக்கம் முதலிய பகுதிகள் உள. பொருள் அட்டவணை நூல் இறுதியில் தரப்பெற்றிருக்கிறது.* viii. 724/1910/III.

**Q6 : 412**

## 252—பிரசங்கங்கள்

**சாமுவேல் ஐயர், சா., தரங்கை.**

321. i. *கிராமப் பிரசங்க புத்தகம்* ; ii. *ஈவான்ஞ் லூத் மிஷன் ப்ரஸ், தரங்கம்பாடி* ; iii. 1902 ; iv. *உ.ப.* 527 ; v. 22×15 *செ.மீ.* ; vi. ......; vii. *சுவிசேஷ வாக்கியங்களின் பேரிலும் இரட்சகர் பாடுபட்ட சரித்திரத்தின் பேரிலும் அமைந்த பிரசங்கங்கள் அடங்கி யுள்ளன. கர்மானிய, ஆங்கிலேய, தமிழ்ப் பாஷைகளிலுள்ள அநேக சிறந்த வியாக்கியான பிரசங்க நூல்களைத் தழுவி இயற்றப் பெற்றது. கிராமச் சபைகளுக்குப் பயன்படத்தக்கவகையில் இப் புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.* viii. 198/1902/II.

**Q6 : 52**

322. i. **பிரசங்கங்கள்** ; ii. ........; iii. 1907 ; iv. *உ.ப.* 64 ; v. 21×14 *செ.மீ.*; vi. ........; vii. *பதின்மூன்று பிரசங்கங் கள் உள. கிறித்து நாதரின் கருணையையும் மக்களின் கடமை யையும் எடுத்துரைப்பது.* viii. 324/1907/IV.

**Q6 : 52**

**ஜான் உவெஸ்லி ஐயர்**

323. i. பன்னிரண்டு பிரசங்கங்கள் ; ii. கிரிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி, சென்னை ; எஸ். பி. சி. கே. ப்ரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 287 ; v. 19×13 செ.மீ.; vi. ........ ; vii. ஜான் உவெஸ்லி ஐயர் 1703-ல் பிறந்து 1791-ல் எண்பத்தெட்டாம் வயதில் மரித்தார். 1738-ஆம் ஆண்டு தொடங்கி தமது ஆயுசு காலம் எல்லாம் சுவிசேஷ ஊழியம் செய்து வந்தவர். இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, உவேல்ஸ், ஐர்லாந்து என்னும் நாடுகளில் எல்லாம் இவர் ஊழியம் செய்திருக்கிறார். இவர் செய்த 141 பிரசங்கங்களிலிருந்து 12 பிரசங்கங்கள் தேர்ந்து பிரசுரிக்கப்பட்டன. இந்த நூலின் மொழிபெயர்ப்பே இது. தேவ சகாயம் என்பவரால் தொடங்கப்பெற்று டேவிட் ஐயராலும், ஏ.வி. கிலேத்தன் ஐயராலும் முற்றுவிக்கப்பெற்றது இந்நூல். ஒவ்வொரு பிரசங்க முடிவிலும் வினுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. viii. 331/1910/I.

Q6 : 52

## 291—சர்வ சமயம்

**ஆறுமுக நயினர் பிள்ளை, த.**

324. i. சத்சமய விளக்கம்—பகுதி 1 ; ii. ஸ்ரீ காந்திமதி விலாசம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1904 ; iv. உ.ப. 38 ; v. 20×14 செ.மீ. ; vi. ........ ; vii. இந்து சமயப் பெருமையை விளக்குவது. இசுலாம், கிறித்துவ மதக் கோட்பாடுகள் பற்றியும் ஆசிரியர் இதில் குறித்துள்ளார். பிற மதங்களின் கொள்கை காட்டி இந்து மத ஏற்றம் புலப்படுத்தியுள்ளார். viii. 66/1904/III.

QA

325. i. சத்சமய விளக்கம்—பகுதி 2 ; ii. ஸ்ரீ காந்திமதி விலாசம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1904 ; iv. உ.ப. 35 ; v. 20×13 செ.மீ. ; vi. ......; vii. ஜீவகோடிகளின் உற்பத்தி பற்றி ஒவ்வொரு மதத்தினரும் கொண்ட கொள்கை பற்றிய விளக்கம் இந்நூல். ஆத்மாவைப் பற்றி ஆராய்வது. viii. 67/1904/IV.

QA

**இராமச்சந்திர சாஸ்திரியார், விஷ்ணுபுரம்—மொ. து.**

326. i. சர்வதரிசன சங்கிரகம் ; ii. கோ. வடிவேலு செட்டியார் & ம. சண்முக முதலியார் ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, கோமளேசுவரன்பேட்டை, சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 322; v. 22×14 செ.மீ. ; vi. 2-8-0 ; vii. லோகாயத மதம் முதல்

சங்கரர் வேதாந்த மதம் ஈறுகப் பதினாறு மத சித்தாந்தங்களை விளக்குவது இந்நூல். இது பிரபோத சந்திரோதயம் சிவ ஞான சித்தியார் பரபட்சம் முதலிய நூல்கள் இயற்றுவதற்குக் கருவூலமாயிருந்தது ' என்கிறார் பதிப்பாசிரியர். சமஸ்கிருத மூல நூலை இயற்றிய வித்தியாரண்ய சுவாமிகள் சரித்திரச் சுருக்கம் முதற்கண் தரப் பெற்றிருக்கிறது. இச்சுவாமிகள் அருளிய 30 நூல் களின் பெயர்களும் இதில் காணலாம். viii. 89/1910/III.

QA

நா. கி. ரா.

327. i. ஸர்வ மத ஸங்கிரஹம்; ii. கல்யாணசுந்தரம் அச்சுயந்திர சாலை, தஞ்சாவூர்; iii. 1910; iv. உ.ப. 12; v. 11×7 செ.மீ.; vi. 0-0-6; vii. இது பிரஹ்மம் ஒன்றே என்னும் தத்துவத்தை விளக்கிக் கூறும் சிறு நூல் viii. 133/1910/IV.

QA

முத்துவீர உபாத்தியாயர், பூ., சென்னை.

328. i. சர்வசமய சமரசச் சந்திரிகா; ii. இந்து மாரல் அச்சுக்கூடம், சென்னை; iii. 1902; iv. உ.ப. 48; v. 21×14 செ.மீ.; vi. 0-6-0; vii. ஆன்றோர் இயற்றிய நூற்களை ஆதாரமாகக் கொண்டு தத்துவ உண்மைகளை உரைக்கும் சிறுநூல். viii. 95/1903/I.

QA

# 294—இந்து சமயமும் பௌத்த சமயமும்

## 294.3 பௌத்த மதம்

ஆல்காட், எச். எஸ்.

329. i. பௌத்த தர்ம சுருக்க வினா விடை: முதற் பதிப்பு; ii. ......; iii. 1905; iv. உ.ப. 50; v. 20×14 செ.மீ.; vi. ........; vii. தியாசபிகல் சொஸைடியின் தலைவராக விருந்த ஹென்றி ஆல்காட் என்பவரால் இயற்றப்பெற்ற நூலின் மொழிபெயர்ப்பு. வினா விடை முறையில் பௌத்த தர்மம் பற்றி விவரிப்பது. மொழிபெயர்ப்பாசிரியரின் பெயர் தெரிய வில்லை. viii. 172/1905/I.

Q4:3

ஆனந்தஜி

330. i. பௌத்த தர்மம்; ii. பண்டித மித்ர ப்ரஸ், சென்னை; iii. 1904: iv. உ.ப. 30; v. 18×12 செ.மீ.; vi. ........; vii. புத்தர் நிகழ்த்திய மகாசாந்தி உபதேசத்தைப் பங்காள, பிராகிருத, சம்ஸ்கிருத புத்தகங்களின் ஆராய்ச்சிக்கு ஏற்ப இத் தமிழ்நாட்டில் யாவரும் எளிதில் உணர வசன நடையில் எழுதப் பெற்றது. viii. 103/1904/I.

Q4:3

**331.** i. **நந்தன் சரித்திர விளக்க வினவிடை** ; ii. புத்திஸ்டு பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. உ.ப. 14 ; v. 21×13 செ.மீ. ; vi. ........; vii. நந்தன் என்னும் புத்த மார்க்க வரசன் மெய்ச் சரித்திரத்தையும் பார்ப்பானுக்கு அடிமைப் பறையன் நந்தன் என்னும் பொய்ச் சரித்திரத்தையும் வினவிடையாக விளக்கி, சாக்கைய புத்த சங்கத்தாரால் எழுதி வெளியிடப்பெற்றது .இந்நூல். viii. 123/1905/IV.

Q4 : 3

**பெரியசாமிப் புலவர், ஏ. பி.**

**332.** i. புத்த பகவான் ஸ்தௌத்யபத்து ; ii. பூலோகவியாஸன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 12 ; v. 21×14 செ.மீ. ; vi. ........; vii. புத்த பகவானைக் குறித்த துதிமாலை. இக்கீர்த்தனங்கள் சேலம் ஜில்லா திருப்பத்தூர் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தார் விருப்பத்திற் இணங்கப் பாடப்பெற்றது. கௌதம சாக்கைய முனி பரிநிருவாண மடைந்த 3395-ஆம் வருஷத்துக்குச் சரியான 1910-ம் வருஷம், ஜனவரி மாதம், 13-ஆம் தேதி இச்சங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது இந்நூல். முதலில் உள்ள துதிப்பத்து பதிநான்கு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தத்தால் ஆகியது. பௌத்த தர்மம் பற்றிய கீர்த்தனைகள் சிலவும் ஈற்றில் உள்ளன. viii. 401/1910/I.

Q4 : 3

## 294·5—இந்து சமயம் : பொது

**இராமாநுஜ பாவலர், ச. கி. ம.**

**333.** i. சைவ பூஷண சந்திரிகா பங்கம் ; ii. ஸ்ரீநிகேதனம் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1903 ; iv. உ.ப. 8+24+3 ; v. 18×11 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. 'சைவ பூஷண சந்திரிகை' என்னும் நூல் வாயிலாக வைணவ மதக் கோட்பாடுகளுக்கு மாறான செய்திகள் வெளிவந்தமை குறித்து எழுதப்பெற்றது இந்நூல். அவரவர் தத்தம் மதங்களினின்று வரம்பு கடந்து நடப்பாராயின் இம்மை மறுமைப் பயன்கள் இழப்பது திண்ணம் என்பதைத் தலைமையாக எடுத்தோதுவது. சாஸ்திரங்களுக்கு உட்படாமல் விதண்டாவாதம் செய்வதைக் கண்டித்துரைப்பது. viii. 242/1903/III.

Q2

**நாராயணன், ப.—மொ. து.**

**334.** i. ஹிந்து மத தூஷணையின் பரிகாரம் : முதற் பதிப்பு ; ii. விக்டோரியா அச்சு ஆபீஸ், மதுரை ; iii. 1909 ; iv. உ.ப. 103+2+2 ; v. 16×13 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. இது

அன்னிபெஸண்டு அம்மையார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. 14 அதிகாரங்கள் உள. விக்கிரக ஆராதனை, தேவர்களின் பூஜை, திருமூர்த்திகள் முதலிய பல வற்றுல் பிறருடைய தூஷணைகளுக்கு விடை பகர்வது போல் உள்ளது. ஒன்பதாம் அதிகாரத்தில் ஹிந்து மதம் சாஸ்திரத் திற்கும், யுக்திக்கும் ஒற்றுமையானது என்பதைப் பற்பல எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக எழுதியுள்ளனர். ஒற்றில் ஆரிய சமய நீதி முறைகளும் உயர் நலம் அமைந்த தர்ம முறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 267/1909/III.

Q2

335. i. ஸநாதத் தர்ம பிரச்நோத்தரம்; ii. தியாஸபிகல் சொஸைடி அடையாறு; மினர்வா ப்ரஸ் சென்னை; iii 1902; iv. உ.ப. 24: v. 19×13 செ.மீ.; vi. 0-1-0: vii. மாணவர்களுக்கு ஏற்ற வகையில்; இந்து மத தர்மம் பற்றிக் கூறுவது. ஹிந்து மத மூல தத்துவங்கள், ஹிந்து மத பொது கர்மானுஷ்டனங்கள் ஹிந்து நீதிகள் என்னும் மூன்று பகுதியாய் 58 பிரச்ன உத்தரங் களாக உள்ளன. காசிப் பிரதான ஹிந்து வித்தியாசாலைக் கமிட்டியாரால் பிரசுரஞ் செய்யப்பட்ட கிரந்தத்தை இங்கிலீஷி லிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. viii. 43/1902/II.

Q2

## 294·33—யோகம், நிஷ்டை, விக்கிரக வழிபாடு

336. i. உயர்வு மொழி; ii. ஸ்ரீசிவநாம சங்கீத தியான பஜனை அடியார்; ஸ்ரீஜெய விநாயக சிவப்பிரகாச அச்சுக்கூடம், சென்னை; iii. மே, 1910; iv. உ.ப. 20; v. 22×14 செ.மீ.; vi. ......; vii. சென்னை, சேத்துப்பேடு "ஸ்ரீஜெய விநாயக சிவப்ரகாஸ மடாலயத்தில்" நிறைவேறிய தைப்பூச, மஹா சிவராத்திரி வைபவங்களின் உண்மையை விளக்கும் உயர்வு மொழி என்பது இதன் முழுப் பெயர். சிவசமய திருப்பணித் கூட்டத்தாரைப் பற்றியும் அச்சபை முயற்சியால் நடைபெற்ற பூச விழா, மஹாசிவராத்திரி விழா முதலியன பற்றியும் விவரித்து உரைக்கின்றது. viii. 669/1910/III.

Q2:4

**ஔவையார்**

i. உயர்ஞான சரநூல் (தொ. எ. 52 பார்க்க); ii. தேவேந்திரநாத பண்டிதர், சோதிட கணிதர் செழுமணவை; ஆயுர்வேத அச்சுக் கூடம், சென்னை; iii. 1907; iv. செ.மூ.உ.ப. 12; vii. ஔவையார் ஒரு வேளாளனுக்கு உபதேசித்ததாகச் சொல்லப் பெறுவது இந்நூல். viii. 297/1907/II.

Q2:4

337. i. கடவுள் வழிபாடு ; ii. ஆனந்த ஷண்முக சரணலயன், தில்லைவளாகம் ; எட்வர்ட் அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. மார்ச்சு, 1910 ; iv. உ.ப.+செ. மூ. ப. 12; v. 16×10 செ. மீ.; vi.......... ; vii. திருவாரூரில் ஸ்ரீ கமலாம்பிகா விலாஸ சங்க வருடமகோத்ஸவ காலத்தில் பாண்டித்துரைத் தேவர் தலைமையின்கீழ், தில்லைவளாகம் சிவாநந்தானுபூதி நிலையம் ஆனந்த ஷண்முக சரணலயனால் வெளியிடப்பெற்றது. கடவுள் வழிபாடுபற்றிய கருத்துக்களைத் தெளிவுற விளக்கிக் கூறு கின்றது. viii. 191/1910//II.

**Q2 : 4**

**சங்கரனர்**

i. சரநூல்—மூலமும் உரையும் (தொ. எ. 52 பார்க்க) ; ii. தேவேந்திரநாத பண்டிதர், சோதிட கணிதர், செழுமணவை ; ஆயுர்வேத அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ. மூ. உ. ப. 34 ; vii. 'உமையவளுக்குச் சங்கரனர் திருவுளம் மகிழ்ந்து அருளிச் செய்தது' என்று முகப்பில் காண்கிறது. சோதிடத்தை அறியாதவர்கள் மன நிறைவாய் அறியும் வகைதனை உரைப்பது. இதற்கு உரையும் உள்ளது. viii. 297/1907/II.

**Q2 : 4**

**சங்கரீஸ்வரர்**

338. i. சுத்தஞானம் [மும்மூலகற்பம், ரத்தினச் சுருக்கம், வாத சூத்திரம், நாதாந்தத்திறவு கோல்] ; ii. பெ. சொக்கலிங்கம் பிள்ளை, திருநெல்வேலி ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல் வேலி ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 1 ; v. 15×11 செ. மீ. ; vi. ........ ; vii. .......... ; viii. 82/1910/II.

**Q2 : 4**

i. நாதாந்தத் திறவுகோல் (தொ. எ. 338 பார்க்க) ; ii. பெ. சொக்கலிங்கம் பிள்ளை, திருநெல்வேலி ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 15 ; viii. 82/1910/II.

**Q2 : 4**

i. மும்மூலகற்பம் (தொ. எ. 338 பார்க்க) ; ii. பெ. சொக்க லிங்கம் பிள்ளை, திருநெல்வேலி ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 3 ; viii. 82/1910/ II.

**Q2 : 4**

i. ரத்தினச் சுருக்கம் (தொ. எ. 338 பார்க்க); ii. பெ. சொக்க லிங்கம் பிள்ளை, திருநெல்வேலி; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1910; iv. செ. மூ. எ. 5; viii. 82/1910/II.

Q2 : 4

i. வாத சூஸ்திரம் (தொ. எ. 338 பார்க்க); ii. பெ. சொக்க லிங்கம் பிள்ளை, திருநெல்வேலி; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1910; iv. செ. மூ. எ. 7; viii. 82/1910/II.

Q2 : 4

**சிவஞான யோகிகள், விருதை.**

339. i. தேவோபாசன தீபம்—முதற் பாகம்; ii. குமாரெட்டுப் பாண்டியனவர்; ஸ்ரீவித்தியா விநோதினி அச்சுக்கூடம், தஞ்சாவூர்; iii. 1907; iv. உ.ப. 170; v. 16×12 செ. மீ.; vi. 0–8–0; vii. விருதை சிவஞான யோகிகள் விக்கிரகாராதனம் பற்றிச் செய்த பிரசங்கங்களின சாரம். ஆத்திகம், தெய்வவியல முதலிய 94 விஷயங்கள் பற்றிய விரிவு இதன்கண் உள்ளது. விக்கிரக ஆராதனம் செய்வது கர்மம், யோகம், சமாதி முதலிய மோக்ஷ சாதனங்களுள் ஒன்று என்றும் அநேக ஆதாரங்களைக் கொண்டு விளக்கிக் காட்டியுள்ளார். இந்துக்களின் விக்கிரக ஆராதனம் பற்றிப் பிற மதத்தார் கொண்டுள்ள எண்ணம் தவறு என்று எடுத்துக் காட்டும் நோக்கத்துடன் இந்நூல் இயற்றப் பெற்றது. viii. 87/1908/I.

Q2 : 4

340. i. **சிவ பூசைத் திரட்டு**; ii. ரிப்பன் அச்சியந்திரசாலை, மதராஸ்; iii. 1909; iv. செ. மூ. எ. 1+125+9; v. 16×12 செ. மீ.; vi. 0–2–0; vii. சைவ சமயாசாரியர்களின் நூல்களிலிருந்து சிவ பூசைக்குரிய செய்யுள்கள் திரட்டித் தரப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்குச் செல்லும முறையும் அங்கு எவ்வெம் முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதும், வழிபடும் முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 421/1909/III.

Q2 : 4

341. i. **தன்னிலை விளக்கம்**; ii. . . . . . . . . . . . . . ; iii. 1909; iv. செ. மூ. எ. 14+20; v. 20×13 செ. மீ.; vi . . . . . . . ; vii. சந்திர கலை, சூரிய கலை பற்றி உரைப்பது. கச்சி நகர்த் தேவாலயங்கள் பற்றிய நிலைகள் குறிக்கப் பெற்றுள்ளன. viii. 649/1909/IV.

Q2 : 4

**நாராயண ஸ்வாமி அய்யர்—மொ. து.**

342. i. கர்ம யோகம்—முதற் பாகம் ; ii. எட்வர்டு ப்ரஸ், திருவாரூர் ; iii. 1910 ; iv. உ. ப. 28 ; v. 18×12 செ. மீ.; vi. 0–2–0 ; vii. விவேகானந்தர் நூலின் மொழி பெயர்ப்பு. 'கர்மயோகம்' பற்றிச் சுவாமிகளின் கருத்துக்கள் இதில் உள்ளன. ஸ்ரீமான் விவேகானந்தாப் பதிப்பு வரிசையில் இது இரண்டாவது புத்தகம். viii. 506/1910/I.

Q2 : 4

**பீர்முகமது**

i. திருமெஞ்ஞான சரநூல் (தொ. எ. 52 பார்க்க) ; ii. தேவேந்திரநாத பண்டிதர், சோதிட கணிதம், செழுமணவை ; ஆயுர் வேத அச்சுக்கூடம், சென்னை; iii. 1907 ; iv. செ. மூ. எ. 1+30; viii. 297/1907/II.

Q2 : 4

**முருகேச முதலியார், க. சி.**

343. i. திருநெல்வேலி ஸ்ரீ அநவரத தான நாதர் ஆனி விழா வணி மாலை ; ii. நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலை, திருநெல்வேலி; iii. 1905 ; iv. செ. மூ. எ. 32+3 ; v. 13×11 செ. மீ. ; vi. .......... ; vii. நெல்லை நகர் ஈசருக்கு நடைபெறும் ஆனித் திருவிழாவைப் பற்றி உரைப்பது. viii. 9/1905/IV.

Q2 : 4

344. i. **யோகாமிர்த விளக்கம்** ; ii. நாராயணராவ் & எம். கே. சபாபதி பிள்ளை ; கல்யாணசுந்தரம் முத்திராசாலை, தஞ்சை ; iii. ஆகஸ்டு, 1905 ; iv. செ. மூ. எ. 100+1 ; v. 14×11 செ. மீ. ; vi. ... .... ; vii. 'துறை காணு விளக்கம்' என்னும் யோகாமிர்த விளக்கம் என்பது இதன் முழுப் பெயர். யோக நிலை பற்றி விவரிப்பது. 'சூரியனும் சந்திரனும் தோற்றமாமே' எனபதை இறுதியாகக் கொண்டு அமைந்துள் ளன எல்லாப் பாடல்களும். viii. 234/1905/III.

Q2 : 4

**ஸத்யோஜாத சிவாச்சாரியார், திருவானைக்கா.**

345. i. விக்ரஹ ஆராதநம் ; ii. எல். வி. பிரஸ், திருச்சி ; iii. 1910 ; iv. உ. ப. 8 ; v. 14×11 செ. மீ. ; vi........ ; vii. விக்கிரக வழிபாட்டின் தத்துவம் பற்றி பற்பல எடுத்துக் காட்டுகளுடன் ஆசிரியர் விளக்கியுரைக்கின்றார். விக்கிரக வணக்கம் செய்பவர் கடவுள் லட்சணத்தை அறிந்த ஞானியே என்பது எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. viii. 25/1910/IV.

Q2 : 4

## 294.535—தல புராணம்

**அண்ணுமலை தேசிகர், திருவண்ணுமலை.**

346. i. சிவக்ஷேத்திர விளக்கம் [சைவ சமயம், சைவ சமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள்] ; ii. ம. முத்துகுமார சாமி தேசிகர் & அ. குமாரசாமிப் பிள்ளை ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1901 ; iv. உ. ப. 4+65 ; v. 17×13 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. சிவ க்ஷேத்திரங்களின் வரலாறு சுருக்கமாகவும், தெளிவாகவும் உரைப்பது. மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய விவரங்கள் உள்ளன. இதன் பிற் சேர்க்கையாக ஆறுமுக நாவலர் எழுதிய சைவ சமயம், சைவ சமயி, அநாசாரம், திருக்கோயிற் குற்றங்கள் உள்ளன. viii. 182/1901/IV.

Q2 : 38

**அருணுசலக் கவிராயர், மு. ரா.**

347. i. திருக்குற்றுலத் தல புராண வசனம் ; ii. விவேகபாநு ப்ரஸ், மதுரை ; iii. 1906 ; iv. உ. ப. 339 ; v. 16×13 செ. மீ. ; vi. 1–0–0 ; vii. வடமொழிக் காந்த புராணத்தில் சங்கர சங்கிதை, சனற்குமார சங்கிதைகளின் சாரமாய் அமைந் தது திருக்குற்றுலத் தல புராணமான்மியம். இதனைப் பின்பற்றிச் செய்யுளில் புராணம் பாடியவர் திரிகூடராசப்பக் கவிராயர். இவருடைய புராணம் தான வைபவ காண்டம், சிவ ரகசிய காண்டம் என இரண்டு பெரும் பிரிவுடையதாய் 32 பட லங்களில் விரித்துரைக்கப் பெற்றது. இதனைப் பின்பற்றி எழுதப் பெற்றது இவ்வுரைநடை நூல். viii. 67/1906/IV.

Q2 : 38

**அருணுசல சுவாமிகள், வேலமாநகரம்.**

348. i. காவேரியின் தீர்த்தமான்மியம் ; ii. சுந்தரராஜுலு நாயுடு, ஈரோடு ; செண்ட்ரல் ப்ரஸ், ஈரோடு ; iii. 1910 ; iv. உ. ப.+ செ. மூ. ப. 8 ; v. 23×13 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. காவேரி நதியின் புராணப் பெருமைகளை சூத பௌராணிகர் நைமி சாரண்ணிய முனிவர்களுக்குச் சொல்லும் பாவனையாக இயற்றப் பெற்றது. காவேரியின் பெருமை குறித்து நாதநாமக்கிரியை இராகத்தில் அமைந்த கீர்த்தனை ஒன்றும், நொண்டிச் சிந்துப் பாடல் ஒன்றும் ஆக இரண்டு இசைப் பாடல்களும் இதில் உள்ளன. viii. 521/1910/III.

Q2 : 38

**அழகர்சாமி பிள்ளை, ம., மதுரை.**

349. i. திருநெல்வேலித் தல புராண வசனம் ; ii. அ. சுந்தர நாதம் பிள்ளை & ம. அழகர்சாமிப் பிள்ளை ; ஸ்ரீவித்யா விநோதினி அச்சியந்திரசாலை, தஞ்சாவூர் ; iii. 1910 ; iv. உ. ப. 436 ; v. 22×14 செ. மீ. ; vi. . . . . . . ; vii. நெல்லை யப்பக் கவிராயர் என்பார் பாடிய செய்யுட் புராணத்தைப் பின் பற்றி எழுதப் பெற்ற உரைநடை. 120 சருக்கங்கள் கொண்டது. சருக்கந்தோறும் கடவுள் வாழ்த்துப் பாடல் தரப் பெற்றிருக் கிறது. திருநெல்வேலி காந்திமதி நெல்லையப்பர் கோவிலில் 12 மாதங்களிலும் நடக்கும் உற்சவங்களின் விவரமும் தரப் பெற்றிருக்கிறது. viii. 536/1910/II.

Q2 : 38

**அழகிய மணவாள ராமாநுஜதாசர், புவனகிரி.**

350. i. திருமுட்ட புராணச் சுருக்கம் ; ii. செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1908 ; iv. உ. ப. 140 ; v. 20×12 செ. மீ ; vi. 0–12–0 ; vii. திருமுட்டத் தலத்தின் புராண சரிததை வசன நடையில் தருவது இந் நூல். மூர்த்தி மான்மிய காண்டம், க்ஷேத்திர மான்மிய காண்டம், தீர்த்த மான்மிய காண்டம், ஞான மான்மிய காண் டம் என நான்கு காண்டங்கள் கொண்டது. ஒவ்வொரு காண்டத்திலும் பல படலங்கள் உள்ளன. viii. 193/1908/II.

Q2 : 38

**ஆதியப்பனூர், களந்தை.**

351. i. திருக்களர்ப் புராணம் ; ii. அ. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் ; ஸ்ரீவித்தியா முத்திராக்ஷரசாலை, கும்பகோணம் ; iii. 1902 ; iv. செ. மூ. ப. 411 ; v. 19×13 செ. மீ. ; vi. . . . . . . ; vii. எழு சருக்கங்கள் கொண்டது இப்புராணம். திருக்களர் என்னும் இவ்வூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார் குடித் தாலுக்காவைச் சார்ந்தது. முதற்கண் திருக்களர்ச்செப் பேட்டுச் சாதனங்களும் புராண வசனச்சுருக்கமும் உள்ளன. viii. 108/1902/IV.

Q2 : 38

**ஆராவமுதாசாரியார், திருச்சுழியல்.**

352. i. திருச்சுழியல் புராணம் ; ii. அம்பலவாண நாவலர், திரு நெல்வேலி ; கலாரத்நாகர யந்திரசாலை, சென்னை ; iii. 1902; iv. உ. ப. 11+10+11+744 ; v. 20×13 செ. மீ. ; vi. . . . . ; vii. திருச்சுழலியலின் தலபுராணம். பாயிரம் உட்பட 16 சருக் கங்கள் உள்ளன. viii. 279/1902/I.

Q2 : 38

**ஆலாலசுந்தரம்பிள்ளை, கா. எ.—மொ. து.**

i. *காமாக்ஷி லீலாபிரபாவம்* (தொ.எ. 368 பார்க்க); ii. வித்யா பாஸ்கர அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. உ. ப. 104; vii. காஞ்சியின் மகிமை குறித்து வடமொழியில் உள்ள 'பஞ்சரசத்' என்கிற நூலிலும், 'சதாத்யாயம்' என்னும் நூலிலும், 'காமாக்ஷி விலாசம்' என்கிற நூலிலும் உள்ளன. இவற்றுள் முதல் இரு நூல்களும், முறையே சிவஞான யோகிகளாலும், கச்சியப்ப முனிவராலும் தமிழில் செய்யுட் புராணமாக மொழி பெயர்க்கப் பெற்றுள்ளன. மூன்றாவது நூலாகிய காமாக்ஷி விலாசத்தை உரை நடையில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் இந்நூலாசிரியர். இப் பிரபாவம் 14 அத்தியாயங்களைக் கொண்டது. viii. 326/1906/IV.

Q2 : 38

353. i. **ஆழ்வார் திருநகரியென்னும் திருக்குருகூர் மஹாத்மியம்** [சுவாமி நம்மாழ்வார் வைபவம், சுவாமி நம்மாழ்வார தாலாட்டு]: முதற்பதிப்பு; ii. வி. ரெங்கநாதபிள்ளை, திருநெல்வேலி & பெரிய நம்பி வகுளபூஷணுச்சாரியார் சுவாமிகள், ஸ்ரீ வைகுண்டம்; நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலை, திருநெல்வேலி; iii. அக்டோபர், 1905; iv. உ. ப. 7+52; v. 22×14 செ. மீ.; vi. ......; vii. திருக்குருகூரின் புராணப் பெருமையினை உரைப்பது. நான்கு அத்தியாயங்கள் கொண்டது. viii. 149/1905/IV.

Q2 : 38

**ஆழ்வாரப்ப பிள்ளை, மு.—மொ. து.**

354. i. *வள்ளியூர் ஸ்தலபுராணம்*; ii. சிதம்பரநாதன் கவிராஜர்; மினர்வா அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. உ. ப. +செ. மூ. ப. 27+410; v. 22×15 செ. மீ.; vi .. ..; vii. ஸ்ரீவல்லிமா நகரமென்று பெயர் வழங்கிய வள்ளியூர் ஸ்தலபுராணம் என்பது இதன் முழுப் பெயர். வடமொழியிலிருந்து மொழி பெயர்த்துச் செய்யுள் நடையாக இயற்றப் பெற்றது. 25 அத்தியாயங்கள் கொண்டது. இப்புராணத்தின் உரைநடைச் சுருக்கமும் முகப்பில் உள்ளது. viii. 289/1906/III.

Q2 : 38

**இராமாநுஜசாரியார், ம. வீ.**

i. *திருவானைக்காமான்மியம்* (தொ.எ. 360 பார்க்க); ii. ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்; iii. 1909; iv. உ.ப. 61; vii. புராணத்தின் வரலாற்றை உரை நடையில் தெளிவுற உரைக்கின்றது. viii. 526/1909/III.

Q2 : 38

355. i. இராயவேலூர் என வழங்கும் வேலைமாநகர் சரிதை ; ii. சி. பார்த்தசாரதி நாயகர் ; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1909 ; iv. உ. ப. 47 ; v. 15×11 செ. மீ. ; vi. 0–2–6 ; vii. இது முதன்முதல் 1876 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் திரு வேங்கடம்பிள்ளை என்பாரால் வேலூர் விமல விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது. இந்தப் பிரதிக்கு இணங்கப் பதிப்பித்த மறுபதிப்பே இந்நூல். இந்நூலின ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவ்வூர்க்கோயில் வரலாறும், தலபுராணமும், சரித்திர வரலாறுகளும் கொடுக்கப்பட்டுள்ளன. ஜல கண்டீஸ்வரர் துதியான பதிகம் ஒன்றும் இதில் உள்ளது. viii. 220/1909/III.

Q2 : 38

356. i. உத்தம சோழபுரம் கரபுர நாத புராணம் : [கரபுர நாதர் போற்றிக் கலிவெண்பா] ; ii. அ. துரைசாமிபிள்ளை ; விவேக திவாகரன் அச்சியந்திரசாலை, சேலம் ; iii. 1910 ; iv. செ. மூ. உ. எ. 520 ; v. 23×15 செ. மீ. ; vi. 1–0–0 ; vii. வடமொழியிலிருந்து இப்புராணம் பாடலாக மொழி பெயர்த்தியற்றப் பெற்றது. பாயிரம் நீங்கலாக 12 சருக்கங்கள் உள்ளன. மூல நூல் செய்தார் பெயர் அறியக்கூடவில்லை. சு. அர்த்தநாரீச நாயகர் என்பார் இயற்றிய பொழிப்புரை இந்நூற்குளது. ஒவ்வொரு சருக்கத்துக்கும் உரிய கதைச் சுருக்கம் அவ்வச்சருக்கத்தின் ஈற்றில் அமைக்கப்பெற்றிருக்கிறது. viii. 314/1910/II.

Q2 : 38

**உமாபதி சிவாசாரியர்**

357. i. சிதம்பர புராணம் ; ii. அ. தங்கவேலுப்பிள்ளை ; மகாலக்ஷுமி விலாச அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. உ. எ. 813 ; v. 21×13 செ. மீ. ; vi. 1–8–0 ; vii. தில்லைச் சிதம்பரத்தின் சிறப்பினை ஓதுவது ; பாயிரம் உட்படப் பத்துச் சருக்கங்கள் கொண்டது. நூல முழுமைக்கும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் மாணுக்கருள் ஒருவராகிய சிதம்பரம் உபாத்தியாயர், பே. இராமலிங்கம் பிள்ளை செய்த புத்துரை உள்ளது. viii. 54/1906/II.

Q2: 38

**எல்லப்ப நாவலர்**

358. i. அருணசல புராணம் [அருணசலேசுரர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு] ; ii. கொ. லோகநாத முதலியார் ; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902 ; iv. செ. மூ. எ. 649 ; v. 17×13 செ. மீ. ; vi. ......; vii. பாயிரம் உட்படப் பதின்மூன்று சருக்கங்கள் உள்ளன. சருக்கங்களின் பொருட் சுருக்கம் ஒவ்வோர் சருக்கத்தின் முதலிலும் உள்ளன. மழவை மகாலிங்கையர் செய்த உரை நூல் முழுமைக்கும் உள்ளது. viii. 131/1903/I.

Q2 : 38

ஏகாம்பர முதலியார், செஞ்சி

359. i. அருணசல புராண வசனம் : முதற்பதிப்பு ; ii. கன்னைய நாயுடு ; கிளாரஸ்டன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1903 ; iv. உ. ப. 104 ; v. ...... ; vi. 0–6–0 ; vii. அருணசல புராணத்திற்கு மழவை மகாலிங்க அய்யர் செய்த உரையை விசேஷப்படுத்தி வசன நடையில் ஆக்கப்பெற்றது இந்நூல். 13 சருக்கங்கள் உள்ளன. viii. 92/1904/I.

Q2: 38

கச்சியப்ப முனிவர்

360. i. திருவானைக்காப்புராணம் [திருவானைக்கா மான்மியம்] ; ii. ஸ்ரீவாணிவிலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம் ; iii. 1909 ; iv. செ. மூ. ப. 208 ; v. 25×16 செ.மீ. ; vi. ...... ; vii. நூலாசிரியர் கச்சியப்ப முனிவரின் சரித்திரமும், அவர் இயற்றிய நூல்களின் விவரமும், முதலில் உள. ம. வீ. இராமநுஜாசாரியர் இப் புராணத்தைத்தழுவி எழுதிய உரைநடைப்பகுதியும் முதலில் உளது. கடவுள் வாழ்த்து, அவையடக்கம், திருநாட்டுச் சிறப்பு, திருநகர்ச் சிறப்பு நீங்கலாக 21 படலங்கள் உள. 1909-ல் நிகழ்ந்த கும்பாபிடேகத்தை ஒட்டி வெளியிடப்பெற்றது இப்பதிப்பு. இது நல்ல முறையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. viii. 526/1909/III.

Q2 : 38

361. i. கடிகாஜல ஸ்தல மகத்துவம் : கடிகாசல புராணம் ; ii. சி. பெருமாள் நாடார் ; சின்னைய நாடார் அச்சியந்திரசாலை, திருப்பத்தூர் ; iii. 1902 ; iv. உ.ப. 221 ; v. 14×11 செ.மீ.; vi. 0–4–0 ; vii. 'சோளங்கிபுரம் என்னும் கடிகாசல புராணம்' எனறும் இது குறிக்கப்பெறுகிறது. 22 அத்தியாயங்கள் கொண்டது. வசனநடையில் உள்ளது. viii. 163/1902/III.

Q2 : 38

கந்தசாமிக் கவிராயர், மு. ரா.

362. i. அரிமழத் தல புராணம் : மூலமும் குறிப்புரையும் ; ii. மு. ரா. சுப்பிரமணிய கவிராயர் ; விவேக பாநு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1907 ; iv. செ. மூ. உ. எ. 801; v. 22×14 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. 18 படலங்கள் கொண்டது இப்புராணம், குறிப்புரை ஈற்றில் அமைந்துள்ளது. viii. 55/1908/I.

Q2 : 38

**கந்தசாமிப் பிள்ளை**

363. i. பழனித்தலபுராண வசனம் [பழனித் திருப்புகழ்] : முதற் பதிப்பு ; ii. வித்தியா ரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜூன், 1905 ; iv. உ.ப. 272 ; v. 16×12 செ மீ. ; vi. ...... ; vii. 23 சருககங்கள் கொண்டது ; பழனியின் தலச் சிறப்புக்களைப் பேசுவது. இதன் இறுதியில் பழனித் தலத்தைக்குறித்து அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் தரப் பட்டுள்ளன. viii. 11/1905/III.

Q2 : 38

**கலியப்பெருமாள் பிள்ளை, எஸ்., தஞ்சை.**

364. i. திருமழுவாடி புராண வசனம் ; ii. இந்தியா முத்திரா சாலை ; iii. 1908 ; iv. உ.ப. 114+15 ; v. 21×14 செ.மீ.; vi. ...... ; vii. 'திருமழுபாடி' என்னும் சிவத்தலம் பற்றிய புராணம். வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப் பெற்றது. பாகவ ஸப்தரிஷி சாஸ்திரிகளால் சுருக்கமாக மொழி பெயர்த்ததைக் கொண்டு இந்நூலாசிரியர் செம்மையான உரை நடையில் எழுதியுள்ளார். 24 அத்தியாயங்கள் உள்ளன. viii. 162/1908/III.

Q2 : 38

**கலியாணசுந்தர முதலியார், பூவை.**

365. i. சிந்தாமணித் தலபுராணம் ; ii. இராமசாமி முதலியார், திருவொற்றியூர் ; திரிபுரசுந்தரி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 24 ; v. 18×11 செ. மீ. ; vi. ..... ; vii. திருவொற்றியூரின் வடக்தே அமைந்தது சிந்தாமணி என்னும் இத்தலம். இதுபற்றிய புராண வரலாறு கூறுவது இந்நூல். நைமிசாரணியச் சருக்கம் முதலிய ஆறு சருக்கங்கள் உள்ளன. viii. 142/1910/II.

Q2 : 38

**கவிராஜ நாயகம் பிள்ளை**

366. i. திருச்சாய்க்காடென்னும் சாயாவன புராணம் ; ii. தெ. சி. துரைசாமிப்பிள்ளை, பெருந்தோட்டம் ; சண்முகசுந்தர விலாச அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. ஜூலை, 1909 ; iv. உ.ப.+ செ.மு.ப. 6+84 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. தேவா ரம் பெற்ற தலமாகிய சாய்க்காடு என்னும் சாயாவனம் தலம் பற்றியது ; பத்துச் சருக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சருக் கம் பற்றியும் வசன நடையில் சருக்க சங்கிரகம் தரப்பெற்றிருக் கிறது. இத்தலம் பற்றிய தேவாரப் பாடல்கள் முதலில் தரப் பட்டிருக்கின்றன. இப்பதிப்பினைக் குறித்து இருவர் பாடிய இரண்டு சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் முதலில் உள்ளன. viii. 156/1909/III.

Q2 : 38

**கனகசபைக் கவிராயர், உடையார்பாளையம் சமஸ்தான வித்வான்.**

367. i. திருப்புன்கூர்ப் புராணம் ; ii. சண்முக சுந்தர விலாச அச்சுக்கூடம், சிதம்பரம ; iii. ஜூலை, 1907 ; iv. செ.மூ.எ. 855 ; v. 22×14 செ. மீ. ; vi. ...... ; vii. 23 படலங்கள் கொண்டது. ஒவ்வொரு சருக்க முடிவிலும் அந்தந்தச் சருக்கங் களின் சுருக்கம் உரை நடையில் உள்ளது. தருமபுரம் சண்முக சுவாமிகள் முதலிய பலர் சிறப்புப் பாயிரம் கொடுத்துள்ளனர். viii. 82/1907/III.

Q2 : 38

368. i. **காஞ்சி க்ஷேத்திர மஞ்சரி** [காமாக்ஷி லீலா பிரபாவம்] ; ii. கா. எ. ஆலால சுந்தரம் பிள்ளை ; வித்யா பாஸ்கர அச்சி யந்திரசாலை, சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 38 ; v. 20×12 செ. மீ. ; vi. ...... ; vii. காஞ்சியில் உள்ள சிவ க்ஷேத்திரத்தைக் குறித்த பல செய்திகளும் திரட்டப்பெற்றன. இந்நூல் திருக்கைலாய பரம்பரை ஸ்ரீ காஞ்சீபுரம் ஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம் மெய்கண்ட சிவாசாரியார் சந்தானம் ஞானபீடம் மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக சுவாமிகளின் கட்டளையால் இயற்றப்பெற்றது. ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலய வரலாறு முதற்கண் உள்ளது. காஞ்சி நகரில் எழுந்தருளியுள்ள திருமூர்த்தங்கள் பற்றிய வரலாறு அமைந்துள்ளது. viii. 326/1906/IV.

Q2 : 38

369. i. **காமநகர்ப் புராண வசனம்** ; ii. மூ சுந்தர முதலியார் ; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1909 ; iv. செ. மூ. உ. ப. 64 ; v. 14×11 செ. மீ. ; vi. .... ; vii. காமக்கூர் என வழங்கும் காமநகர்ப் புராணத்தின் வசனம். காமக்கூர் மங்களக் கவிராயர் கந்தப்பபிள்ளை என்பார் எழுதிவைத்திருந்த ஏட்டுப் பிரதியைக் கொண்டு பதிப்பிக்கப்பெற்றது. பதினொரு சருக்கங் கள் உள்ளன. viii. 705/1909/IV.

Q2 : 38

**கிருஷ்ணசாமி பட்டர்**

370. i. "மாறு மதுரை" என்று வழங்கும் வானர வீர மதுரை மகாத் மியம் ; ii. தமிழ்ச்சங்க முத்திராசாலை ; iii. 1904 ; iv. உ. ப. 29 ; v. 22× 14 செ. மீ. ; vi. .. ; vii. 12 அத்தியாயங்கள் கொண்டது. ஸ்காந்த புராணத்தில் சனத்குமார ஸம்ஹிதையில் சொல்லப்பட்டுள்ளது இம் மகாத்மியம். இதன் தமிழ் மொழி பெயர்ப்பே இந்நூல். viii. 107/1904/II.

Q2 : 38

**கிருஷ்ணப்ப செட்டியார், குளத்தூர்.**

371. i. செல்வக் கந்தநாதர் தல புராணம் [சென்னை செல்வக் கந்தர் தோத்திர ஆசிரிய விருத்தம் முதலியன] ; ii. நடராஜாசாரியர், புதுவை ; ஹரிஹர பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 5+6+199 ; v. 18×11 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. சோமாசி குரு என்பார் பத்துப் பாட்டினுள் சுருக்கமாய்ச் சொன்ன சரிதையை ஆதாரமாகக் கொண்டு இப்புராணம் செய்யப்பெற்றது. திருப்போரூர் விளங்கும் கந்தன் சென்னை வந்து உறைந்ததாகவும், வணிகர் அப் பெருமானைப் போற்றி அறம் வளர்த்தவாறும் புராணகாரர் உரைக்கின்றார். தை மாதத்தில் கந்தச் சுவாமிக்கு நடைபெறும் பதினெட்டு நாள் உற்சவமும் அதை பரிபாலிப்பவர்கள் பெயர்களும் குறிக்கப் பட்டிருக்கின்றன. ஈற்றில் சென்னைச் செல்வக் கந்தர் தோத்திர ஆசிரிய விருத்தம் என்னும் துதி மாலையும், வேதாந்த கீர்த்தனங்களும், அலங்காரச்சிந்து ஒன்றும் இடம் பெற்றுள்ளன. viii. 327/1910/II.

Q2 : 38

**குமாரசாமித் தம்பிரான், வி., காசிவாசி.**

372. i. காசி கேதார மான்மியம் [ஸ்ரீ காசி மகாத்மிய சங்கிரகம்] ; ii. ரெயித்பி அண்டு கம்பெனி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909 ; iv உ.ப. 59 ; v. 18×12 செ. மீ. ; vi. 0-6-0 ; vii. காசித் தலத்திற்கு ஆறு புராணங்கள் உள. அவற்றுள் அதிவீரராம பாண்டியர் காசி காண்டத்தையும், மகா வித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை காசி ரகசியத்தையும் வெளிப் படுத்தியுள்ளனர். ஏனைய நான்கில் ஒன்றாகிய காசி கேதார தலமான்மியம் சமஸ்கிருத சுலோகமும், தெலுங்கு அச்சரமுமா யிருந்ததையே மொழிபெயர்த்து இந்த ஆசிரியர் தருகிறார். 31 அத்தியாயங்களாக இத் தல புராணக் கதை உள்ளது. viii. 300/1909/IV.

Q2 : 38

i. காசி மகாத்மிய சங்கிரகம் (தொ. எ. 372 பார்க்க) ; ii. ரெயித்பி அண்டு கம்பெனி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909 ; iv. உ. ப. 8 ; vii. காசித்தலத்தேயுள்ள 64 தீர்த்தங்கள் முதலிய விவரங்களைத் தருகிறது. காசி காண்டம் முதலிய விரிந்த நூல் பார்க்க இயலாதவர்க்கு எளிதில் அறியும் வண்ணம் எழுதப்பெற்றது. viii. 300/1909/IV.

Q2 : 38

**குமாரசாமி முதலியார், அ. க., திருப்பத்தூர்.**

373. i. கொரட்டை ஸ்தல மான்மியம் ; ii. சென்ட்ரல் அச்சியந்திர சாலை, திருப்பத்தூர் ; iii. 1910 ; iv. உ ப.+செ.மூ.ப. 39 ; v. 21×14 செ.மீ. ; vi. ...... ; vii. 'வடமொழியில் தசாரணிய மென்ன வழங்கும் திருப்பத்தூர்ப் புராணத்துள் ஓர் பகுதியாகிய

சம்புவன ஜதூகபுரமெனும் கொரடடை ஸ்தல மான்மியம்' என்பது இதன் முழுப் பெயர். வடமொழிப் புராணத்தைத் தழுவித் தமிழில் பாடலாகவும், வசனமாகவும் இயற்றப் பெற்றது இந்நூல். viii. 736/1910/II.

Q 2 : 38

**கோபாலையர், அ.—மொ. து.**

374. i. திருக்கன்றுப்பூர்ப் புராணம்; ii. தமிழ்ச் சங்க முத்திரா க்ஷரசாலை, மதுரை; iii. 1903; iv. உ.ப. 35; v. 21×13 செ.மீ.; vi. 0–4–0; vii. ஆலங்குடி அ. கோபாலையரால் ஸம்ஸ்கிருத புராணத்தினின்றும் வசன நடையில் மொழி பெயர்த்தது; ஆறு படலங்கள் கொண்டது. viii. 159/1903/IV.

Q2 : 38

375. i. **கோயிலொழுகு**—முதற் பாகம்; ii. ஆனந்தா முத்திராக்ஷர சாலை, சென்னை; iii. 1909; iv. உ.ப. 138; v. 19×13 செ. மீ.; vi. 0–8–0; vii. திருவரங்கம் பெரிய கோயில் நடவடிக் கைகளைக் குறித்தது. அனேக ஸ்ரீ கோசங்களைக் கொண்டு பண்டி தர்களால் பரிசோதிக்கப்பட்டது. தர்வ வர்மாவின் கைங்கரியம் தொடங்கி உத்தம நம்பிக்கும் பட்டர் திருமலாசார்யருக்கும் உண்டான கலவரம் வரையில் உள்ள செய்திகள் இம் முதல் பாகத்தில் அடங்கியுள்ளன. viii. 653/1909/IV.

Q2: 38

**சங்கரசுப்பிரமணிய பிள்ளை, செப்பறை.**

376. i. செப்பறை மான்மியம் [செப்பறை அழகிய கூத்தர் தோத்தி ராட்டகம், செப்பறை ராஜவல்லிபுரம் அகிலாண்ட நாயகி தோத்திரம்]: முதற் பதிப்பு; ii. நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1905; iv. உ.ப. 64; v. 20×13 செ.மீ.; vi. 0–3–0; vii. பத்து அத்தியாயங்களில் செப்பறையின் தல வரலாறுகளை உரைப்பது. இந்நூலோடு செப்பறை ஸ்ரீ அழகிய கூத்துடையார் தோத்திராட்டகமும், சிவஞான யோகிகள் செய்த அகிலாண்டநாயகி தோத்திரமும் இணைக்கப் பட்டுள்ளன. viii. 43/1906/I.

Q 2: 38

**சபாபதி செட்டியார், அ. சு.**

377. i. திருவாவினன்குடி என்னும் பழனி மான்மியம்; ii. மூ. ஆவுடையப்ப பிள்ளை; கிருஷ்ண விலாச அச்சாபீஸ், மதுரை; iii. 1909; iv. உ.ப. 108; v. 21×14 செ.மீ.; vi. 0–6–0; vii. திருவாவினன்குடி என ஆன்றோர் போற்றும் பழநிப் பதியின் சிறப்புக்களை எடுத்துக் கூறுவது. பாலசுப்பிர

மணியக் கவிராயர் எழுதிய பழநித் தல புராணம் கற்ருேர்க் கேய‍ன்றி ஏனையோர்க்கு எளிதில் வாசித்தறியக் கூடாமை கருதி வசன நடையில் இந் நூலை ஆசிரியர் இயற்றியுள்ளார். viii. 197/1909/III.

Q2 : 38

**சிதம்பர சுவாமிகள்**

378. i. மதுரை மான்மியம் ; ii. அ. சுந்தரநாத பிள்ளை & ம. அழகர்சாமி பிள்ளை; ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1908 ; iv. உ. ப. 96 ; v. 21×14 செ. மீ.; vi. ...... ; vii. மதுரையம்பதியில் சொக்கேசப் பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல்களை எல்லாம் தொகுத்துத் தருகின் றது. 68 திருவிளையாடல்கள் இதில் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன. பின்னர் 'கலியுகத்தின் அரசாட்சியும் விசேடங்களும்' என்னும் பகுதியில் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்தார் விவரம், அக் காலத்து நிகழ்ந்த புதுமைகள் முதலியன பற்றி விவரிக்கின்ருர். இப் பகுதியால் மதுரையின் சரித்திரம் புலனுகிறது. viii. 157/1908/IV.

Q2 : 38

**சிந்நயஞ் செட்டியார், தேவகோட்டை.**

379. i. திருவொற்றியூர்ப் புராணம் ; ii. அள. சித. பெ. சிதம்பரஞ் செட்டியார் ; ஸ்டார் ஆப் இந்தியா அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1901 ; iv. செ. மூ. எ. 898 ; v. 22×14 செ. மீ. ; vi. ..... ; vii. திருவொற்றியூரின் தலச் சிறப்புக் கூறுவது. பாயிரம் உட்படப் பன்னிரண்டு படலங்களைக் கொண்டுள்ளது. viii. 222/1901/IV.

Q2 : 38

**சிந்நய நாயகர், பௌராணிகர், திருவிசைநல்லூர்.**

380. i. திருக்கூவப் புராண வசனம் ; ii. கலாரத் நாகர அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.உ.ப. 136 ; v. 17×12 செ.மீ.; vi. ...... ; vii. தொண்டை நாட்டுச் சிவத்தலங்கள் முப்பத்திரண்டில் ஒன்ருகிய கூவம் என்று வழங்கும் திருவிற் கோல க்ஷேத்திரத்தைப் பற்றிய புராண வரலாறு கூறுவது. இவ்வூரில் விற்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் சுவாமி பெயர் திரிபுராந்தகேசுரர் ; அம்மையார் பெயர் திரிபுராந்தகியம்மை. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பாடிய செய்யுட் புராணத் தைப் பின்பற்றி எழுதப்பெற்றது. பாயிரம் செய்யுளில் உள்ளது. நைமிசாரண்ய சருக்கம் முதல் தாருகன்வதைச் சருக்கம் ஈருக ஏழு சருக்கங்கள் கொண்டுள்ளது. viii. 24/1910/IV.

Q2 : 38

**சீவலமாற பாண்டியர் & முத்துவீரக் கவிராயர்**

381. i. *சங்கா நாராயணசாமி கோயில் புராணம் : இரண்டாம் பதிப்பு* ; ii. என். வ. வி. சோமசுந்தரம் பிள்ளை & வி. திருவேங்கடம் பிள்ளை ; விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1909 ; iv. உ.ப.+செ.மூ.ப. 142 ; v. 21×12 செ.மீ. ; vi. ...... ; vii. இத்தலம் பற்றிய வடமொழிப் புராண சரிதத்தைப் பின்பற்றி சீவலமாற பாண்டியர் தமிழில் பாடினர். இவர் பாடாதொழிந்த நதி, நாடு, நகர, தல, தீர்த்த, மூர்த்தி, விசேடங்கள் பற்றி ஆறு சருக்கங்களும், கடவுள் வாழ்த்து, புராண வரலாறுக் கவிகள் ஐந்தும், முத்துவீரக் கவிராயர் இயற்றியுள்ளார். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கப் பரிசோதகர் மு. ரா. அருணசல கவிராயர் எழுதிய அரும்பத உரையும் சுருக்க வசனமும் உடன் தரப்பட்டிருக்கின்றன. viii. 198/1909/III.

Q2 : 38

**சுந்தர முதலியார், மு., காமக்கூர்.**

382. i. *சிவாலயக் கோவை : இரண்டாம் பதிப்பு* ; ii. சின்னப்பா முதலியார் ; சுந்தர விநாயகர் அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 8 ; v. 14×11 செ.மீ.; vi....... ; vii. சிவ பூஜை, சிவ தரிசனம் முதலிய காலங்களில் துதிக்கும் பொருட்டு சமயாசாரியர்களால் பாடப்பெற்ற சிவத்தலங்களை கோவைப் படுத்திக் கவி இயற்றியுள்ளார். உமாபதி சிவாசாரியர் பாடிய 'திருப்பதிக் கோவை' போன்றது. viii. 129/1909/IV.

Q2 : 38

**சுப்பிரமணியபிள்ளை, த., வடக்குப்பட்டு.**

383. i. *சிவஸ்தல மஞ்சரி* ; ii. மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை ; iii. ஜூலை, 1905 ; iv. உ.ப. 120 ; v. 22×14 செ. மீ. ; vi. ...... ; vii. பாடல் பெற்ற தலங்கள், வேறு சில தலங்கள் ஆகியவற்றின் விவரம் உரைப்பது. தலங்களுக்குச் செல்லும் வழி, தலம் மூர்த்தி தீர்த்த விவரம் முதலியன உரைப்பது. viii. 265/1905/ /III.

Q2 : 38

**சுவாமிநாத உபாத்தியாயர், தி.மு.**

384. i. *திருக்களர் சார சங்கிரகம்* ; ii. எட்வர்ட் அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. 1910 ; iv. உ.ப. 62 ; v. 17×13 செ.மீ. ; vi. 0–3–0 ; vii. சோழ நாட்டில் காவேரிக்குத் தெற்கிலேயுள்ள சிவதலங்களில் இது ஒன்று. சமய குரவர் திருப்பாடல்கள் பெற்ற தலம். இந்நகரம் பற்றிய புராண சரிதமும், கோயில் திருப்பணி விவரம் முதலியனவும் பற்றி உரைப்பது. viii. 602/1910/IV.

Q2 : 38

**செங்கய்யா கேஸாநபல்லி**

385. i. வேங்கடாசல யாத்திரை ; ii. வாணி பூஷணம் அச்சுக் கூடம், சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 79 ; v. 21×14 செ. மீ. ; vi. 0-8-0 ; vii. திருப்பதி என்னும் திருவேங்கட மலைக்குச் சென்று, வேங்கடேசனைத் தரிசிக்க வருவோருக்கு உபயோகமாக இயற்றப்பெற்றது. நான்கு அத்தியாயங்கள் உள. இவற்றுள் முறையே வேங்கடேசுவரர் சரித்திரம், வேங்கடா சலத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்கள், சுவாமிக்கு நடக்கும் ஆராதனை, உற்சவம் முதலியன பற்றிய விவரம் திருப்பதி யிலும் திருச்சானூரிலும் உள்ள முக்கிய தேவாலயங்களின் சரித்திரங்கள், வேங்கடேசரின் திருக்கோலங்கள், தோத்தி ரங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. viii. 247/1909/III.

Q2 : 38

**செங்கல்வராயபிள்ளை, வ.சு.**

386. i. காசி மாஹாத்மியம் ; ii. எம். வி. நாயுடு அண்டு கம்பெனி, சென்னை ; iii. 1906 ; iv. உ.ப.+செ.மூ.ப. 35 ; v. 19×13 செ.மீ. ; vi. ...... ; vii. 'காசி மாஹாத்மியம் அல்லது சிம்ஹத்வஜன் கதை' என்பது இதன் முழுப் பெயர். இராம நுஜ எழுத்தச்சன் என்பவர் மலையாள மொழியில் செய்துள்ள சிவ புராணத்தினின்று எடுக்கப்பெற்றது, இச் சரித்திரம். இதனால் காசித் தலத்தின் மேன்மையும், கங்கையின் சிறப்பும், சிவபிரானது வள்ளன்மையும் நன்கு விளங்கும். viii. 359/1906/III.

Q2 : 38

**சொக்கலிங்க செட்டியார்**

387. சித்த வட மான்மியம் ; ii. பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 388 ; v. 16×13 செ.மீ. ; vi. ...... ; vii. சித்தவடம் என்னும் தலம் திருநாவுக் கரசர் தேவாரத்தில் அதிகைப் பதிகத்துள் சுட்டப்பெறுகிற வைப்புத்தலம். இத் தல மான்மியம் கூறுவது இப்புராணம். பாயிரம் உட்பட 5 சருக்கங்களைக் கொண்டது. இறுதியில் ஆதி சிதம்பரேசர் பதிகம் (10), சிவகாமியம்மை பதிகம் (10) திருத் தொண்டர் பதிகம் (11) ஆகிய மூன்றும் உள்ளன. viii. 318/1905/II.

Q2 : 38

388. i. சூதவன புராணம் ; ii. தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ், மதுரை ; iii. 1905 ; iv. உ. ப. + செ. மூ. ப. 52+1520 ; v. 22×14 செ.மீ. ; vi. .. ... ; vii 'திருவெசாத்தனம்' எனப் பெறும் சூதவனத்தின் தல மகிமை உரைப்பது. இவ் வூர் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப் பூண்டித் தாலுகா முத்துப்பேட்டை இரயில்வே நிலையத்தின் பக்கலில் உள்ளது.

பன்னிரண்டு சருக்கங்கள் கொண்டது இப்புராணம். இப்புராணத்தின் வசனமும் இதன் பிற்பகுதியில் உள்ளது. இவ்வூர் வடமொழிப் புராணத்தையும், முற்பட்ட சருக்கமான தமிழ்ப் புராணத்தையும், பின்பற்றி விரிவாக பாடப்பெற்றது. viii. 214/1906/I.

Q2 : 38

**ஞானப்பிரகாச தேசிகர், கமலை.**

389. i. திருமழுவாடிப் புராணம் ; ii. உலகநாத பிள்ளை, தஞ்சை ; வித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சை ; iii. 1908 ; iv. செ.மூ.ப. 143 ; v. 16×12 செ.மீ. ; vi. ...... ; vii. திருமழபாடி என்னும் தலத்திற்குரிய புராணம். 'மழுவைப் புராணம்' என்றும் இதற்குப் பெயர் உண்டு. ஏழு சருக்கங்கள் கொண்டது. இத்தலம் பற்றி மூவர் பாடிய தேவாரங்களும் ஈற்றில் தரப்பெற்றிருக்கின்றன. இப் புராணத்தின் மொத்தம் செய்யுள் தொகை 610-ல் இப்பொழுது கிடைத்துள்ளவை 581 பாடல்களே. viii. 26/1908/IV.

Q2 : 38

**தணிகாசல முதலியார், பா.**

390. i. திருக்கழுக்குன்ற புராணச் சுருக்கம் ; ii. கலியாணசுந்தர முதலியார், பூவை ; கிளாஸ்டன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப 16 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–0–6 ; vii. திருக்கழுக்குன்றம் தலத்தின் பழைய வரலாறு. காருடச் சருக்கம் முதலிய சில சருக்கங்கள் கொண்டது. இது இந்நூலின் முதல் பாகம் ஆகும். viii. 84/1910/III.

Q2:38

391. i. திருவான்மியூர்ப் புராண வசன சுருக்கம் : முதல் பாகம் ; ii. கலியாணசுந்தர முதலியார், பூவை ; கிளாஸ்டன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 16; v. 13×11 செ.மீ.; vi. 0–0–6 ; vii. திருவான்மியூர்ப் புராணம் வசன நடையில் சுருக்கமாக உள்ளது. இதில் ஏழு படலங்கள் உள. இனிமேல் வெளியிடப்பெறும் இரண்டாம் பாகத்தில் அடங்கிய 7 படலங்களின் விவரமும் இதன் இறுதியில் தரப்பெற்றிருக்கிறது. viii. 726/1910/I.

Q2 : 38

**திரிகூடராசப்பன் கவிராசமூர்த்தி, மேலகரம்.**

392. i. திருக்குற்றாலத்தல புராணம் ; ii. விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1910 ; iv. செ. மூ எ. 2072 ; v. 22×14 செ. மீ. ; vi. 1–8–0 ; vii. திருக்குற்றாலம் என்பது பாண்டிய நாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கில் ஒன்று. இத்தலம்பற்றிய புராணம் இலக்கிய நயம் செறிந்த ஓர் புராணம் ஆகும். இது

தானவைபவ காண்டம், சிவ ரகசிய காண்டம் என இரண்டு காண்டங்களும், 32 சருக்கங்களும் கொண்ட பெரிய நூலாகும். இதற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் நூற்பரிசோதகர் மு. ரா. அருணாசலக் கவிராயர் அரும்பதவுரை எழுதியுள்ளார். நூலாசிரியர் திரிகூடராசப்பக் கவிராயரின் வாழ்க்கை வரலாறு முதலில் தரப்பெற்றிருக்கிறது. viii. 253/1910/IV.

Q2 : 38

393. i. **திருக்கோவலூர்ப் புராணம்** ; ii. சௌந்தரராஜ உடையார் ; லார்ட் ரிப்பன் யந்திரசாலை, கும்பகோணம் ; iii. 1901 ; iv. செ.மூ.ப 1725 ; v. 20×13 செ. மீ. ; vi. ...... ; vii. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பாயிரம் உட்பட 26 சருக்கங்களைக் கொண்டது. இந்தப் புராணத்தின் சிறப்புக்கள் முதலியன பற்றிய குறிப்புக்கள் நூல் முகப்பில் உள்ளன. viii. 35/1902/IV.

Q2 : 38

394. i. **திருவாலவாயுடையார் திருப்பணி மாலை** ; ii. பொ. பாண்டித்துரைத் தேவர்; மதுரைத் தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை; iii. 1909 ; iv. செ. மூ. ஏ. 106 ; v. 21×14 செ. மீ.; vi. 0–3–0 ; vii. மதுரைக் கோயிலில் திருப்பணி செய்தார் விவரங்கள் முதலியன தெரிவிப்பது. இதனோடு மதுரைத் தல வரலாறு, என்னும் உரைநடைப் பகுதியும் அச்சிடப்பட்டிருக்கிறது. இதுவும் பழம் பிரதியிலிருந்து பதிப்பிக்கப்பெற்றதே. viii. 203/1909/II.

Q2:38

395. i. **திருவேற்காட்டுப் புராணம்** ; ii. கலியாணசுந்தர முதலியார், பூவை, அஷ்டாவதானம்; பண்டிதமித்திர யந்திரசாலை, சென்னை; iii. 1903 ; iv. செ.மூ.எ. 1055; v. 24×16 செ.மீ.; vi. 0–8–0 ; vii. 'வட வேதாரணியம்' என்னும் திருவேற்காட்டுப் புராணம், என்பது இதன் முழுப் பெயர். பாயிரம் உட்பட பதினைந்து சருக்கங்கள் கொண்டது. viii. 8/1905/I.

Q2 : 38

**துரைசாமி அய்யர், எஸ்., திருநெல்வேலி.**

396. i. ஜெயந்திபுரமென்னும் திருச்செந்தூர் ஸ்தல புராண ஸங்கரஹம்; ii. வாணி விலாசம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1910 ; iv. உ.ப. 73 ; v. 17×11 செ. மீ.; vi. 0–3–0 ; vii. இச்சிறிய வசன புராணம் பற்பல கிரந்தங்களிலிருந்தும் சுருக்கமாக எழுதி அச்சிற் பதிப்பிக்கப் பெற்றது. இவ்வூரின் செய்யுட் புராணம் பாடியவென்றி மாலைக் கவிராஜர் சரித்திரம் முதலில் தரப்பெற்றிருக்கிறது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றன் மகிமையையும் மிகச் சுருக்கமாக உரைப்பது. viii. 336/1910/III.

Q2 : 38

397. i. **துலாகாவேரி மகாத்மியம்**; ii. பெசல. நம்மாழ்வார் செட்டியார்; வெ. நா. ஜூப்லி பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 131 ; v. 22×14 செ.மீ.; vi. 0–8–0 ; vii. துலாகாவேரி மகாத்மியம் ஆக்கினேய புராணத்தில் உளளது. காவேரி ஸ்நானத்தால் பேறு பெற்றோர் வரலாறுகள் பல உள்ளன. முப்பது அத்தியா யங்களைக்கொண்டது. viii. 102/1901/IV.

Q2 : 38

398. i. **தேவார வைப்புத்தல விளக்கம்** : இரண்டாம் பாகம்; ii. ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. 1907; iv. செ.மூ. ப. 8 ; v. 21×14 செ.மீ; vi. .... ; vii. ஸ்ரீ காசி முதலிய பதி னொரு தலங்களைப் பற்றிய விவரம் முதற்பாகத்தில உள்ளது. இது அதன தொடர்ச்சியாய 12-வது வழுவூர் முதல் 22-வது கச்சிப் பலதளி ஈறாக பதினொரு தலஙகள இதில உள்ளன. 'இன்னும் வரும்' என்னும் குறிப்பு இறுதியில் உள்ளது. viii. 336/ 1907/IV.

Q2 : 38

**நரசிம்ம பாரதியார், ஆ.**

399. i. தென் திருப்பதி யென்னும் ஸ்ரீகுண சீலத்தல புராணம்; ii. பெ. கிருஷ்ணசாமி செட்டியார் ; ஸ்ரீ வாணி விலாஸ் பிரஸ், ஸ்ரீரஙகம் ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 558 ; v. 19×12 செ.மீ, vi. ......; vii. சீரங்கத்திற்கு வடமேற்கே உள்ளது குண சீலம் என்னும் தலம். வேஙகடத்திறபோலவே பெருமாள் இங்கு கோலம் கொண்டுள்ளார். பத்து அத்தியாயஙகள் கொண்டது இப்புராணம். viii. 15/1908/IV.

Q2 : 38

400. i. **நல்லூர்ப் புராணம்** ; ii. சடகோபராமாநுஜசாரியார் & கல்யாணசுந்தர சாஸ்திரி ; சாரதா விலாச அச்சுக்கூடம், கும்ப கோணம் ; iii. 1908; iv. செ.மூ.எ. 1013 ; v. 22×14 செ.மீ.; vi. 1–0–0; vii. திருநல்லூரைப்பற்றிய தல வரலாறு ; தலச் சிறப்புககளும் இறைவன் புகழ்களும் பேசப்படுகின்றன. காப்பு நீங்கலாக 26 அத்தியாயங்கள் உள. viii. 269/1908/II.

Q2 : 38

**நாராயணசாமி ஐயர், அ., பின்னத்தூர்.**

401. i. தேவதாருவனத் தல புராணம் ; ii. மு. சாமிநாத உபாத்தி யாயர், திருக்களர் ; ஸ்ரீ வித்தியா அச்சுக்கூடம், கும்பகோணம் ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 450 ; v. 22×14 செ.மீ.; vi. 0–12–0 ; vii. களப்பாள் என்று வழங்குகிற தேவதாரு வனத்தின் தலச் சிறப்புக் கூறுவது. பத்துச் சருக்கங்கள் கொண்டது. viii. 40/ 1905/IV.

Q2 : 38

**நாராயண முதலியார் & எல்லப்ப முதலியார், பணப்பாக்கம்.**

402. i. திருப்பனைசைப் புராணம்; ii. ஐ. சிவப்பிரகாசையர் & வேலு தேசிகர், பாலூர்; ஞானசம்பந்த அச்சுக்கூடம்; iii. 1910; iv. உ.ப.+செ.மூ.ப. '42+1137; v. 22×14 செ.மீ.; vi. ......; vii. சிவபுராணம் பத்தில் ஒன்றான பிரமாண்ட புராணம் உத்தர காண்டத்தில் உள்ளது இப்புராண சரிதம். வடமொழிப் புராணத்தைப் பின்பற்றித் தமிழில் செய்யுளாகச் செய்யப்பெற்றது. பாயிரம் உட்பட பத்தொன்பது சருக்கங்கள் கொண்டது. திருக்காளத்திச் சருக்கத்தில் மாத்திரை வருத்தனை முதலிய சித்திரக் கவிகளைப் புராணகாரர் அமைத்துள்ளனர். சித்திரக்கவிப் பாடல்களுக்கு உரை விளக்கமும் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இப்புராணத்திற்குரிய வசனமும் நூலிறுதியில் தரப்பெற்றிருக்கிறது. இப்புராணத்தில் வரும் புலியும், மயிலும் பூசித்ததுபற்றிய ஐதிகத் திருவுருவப் படமும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. பூவை கலியாணசுந்தர முதலியார் முதலிய பலர் இதற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளனர். viii. 165/1910/IV.

Q2 : 38

**பாநுகவி, ம.தி.**

403. i. திருத்தணி மான்மியம் (திருத்தணி யாத்திரை); ii. எம்.எ. லோகநாத செட்டியார்; ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை; iii. 1904; iv. உ.ப. 30; v. 18×13 செ.மீ.; vi. 0–12–0; vii. திருத்தணி பற்றிப் பல அரிய நூல்களினின்றும் தொகுத்து எழுதப்பெற்றது. viii. 338/1906/I.

Q2 : 38

**பாலகிருஷ்ண தீக்ஷிதர்—மொ. து.**

404. i. திருக்கடவூர் புராணம்; ii. மஹாலக்ஷ்மி விலாச அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1905; iv. உ. ப. 198; v. 16×13 செ.மீ.; vi. ......; vii. வடமொழியினின்றும் மொழிபெயர்க்கப்பெற்றது. 29 சருக்கங்கள் கொண்டது இப் புராணம். இதன் இறுதியில் ஸம்ஹாரமூர்த்தி பதிகம் (10), அபிராமியம்மன் பதிகம் இரண்டு (22), சம்மார மூர்த்தி பதிகம் (10), கள்ள விநாயகர் பதிகம் ஆகிய தோத்திரப் பாமாலைகளும் தரப்பட்டுள்ளன. viii. 50/1905/II.

Q2 : 38

**பாலசுப்பிரமணியக் கவிராயர்**

405. i. பழநித்தல புராணம்; ii. சிதம்பர முதலியார்; வித்தியா ரத்நாகர அச்சுக்கூடம்; iii. 1903; iv. செ.மூ.உ.எ. 987; v. 1½×13 செ.மீ., vi. 0–12–0; vii. இருபத்து மூன்று சருக்கங்கள் உடையது. ஆசிரியரின் வரலாறு முகப்பில் உளளது. நூல் முழுமைக்கும் நா. கதிர்வேற்பிள்ளை எழுதிய பொழிப்புரை உள்ளது. viii. 88/1903/II.

Q2 : 38

பாலுசாமி நாயுடு, மதுரை.

406. i. திருச்செந்தூர் மான்மியம் ; ii. த. குப்புசாமி நாயுடு, மதுரை ; கே. ஆ. ரெங்கனுதம் அண்ட் பிரதர்ஸ் பிரஸ், மதுரை ; iii. 1910 ; iv. உ.ப. 32; v. 20×13 செ.மீ., vi. ......; vii. திருச்செந்தூர் மான்மியத்தை உரைநடையில் கூறுவது. 15 சருக்கங்களாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. viii. 123/1910/II.

Q2 : 38

பொன்னுசாமி பிள்ளை, ர. ம.

407. i. கும்பகோண ஸ்தல புராண வசனம் ; ii. எம். எஸ். துரைச்சாமி பிள்ளை & ர. ம. பொன்னுச்சாமி பிள்ளை ; அலக்ஸாண்ட்ரா அச்சுக்கூடம், கும்பகோணம் ; iii. 1909 ; iv. உ.ப. 96 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–5– ; vii. "கும்பகோண ஸ்தல புராண வசனமும், மகாமக மகிமையும்" என்பது இந்நூலின் முழுப்பெயர். கும்பகோணத்தில் உள்ள சிவஸ்தலம் 10, விஷ்ணுதலம் 4 ஆக 14 தலங்கள் பற்றிய வரலாறுகள் இதில் குறிக்கப்பெற்றுள்ளன. இத் தலத்தில் உள்ள தீர்த்த விவரங்களும் விவரிக்கப் பெற்றுள்ளன. மகாமக தீர்த்த மகிமை பற்றியும் விவரிக்கப் பெற்றிருக்கிறது. viii. 525/1909/I.

Q2 : 38

மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம்.

408. i. சூரை மாநகர்ப் புராணம் ; ii. உ. வே. சாமிநாதையர்; பிரிஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ. எ. 539 ; v. 22×14 செ. மீ. ; vi. ............ ; vii. பாண்டி நாட்டில் உள்ளது சூரைமாநகர். இது, சூரைக்குடி, சூரை, விசயாலயபுரம் என வழங்கும். இவ்வூரின் சிறப்பும் இறைவனின் பெருமையும் பேசுவது ; 10 படலங்கள் கொண்டது. இதன் பதிப்பாசிரியர் உ. வே சாமிநாதையரால் எழுதப்பெற்ற அரும்பதவுரை நூலின் இறுதியில் உள்ளது. viii. 159/1904/III.

Q2 : 38

409. i. தனியூர்ப் புராணம் ; ii. உ. வே. சாமிநாதையர் ; பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ. மூ. எ. 202 ; v 21×14 செ. மீ ; vi. 0–2–0 ; vii. தனியூர் என்பது சோழவள நாட்டில் மாயூரத்திற்கு மேற்கே ஒரு நாழிகை வழி தூரத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். இது பாரிசாதவனம் எனவும், புழுகீசமென்னவும் வழங்கப் பெறும் கூறை நாடு என்பது இவ்வூரின் பக்கத்தே உள்ளது. முதன் முதலில்

அச்சிட்டு வெளிப்படுத்தியவர் கொ. முத்துச் செட்டியார் ஆவர். இந்த முதற் பதிப்பு கிடைப்பது அரிதாயிருந்தமையின் இந்தப் புதிய பதிப்பு வெளிப்படலாயிற்று. எட்டுப் படலங்கள் கொண்டது இப்புராணம். viii. 50/1907/II.

Q2 : 38

410. i. மண்ணிப்படிக் கரைப் புராணம்—மூலமும் உரையும் ; ii. உ. வே. சாமிநாதையர் ; பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ. மூ. உ. எ. 10+501 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. சோழவள நாட்டிலே காவிரியின் வட கரையில் உள்ள சிவத்தலங்களுள் ஒன்று மண்ணிப்படிக்கரை. இருப்பைப்பட்டு அல்லது இலுப்பைப்பட்டு, மதூகவனம் எனவும் இதன் பெயர் வழங்கும். வடமொழி மூலத்தை நோக்கிச் செய்யுள் நடையாய் இயற்றப்பெற்றது; 20 படலங்கள் கொண்டது. பதிப்பாசிரியர் சாமிநாதையர் இதற்கு அரும்பதவுரை வரைந்துள்ளார். viii. 226/1907/II.

Q2 : 38

411. i. வீரவன புராணம் ; ii. உ. வே. சாமிநாதையர், உத்தமதானபுரம் ; வைஜயந்தி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1903 ; iv. செ. மூ. எ. 4+704 ; v. 22×15 செ. மீ. ; vi. ......; vii. வீரவனம் என்பது திருப்பெருந்துறைக்கு மேற்குத் திசையில் பத்து நாழிகை வழி தூரத்தில் உள்ள சிவத்தலம். இத் தலத்தைப் பற்றிய இப் புராணம் பாயிரம் நீங்கலாக 14 படலங்களைக் கொணடுள்ளது. இறுதியில அரும்பதவுரை தனிப்படச் சேர்க்கப்பட்டுள்ளது. viii. 81/1903/III.

Q2 : 38

### முத்துக்குமாருசாமி, கு.

412. i. ராமேஸ்பரம் தீர்த்த மூர்த்தி விசேஷ ரத்னம் ; ii. ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், மதுரை ; iii. 1910 ; iv. செ. மூ. ப. 16 ; v. 14×11 செ. மீ. ; vi. ......... ; vii. மூர்த்தி, தீர்த்தம், தலம் முறையாய் வணங்குவாருக்கு உபயோகமாகப் பாடப் பெற்றது. கும்மி மெட்டில் அமைந்த பாடல்களில் தீர்த்தங்களின மகிமை விவரிக்கப்பட்டுள்ளது. தீர்த்த விவரம் உரைநடையிலும் விவரிக்கப் பெற்றிருக்கிறது. viii. 556/1910/IV.

Q2 : 38

### மூத்துசாமிக் கோனூர், அஷ்டாவதானம், திருச்செங்கோடு.

413. i. திருக்கொடி மாடச் செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டு மாண்மியம் ; ii. சுப்பராய கவுண்டர் அச்சியந்திரசாலை ; iii. 1904 ; iv. உ. ப. 18+114+222 ; v. 22×14 செ. மீ.; vi. .......... ; vii. திருச்செங்கோடு விவேக திவாகரன்

பத்திராதிபராகிய அஷ்டாவதானம் முத்துசாமிக் கோனாரால் எழுதப்பெற்றது. கவிராஜ பண்டிதர் இயற்றிய திருச்செங் கோட்டுப் புராணத்தையும் வடமொழி மஹாத்மியங்களையும் தழுவி இயற்றப்பெற்றது. எளிய நடையில் யாவரும் உணரும் வண்ணம் கடின சந்திகள் இன்றி எழுதப்பெற்றது. viii. 8/ 1904/II.

Q2 : 38

414. ..............................................

முத்துவிஜயம் பிள்ளை, இராமேச்சுரம்.

415. i. சேது புராண வசனம் : முதற் பதிப்பு ; ii. மனோன்மணி விலாச அச்சுக்கூடம் ; iii. 1900 ; iv. உ. ப. 461 ; v. 20×13 செ. மீ. ; vi. 2–0–0 ; vii. நிரம்பவழகிய தேசிகரால் செய்யப்பட்ட தமிழ்க் காவியத்திற்கு அருத்தமாக உரைநடையில் இயற்றப்பெற்றது. 47 சருக்கங்களைக் கொண்டது. viii. 169/ 1901/I.

Q2 : 38

முனிசாமி முதலியார், மோசூர்.

416. i. திருமயிலைப் புராண வசனம் ; ii. சு. பெ. பொன்னுசாமி முதலியார்; கபாலி அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. உ.ப. 112; v. 18×13 செ. மீ.; vi. 0–4–0; vii. சென்னை நகரின் ஒரு பகுதி யாக இப்பொழுதிருக்கும் மயிலாப்பூர் பற்றிய தலபுராணம் இது. திருவண்ணாமலை யாதீனம் ஸ்ரீ அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய மூல புராணத்திற்கு ஒருவாறு இணங்க உரைநடையில் இயற்றப்பெற்றது. 13 சருக்கங்கள் உள்ளன. இறுதிச் சருக்கத்தில் திருவள்ளுவ நாயனார் சரித்திரம் அமைந் துள்ளது. இது வள்ளுவரைப் பற்றி வழங்கும் கர்ண பரம்பரை வரலாறுகளை உட்கொண்டு எழுதப்பெற்றது எனத் தெரிகிறது. கபாலீசர் ஆலயத்தில் நடைபெற்ற வசந்தோற்சவத்தில் 24–4–1910-ல் பூவை. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் இந் நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இந் நூலாசிரியர் முனிசாமி முதலியார் பாடிய கபாலீசர் தோத்திரமும், இவர் குமாரர் சண்முக முதலியார் இயற்றிய 'ஸ்ரீ கபாலீசுரர் மாலை யும்' ஈற்றில் இடம் பெற்றுள்ளன. நூல் முதற்கண் திருஞான சம்பந்தர் அருளிய தேவாரப் பதிகம் உள்ளது. viii. 306/ 1910/II.

Q2 : 38

ராமய்யர், அயிதரூசு.

417. i. காஞ்சி வரதராஜர் மாஹாத்மியம் : முதற் பதிப்பு ; ii. சக்கரவர்த்தி கிருஷ்ணமாசாரி ; டௌடன் கம்பெனி, சென்னை ; iii. 1908 ; iv. உ. ப. 112 ; v. 18×11 செ. மீ. ; vi. 0–2–6; vii. காஞ்சியின் மகிமையும், வரதராஜப் பெருமானின்

சிறப்பக்களும் பேசுவது. வேத வியாசரால் சொல்லப்பட்ட பிரம்மாண்ட புராணத்திலிருக்கும் சத்திய விரதக்ஷேத்திர அத்திகிரி மஹாத்மியம் முதலிய 18 அத்தியாயங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதியதாக இந் நூலாசிரியர் குறிததுள்ளார். viii. 352/1908/II.

Q2 : 38

**வடமலை நாரணக்குடை மன்னர், இறையூர்.**

418. i. திருநீடூர்த் தல புராணம் ; ii. வ. த. சுப்பிரமணிய பிள்ளை; ராம நிலைய விவேகாநந்த அச்சுக்கூடம், சென்னை ; iii. மார்ச், 1908 ; iv. செ. மூ. ப. 82 ; v. 18×13 செ. மீ. ; vi. ........ ; vii. நீடூர் என்பது சோழவள நாட்டில் காவிரி நதியின் வடக்கேயுள்ள பாடல் பெற்ற சிவத்தலம். ஏட்டுப் பிரதிகள் இரண்டின் துணைக் கொண்டு வெளியிடப்பெற்றது. சில இடங்களில் சித்திரக் கவிகளும் அமைந்திருக்கின்றன. இந்நூலாசிரியரை வடமலைப் பிள்ளையன் என்றும், வடமலையப்ப பிள்ளை என்றும் சொல்லுவர். viii. 233/1908/II.

Q2 : 38

**வெங்கட்டராம சாஸ்திரி & சோலைமுத்துப் பிள்ளை, சிவ. மொ–து.**

419. i. திருவையாற்றுப் புராணம் ; ii. ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சுக்கூடம், தஞ்சை ; iii. 1907 ; iv. உ. ப.+செ. மூ. ப. 88+27=115 ; v. 21×14 செ. மீ. ; vi. .............. ; vii. 'ஸ்ரீ பஞ்சநத க்ஷேத்திர மான்மியம் என்னும் திருவையாற்றுப் புராணம்' என்பது இதன் முழுப் பெயர். வடமொழியினின்று இப்புராணத்தைதை வெங்கட்டராம சாஸ்திரியார் மொழி பெயர்த்துத் தர, சிவ. சோலைமுத்துப் பிள்ளை என்பார் இனிய நடையில் எழுதியுள்ளார். 26 அத்தியாயங்கள் உள்ளன. திருவையாற்றைக் குறித்து மூவர் பாடிய தேவாரப் பதிகங்களும் பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன. viii. 126/1907/II.

Q2 : 38

**வேம்பு சாஸ்திரி—மொ–து.**

420. i. போலகம் என்கிற சமீவந மான்மியம் ; ii. தி. அ. சுப்பிரமணிய ஐயர். போலகம் & ஸா. இராகவாசாரியார், திருக்கண்ணமங்கை ; ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகப்பட்டணம் ; iii. 1910 ; iv. உ. ப. 36 ; v. 22×14 செ. மீ. ; vi. ........; vii. போலகம் என்னும் ஊர் சஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூகா, பேரளத்திற்கு அருகில் உள்ளது. வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப்பெற்றது, இப் புராணம். பவிஷ்யோத்தர புராணம், மத்திம பாகம், க்ஷேத்திர கண்டம் பிர்ம நாரத ஸம்வாதத்தில் ஆதிகேசவ மான்மியத்தில் இது உள்ளது. viii. 649/1910/I.

Q2 : 38

**வேலாயுதப் பண்டிதர்**

421. i. தாராபுர தல புராணம் ; ii. தி. அ. சோ. இராமலிங்க பிள்ளை ; **ஊ.** புஷ்பரத செட்டி அண்டு கம்பெனி, கலாரத் நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. எ. 743 ; v. 22×14 செ. மீ. ; vi. ............ ; vii. பத்துப் படலங்கள் கொண்டது இப் புராணம். தாராபுரம் எனனும் ஊரின் புராணப் பெருஞ்சிறப்பினை எடுத்தியம்புவது. பல புலவர்கள இந்நூற்குச் சாத்துக்கவிகள் பாடியுள்ளனர். viii. 101/1906/II.

Q2 : 38

422. i. திரிமூர்த்தி மலைப் புராணம் ; ii. அ. முத்துசாமி நாயுடு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அச்சுக்கூடம், தாராபுரம் ; தாராபுரம் ; iii. 1910 ; iv. செ. மூ. எ. 963 ; v. 21×13 செ. மீ.; vi. ....... ; vii. கொங்கு நாட்டில் உள்ள திரிமூர்த்திகள் உறைவதால் கீர்த்தி பெற்ற திரிமூர்த்தி மலையின் மான்மியம் உரைப்பது. பாயிரம் நீங்கலாகப் 18 படலங்கள் கொண்டது. பழநிச்சாமிக் கவுண்டர் முதலிய சிலர் இதற்குச் சாற்றுக்கவி கள் பாடியுள்ளனர். viii. 309/1910/III.

Q2 : 38

423. i. **ஸ்ரீவாங்கள் என்கிற சந்நியாசி செய்த பூஜையும் அனந்த பத்மநாபர் ஸ்தோத்திரமும்** ; ii. ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி அம்மாள் ; டவுன் பிரஸ, சென்னை ; iii. 1907 ; vi. செ.மூ.எ. 465+4 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. திருவனந்த புரத்தைப் பற்றிய மகாத்மியம் கூறுவது. இதைப் பாடிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 'அனந்தங்காடு அல்லது ஸ்ரீவாங்கள் என்கிற சந்நியாசி செய்த பூஜையும், அனந்த பத்மநாபர் ஸ்தோத்திரமும்' என்பது இந்நூலின் முழுப்பெயர். viii. 75/1907/I.

Q2 : 38

**ஷண்முகசுந்தர முதலியார், கொ.**

424. i. காசி ரகஸ்யமும், காசி இராமேஸ்வர யாத்திரையும் ; ii. சிவஞானபோத யந்திரசாலை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 6+61 ; v. 16×12 செ.மீ. ; vi. ........ ; vii. வடமொழி யில் வியாசர் செய்த பிரம கைவர்த்தம் என்னும் மகாபுராணத் துள் மூன்றாம் காண்டமாக உள்ளது, காசி ரகஸ்யம். இதனை மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் விருத்தப் பாவினால் பாடியுள்ளார் ; இவரது பாவிற்குத் திருச்சிற்றம்பல ஞானி உரை வரைந்துள்ளார். இந்த உரையைப் பின்பற்றி இந்த வசன நூல் ஆககப்பெற்றுள்ளது. இருபத்தாறு அத்தி யாயங்களில் காசியின் சிறப்புக்களை எடுத்து இயம்புகின்றது. viii. 76/1905/I.

Q2 : 38

i. காசி இராமேஸ்வர யாத்திரை (தொ.எ. 424 பார்க்க); ii. சிவஞானபோத யந்திரசாலை; iii. 1905; iv. உ.ப. 16; vii. காசி இராமேஸ்வர யாத்திரை செய்வோர்க்கு உதவுவது; ரயில் மார்க்கம் முதலியன பற்றியும், வழியிலுள்ள வசதிகள் முதலியன பற்றியும் உரைப்பது. இரு தலங்களிலும் பார்க்க வேண்டும் இடங்கள் பற்றியும் ஆங்காங்குள்ள தீர்த்தம் முதலியன பற்றியும் விவரித்து உரைப்பது. viii. 76/1905/I.

Q2 : 38

**ஸ்வாமிநாத சாஸ்திரி, என்.—மொ-து.**

425. i. சேது மாஹாத்மியம்; ii. சுதேசமித்திரன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1901; iv. உ.ப. 297; v. 21×14 செ.மீ.; vi. ........; vii. ஸமஸ்கிருதத்தில் உள்ள ஸ்கந்த புராணத்தில் அடங்கிய ஸநத்குமாரஸம்ஹிதையிலிருந்து எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கபெற்றது. viii. 63/1901/I.

Q2 : 38

## 294.536—விழாக்கள்

**அப்பைய தீக்ஷிதர், ம. ஸா.**

426. i. நரக சதுர்த்தசி மங்களஸ்நாந விதிச் சுருக்கம்; ii. ஸ்ரீவித்யா அச்சுக்கூடம், கும்பகோணம்; iii. 1910; iv. உ.ப. 15; v. 13×11 செ.மீ.; vi. ........; vii. ஸௌம்ய வருஷம் ஐப்பசி மாதம் 25-ஆம் தேதி நடந்த நரக சதுர்த்தசி மங்கள ஸ்நாந விதிச் சுருக்கம் பற்றிக் கூறுவது இந்நூல். viii. 690/1910/II.

Q2 : 457

**அனந்தய்யர், ல.**

427. i. மஹாமகம்: முதற் பதிப்பு; ii. கார்டியன்பிரஸ், சென்னை; iii. 1908; iv. உ.ப. 102; v. 19×13 செ.மீ.; vi. 0-4-0; vii. கும்பகோணம் பதியில் 12 வருஷத்திற்கு ஒருமுறை நிகழ்வது மஹாமகம் என்னும் விழா. இது 'மஹாமகக்குளம்' என்னும் தீர்த்தத்தில் நடைபெறும். கும்பகோணத்தின் தலபுராணமும் மஹாமகத்தின் மகிமையும் இந்நூலுள் விவரிக்கப் பெற்றிருக்கின்றன. நான்கு அத்தியாயங்கள் உள. மஹாமகக்குளம் ஸ்ரீஆதிகும்பேசுவரர் கோவில் படங்களும் இடம் பெற்றுள்ளன. viii. 250/1908/IV.

Q2 : 457

**இராமசாமி செட்டியார், திருஎவ்வுளூர்.**

i. *சர்வாலய தீப தரிசனச் சரித்திரச் சுருக்கம்* (தொ.எ. 1547 பார்க்க) ; ii. மஹாதேவ செட்டியார், அக்கம்மாள்பேட்டை ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 4 ; vii. எல்லா ஆலயங்களிலும் நடைபெறும் தீபதரிசனம் பற்றி ஆகமச் சான்று காட்டி விவரிப்பது. viii. 46/1905/I.

Q2 : 457

i. *திருவண்ணாமலைத் தீபதரிசனச் சரித்திரச் சுருக்கம்* (தொ.எ. 1547 பார்க்க) ; ii. மகாதேவச் செட்டியார், அக்கம்மாள்பேட்டை ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 6 ; vii. திருவண்ணாமலையில் நடைபெறும் தீபதரிசனம் பற்றிய வரலாறு உரைப்பது. viii. 46/1905/I.

Q2 : 457

428. i. **கும்பகோணம் மஹா மக மஹான்மியம்** ; ii. வி.ஜி. அண்டு பிரதர்ஸ், தஞ்சாவூர் ; iii. 1909 ; iv. உ.ப. 8 ; v. 26×17 செ.மீ. ; vi. ......; vii. கும்பகோணம் ஸ்தல புராணத்தின் ஒரு பகுதி. மஹாமகத் திருவிழாவும் தீர்த்த மகிமையும் உரைப்பது. viii. 455/1909/III.

Q2 : 457

## 294,538—விரதங்கள்

**இராமலிங்க சுவாமிகள், சிதம்பரம் ஈசானியமடம்.**

i. *சிவராத்திரி கற்ப சூசனம்* (தொ.எ. 433 பார்க்க) ; ii. இராமலிங்கசுவாமி & இரத்தினவேலு முதலியார் ; பண்டித மித்திரயந்திரசாலை ; iii. 1901 ; iv. உ.ப. 12 ; viii. 98/1902/II.

Q2 : 433

i. *சோமவார கற்ப சூசனம்* (தொ.எ. 433 பார்க்க) ; iii. 1901 ; iv. உ.ப. 1 ; vii. ........; viii. 98/1902/II.

Q2 : 433

**குருஸ்வாமி நாயுடு, பி.பு.—மொ.து.**

429. i. **ஸத்திய நாராயண விரதம்** ; ii. பிரிஸிடென்ஸி பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. உ.ப. 38 ; v. 18×11 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. ஸத்திய நாராயண விரதத்தின் கதையினை உரைப்பது. viii. 53/1905/IV.

Q2 : 433

i. கைசிக ஏகாதசி மஹாத்மியம் : முதற் பதிப்பு (தொ.எ. 430 பார்க்க) ; ii. பெரிய நம்பி வகுள பூஷணுச்சாரியார் சுவாமிகள் ; நூருல் இஸ்லாம் அச்சுயந்திரசாலை, திருநெல் வேலி ; iii. 1905 ; iv. உ.ப. 58 ; vii. ஸ்ரீவராக புராணத்தில் 18-ஆவது அத்தியாயத்தில் வந்துள்ள கைசிக ஏகாதசி மகாத்மியம் மொழி பெயர்த்துத் தரப்பட்டுள்ளது. இதன் இறுதியில் பாண்டிய தேசத்தில் உள்ள திருக்குறுங்குடி மடம் ஜீயர் சுவாமிகள் திருமுடியடைவு, வானமாமலை ஜீயர் சுவாமிகளின் திருமுடியடைவு ஆகியவையும் உள்ளன. viii. 271/1906/I.

Q2 : 433

430. i. கைசிக ஏகாதசி மஹாத்மியம்—ஸ்ரீ ஜெயந்தி மகாத்மியம் [கைசிக ஏகாதசி மஹாதமியம்] : முதற் பதிப்பு ; ii. பெரிய நம்பி வகுள பூஷணுச்சாரியார் சுவாமிகள் ; நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலை, திருநெல்வேலி ; iii. 1905 ; iv. உ.ப. 14 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. பிரம் மாண்ட புராணம் 19-ஆவது அத்தியாயத்தில் வந்துள்ள ஸ்ரீஜயந்தி மகாத்மியம். இதில் மொழிபெயர்த்துத் தரபபடடுளளது. viii. 271/1906/I.

Q2 : 433

**செல்லையாப் பிள்ளை, ஸி.**

431. i. சிவராத்திரி மான்மியம் ; ii. மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப +செ.மு.ப. 80 ; v. 16×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. சிவராத்திரி விரதம் அநுட்டிக்கும் முறை முதலியன பற்றி விளக்கிக் கூறி, இந்த விரதத்தினை அநுட்டித்து முத்தி பெற்றோர் எண்மர் சரித்திரங்களும் தந்துள்ளனர். ஈற்றில் மறைஞானசம்பந்த நாயனர் அருளிச் செய்த சிவராத்திரி கற்பங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 145/1909/I.

Q2 : 433

**திருவேங்கட நாயடு, க. வ.**

432. i. கைசிக வேகாதசி புராணம் ; ii. கபாலி பிரஸ், சென்னை, முத்தியாலுப்பேட்டை ; iii. 1907 ; iv. செ.மு.எ. 280 ; v. 19×13 செ.மீ. ; vi. ...... ; vii. ‘கைசிக மஹாத்மியம்’ உரைநடையில் முதற்கண் அமைந்துள்ளது. ‘நம்பாடுவார் சரித்திரம் என்னும் கைசிக வேகாதசி புராணம்’ என்றும் இதற்குப் பெயர் உண்டு. நம்பாடுவாரின் கருணையால் பிரமராக்ஷஸன் முத்தி பெற்ற நிகழ்ச்சியினைக் கூறுவது. திருக்குறுங்குடி என்னும் திருமால் திருப்பதியின் தலமகிமை உரைப்பது, ஏழு அத்தியாயங்கள் கொண்டது, இது வடமொழி

வராக புராணத்தில் 11-ஆம் அத்தியாயத்தில் உள்ளது. இதற்குப் பராசரபட்டர் அருளிய வியாக்கியானத்தைப் பின் பற்றித் தமிழில் உரைநடையாகவும் செய்யுட் புராணமாகவும் ஆசிரியர் அமைத்துள்ளார். viii. 304/1907/III.

Q2 : 433

i. சோமவார கற்பம் (தொ.எ. 433 பார்க்க) ; iii 1901 ; iv. செ.மூ.எ. 216 ; vii. ........ ; viii. 98/1902/II.

Q2 : 433

i. சோமவார சிவராத்திரி கற்பம் (தொ.எ. 433 பார்க்க) ; iii. 1901 ; iv. செ.மூ.ப. 17 ; vii. ........ ; viii. 98/1902/II.

Q2 : 433

i. சிவராத்திரி மான்மியச் சுருக்கம் (தொ.எ. 433 பார்க்க) ; iii. 1901 ; iv. உ.ப. 11 ; vii. ........ ; viii.98/1902/II.

Q2 : 433

**மறைஞானசம்பந்த நாயனர்**

433. i. மகாசிவராத்திரி கற்பம் [மாதசிவராத்திரி கற்பம் முதல் திருக்கோயிற்குற்றம் வரை ஆறு நூல்கள்] ; ii. இராமலிங்க சுவாமி & இரத்தினவேலு முதலியார் ; பண்டிதமித்திர யந்திரசாலை ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 39 ; v. 16×13 செ.மீ. ; vi 0–4–0 ; vii. மகாசிவராத்திரியாகிய ஆண்டுக்கொருமுறை வரும் பெரிய சிவராத்திரி பற்றியது. viii. 98/1902/II.

Q2 : 433

i. மாத சிவராத்திரி கற்பம் (தொ.எ. 433 பார்க்க) ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 14 ; vii. ஒவ்வொரு மாதத்தும் வரும் சிவராத்திரி பற்றி விவரிப்பது. viii. 98/1902/II.

Q2 : 433

i. வருத்த மறவுய்யும் வழி (தொ.எ. 433 பார்க்க) ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 17 ; vii. ........ ; viii. 98/1902/II.

Q2 : 433

**முத்து ராமய்யா, நா. பெ. நா. மு.**

434. i. சோமவார மகிமை ; ii. ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம், சிதம்பரம் ; iii. நவம்பர், 1910 ; iv. செ.மூ.ப. 8 ; v. 13×11 செ.மீ. ; vi. ...... ; vii. சோமவார விரதத்தின் சிறப்புக்கள் குறித்துப் பேசுவது. திருவிளையாடல், பிரமோத்தர காண்டம், சோமவார கற்பம் நூல்களில் காணப்பெறும் இவ்விரதம் பற்றிய பாசுரங்களும் இதில் தரப்பட்டிருக்கின்றன. viii. 559/1910/IV.

Q2 : 433

## 294·551—சக்தி தோத்திரம்

**அகத்தியர்**

435. i. ஞானும்பிகை ஸ்தோத்திரம் ; ii. டி. என். முத்துஸ்வாமி உபாத்தியாயர் ; ஸ்ரீவரமங்கை விலாசம் பிரஸ், பாளையங்கோட்டை; iii. 1909 ; iv. செ.மு.ப. 16 ; v. 13×11 செ. மீ.; vi. . . . . . ; vii. இதில் உள்ள துதி கவிகள் 'ஜோதியே மனோன்மணியே சுழினை வாழ்வே' என்னும் முடிவினைப் பெற்றுள்ளன. அம்மையின் அருட்புகழை ஓதுவது. viii. 684/1909/III.

Q25 : 417

**அதிவீரராம பாண்டியன்**

i. இலக்குமி தோத்திரம் (தொ. எ. 1671 பார்க்க) ; ii. க. வ. திருவேங்கட நாயுடு ; கபாலி பிரஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ.மு.ப. 7 ; vii. இது தமிழில் அதிவீரராம பாண்டியர் அருளிச் செய்த காசி காண்டத்தில் உள்ளது என்னும் குறிப்பு உள்ளது. viii. 201/1907/I.

Q25 : 417

**கவிராஜ பண்டிதர், வீரை.—மொ. து.**

436. i. ஆனந்த லகரி—சௌந்தரிய லகரி ; ii. ஊ. புஷ்பரதச் செட்டி அண்டு கம்பெனி ; கலாரத்நாகரம் அச்சுக் கூடம், சென்னை ; iii. 1902 ; vi. செ.மு.எ. 6+104 ; v. 17×13 செ.மீ.; vi . . . . . . . ; vii. தேவியின் இன்பப் பெருக்கைக் கூறுதலால் முதல் 40 கவியும் ஆனந்த லகரி என்றும் 41 முதல் உள்ள கவிகள் தேவியின் அழகின் பெருக்கைக் கூறுவதால் சௌந்தர்ய லகரி என்றும் சொல்லப் பெறும். தேவியின் மகாத்மியம் உரைப்பன. சௌந்தரிய லகரி அம்மையின் உருவ அழகினைச் சிறப்பிக்கின்றது. பாடல்களுக்கு முக்கிய குறிப்புரை தரப்பெற்றிருக்கிறது. இக்குறிப்புரை எழுதியவர் க. வ. திருவேங்கட நாயுடு ஆவர். viii. 55/1903/IV.

Q25 : 417

437. i. சௌந்தரிய லகரி—மூலமும் உரையும் ; ii. எஸ். அனவரதம் விநாயகம் பிள்ளை ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1907 ; iv. செ.மு.உ.எ. 103 ; v. 17×13 செ.மீ.; vi. 0–6–0 ; vii. வடமொழியில் சங்கராச்சாரியார் இயற்றிய நூலின் தமிழ்க்கவிதை மொழிபெயர்ப்பு. இந்நூலாசிரியர் தேவி உபாசகர் ; சிறந்த கவி. இதற்குச் சைவ எல்லப்ப நாவலர் எழுதிய உரை உடன் தரப்பட்டுள்ளது. இவ்வுரை ஒழிவிலொடுக்கத்திற்குச் சிதம்பர சுவாமிகள் உரை போன்றது. பாட்டிற்கு உரை மட்டுமேயன்றி இலக்கண விசேடங்களும் ஆங்காங்கே விளக்கப்பட்டுள்ளன. சாக்த தந்திர நுட்பங்களும் வேண்டிய அளவு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. viii. 542/1908/III.

Q25:417

குமரகுருபர ஐயர், சிதம்பரம்.

i. புள்ளிருக்கு வேளூர் தோத்திரப்பா—தையநாயகி மாலை (தொ. எ. 452 பார்க்க) ; ii. நா. கு. குமாரசுவாமி ஐயர் ; அலெக்ஸாண்டரா அச்சியந்திர சாலை, கும்பகோணம் ; iii. 1909; iv. செ. மூ. எ. 1+10 ; vii. வைத்தீசுரன் கோவிலில் எழுந்தருளியிருக்கும் தையனாயகி அம்மையார் துதி. முதலில் விநாயகர் வணக்கம் உளது. நூல் எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தத்தாலாகியது. viii. 773/1909/IV.

Q25 : 417

குமரகுருபர சுவாமிகள்

i. சகல கலா வல்லி மாலை (தொ. எ. 1671 பார்க்க); ii. க. வ. திருவேங்கட நாயுடு ; கபாலி பிரஸ், சென்னை ; iii. 1906 ; iv. செ. மூ. எ. 10 ; vii. சகலகலாவல்லி மாலை என்னும் சரஸ்வதி தோத்திரம் என்றும் இது கூறப்பெறும். பத்துக் கட்டளைக் கலித்துறைகளினால் ஆகிய தோத்திர மாலை. viii. 201/1907/I.

Q25 : 417

குமரகுருபரவையர், உடையார்கோவில்.

438. i. மரகதவல்லித் தாயார் இலக்ஷ்மி மாணிக்கமாலை ; ii. கனகசபைக் கவிராயர் ; அலெக்ஸாண்டரா அச்சியந்திர சாலை ; iii. 1909 ; iv. செ. மூ. எ. 30 ; v. 21×14 செ. மீ.; vi. 0-2-0 ; vii. வீரநாராயணபுரம் ஸ்ரீ மரகதவல்லித் தாயார் துதியாக உள்ளது. ஒவ்வொரு பாடலும் 'மரகத மாணிக்கமே' என்னும் முடிவைப் பெற்றுள்ளமையின் இதற்கு மாணிக்க மாலை என்று பெயர் சூட்டியுள்ளனர். viii. 397/1909/IV.

Q25 : 417

சந்திரசேகர படையாட்சி, கலியமலை.

439. i. கலிய மலையில் இனிது வீற்றிருக்கும் மாரியம்மை பேரில் இயற்றிய தோத்திரப் பாக்கள் ; ii. ஸ்ரீ குஞ்சித சரண அச்சுக் கூடம், சிதம்பரம் ; iii. 1910 ; iv. செ. மூ. ப. 12 ; v. 13×11 செ.மீ.; vi. . . . . . ; vii. கலியமலையில் வீற்றிருக்கும் மாரியம்மையைக் குறித்த தோத்திரம்; இது பத்து எழு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தங்களால் ஆகிய ஆசிரியப் பாமாலை. viii. 58/1910/III.

Q25 : 417

**சாமுண்டி பத்தர், ஆர்.**

440. i. மைசூர் மாநகர் ஸ்ரீ சாமுண்டி ஈஸ்வரி பதிகம்; ii. இரத்தினவேலு முதலியார்; வாணீ விலாச அச்சுக்கூடம்; iii. 1909; iv. செ.மூ.எ. 1+21+1 =23; v. 13×11 செ.மீ.; vi. 0-0 6; vii. மைசூர் மாநகர் சாமுண்டி ஈஸ்வரியைக் குறித்த துதி. ஆசிரிய விருத்தத்தால் ஆகியது இந்தப் பதிகம். viii. 71/1909/IV.

Q25 : 417

**சிவஞான யோகிகள், திருவாவடுதுறை.**

i. செப்பறை ராஜவல்லிபுரம், அகிலாண்ட நாயகி தோத்திரம் (தொ. எ. 376 பார்க்க): முதற் பதிப்பு; ii. நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1905; iv. செ. மூ. எ. 10; vii. ஆசிரிய விருத்தங்கள் பத்துக்கொண்ட பதிகப் பாமாலை. viii. 43/1906/I.

Q25 : 417

**தங்கவேலு பிள்ளை, கோ. பா.**

i. சரஸ்வதி அம்மை துதி (தொ. எ. 461 பார்க்க); ii. விஸ்வ குலோத்தாரண அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. செ. மூ. எ. 1+10; vii. கலைமகளைக் குறித்த துதி மாலை. குமரகுருபரர் பாடிய சகலகலா வல்லி மாலை போன்ற அமைப்புடையது. கட்டளைக் கலித்துறைச் செய்யுளால் அமைந்தது. viii. 565/1910/IV.

Q25 : 417

**துரைசாமிப் பிள்ளை, எம். எஸ்.**

441. i. ஜெயங்கொண்ட சோழபுரம் ஸ்ரீ சாமுண்டீஸ்வரியம்மன் மீது பலவித பாமாலை; ii. அலெக்ஸாண்ட்ரா அச்சியந்திரசாலை; iii. 1909; iv. செ. மூ. ப. 16; v. 18×12 செ. மீ.; vi....; vii. ஜெயங்கொண்ட சோழபுரத்தில் கோயில் கொண்டருளும் சாமுண்டீஸ்வரியம்மன் ஆசிரிய விருத்தம், பஞ்சரத்னம் என்னும் சிறு பிரபந்தங்கள் முதலில் உள்ளன. அடுத்துக் 'கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்னும் சந்தம் 'வீடலால வாயிலாய்' என்னும் தேவாரச் சந்தம், 'தில்லை வாழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்னும் சந்தம் அமையப் பாடல்கள் முறையே உள்ளன. இறுதியில் மூன்று கீர்த்தனைக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. viii. 158/1909/IV.

Q25 : 417

**நாகமுத்துப் பிள்ளை**

i. முளைப்பாடல் (தொ. எ. 1593 பார்க்க); ii. மெஞ்ஞான விளக்க அச்சுக்கூடம், பாலக்காடு; iii. 1908; iv. செ. மூ. ப. 11 முதல் 16 முடிய; vii. பாலைமாநகரைச் சார்ந்த மாணுங் குளம்பு மாரியம்மனைக் குறித்த பாடல். viii. 463/1908/III.

Q25 : 417

**நிரதிசயானந்தா**

442. i. அம்பிகை துதி; ii. எம். வி. எம். அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1910; iv. செ. மூ. ப. 8; v. 14×11 செ.மீ.; vi......; vii. ஜகதாம்பிகையின் துதியாக உள்ளது. சாங்கு சித்த சிவலிங்க நாயனாரவர்களின் பதினொன்றாவது குருபூஜா காலத்தில் இச்சிறு நூல் விநியோகம் செய்யப்பட்டது. viii. 47/1910/III.

Q25 : 417

**பள்ளி கொண்டான் பிள்ளை, கோ.**

i. திருநீர்மலை அணி மாமலர் மங்கைத் தாயார் மாலை (தொ. எ. 1537 பார்க்க); ii. முத்துக்கிருஷ்ண நாயுடு, திருவல்லிக்கேணி; செங்கல்வராய நாயகர் ஆர்டனேஜ் அச்சுக்கூடம், சென்னை; iii. 1908; iv. செ. மூ. எ. 103; vii. திருநீர்மலையில் கோயில் கொண்டருளும் அணிமா மலர் மங்கைத் தாயார் துதியாக வுள்ளது. கட்டளைக் கலித்துறைச் செய்யுளில் அமைந்தது. இதற்கு உரை எழுதியவர் பங்காளம் சுப்பு பிள்ளை என்பவராவர். viii. 442/1908/IV.

Q25 : 417

**மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திரிசிரபுரம்.**

443. i. திருவானைக்கா அகிலாண்ட நாயகி மாலை; ii. பி. ஆர். கிருஷ்ணமாசாரியார்; வெட்னஸ்டே ரிவியூ பிரஸ், திருச்சினாப் பள்ளி; iii. 1909; iv. செ. மூ. எ. 1+100; v. 16×11 செ. மீ.; vi........; vii. திருவானைக்காக் கோவிலில் எழுந்தருளும் அகிலாண்ட நாயகியம்மையின் துதியாக உள்ளது. அழகிய சொல்லும் விழுமிய பொருளும் சிறந்த கற்பனையலங் காரங்களும் அமைந்த கவிதைத் தொகுதி. viii. 32/1909/III.

Q25 : 417

**முத்துக்குமாரசாமிப் பிள்ளை, கொ. பி.**

i. காந்திமதியம்பிகை இன்னிசைப்பாமாலை (தொ. எ. 1600 பார்க்க); ii. ஆரியப் பிரகாஷினி அச்சியந்திரசாலை, திருநெல்வேலி; iii. 1901; iv. செ.மூ.எ. 1+30; vii. காந்திமதி யம்மையின் புகழ் கூறித்துதிக்கும் முப்பது பாடல்களையுடைய சிறு பிரபந்தம். viii. 106/1901/III.

Q25 : 417

i. லட்சுமியஷ்டோத்தர சதநாமாவளி (தொ. எ. 563 பார்க்க) ; ii. அரங்கசாமி முதலியார் ; மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1899 ; iv. செ.மூ.எ. 108 ; vii. இலக்குமியை அருச்சிப்பதற்குரிய நூற்றெட்டு நாமங்கள் தரப் பட்டுள்ளன. பல எட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்றது. viii. 289/1901/IV.

**Q25 : 417**

**லாடமுத்து உடையார், இடையூர்.**

i. இடையூர் மீனாட்சியம்மன் பேரில் ஜீவரத்ன விருத்தம் (தொ. எ. 474 பார்க்க) ; ii. அழகாபுரம் கம்மவார் சித்திரகவி சுப்பய்ய நாயுடு ; ஷண்முக சுந்தர விலாச யந்திரசாலை, சிதம்பரம் ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 11 ; vii. மீனாட்சியம்மையைக் குறித்த பதிகப்பாமாலை. viii. 88/1907/II.

**Q25 : 417**

**ஸ்ரீநிவாஸ சர்மா, மு. ரா.**

i. அபயாம்பிகை மாலை (தொ. எ. 1614 பார்க்க); ii. நூறுல் இஸ்லாம் அச்சுக்கூடம், திருநெல்வேலி ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 1+30 ; vii. மாயூரத்தே கோயில் கொண்டருளும் அபயாம்பிகையைக் குறித்த தோத்திரம் ; கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் 30 கொண்டது இம்மாலை. viii. 63/1908/I.

**Q25 : 417**

**ஸ்ரீநிவாஸ ஐயர், எல்., நாகப்பட்டினம்.**

444. i. தேவி வெண்பா மாலை (காஞ்சி காமாக்ஷி நவராத்திரி மாலை); ii. நீலலோசனி பிராஞ்சு அச்சுக்கூடம், திருவாரூர் ; iii 1909 ; iv. செ.மூ.ப. 12 ; v. 15×11 செ.மீ. ; vi......... ; vii. கலைமகள், அலைமகள், மலைமகள் மூவருடைய சிறப்பினையும் வெண்பாவினால் தருவது. மூவரைப் பற்றியும் மும் மூன்று வெண்பாவாக முறையே மாறி மாறி முப்பது பாடல் கொண்டது. இதனோடு ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி நவரத்ன மாலையும் உள்ளது. viii. 156/1909/IV.

**Q25 : 417**

## 294-551—சைவ சமயம்–துதி நூல்கள்

**அருணகிரிநாதர்**

i. நால்வர் பதிக மகிமை (தொ.எ. 1322 பார்க்க); ii. கணேச அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ. எ. 6+1; vii. நால்வர் திருப்பதிகங்களினால் நிகழ்ந்த தெய்விக அற்புதங்களை எடுத்துரைப்பது. viii. 37/1903/III.

**Q23 : 417**

**இராமசாமி செட்டியார், திருஎவ்வுளூர்.**

445. i. காளத்திநாதர் சந்திரகலா மாலை [ஞானப் பூங்கோதையம்மை ஏகாதசி மாலை] ; ii. எம். வேலாயுதாசாரி ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 1+16 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. திருக்காளத்திநாதரின் சிறப்புக்கள் கூறித் துதிப்பது. சந்திரன் கலை பதினாறு ஆதல் போலப் பதினாறு செய்யுட்கள் கொண்ட இப்பிரபந்தம் சந்திர கலாமாலை என்னும் பெயர் பெற்றுள்ளது. viii. 283/1905/III.

Q23 : 417

i. ஞானப் பூங்கோதையம்மை ஏகாதச மாலை (தொ. எ. 445 பார்க்க) ; ii. எம். வேலாயுதசாமி ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.உ.எ. 1+11+1 ; vii. திருக்காளத்தியில் கோயில் கொண்டருளும் ஞானப் பூஙகோதையைப் பற்றிய பதினொரு பாடல்கள் கொண்ட துதி மாலை. இவை வெவ்வேறு சந்தங்கள் கொண்டவை. viii. 283/1905/III.

Q23 : 417

**இராமலிங்க சுவாமிகள்**

i. காட்சிப் பெருமிதம் (தொ.எ. 1219 பார்க்க) ; ii. கலியாண சுந்தர முதலியார், பூவை ; கிளாஸ்டன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 10 ; vii. திருவலிதாயப் பெருமானின் சிறப்புக்களைப் புகழ்ந்து பேசுவது. viii. 537/1910/III.

Q23 : 417

**இராமலிங்க சுவாமிகள், வடலூர்.**

446. i. திருவருட்பா இங்கிதமாலை—மூலமும் உரையும் ; ii. குப்பு சாமி முதலியார், குளத்தூர் ; கலாரத்நாகர யந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.உ.எ. 165 ; v. 22×14 செ.மீ. ; vi. ........ ; vii. இந்நூற்கு உரை வகுத்த க. வ. திருவேங்கட நாயுடு ஸ்ரீ சிவஞான பாலைய தேசிகராதீனத்துச் சிதம்பரம் ஈசானிய மடம் ஸ்ரீமத் இராமலிங்கசுவாமிகளிடம் தாம் கேட்டபோது குறித்த குறிப்புக்களைக் கொண்டு இந்த உரை வகுத்துள்ளார். இந்நூலின் குறிப்புப் பொருள் அமைந்த சொற் செறிவுகளை நன்கு விளக்கி உரைப்பது இவ்வுரை. viii. 34/1905/I.

Q23 : 417

**இராமலிங்கம் பிள்ளை, கிராம முனிசீப்.**

i. அடியார் துதி (தொ.எ. 669 பார்க்க); ii. சண்முக சுந்தர விலாச அச்சியந்திரசாலை; iii. 1901; iv. செ.மூ.எ. 10; vii. திருநந்தி தேவர் சமயாசாரியார் நால்வர், சண்டேசுர நாயனார், மெய்கண்ட தேவ சுவாமிகள், அருணந்தி சிவாசாரியர், மறை ஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதிசிவாசாரியர், ஆகியோரைப் பற்றிய துதிகள் உள்ளன. viii. 148/1901/III.

Q23 : 417

**ஐயம் பிள்ளை, இ. வி.**

447. i. சிவபாத தோத்திர பூஷணம்; ii. ஸ்ரீ மட்டுவார் குழலாம் பாள் அச்சுயந்திரசாலை, சென்னை; iii. 1901; iv. செ.மூ.எ. 295+3; v. 13×11 செ.மீ.; vi ......; vii. திருச்செந் தூர், திருப்பரங்குன்றம், கழுகுமலை, முதலிய 32 தலங்களில் உறையும் இறைவரைக் குறித்த தோத்திரங்கள் உள்ளன. viii. 250/1901/IV.

Q23 : 417

**ஐயாசாமிப் பிள்ளை, தாதாபுரம்.**

448. i. திமிரி சோமநாதேஸ்வரர் தோத்திரப்பா; ii. விக்டோரியா அச்சியந்திரசாலை, வேலூர்; iii. 1910; iv. செ.மூ.எ. 17+10 +12+12+12+11+13+1 =88; v. 21×14 செ.மீ.; vi. 0-4-0; vii. சோமநாதேஸ்வரர் தோத்திரப்பா, சுந்தர வல்லியம்மை பதிகம், விநாயகர் பதிகம், சுப்பிரமணியர் பதிகம், அகத்திய முனிவர் ஆசிரிய விருத்தம், சண்டேசர்பதிகம், திருஞான சம்பந்தர் முதலிய சமயாசாரியர் தோத்திரங்கள் முதலியன இத்திரட்டில் அமைந்துள்ளன. viii. 476/1910/II.

Q23 : 417

**கங்காதர முதலியார், பா.**

i. அர்த்த நாரீசரம்பிகை துதி (தொ.எ. 494 பார்க்க); ii. கட்டளை வரதராஜப் பிள்ளை, மைசூர்; மதராஸ் ரிப்பன் அச்சுக் கூடம், சென்னை; iii. 1900; iv. செ.மூ.எ. 1+10; vii. திருச்செங்குன்றூரில் எழுந்தருளியுள்ள அர்த்தநாரீசர் மேலும் அம்பிகை மேலும் பாடப் பெற்றப் பதிகப்பாமாலை; இது வெண்பாவால் ஆகியது. viii. 177/1901/IV.

Q23 : 417

**கதிரைவேற்பிள்ளை, நா.**

449. i. சைவபூஷண சந்திரிகை; ii. வெ. நா. ஜூபிலி பிரஸ், சென்னை; iii. 1900; iv. உ.ப. 67; v. 18×13 செ.மீ.; vi........; vii. சைவபூஷணமாகிய விபூதி, ருத்திராக்கம் முதலியன பற்றிய விளக்கங்களும் அவற்றை அணியும் முறை, தியானங்கள் முதலியன பற்றியும் கூறுவது. viii. 145/1901/III.

Q23 : 417

**கந்தசாமித் தம்பிரான்**

450. i. துதி மஞ்சரி ; ii. ப. திரு. சொக்கலிங்கம்பிள்ளை ; ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சுயந்திரசாலை, மதுரை ; iii. 1910 ; iv. செ மூ.எ. 40 ; v. 14×11 செ.மீ. ; vi. ........ ; viii. 604/1910/IV.

**Q23 : 417**

**கனக சபாபதி பிள்ளை**

i. நவக்கிரக மாலை (தொ.எ. 1553 பார்க்க) ; ii. வாணி நிகேதனி அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 1+9+1 ; vii. நவக்கிரகங்களைக் குறித்துப் புகழ்ந்து, அவற்றிற்குப் 'போற்றி போற்றி' என்று பாடல் தோறும் போற்றி உரைக்கின்றது. viii. 498/1910/I.

**Q23 : 417**

**கிருஷ்ணய்யர், பேரூர்.**

451. i. சங்கராச்சாரிய சுவாமிகள் பேரில் தோத்திரத்திரட்டு ; ii. வெங்கிட்ட ரமணய்யர், கோயமுத்தூர் ; கிருஷ்ண விலாச அச்சி யந்திரசாலை, கோயம்புத்தூர் ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 6 ; v. 21×14 செ.மீ: ; vi ...... ; vii. சிருங்கேரி நரசிம்ம பாரதி சுவாமிகள் காலடியில் ஆதி சங்கராச்சாரியரின் ஆலய நிர்மாணம் செய்து கும்பாபிஷேகம் செய்த நிகழ்ச்சி பற்றிக் கூறுகிறது. சங்கரர் துதியான இசை விருத்தங்கள், கீர்த்தனங் கள், கப்பல், ஓடமெட்டுப் பாட்டு ஆகியவையும் அமைந்துள்ளன. viii. 41/1910/III.

**Q23 : 417**

**குமர குருபர ஐயர், சிதம்பரம்.**

452. i. புள்ளிருக்கு வேளூர் வைத்திய நாதர் மாலை [புள்ளிருக்கு வேளூர் தோத்திரப்பா, தையலுயகிமாலை]; ii. நா. இ. குமாரசுவாமி ஐயர் ; அலெக்ஸாண்டரா அச்சியந்திரசாலை, கும்ப கோணம் ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 1+10 ; v. 19×13 செ.மீ.; vi. 0-1-0 ; vii. வைத்தீசுரன் கோவில் என வழங் கும் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானுராகிய வைத்திய நாதர் மேல் பாடப்பெற்ற துதிமாலை. முதலில் விநாயகர் வணக்கம் உளது. இப்பதிகப்பாமாலை எழு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தத்தால் ஆகியது. viii. 773/1909/IV.

**Q23 : 417**

**குமாரதாஸன், இ. திருக்கோஷ்டியூர்.**

453. சகடபுர சரித்திரம் ; ii. சகடபுர ஸ்வாமிகள் ; கலாதர அச்சி யந்திரசாலை, தேவகோட்டை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 12 ; v. 16×11 செ.மீ.; vi...... ; vii. சகடபுரம் மடாலய சரிதம் பற்றிய செய்யுள் நூல். இம்மடம் தோடகாசாரியர் பரம்பரையைச் சார்ந்தது. இந்த மடாலய அதிபதி ஸ்ரீ கிருஷ்ணானந்த தீர்த்தஸ்வாமிகள் பேரிலும் ராஜராஜேஸ்வரி அம்மாள் பேரிலும் கலாதரேசுவரர் பேரிலும் கீர்த்தனங்களும் உள. மேற்குறித்த சுவாமிகள் கொடுத்த அநுக்கிரகப் பத்திரிகையும் முகப்பில் தரப் பெற்றிருக்கிறது. viii. 132/1909/IV.

Q23 : 417

**குருநமசிவாய தேவர்**

i. நமச்சிவாய மாலை (தொ. எ. 1671 பார்க்க) ; ii. க. வ. திருவேங்கட நாயுடு ; சபாலி பிரஸ், சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 1+100 ; vii. 'நமச்சிவாய' எனப் பாடல் தோறும் இறைவனை விளித்து அவனுடைய பல் புகழினையும் எடுத்தோதுவது. viii. 201/1907/I.

Q23 : 417

**கோவிந்தசு செட்டியார், மு.**

i. சோமசுந்தரர் போற்றி மாலை (தொ. எ. 1052 பார்க்க) ; ii. பூ. ஆறுமுகம் பிள்ளை ; மதுரைத் தமிழ்ச் சங்கம் பவர் பிரஸ் ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 1+30 ; vii. விருத்தப்பா 30 கொண்ட துதிமாலை. 'சொக்கே போற்றி' 'சொக்கையா போற்றி' எனப் பாடல் தோறும் போற்றிசைப்பது. இதன் இறுதியில் பிட்டுயாக் மண்டபக் கீர்த்தனை பற்றிய வண்ணச்சந்த விருத்தமும் அகவலும் உள்ளன. viii. 273/1906/II.

Q23 : 417

**சண்முகதாச பிள்ளை, ச., கோபாலசமுத்திரம்.**

. சட்சமயத் தோத்திரப் பாமாலை (தொ. எ. 1454 பார்க்க) ; ii. நூருல் இஸ்லாம் அச்சியந்திரசாலை, திருநெல்வேலி ; iii. 1909 ; iv செ.மூ.எ. 9 ; vii. சூரியபகவான், சிவபெருமான் பார்ப்பதி, மகாவிட்டுணு, விநாயகக் கடவுள், முருகக் கடவுள், ஆகியோரைக் குறித்தும் சட்சமயாதீதம், இயமன் பற்றியும் துதிகவிகள் உள்ளன. viii. 325/1909/IV.

Q23 : 417

**சபாபதி முதலியார், மதுரை.**

454. i. மதுரைமாலை ; ii. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ; பண்டிதமித்திர யந்திரசாலை, சென்னை ; iii. 1901 ; vi. செ.மூ.எ. 2+100 ; v. 19×13 செ.மீ.; vi. 0–1–6 ; vii.

இந்நூலாசிரியர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் தமிழ் போதகர். முதலியார் திருக்குளந்தை நகரை விட்டு மதுரை போந்தவுடன் 1867-ஆம் ஆண்டு பாடியது. மதுரைச் சொக்க லிங்கப் பெருமானின் புகழினைப் பேசுவது. viii. 104/1901/IV.

Q23:417

**சாம்பசிவ சாஸ்திரி, ப., கருந்தட்டாங்குடி.**

455. i. அக்ஷரமாலிகை : இரண்டாம் பதிப்பு ; ii. ரெ. சி. விஸ்வ ஞுத சாஸ்திரி ; விநாயக சுந்தர விலாச அச்சுக்கூடம், சிதம் பரம் ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 52 ; v. 13×11 செ.மீ.; vi....... ; vii. 'அக்ஷர மாலிகா தோத்திரம்' என்றும் இதற் குப் பெயர் உண்டு. இது சமஸ்கிருத மொழியிலிருந்து மொழி பெயர்த்து வெளியிடப்பெற்றது. அ, ஆ, முதலிய எழுத்து வருக்கங்களில் நாமாவளி முறையில் இது அமைந்துள்ளது. viii. 672/1910/IV.

Q23 : 417

**சாமிநாத தேசிகர்**

456. i. சிவபுண்ணிய வணிக தீபிகை ; ii. பி. சு. சி. சின்னக் கருப் பஞ் செட்டியார், புதுவயல் ; மீனலோசனி அச்சியந்திரசாலை, தேவகோட்டை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 1+1+8 ; v. 20×14 செ.மீ.; vi......; vii...... ; viii. 57/1908/IV.

Q23 : 417

**சிவப்பிரகாச சுவாமிகள்**

i. சோண சைலமாலை (தொ. எ. 358 பார்க்க) ; ii. கொ. லோக நாத முதலியார்; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902 ; iv. செ.மூ.எ. 1+100+1 ; vii. சுவாமிகள் திரு வண்ணாமலையை வலமாக வந்தபோது பாடியது இப்பிரபந்தம் என்பர். viii. 131/1903/I.

Q23 : 417

**சிவாநந்தன்**

457. i. ஜகத்குரு ஸ்துதி ; ii. ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திரா சாலை, தஞ்சை ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 100 ; v. 16×12 செ.மீ.; vi. ...... ; vii. சிருங்கேரி மடத்தே எழுந்தருளி யுள்ள சங்கராசாரியாரிடத்தில் பக்தி கொண்டு, அவர் தம் புகழைப் பலவகையாலும் பாடித் துதிப்பது. ஆசிரியர் தம்மை 'ஸ்ரீ சங்கர, சிங்கர சரண சேமன்' என்று கூறிக்கொள்கின்றார். viii. 534/1909/II.

Q23 : 417

**சுந்தராசாரியர்**

458. i. இராஜ ரத்தின சுவாமிகள் ஸ்துதி மாலிகா ; ii. கொ. கன்னியப்பாசாரியர் ; விஸ்வகுலோத்தாரண அச்சியந்திர சாலை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 7 ; v. 15×11 செ.மீ.; vi...... ; vii. சுவாமிகள் நெல்லைப்பதிக்கு எழுந்தருளிய போது பாடப்பெற்றது இத் துதிமாலை. திருநெல்வேலி சபலிவாட புராதீன பரமஹம்ச பரசமய கோளரிநாத இராஜரெத்தினசுவாமிகள் ஸ்துதி மாலிகா என்பது இந்நூலின் முழுப்பெயர். viii. 379/1910/III.

Q23 : 417

**சுப்பிரமணிய பாரதி, மழவாபுரி.**

i. ஸ்தோத்ரச் சுந்தரமாலை : மூன்றும் பதிப்பு (தொ.எ. 1067 பார்க்க) ; ii. சுபபராமய்யர், ராமஸ்வாமியயர் & சுந்தரமய்யர் ; பிரம்மானந்த அச்சுக்கூடம், திருவாதி ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 70 ; vii. சொக்கேசப் பெருமானைக் குறித்த தோத்திரப் பாமாலை. viii. 297/1906/I.

Q23 : 417

**சொக்கலிங்கச் செட்டியார்**

459. i. திருக்கழுக்குன்றம் மகிமா சங்கிரகஸ்தவம் ; ii. நாராயணச் செட்டியார் ; பிரஸிடென்ஸி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905; iv. செ.மூ.எ. 1+20 ; v. 16×12 செ.மீ.; vi.. .. ; vii. திருக்கழுக்குன்றப் பெருமானின் தோத்திரமாக உள்ளது. பெருமானின் மகிமைகளை எடுத்துரைப்பது. viii. 55/1905/IV.

Q23 : 417

**சோமசுந்தர நாயகர்**

460. i. சிவ நாமாவளி ; ii. மினர்வா அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 15 ; v. 14×10 செ.மீ.; vi. ....; vii. ஸ்ரீ கணேசர், முருகர், சிவபெருமான், உமாதேவியார், ஞான சம்பந்தர் , வாகீச மூர்த்திகள், சுந்தர மூர்த்திகள், வாதபுரீசர், நால்வர், அறுபத்து மூவர் ஆகியோரைப்பற்றிய நாமாவளிகள் இதில் உள்ளன. viii. 814/1910/IV.

Q23 : 417

**தங்கவேலு பிள்ளை, கோ. ப.**

461. i. அருணஜலேஸ்வரர் துதி [சரஸ்வதியம்மை துதி] ; ii. விஸ்வ குலோத்தாரண அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+10 ; v. 14×11 செ.மீ. ; vi. ........ ; vii. திருவண்ணமலைப் பெருமானைத் துதிக்கும் வெண்பாவினாலாகிய துதிமாலை. viii. 565/1910/IV.

Q23 : 417

462. i. தக்ஷிணாமூர்த்தி பாடல். [அத்வைதக் கப்பல் முதலிய சிறு நூல்கள்] ; ii. மதராஸ் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1900; iv. செ.மூ.எ. 1 ; v. 14×11 செ.மீ.; vi. 0–0–6 ; vii. தக்ஷிணா மூர்த்தி துதியாக உள்ளது. viii. 290/1901/IV.

Q23 : 417

i. திருவாலவாயுடையார் திருவிளையாடற் பயகரமாலை (தொ.எ. 1303 பார்க்க) ; ii. வே. சாமிநாதையர், உத்தமதானபுரம்; பிரஸிடென்ஸி அச்சுக்கூடம் ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 2+64 ; v........ ; vi........ ; vii மதுரைச் சொக்கேசப் பெருமான் நிகழ்த்திய அறுபத்துநான்கு திருவிளையாடல்களையும் திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் கூறியுள்ளபடியே உரைத்துப் பெருமானைத் துதிப்பது. ஒவ்வொரு திருவிளையாட லுக்கும் ஒரு பாடலாக 64 பாடல்கள் இதில் உள்ளன. ஒவ்வொரு பாட்டும் ‘சொக்கே பரதேசி பயகரனே’ என்றும் ‘சொக்கனே பரதேசி பயகரனே’ என்றும் இறைவனை விளிக்கும் தொடருடன் முடிவுறுகின்றது. viii. 331/1906/III.

Q23 : 417

**துரைசாமி ஆசாரி, வி., அழகூர்.**

463. i. பேடலேரியென்று வழங்கும் மேற்றடம் பதித் தோத்திரப்பா; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.ப. 2+24 ; v. 21×13 செ.மீ. ; vi. 0–2–6 ; vii. மேற்றடம் பதியில் கோயில் கொண்டருளும் ஏகாம்பரநாதர், காமாக்ஷியம்மன், சுப்பிரமணியர், தெய்வயானை அம்மை, வள்ளியம்மை, காசி விசுவநாதர், விசாலாக்ஷியம்மன் ஆகியோ ரைக் குறித்துத் தனித்தனிப் பதிகங்கள் உள. காசிவிசுவ நாதர் கீர்த்தனைகளும் ஈற்றில் உள்ளன. viii. 292/1904/II.

Q23 : 417

**துரைசாமிப் பிள்ளை, எம்.எஸ்., சென்னை.**

464. i. திருத்தலையாலங்காடு ஸ்ரீபாலாம்பிகை பாகராகிய ஸ்ரீ கூட வல்லவர் பிரார்த்தனை மாலையும் தேவாரச் சந்தமும் ; ii. அலெக்ஸாண்டரா அச்சியந்திரசாலை, கும்பகோணம் ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 7+52+20+79; v. 19×12 செ.மீ. ; vi. ........ ; vii. விநாயகர் முதலியோரைக் குறித்த துதி கவிகள் 7 முதற்கண் உள. பிரார்த்தனை மாலையின் பின், திருத்தாண்டகச் சந்தம், பண்சந்தம், நாலடி மேல் வைப்பு, செவ்வழி, திருக்குறுந்தொகைச் சந்தம், திருநேரிசைச் சந்தம் அமைந்த பாடல்கள் இடம் பெற்றுள்ளன. viii. 456/1909/ III.

Q23: 17

**நமசிவாய சுவாமிகள்**

i. சாரப் பிரபந்தம் (தொ.எ. 358 பார்க்க) ; ii. கோ. லோகநாத முதலியார் ; மநோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1902 ; iv. செ.மூ.எ. 1+15 ; vii. ...... ; viii. 131/1903/I.

Q23 : 417

**நிரதிசயானந்தா**

465. i. குருபாதஸ்துதி மாலை [சற்சங்கபோதினி] ; ii. எம்.வி. எம் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 168+ செ.மூ.ப. 4+5+1 ; v. 22×14 செ.மீ. ; vi. .... ..; vii. மஹான் சாங்குசித்த சிவலிங்க நாயனுரைக் குறித்த தோத்திரம் முதலில் உள்ளது. இத தோத்திரத்தைக் 'குருபாத ஸ்துதி மாலா பதிக பஞ்சகம' என்று குறித்துள்ளார். 'பஞ்சகம்' என்னும் பெயரிற்கேற்ப துதிகவிகள் இதில் உள்ளன. இவை 'சிவலிங்க தேவ தேவே' என்னும் முடிவினைப் பெற்றுள்ளன. viii. 560/1910/III.

Q23 : 417

**பரமேசுவரய்யர், எஸ். காரப்பட்டு.**

466. i. பஜனை பத்ததி ; ii. மானசோல்லாசினி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1905 ; iv. செ.மூ.ப. 31 ; v. 14×11 செ.மீ.; vi. ........ ; vii. தியான சுலோகங்கள், தோடயம், எச்சரிக்கை, பிரதம மங்களம் முதலான வரிசைக் கிரமத்தில் பாடவேண்டிய பஜனைப பாடல்களைப்பற்றி உரைப்பது. பஜனையில் பாடவேண்டிய பதததி குறித்து ஆசிரியர் தமது முகவுரையில் விளக்கியுள்ளார். இதிலுள்ள பாடல்கள் எல்லாம் பிற மொழிப் பாடல்களே ; தமிழ் லிபியில் தரப்பட்டுள்ளன. மனோல்லாசனி வரிசையில் வெளிவருவது இந்நூல். viii. 178/1907/II.

Q23 : 417

**பழநியப்பய்யா, சேஷ. பழ.**

467. i. குருஸ்தோத்திரப்பாமாலை ; ii. தொண்டர் சீர் பரவுவார் தம்பிரான் சுவாமிகள் ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1902 ; iv. செ.மூ.ப. 208 ; v. 17×13 செ.மீ. ; vi. ........ ; vii. சிதம்பர ஞான தேசிகர் என்னும் குருவை ஆசிரியர் துதிக்கும் பாடல்களைக் கொண்டது. அகவல், சங்க கீர்த்தனம், பொருள், வணக்கம், கிளிப்பயிற்றி, திருப்பல்லாண்டு முதலிய பல தலைப்புக்களில் பாடல்கள் உள. தத்துவ ராயர் பாடுதுறையிற் போல பல சிறு பிரபந்தங்கள் உள. viii. 51/1902/III.

Q23 : 417

**பாலகிருஷ்ண முதலியார், வே.**

468. i. தோப்பா சுவாமிகள் பாமாலை ; ii. வாணி நிகேதன அச்சியந்திரசாலை, வேலூர் ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 57+1 ; vi. 0–0–6 ; vii. இராயவேலூர் சைதாப்பேட்டையில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் தோப்பா சுவாமிகளின் மேல் துதியாகப் பாடப்பெற்ற பாடல்கள் அடங்கிய சிறு நூல். viii. 2/1910/II.

Q23 : 417

**பாலதேசிக நாயனர்**

469. i. குருஸ்தோத்திர கதம்பம் [சிஷ்ட தேசிகத்துவய பத்ததி] ; ii. பாஸ்டர் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ.ப. 11+15 ; v. 16×13 செ.மீ. ; vi. ........ ; vii. தமது ஆசிரியராகிய மாரிமுத்துப் பிரம்மத்தின் கீர்த்தியினை உரைப்பது. குருஸ்தோத்திரப் பஞ்சகம், விண்ணப்ப சதுஷ்டயம், பிரிவாற்றுப் பத்து முதலிய பல பகுதிகளாக அமைந்துள்ளது இத்தோத்திரக் கதம்பம். viii. 4/1903/IV.

Q23 : 417

**பெருமாளய்யங்கார்**

i. நவக்கிரகமாலை (தொ.எ. 1698 பார்க்க) ; ii. ஸ்ரீ ருக்மணி விலாசம் பிரஸ், மதுரை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 24 ; vii. சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், வியாழன், சுக்கிரன், ராகு, கேது, சனி என்னும் ஒன்பது கிரகங்களைப் பற்றிய துதிமாலை. viii. 540/1910/IV.

Q23 : 417

**மஹேஸகுமார ஸர்மா**

470. i. அஷ்டோத்தர ஸதநாமாவளி ; ii. மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1906 ; iv. செ.மூ.ப. 75 ; v. 13×9 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. இதில் விநாயகர், சூரியன், சந்திரன், சிவன், சிவகாமி சுந்தரி, சுப்பிரமணியர், கிருஷ்ணன், இராமர், லக்ஷ்மி, ஆஞ்சநேயர், சரசுவதி இத்தேவதைகளின் அர்ச்சனைக்குரிய நாமங்கள் தமிழ் லிபியில் அடங்கியுள்ளன. இவை மஹேஸகுமார சர்மாவால் ஸம்ஸ்கிருத உச்சரிப்புக்கு இணங்கத் திருத்தப்பெற்றன. viii. 239/1906/I.

Q23 : 417

**முத்துக்காமாக்ஷி பிள்ளை, திருப்பராய்த்துறை—தொ-து.**

**471.** i. திருப்பாண்டிக்கொடுமுடி தேவாரப்பதிகங்கள் புராண சாரம் தோத்திரங்கள் ; ii. ஸ்ரீ வாணி விலாஸ, ஸ்ரீரங்கம் ; iii. 1906 ; iv. உ.ப.+செ.மூ.ப. 16 ; v. 22×14 செ.மீ. ; vi... ...... ; vii. திருப்பாண்டிக்கொடுமுடித்தலம் பற்றிய தேவாரப் பதிகங்களும் திருப்பாண்டிக்கொடுமுடிப் புராண சாரமும் அருணகிரிநாதரின் திருப்புகழ்த் தோத்திரமும் இதில் உள்ளன. viii. 109/1906/II.

**Q23 : 417**

**முத்துச்சாமி முதலியார், சோமநகர்.**

**472.** i. சோம நாதீசரற்புத மாலை ; ii. அங்கமுத்து முதலியார் ; ஸ்ரீகுஞ்சித சரண அச்சுக்கூடம் ; iii. 1906 ; iv. செ.மூ ப. 29 ; v. 20×13 செ.மீ. ; vi.....; vii. சோமநகர் என்னும் பதியில் கோயில் கொண்ட சோம நாதீசரைப் பற்றிய தோத்திரங்கள். இதனுள் கும்மி, பதிகம், கீர்த்தனை ஆகியவை அடங்கியுள்ளன. viii. 37/1907/I.

Q23 : 417

**முனிவாலானந்த சுவாமி, சி.**

**473.** i. சோளீஸ்வரர்—ஆனந்தவல்லி பேரில் ஆசிரிய விருத்தம் முதலியன ; ii. அறிவானந்தசுவாமி; விவேகபாநு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 12; v. 23×14 செ.மீ.; vi. 0-0-6 ; vii. புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச் சார்ந்த சத்திய மங்கலத்தே கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சோளீஸ்வரர், ஆனந்தவல்லி துதியாக உள்ள பாமாலை. ஆசிரிய விருத்தம், வெண்பா, பதினறடி ஆசிரிய விருத்தம், கீர்த்தனை ஆகியவை இடம் பெற்றுள்ளன. viii. 66/1909/IV.

Q23 : 417

**லாடமுத்து உடையார், இடையூர்.**

**474.** i. இடையூர் சொக்கநாதர் பேரில் அமிருதப் பிரவாகம் [இடையூர் மீனாட்சியம்மன் பேரில் ஜீவரத்தின விருத்தம்] ; ii. அழகாபுரம் கம்மவார் சித்திரகவி சுப்பய்ய நாயுடு ; ஷண்முகசுந்தர விலாசயந்திரசாலை, சிதம்பரம் ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 16 ; v. 13×10 செ.மீ.; vi.....; vii. சொக்கநாதர் பேரில் பதிகம் உள்ளது ; இதற்கு விநாயகர், சுப்பிரமணியர், மகாவிஷ்ணு, சரஸ்வதி என்னும் நால்வரையும் குறித்த காப்புச் செய்யுட்களும் உள்ளன. சித்திரக்கவி சுப்பையா நாயுடு இதற்குச் சாற்றுக் கவி பாடியுள்ளார். viii. 88/1907/II.

**Q23 : 417**

**விசுவலிங்க நாயஞர்**

475. i. புகழ் பாடல்கள் ; ii. விநாயக சுந்தர விலாசம் பிரஸ், சிதம்பரம்; iii. 1908; iv. செ.மூ.எ. 16 ; v. 17×12 செ.மீ. ; vi. ....; vii. பித்தர்புரம் அரண்மனையில் வாழும் சாமிதுரை சூரப்ப சோழகஞர் புகழினைப் பற்றியது. viii. 389/1908/III.

Q23 : 417

## 294·551—முருகன் தோத்திரம்

**அப்பாசாமியுடையார், சென்னை.**

i. புதுவை முத்துக்குமார சுவாமி தோத்திரம் (தொ. எ. 1528 பார்க்க); ii. மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 1+12+2 ; vii. முருகப் பெருமான் துதிகள் அமைந்துள்ளன. இவை ஆசிரியவிருத்தங்களாலானவை. viii. 176/1901/IV.

Q26 : 417

**ஆழ்வாரப்ப பிள்ளை, மூ.**

i. திருச்செந்தூர் வாகனக் கவிதை (தொ. எ. 1329 பார்க்க) ; ii. சண்முக கவி நாயகம் பிள்ளை & சிதம்பரநாதன் கவிராயர், கல்லிடை நகர் ; மினர்வா அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1906; iv. செ.மூ.எ. 12 ; vii. திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி மகோற்சவத்தில ஒவ்வொரு நாளும் முருகப்பெருமான் காட்சி தரும் வாகனம் முதலியவற்றின் அழகில் ஈடுபட்டுப் பாடிய பாடல்களைக்கொண்டது. viii. 312/1906/IV.

Q26 : 417

**ஆறுமுக நாயகர், கொ. வி.**

476. i. சென்னைக் கந்தர் தோத்திர மஞ்சரி ; ii. ஸ்ரீ நடராஜ பக்த ஜன சபையார் ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1901; iv. செ.மூ.ப. 16; v. 14×11 செ.மீ.; vi . . .; vii. சென்னைக் கந்தரைக் குறித்த அகவலும், சென்னைக் கந்தசாமியின் பேரில் பஞ்சரத்தினமும், இசைக் கீர்த்தனை ஒன்றும், ஸ்ரீ கந்தர் வெண்பாப் பதிகமும், திருக்காளக் கண்ணிகளும் உள்ளன. இவை யாவும் சென்னைக் கந்தரைக் குறித்த தோத்திரப் பாமாலைகளாகும். சிற்சில புலவர்களின் சாத்துக்கவிகளும் முதற்கண் உள்ளன. viii. 175/1901/IV.

Q26 : 417

**இராமசாமி செட்டியார், திருஎவ்வுளூர்.**

477. முருகக் கடவுள் துதி மஞ்சரி ; ii. எம். வேலாயுதாசாரி ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ.ப. 60 ; v. 18×13 செ.மீ. ; vi. 0-3-0 ; vii. திருப்பரங்கிரிக் குமரவேள் தாலாட்டு, திருப்பரங்கிரிக் குமரவேள் ஊசல்,

பழனியாண்டவர் பதிகம் முதலிய 17 தோத்திரப் பகுதிகள் உள. இவை பழனி, சாமி மலை, புள்ளிருக்கு வேளூர், திருத்தணிகை, திருப்போரூர், குன்றக்குடி, விராலிமலை, சென்னை என்னும் தலங்களில் எழுந்தருளிய முருகப்பிரான்மீது தோத்திரமாக அமைந்தவை. தாலாட்டு, ஊசல், பதிகம், பஞ்சரத்தினம், நாமாவளி தோத்திரம், மாலை என்னும் பிரபந்தங்களாகவுள்ளன. viii. 127/1903/III.

Q26 : 417

**இராமசாமி பிள்ளை, சி.**

478. i. எட்டுகுடி வேலவர் மாலை ; ii. நா. வெ. வெங்கடாசலம் பிள்ளை & கே. எஸ். சாமிநாத உடையார் ; எட்வர்டு அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+32=33 ; v. 13×11 செ.மீ. ; vi. . . . .; vii. "வரவேணும் எட்டுக்குடி வாழும் வேலே" என எட்டுக்குடி முருகப் பெருமானைத் துதித்து வரம் வேண்டும் பாமாலை. viii. 504/1910/II.

Q26 : 417

**இராமானந்த சுவாமிகள்**

479. i. சண்முக மாலை [சித்தி மகோர்க்கட விநாயகமூர்த்தி தோத்திரப் பதிகம்] ; ii. கலாரத் நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1909; iv. செ.மூ.எ. 100+3 ; v. 17×12 செ.மீ. ; vi. . . . ; vii. கோயமுத்தூருக்கு வடதிசையில ஐந்து மைலில் உள்ள சிரவணபுரம் என்னும் சிரம்வணம்பட்டியில் கௌமார மடாலயமும், குமரக் கடவுள் ஆலயமும் நிலைநாட்டியவர் இந்த இராமானந்த சுவாமி. இங்கே கோயில் கொண்ட குமரக் கடவுள் துதியாக உள்ளது, இந்த மாலை. இது எழு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தங்களாலாகியது. பல புலவர்கள் பாடிய சாத்துக் கவிகள் முதலில் உள்ளன. viii. 733/1909/IV.

Q26 : 417

**கந்தப்ப தேசிகர், தி.**

i. தணிகை தயாநிதி மாலை (தொ.எ. 1675 பார்க்க) ; ii. சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 100+1 ; vii. திருத்தணிகைச் சந்நிதி முறையில் இது மூன்றாவது நூலாகும். viii. 169/1905/I.

Q26 : 417

**காளிதாஸ் சுவாமிகள், ப. கோவை.**

480. i. சுப்பிரமணிய சுவாமி பேரில் சபாரஞ்சித கீதம் ; ii. வ. எதிராஜு முதலியார், மயிலை ; ஆதி கலாநிதி அச்சுக்கூடம், சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.ப. 24 ; v. 21×13 செ.மீ. ; vi. 0–2–0; vii. சுப்பிரமணியரைக் குறித்த துதிமாலை. viii. 455/1908/III.

Q26 : 417

**கிருஷ்ணப்ப செட்டியார், குளத்தூர்.**

i. சென்னை செல்வக் கந்தர் தோத்திர ஆசிரிய விருத்தம் முதலியன (தொ.எ. 371 பார்க்க) ; ii. நடராஜாசாரியார், புதுவை ; ஹரிஹர பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.ப. 9 ; vii. ஆசிரிய விருத்தம் ஆறு கொண்ட துதி மாலை முதலில் உள்ளது. பின், வேதாந்தக் கீர்த்தனம் என்னும் பகுதியில் மூன்று கீர்த்தனைக் கவிதைகள் உள்ளன. இக்கீர்த்தனைகளுக்கு இராக, தாளக் குறிப்புக்களும் உள. viii. 327/1910/II.

Q26 : 417

**சிவசங்கர மூர்த்திப் பிள்ளை, அ., பறங்கிப்பேட்டை.**

481. i. பழநிப் பாமாலை ; ii. த மு. சரவண முதலியார், திண்டுக்கல் ; மகாலக்ஷ்மி விலாச அச்சியந்திரச ாலை, சென்னை ; iii. 1903; iv. செ.மூ.ப. 9+128 ; v. 16×12 செ.மீ. ; vi. . . . . ; vii. முருகப் பெருமான் துதியாக அமைந்த சிறு பிரபந்தங்களின் தொகுதி. திருவாசகம், பாடுதுறை இவற்றிற்போலப் பல பாடற் பகுதிகள் உள. viii. 225/1904/II.

Q26 : 417

482. i. **சிவ செந்திமாலை** ; ii. சி. எ. குப்புசாமி செட்டியார் ; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+52 +1 ; v. 14×11 செ.மீ. ; vi. . . . . ; vii. திருச்செந்தூர் சுப்பிமணியக் கடவுள் பேரில் பாடப் பெற்றது. "சிவ சிவா செந்தில் வளர் சிவனே போற்றி" எனப் பாடல் தோறும் போற்றிசைப்பது. சோதிட சந்தேக நிவர்த்தியாக, 'நவசக்கிர கிரகம்' என்பது ஒன்று தரப் பெற்றிருக்கிறது. viii. 240/1910/II.

Q26 : 417

**சுப்பராம பாரதி**

i. இரங்கோன் செய்கோன் வெள்ளிரதச் சிறப்பு (தொ. எ. 1396 பார்க்க) ; ii. லக்ஷ்மி விலாச அச்சுக்கூடம், மதுரை ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 6 ; vii. முருகப் பெருமானுக்கு வெள்ளி ரதம் செய்து வெள்ளோட்டம் செய்த சிறப்புப் பற்றித் தெரிவிப்பது. viii. 314/1906/I.

Q26 : 417

483. i. **சுப்பிரமணியர் மாலை** ; ii. ஸ்ரீ சாமுண்டீஸ்வரி அச்சாபீஸ், தாராபுரம் ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 12 ; v. 18×11 செ. மீ. ; vi. 0–0–6 ; vii. தென் பழனி ஆண்டவர் புகழ் கூறித் துதிப்பது. ஆபத்தில் அபயம் தந்து காக்கும் முருகப் பெருமானின் கருணையை எடுத்து மொழிவது. viii. 461/1909/II.

Q26 : 417

**சேவகப் பெருமாள் உபாத்தியாயர், சிங்கம்புணரி.**

484. i. சிவ சுப்பிரமண்யர் திருப்பரங்கிரி மாலை [பழநி மா மலைத் தண்டாயுதபாணி உயிர் வருக்க அ டைக்கல மாலை] ; ii. விவேக பாநு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+30; v. 21×13 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. திருப்பரங் குன்று அதிபனுகிய முருகப் பெருமானைத் துதிக்கும் பாமாலை. viii. 402/1910/III.

Q26 : 417

**துரைசாமி தேசிகர், சி.வ., கூடலூர்.**

485. i. சுப்பிரமணியர் அற்புத நாமாவளி ; ii க. மு. பொன்னு சாமிப் பிள்ளை ; கலைகதியான முத்திராக்ஷர சாலை, சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 48 ; v. 18×11 செ.மீ.; vi. ......; vii. முதலில் நாமாவளி கண்ணி முறையில் 193 உள்ளன. வருகை வேண்டல், சிலதா—சம்வாதம், நன்னிமித்தம் பராவல், காவடிச் சிந்து, அத்வைதானந்தக் கண்ணிகள், சுருள வியப்பு, மங்களம், எச்சரிக்கை, ஆனந்தக் களிப்பு என்னும் பகுதிகள உள. ஒவ்வொன்றிற்கும் இராக, தாளக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 178/1909/IV.

Q26 : 417

**தொண்டர் சீர் பரவுவார் தம்பிரான் சுவாமி**

486. i. விராலிமலை மாலை ; ii. மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1902 ; iv. செ.மூ.எ. 1+30+9; v. 12×8 செ.மீ. ; vi. ...... ; vii. விராலி மலை முருகனைத் துதிக்கும் 30 விருத்தங்கள் கொண்ட பாமாலை. இதனோடு விராலி மலைச் சந்த விருத்தமும் (9), விராலி மலை வெள்ளிப் பரிவாகன வைபவக் கீர்த்தனையும் அமைந்துள்ளன. முகப்பில் அருணகிரி நாதர் அருளிய விராலி மலைத் திருப்புகழ் தரப்பெற்றிருக்கிறது. viii. 164/1902/IV.

Q26 : 417

**நாகலிங்கம்பிள்ளை, துறையூர்.**

i. முருகூர் திருக்கோவில் பரிவார தேவதைகள் துதி (தொ. எ. 1686 பார்க்க) ; ii. ஸ்ரீ வித்தியா விநோதினி அச்சுக்கூடம், தஞ்சை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 5 ; vii. இதில் நந்திகேசுவரர், பைரவர், நடேசர், தெட்சணாமூர்த்தி, சண்டேசுரர் என்னும் ஐந்து தேவதைகளைக் குறித்தும் தனிதனி ஒவ்வோர் பாடலாக ஐந்து பாடல்கள் உள. viii. 349/1910/II.

Q26 : 417

பொன்னையா, வை.

i. கதிரை யாத்திரை விளக்கக் காதல் (தொ.எ. 1633 பார்க்க): முதற்பதிப்பு ; ii. சண்முகசுந்தர விலாச அச்சியந்திரசாலை, சிதம்பரம் ; iii. 1905 ; iv. செ.மூ.ப. 11—24=14 ; vii. தோத்திரமாக உள்ளது. பல் வகைப் பாடல்கள் விரவி வந்துள்ளன. viii. 165/1905/III.

Q26 : 417

மாடசாமிப் பிள்ளை, த. சு.

487. i. திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் தோத்திரம் ; ii. ஸ்ரீ ராமச்சந்திர விலாச அச்சுக்கூடம், மதுரை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 1+11+3 ; v. 14×11 செ.மீ. ; vi.......... ; vii. கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் ஆகிய பதிகப் பாமாலை. இறுதியில் மூன்று கீர்த்தனைக் கவிகளும் காணப்படுகின்றன. கீர்த்தனைகளுக்கு இராக தாளக் குறிப்புக்களும் உள. viii. 90/1909/IV.

Q26 : 417

மாம்பழக்கவிச்சிங்க நாவலர், மு., பழநி.

i. துதிப் பாசுரத் தொகை (தொ.எ. 1702 பார்க்க) ; ii. எம். பி. பழநிச்சாமியாச்சாரி ; விவேக பாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 30 ; vii. பல்வகை அலங்காரம் அமைந்த துதிப் பாடல்களின் கோவை. viii. 158/1908/III.

Q26 : 417

i. பழனிபுரி மாலை (தொ.எ. 1702 பார்க்க) ; ii. எம். பி. பழநிச்சாமி யாச்சாரி ; விவேக பாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 102 ; vii. கட்டளைக் கலித்துறைப் பாடல்களினால் ஆன துதி மாலை. viii. 158/1908/III.

Q26 : 417

முத்துக்குமாரசாமிப் பிள்ளை, கொ. பி.

i. திருச்செந்தூர் சிவ சுப்பிரமணியக் கடவுள் பேரில் தோத்திரம் (தொ.எ. 1600 பார்க்க) ; ii. ஆரியப் பிரகாசினி அச்சியந்திரசாலை, திருநெல்வேலி ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 3+38=41 ; vii. எளிமையான இன்னிசைத் தோத்திரப் பாக்களின் தொகுதி. viii. 166/1901/III.

Q26 : 417

**முத்து நாடார், சூ. ஆ., அருப்புக்கோட்டை.**

488. i. *முத்துக்குமாரசாமியென்னும் வேலவர் மாலை* ; ii. *மு. மு. முத்துக்குமாரசாமி நாடார் ; ஸ்ரீ மீனும்பிகை அச்சியந்திரசாலை, மதுரை* ; iii. 1910 ; iv. *செ. மூ. எ.* 1+30+1 ; v. 22×14 *செ.மீ.* ; vi........ ; vii. "*அருப்புக்கோட்டை என்று பெயர் வழங்கிய திருநல்லூர்த் திருக்கோயிலிலெழுந்தருளும் முத்துக் குமாரசாமி என்னும் வேலவர் மாலை*" *என்பது இதன் முழுப் பெயர். முருகக் கடவுளின் சிறப்புக்களைப் பல படியாகக் கூறித் துதிப்பது.* viii. 529/1910/IV.

Q26 : 417

**முத்துவீர நாவலர், பூஞ்சோலை.**

i. *திருப்போரூர் தெய்வமணித் தெரியல்* (*தொ.எ.* 1706 *பார்க்க*); ii. *பா. அப்புபிள்ளை, சென்னை ; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1910 ; iv. *செ.மூ.ப.* 4 ; vii. *எண்சீர் ஆசிரிய விருத்தம் பதினென்றும், எழுசீர் ஆசிரிய விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறைப் பாடல்களும், போற்றித் தேவாரம் ஒன்றும், கீர்த்தனம் ஒன்றும் இத் தெரியலில் இடம் பெற்றுள்ளன.* viii. 398/1910/I.

Q26 : 417

i. *திருப்போரூர் மயிலீச மாலை* (*தொ.எ.* 1706 *பார்க்க*) ; ii. *பா. அப்பு பிள்ளை, சென்னை ; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1910 ; iv. *செ.மூ.எ.* 23 ; vii. '*போரி மயிலீசா ஈசா*' *என்னும் பாடல்களை முதலில் கொண்டுள்ளமையின் இப் பெயரிட்டனராதல் வேண்டும். பின் தேவாரம் என்னும் தலைப்பில் ஐந்து பாடல்களும், ஒரு கீரத்தனையும் உள்ளன.* viii. 398/1910/I.

Q26 : 417

489. i. *திருப்போரூர் முருகக் கடவுள் திருப்பத்து* ; ii. *பூலோக வியாஸன் பிரஸ், சென்னை* ; iii. 1910 ; iv. *செ.மூ.ப.* 7 ; v. 13×11 *செ. மீ.* ; vi........ ; vii. *திருப்போரூர் முருகக் கடவுளைக் குறித்த துதி. கோ. தெய்வ சிகாமணிச் செட்டியாரும், தீ. முனிசாமி பிள்ளையும், அன்பர்களின் ஒத்துழைப்போடு திருப்போரூரின்கண் 1910-ஆம் ஆண்டு, பிப்ரவரி 11-ஆம் தேதி வந்த மாசிக் கிருத்திகை அன்று அடியார்களுக்கு அமுது செய்வித்து, இப் பதிகமும் பாடி அச்சிட்டுக் கொடுத்தனர்.* viii. 399/1910/I.

Q26 : 417

i. *திருப்போரூர் முருகக் கடவுள் தோத்ரத்ரயம்* (*தொ.எ.* 1706 *பார்க்க*) ; ii. *பா. அப்பு பிள்ளை, சென்னை ; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1910 ; iv. *செ.மூ.ப.* 1+10 ; vii. ...... ; viii. 398/1910/I.

Q26 : 417

. திருப்போரூர் முருகக் கடவுள் மணியருட் பாவணி (தொ. எ. 1706 பார்க்க); ii. பா. அப்புபிள்ளை, சென்னை; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை; iii 1910; iv. செ.மூ.ப. 23; vii. இணையுயிர் வருக்கக் கண்ணிகள், திருவேற் டஞ்சகம், போற்றி தேவாரம் ஆகியவையும் அடங்கியுள்ளன. viii. 398/ 1910/I.

Q26 : 417

i. திருப்போரூர் முருகக் கடவுள் மனுப்பாவலங்கல் (தொ.எ. 1706 பார்க்க); ii. பா. அப்பு பிள்ளை, சென்னை; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. செ.மூ.எ. 21; vii. விருததப் பாவால் ஆகிய துதி மாலை. போற்றித் தேவாரமும், ஒரு கீர்த்தனையும் உடன் உள்ளன. viii. 398/ 1910/I.

Q26 : 417

i. திருப்போரூர் முருகக் கடவுள் முதற்பா விருத்தத் துதி (தொ. எ. 1706 பார்க்க); ii. பா. அப்புபிள்ளை, சென்னை; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. செ.மூ.எ. 26; vii. வெண்பாவினலும், விருத்தங்களினலும் ஆன துதி மாலை. viii. 398/1910/I.

Q26 : 417

i. திருப்போரூர் முருகக் கடவுள் மும்மணிப் பத்து (தொ.எ. 1706 பார்க்க); ii. பா. அப்புபிள்ளை, சென்னை; பூலோக வியாஸன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1910; iv. செ.மூ.எ. 1+30+1; vii. முறையே எண்சீர், எழுசீர், அறுசீர்களினல் ஆய பப்பத்து விருத்தங்கள் கொண்டது இந்த நூல். மூவகைப் பாவினலாகிய இதற்கு 'மும்மணிப்பதது' என்று பெயர் சூட்டியுள்ளனர். viii. 398/1910/I.

Q26 : 417

**முத்தைய பிள்ளை**

490. I. கழுகு மலை சண்முகநாதன் பேரில் சண்முக மாலை; ii. சச்சி தானந்த அச்சியந்திரசாலை, விருதுபட்டி; iii. 1910; iv. செ. மூ.எ. 5+1+32; v. 21×14 செ.மீ.; vi. 0–1–0; vii. கழுகு மலை வாழ் சண்முகப் பெருமானின் துதியாக அமைந் தது. இம் மாலையில் 32 பாடல்கள்தாம் உள்ளன. viii. 311/ 1910/II.

Q26 : 417

**வீரபத்திரப் பிள்ளை, ந., தஞ்சை.**

491. i. சுப்பிரமணிய சுவாமி கீர்த்தனம் ; ii. கி. மு. க. கிருஷ்ண சாமி சேனைய நாடார் ; கமலாஸனி பிரஸ், கும்பகோணம் ; iii. 1907 ; iv. செ மூ.எ. 12+10+2=24 ; v. 14×11 செ. மீ. ; vi. .... ; vii. நெஞ்சிற்கு அறிவுறுத்தலாகவுள்ளது இக்கீர்த்தனை ; ' கந்தா வேல் முருகா 'எனத் தொடங்கும் பதிகமும் அமைந்துள்ளது. viii. 79/1907/III.

Q26 : 417

**வேலுத் தரகர்**

492. i. குமர தேசிக மாலை ; ii. மெஞ்ஞான விளக்கம் அச்சுக்கூடம், பாலக்காடு சுல்த்தான் பேட்டை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 4+103 ; v. 16×10 செ.மீ. ; vi. .... .. ; vii. ஆசிரியர் நோயுற்றிருந்த காலத்துப் பாடப்பெற்றது. முருகப் பெருமானைப் பற்றிய தோத்திரம். viii. 174/1908/III.

Q26 : 417

**ஸ்ரீநிவாஸ சர்மா, மு. ரா.**

493. i, திருச்செந்தூர் ஸ்ரீ ஷண்முகக் கடவுள் தோத்திரப் பாமாலை [சிலம்பனி ஸ்ரீ சிதம்பர விநாயகர் போற்றி விருத்தம்] ; ii. ஆ. அம்பலவாண நாவலர், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் ; மீனலோசனி அச்சியந்திரசாலை, தேவகோட்டை ; iii. 1901 ; iv. செ.மூ.எ. 1+16+1 ; v. 17×13 செ.மீ. ; vi....... ; vii. செந்தில் முருகனைத் துதிக்கும் 16 ஆசிரிய விருத்தங்கள் கொண்ட நூல். viii. 164/1901/IV .

Q26 : 417

## 294·551 விநாயகர் தோத்திரம்

**ஔவையார்**

i. வேழமுகம் (தொ.எ. 1322 பார்க்க) ; ii. கணேச அச்சியந்திர சாலை ; iii. 1903 ; iv. செ.மூ.ப. 5 ; vii. இதில் பிள்ளையார் சிந்தனை, சரஸ்வதி சிந்தனை, பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை என்னும் மூன்று பகுதிகள் உள. viii. 37/1903/III.

Q24 : 417

**கங்காதர முதலியார், வா.**

494. i. விநாயகரருள் வேட்கை மஞ்சரி [அர்த்தநாரீசரம்பிகை துதி ; திருத்தொண்டர் சபைக் கீர்த்தனைக் கொத்து] ; ii. கட்டளை வரதராஜப் பிள்ளை, மைசூர் ; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1900 ; iv. செ.மூ.எ. 14+4+51 ; v. 19×11 செ.மீ. ; vi. ........ ; vii. விநாயகரின் அருள் வேண்டிப் பாடிய துதிகள் அடங்கியுள்ளன. viii. 177/1901/IV.

Q24 : 417

**கந்தப்ப தேசிகர், தி.**

i. தணிகை ஐங்கரமாலை (தொ.எ. 1675 பார்க்க) ; ii. சிவகாமி விலாச அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 100+1 ; vii. திருத்தணிகைச் சந்நதி முறை நூலில் இது இரண்டாவது நூலாகும். viii. 169/1905/I.

Q24 : 417

**குமாரசுவாமி ஐயர், நா. கு.**

495. i. கற்பக விநாயகர் மாலை ; ii. தொ.சி. மாசிலாமணி முதலியார் ; அலெக்ஸாண்டரா அச்சியந்திரசாலை, கும்பகோணம் ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 10 ; v. 14×11 செ.மீ. ; vi. 0-0-6 ; vii. சிதம்பரத்தைச் சார்ந்த வானுப்பேட்டை என்னும் தேவநகர் கற்பக விநாயகரைக் குறித்த துதிமாலை. இது பத்துப் பாடல்கள் கொண்ட பதிகப் பாமாலையாகும். viii. 539/1909/IV.

Q24 : 417

**சுப்பிரமணிய பிள்ளை, தி., தேவராயன்பேட்டை.**

496. i. கற்பக விநாயகர் மீது தோத்திரப்பா முதலியன [முநீஸ்வரர் கும்மி] ; ii. முருகப்ப செட்டியார் ; சைவசித்தாந்த அச்சியந்திரசாலை, தேவகோட்டை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+10 ; vi. 13×10 செ.மீ. ; vi. .......... ; vii. கோனுபட்டி என்னும் கோநகரின்கண் எழுந்தருளியிருக்கும் கற்பக விநாயகரைக் குறித்த துதிமாலை. இது பத்து ஆசிரிய விருத்தச் செய்யுட்களுடன் கூடிய பதிகப் பாமாலையே. இந்த ஆலயத்தின் முன் வீற்றிருக்கும் முநீஸ்வரர்மேல் கும்மியும், இந்த ஆலயத் திருப்பணியும், திருக்குளமும், இயற்றுவித்த அழகப்ப செட்டியார்மீது பாடலும் இதில் சேர்ந்துள்ளன. viii. 254/1910/II.

Q24 : 417

**முத்துவீர நாவலர், பூஞ்சோலை.**

497. i. துதி சோடசத்ரயம் ; ii. ஸ்ரீ ஜீவரத்தின விநாயக சம்பந்தர் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 1+16+1=18 ; v. 14×11 செ. மீ. ; vi. .............. ; vii. சென்னை அடையாற்றுக்கடுத்த ஊரூரின்கண் திருக்கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ சர்வ சித்தி விநாயகரைக் குறித்த துதி சோடசத்ரயம் என்பது இதன் முழுப்பெயர். 1910-ம் ஆண்டு ஜூன் 22-ம் தேதி ஆடிப் பௌர்ணமி தினத்தில் அரங்கேற்றப் பெற்றது. viii. 529/1910/III.

Q24 : 417

**வேலுதேசிகர்**

i. பிரதிட்டாசார சங்கிரகம் (தொ.எ. 1630 பார்க்க); ii. கணேசா அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 21; vii. புரசையில் விநாயகரைப் பிரதிட்டை செய்தது பற்றிய நிகழ்ச்சி பற்றிக் கூறுவது. viii. 265/1908/III.

Q24 : 417

**ஸ்ரீநிவாஸ சர்மா, மு.ரா.**

i. சிலம்பனி ஸ்ரீ சிதம்பர விநாயகர் போற்றி விருத்தம் (தொ.எ. 493 பார்க்க) ; ii. ஆ. அம்பலவாண நாவலர், வடடுக்கோட்டை, யாழ்ப்பாணம் ; மீனலோசனி அச்சியந்திரசாலை, தேவகோட்டை; ii. 1901 ; iv. செ.மூ.எ. 1+10+2 ; vii. தேவகோட்டை சிலம்பனி ஸ்ரீ சிதம்பர விநாயகரைக் குறித்த போற்றி விருத்தங்கள் இவை ; பத்துப்பாடல்களைக் கொண்ட பதிக நூல். viii. 164/1901/IV.

Q24 : 417

## 294·551—சைவசமய நெறிகள்

**ஆறுமுகநாவலர், யாழ்ப்பாணத்து நல்லூர்.**

i. குருவாக்கியம் (தொ.எ. 498 பார்க்க); iii. 1907 ; iv. உ.ப. 8; vii. இது ஆசாரியர் சிஷ்யருக்குச் சமய தீக்ஷை செய்யும்போது போதிக்கததக்கது. viii. 473/1908/IV.

Q23 : 4

i. குருவாக்கியம்: இரண்டாம் பதிப்பு (தொ.எ. 499 பார்க்க); ii. சுவாமிநாத பண்டிதர் ; சைவவித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னப்பட்டணம்; iii. 1910 ; iv. உ.ப. 8 ; vii. இது ஆசாரியார் சிஷ்யருக்குச் சமய தீக்ஷை செய்யும்போது போதிக்கத் தக்க செய்திகள் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளன. 17 செய்திகள் இதில் உள்ளன. viii. 403/1910/IV.

Q23 : 4

498. i. சமயதீக்ஷிதர் அநுட்டான விதி ; ii. சுவாமிநாத பண்டிதர் ; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.ப. 33 ; v. 14×11 செ.மீ. ; vi. ............ : vii. சைவ சமயத்தார் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய நித்திய அநுட்டானங்கள பற்றியது. இது சைவாநுட்டானத்தில் விசுவாசமும் நியமமும் உடையவராய் உள்ள சமய தீக்ஷிதர் பொருட்டு இயற்றப்பெற்றதாகும். இதனோடு சூரிய நமஸ்காரவிதி, கோபூசாவிதி, போசனவிதி ஆகியவையும் உள்ளன. viii. 473/1908/IV.

Q23 : 4

499. i. சமயதீக்ஷிதர் அநுட்டான விதி [குருவாக்கியம்] : இரண்டாம் பதிப்பு ; ii. சுவாமிநாத பண்டிதர் ; சைவ வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னபட்டணம் ; iii. 1910 ; iv. உ.ப. 33 ; v. 14×10 செ.மீ. ; vi. ............ ; vii. சைவசமயத்தார் நித்தியம் செய்ய வேண்டிய ஆசார அனுட்டானங்கள் பற்றி விவரிப்பது. சூரிய நமஸ்காரவிதி, கோபூசாவிதி, போசன விதி ஆகியவையும் விவரிக்கப்பட்டுள்ளன. 'குருவாக்கியம்' என்னும் ஒரு பகுதியும் இதன் இறுதியில் உள்ளது. viii. 408/1910/IV.

Q23 : 4

i. சிவக்ஷேத்திர விளக்கம் (தொ.எ. 346 பார்க்க) ; ii. ம. முத்துக்குமாரசாமி தேசிகர் & அ. குமாரசாமிப்பிள்ளை ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii 1901 ; iv. உ.ப. 10 ; vii. சைவசமயிகள் தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான நான்கு பொருள்கள்உள. திருக்கோயில் சென்று வழிபடுவார் அறிய வேண்டுவன இவை. viii. 182/1901/I.

Q23 : 4

**இரத்தினவேலு முதலியார், ஈக்காடு—மொ.து.**

500. i. பஸ்ம மஹாத்மியம் ; ii. ஈ. சபாபதி முதலியார் ; பண்டித மித்திர ப்ரஸ், சென்னை ; iii. 1902 ; iv. செ மூ. ப. 41 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. திருநீற்றின் பெருமை உரைப்பது. சிவபக்தர்களுக்கு உபயோகப்படும்படி பல ஸமஸ்கிருத நூல்களினின்றும் திரட்டப்பட்டது ஸமஸ்கிருத ஸ்லோகங்களைக் கிரந்த லிபியில் கொடுத்துத் தமிழில் விளக்கமும் தரப்பட்டுள்ளன. viii. 99/1902/II.

Q23 : 4

**உலகநாத முதலியார், வி.**

501. i. உருத்திராக்கம் ; ii. பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை ; வைஜயந்தி பிரஸ், சென்னை; iii, 1906 ; iv. உ.ப. 8 . v. 14×11 செ.மீ. ; vi. .......... ; vii. சிவ சின்னமாகிய உருத்திராக்கத்தின் சிறப்பினையும், அதனை அணிவார், அடையும் நன்மைகளையும் விவரித்து உரைப்பது. viii. 91/1906/IV.

Q23 : 4

502. i. விபூதி ; ii. பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை, இராயப்பேட்டை ; வைஜயந்தி ப்ரஸ், சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 8 ; v. 14×11 செ.மீ. ; vi. ............. ; vii. சைவர்கள் அணிதற்குரிய சிவசின்னமாகிய திருநீற்றின் வைபவத்தைச் சுருக்கமாகக் கூறுவது. viii. 90/1906/IV.

Q23 : 4

**கலியாணசுந்தர முதலியார், பூவை.**

503. i. *சிவாலய தரிசன விதி சுருக்கம் [பிரதோஷ மகிமை]* ; ii. *கந்தசாமி முதலியார், அணவை; இச்சினர் அச்சுக்கூடம்*; iii. 1910 ; iv. உ.ப. 10 ; v. 14×11 செ.மீ. ; vi. ............ ; vii. கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்து வந்தனை வழிபாடு செய்யும் முறைமையினைத் தெரிவிப்பது. viii. 461/1916/III.

Q23 : 4

i. *பிரதோஷ மகிமை* (தொ.எ. 503 பார்க்க); iii. 1910 ; iv. உ.ப. 5 ; vii. பிரதோஷ காலத்தின் மகிமை பற்றியும், அக் காலத்தில் சிவ வழிபாடு செய்வதன் சிறப்புப் பற்றியும் விவரிப் பது. viii. 461/1910/III.

Q23 : 4

**சங்கரீஸ்வரர்**

504. i. *தேவிபூசைவிதி* ; ii. பெ. சொக்கலிங்கம் பிள்ளை, திரு நெல்வேலி; நூருல் இஸ்லாம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1910 iv. செ.மூ.எ. 31 ; v. 15×11 செ.மீ. ; vi. .......... ; vii. பாடல்களினுல் அமைந்தது. சமாதி நிலை பற்றியும் இதன் கண் சொல்லப்பட்டுள்ளது. viii. 83/1910/II.

Q23 : 4

505. i. **திலோதகதர்பண விதி** ; ii. *முத்துக் கற்பகக் குருக்கள், சிதம்பரம் ; ஸ்ரீ மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம், திரிசிர புரம்* ; iii. 1910 ; iv. உ.ப. 16 ; v. 14×11 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. தர்ப்பணம் செய்யும் விதி முறை முதலிய வற்றை விளங்க உரைப்பது. முதற்கண் வருஷம், மாதம், பக்ஷம், திதி, வாரம், நட்சத்திரம் ஆகியவை பற்றிய குறிப்புக்களும் தர்ப்பணம் செய்ய வேண்டிய காலங்களும் குறிக்கப்பட்டுள்ளன. பின் விநாயகர் பூஜை விவரம் கூறி, திலோதக தர்ப்பணவிதி யையும் விளக்கியுரைக்கின்றார். viii. 84/1910/IV.

Q23 : 4

**நடேச தேசிகர், சு., திருநள்ளாறு.**

506. i. *திருநீற்றுப் பெருமை* ; ii. சு. நடேச தேசிகர், திரு நள்ளாறு ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.ப. 28 ; v. 22×14 செ.மீ. ; vi. 0–2–0 ; vii சைவசமய சாதனங்களுள் திருநீறு, உருத்திராக் கம் முதலியவை சிறப்பாகக் கூறத்தக்கவை. திருநீற்றின் பெருமையை வடமொழியில் ‘பஸ்ம ஜாபாலோப நிடதம்’ முதலியவற்றுள்ளும் தென் மொழியில் திருஞானசம்பந்தர்

திருநீற்றுப் பதிகம், உபதேச காண்டம் முதலிய சைவ நூல்கள் பலவற்றுள்ளும் ஆங்காங்கே கூறியிருப்பனவற்றை ஒருங்கு தொகுத்து வெளியிடப் பெற்றதே இந்நூல். viii. 371/1909/II.

Q23 : 4

**நாகஸ்வாமிக் குருக்கள், வடதிருமுல்லைவாயில் & விஸ்வநாதக் குருக்கள், திருமயிலை.**

507. i. காரணாக மோக்த மாசபௌர்ணை பூஜாவிதி ; ii. அழகப்ப முதலியார், மயிலை ; சிவஞானபோத யந்திரசாலை, சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 26 ; v. 16×12 செ.மீ. ; vi. ........ ; vii. மார்கழி மாதம் தொடங்கிப் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் பௌர்ணை பூஜை பற்றிய விதிகள் வகுத்துரைப்பது. இதனைச் சித்தம் செய்து வெளியிட்ட குருக்களின் பதிப்பிற்கு மறு பதிப்பாக வெளிவருவது இந்நூல். viii. 261/1909/I.

Q23 : 4

508. i. நித்திய கரும சைவாநுஷ்டான விதி ; ii. வாணி விலாஸம் பிரஸ், திருநெல்வேலி ; iii. 1908 ; iv. உ.ப.+செ.மு.ப. 13 ; v. 13×11 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. வழிபாட்டு முறை பற்றி விளக்கியதோடு, விநாயகர் சிவபெருமான் முதலியோரைக் குறித்த துதிகளும் இதில் அடங்கியுள்ளன. viii. 172/1908/III.

Q23 : 4

**பாலசுப்பிரமணிய பிரம்ம சுவாமி, பரமஹம்ஸ.**

509. i. சந்தியா மந்திரார்த்த போதிநி ; ii. கலாரத்நாகரம் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப.+செ.மு.ப. 50; v. 14×11 செ.மீ. ; vi. 0–4–0 ; vii. ஒவ்வோர் ஆணும் பெண்ணும் நாள்தோறும் கடவுளைப் பற்றி நினைத்து நமஸ்கரித்து மனத்தை நன்றாய்க் கடவுளுடன் சேர்க்கிறதே சந்தியா வந்தனம் எனப்படும். மனத்தை உலக விஷயங்களில் செல்ல விடாது கடவுளிடத்தில் ஒன்று சேரும்படி செய்வதற்குள்ள சாதனம். ஒவ்வொரு நாளும் உதயம், மத்தியம், சாயந்திரம் என்னும் மூன்று காலங்களிலும் இது செய்யப் பெறும். வாலிபர்கள் முதலிய எல்லோரும் சந்தியாவந்தனத்தினுடைய உண்மைப் பொருளை உணர்ந்து கிருதார்த்தர்களாக வேண்டி, இந்த வியாக்கியானத்தைச் செய்துள்ளார் ஆசிரியர். முன்பு வெளிவந்த வியாக்கியானங்கள் போல பாஹ்யார்த்தத்தை மட்டும் வெளியிடாது, இது ரகஸ்யார்தத்தையும்வெளியிட்டுள்ளது. 30 சிறு பகுதிகளாக உள்ளது. viii. 783/1910/II.

Q23 : 4

**மறைஞான சம்பந்த நாயனார்**

i. உருத்திராக்க விசிட்டம் (தொ.எ. 433 பார்க்க) ; ii. இராம லிங்க சுவாமி & இரத்தினவேலு முதலியார் ; பண்டித மித்திர யந்திரசாலை ; iii. 1901 ; iv. உ.ப.+செ.மூ.ப. 5+117 ; vii...... ; viii. 98/1902/II.

Q23 : 4

i. திருக்கோயிற் குற்றம் (தொ.எ 433 பார்க்க); ii. இராமலிங்க சுவாமி & இரத்தினவேலு முதலியார் ; பண்டிதமித்திர யந்திர சாலை ; iii. 1901 ; iv. உ.ப.+செ.மூ.ப. 1+2 ; vii........ ; viii. 98/1902/II.

Q23 : 4

**முத்து ராம ஐயா, நா.பெ.நா.மு., கண்டனூர்.**

510. i. தன வைசிய வைதீக சைவாநுஷ்டான விளக்கம ; ii. விவேக பானு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1909 ; iv. உ.ப. 142 ; v. 21×14 செ.மீ ; vi. 0–4–0 ; vii. தன வைசியர் மேற் கொள்ள வேண்டும் சடங்கு முதலியவைகளை விரிவாக உரைப் பது. வேதம், ஆகமம், ஸமிருதி, இதிகாசம், புராணம் முதலிய நூற பிரமாணம் காட்டி, அத்துவித சைவ மார்க்கத்தை விளக்குவது. viii. 375/1909/III.

Q23 : 4

**முத்துராம பிள்ளை, தி.**

511. i. சிவ பஸ்ம வைபவம் ; ii. பண்டித மித்திர யந்திர சாலை, சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 12 ; v. 22×13 செ. மீ. ; vi. 0–1–0 ; vii. திருநீற்றின் மகிமை உரைப்பது. வைணவர் ஒருவர் விபூதியைப் 'பிணச் சாம்பல்' என இகழ்நது எழுதிய பத்திரிகைக்கு மறுப்பாகப் பிரமாணங்கள் காட்டித் திருநீற்றின் சிறப்பினைக் கூறுவது. viii. 152/1901/IV.

Q23 : 4

**முத்தைய பட்டாரகர்—மொ. து.**

512. i. மகேசுவர பூஜா விதி ; ii. ஸ்ரீ நடராஜ விலாச அச்சியந்திர சாலை, சிதம்பரம ; iii. 1903 ; iv. உ.ப. 8 ; v. 13×11 செ.மீ.; vi. 0-0–6 ; vii. 'மகேசுவர பூசையாகிய அடியார்களுக்கு அமுதளித்தல் பற்றிய விதிமுறைகளை விளக்குவது. வடமொழி யினின்றும் மொழிபெயர்க்கப்பெற்றது. viii. 266/1903/IV.

Q23 : 4

மெய்கண்ட சரணாலய சுவாமி

513. i. சைவக்கிரியாதிகாரம் ; ii. நெ. முனிசாமி முதலியார்; கணேசா அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908; iv. உ.ப.+ செ.மூ.ப. 16 ; v. 14×11 செ.மீ. ; vi. ........ ; vii. சைவ சமயத்தினா நித்தியம செய்வதற்குரிய கிரியை முதலியன வற்றை விளக்கியுரைப்பது. தகக மேற்கோள்களும் அங்கே காட்டப்பட்டிருக்கின்றன. viii. 266/1908/III.
Q23 : 4

## 294.551—சைவ புராணங்கள்

அழகிரிசாமி செட்டி—மொ. து.

514. i. மார்க்கண்டேயர் சரித்திரமென்னும் பாவனு விருஷிப் புராணம : முதற்பதிப்பு ; ii. சுப்பராம அய்யர்; ஸ்ரீ மீனுடபிகை பிரஸ், மதுரை ; iii. 1905 ; iv. உ.ப. 183 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–14–0 ; vii. மார்ககண்டேயா சரித்திரம் கூறுவது ; வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பெற்றது. 14 அததியாயங்கள கொண்டது. பதினெண் புராணங்களில் ஒன்ருன பத்ம புராணததில சொல்லப்பட்ட மார்க்கண்டேயர் சரிததிரம் இது என்று சொல்லப்படுகிறது. viii. 269/1905/II.
Q23 : 222

இலட்சுமணப் பிள்ளை, பரங்கிப்பேட்டை—மொ. து.

515. i. திரௌபதா தேவி மான்மியம் ; ii. டி. சுப்பிரமணிய ஐயர்; சி. என். பிரஸ், சென்னை : iii. 1902 ; iv. உ. ப. + செ.மூ.ப. 6+58 ; v. 20×14 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. திரௌபதி அம்மனைக் குறித்த புராணம். வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது. ஸ்ரீ பாண்டவ தினசரி என்னும் பகுதியில பாரதக் கதைச் சுருக்கம் அமைந்துள்ளது. நூலின் இறுதியில் ‘ ஸ்ரீ திரௌபதி தேவி பதிகம் ’ அமைந் துள்ளது. இது திரௌபதி தேவியைக் குறித்த தோத்திர மாகும். viii. 42/1903/I.
Q23 : 22

ஏகாம்பர முதலியார், கருங்குழி.

516. i. விநாயக பிரபாவ விளக்கம் ; ii. கணேசா அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 84 ; v. 18×11 செ.மீ.; vi. 0–4–0 ; vii. விநாயகப் பெருமானின் சிறப்புக் களைத் தொகுத்து உரைப்பது. விநாயகரைப் பூசை செய்ய வேண்டிய கிரமம் முதலியனவும் விளக்கப்பெற்றது. விநாயகக் கடவுளின் புகழ் மிக்க சரிதங்களை விநாயக புராணம், சிவ மஹாபுராணம் முதலியவை நோக்கித் தொகுத்து எளிய முறையில் உரைப்பது. viii. 263/1908/III.
Q23 : 224

**கணேச சாஸ்திரி, மருவூர்—மொ. து.**

517. i. *மகேதிகாசமாகிய சிவரகசியம்—நான்காம் அம்சம்* ; ii. சதா சிவ செட்டியார், கயப்பாக்கம் ; இச்சினர் அச்சுக்கூடம், சென்னை; iii 1909, iv. உ.ப. 48 ; v. 22×15 செ.மீ.; vi. 0–4–0 ; vii. சிவ ரகசியத்தின் நான்காம் அம்சத்தின் மொழிபெயர்ப்பு சஞ்சிகையாக வெளியிடப்பெறுவதில் இது முதல் சஞ்சிகை. viii. 786/1909/IV.

Q23 : 2291

518. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்–நான்காம் அம்சம்* ; iii. 1909; iv. உ.ப. 49–96 ; vii. சஞ்சிகையாக வெளிவருவதில் இது இரண்டாவது சஞ்சிகை. viii. 787/1909/IV.

Q23 : 2291

519. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—முதலாம் அம்சம் : நான்காம் பதிப்பு* ; iii. 1909 ; iv. உ.ப. 1—32+97—107 ; vii. வடமொழியினின்று மொழிபெயர்க்கப்பெற்றது. இது மூன்றுவது சஞ்சிகை. முதலாம் அம்சம் இதில் முடிவுறவில்லை. viii. 788/1909/IV.

Q23 : 2291

520. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—முதலாம் அம்சம்* ; iii. 1909 ; iv. உ.ப. 33–80 ; vii. இது நான்காவது சஞ்சிகை. viii. 789/1909/IV.

Q23 : 2291

521. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—மூன்றும் முதலாம் அம்சங்கள்* ; iii. 1909 ; iv. உ. ப. 276–373+81–128 ; vii. இது 5-ஆவது சஞ்சிகை. இதில் மூன்றும் அம்சம் முதலாம் அம்சம் ஆகியவற்றின் பகுதிகள் உள. viii. 790/1909/IV.

Q23 : 2291

522. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—முதலாம் அம்சம்* ; iii. 1909 ; iv. உ.ப. 129–174 ; vii. இது ஆறுவது சஞ்சிகை. viii. 791/1909/IV.

Q23 : 2291

522A. i. *மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—மூன்றுவது அம்சம்* iii. 1909 ; iv. உ.ப. 231–267+324—363 ; vii. வடமொழியினின்று மொழிபெயர்க்கப்பெற்றது, இது மூன்றுவது அம்சமாகும். viii. 792/1909/IV.

Q23 : 2291

522B. i. மகேதிகாசமாகிய சிவ ரகசியம்—மூன்றும் அம்சம் ; iii. 1910 ; iv. உ.ப. 364–411 ; vii. இது வடமொழியினின்றும் வசன நடையில் மொழிபெயர்த்து இயற்றப்பெற்றது. சஞ்சிகை யாக வெளியிடப்பெறுவதில் இது பதினொன்றுவது. சாம்பசிவ பூஜை, சிவ பூஜா மஹிமை, சிவ பக்தர் மஹிமை என்னும் பொருள்களைப் பற்றிய விவரங்கள் இதில் உள்ளன. viii. 615/1910/IV.

Q23 : 2291

**சுப்பிரமணிய பிள்ளை, வ. த.**

523. i. பிரமோத்தர காண்ட வசனம் : இரண்டாம் பதிப்பு ; ii. மிமோரியல் அச்சுக்கூடம், சென்னப்பட்டணம் ; iii. 1907 ; iv. உ.ப. 144 ; v. 15×12 செ.மீ.; vi. ...... . ; vii. இது சூத முனிவரால் வடமொழியில் சுலோக ரூபமாய் இயற்றப்பெற்ற நூல். இதனை வரதுங்க ராம பாண்டியர் தமிழில் மொழி பெயர்த்துக் காவிய நடையாக விருத்தச் செய்யுளால் இயற்றி யிருக்கின்றனர். சைவ சமயிகள் தெரியவேண்டிய பல செய்தி கள் இதன்கண் உள. இவ் வசன நூற்கு ஆதாரமாயிருந்தது வரதுங்கராமரின் செய்யுள் நூலுக்கு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் எழுதியிருக்கும் பொழிப்புரையே. இதன் முதற் பதிப்பு 1878-ஆம் ஆண்டு வெளிவந்தது. கடவுள் வாழ்த்து முதலிய 14 பகுதிகள் உள. viii. 137/1907/II.

Q23 : 22

**செல்லையாப் பிள்ளை, சி., யாழ்ப்பாணம்.**

524. i. சுப்பிரமணிய பிரபாவம் ; ii. மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை; iii. 1899; iv. உ.ப. 4+62; v. 16×13 செ.மீ.; vi......; vii. சுப்பிரமணியரின் சிறப்புக்களைப் புராணங்களை அடியொற்றி விவரித்து உரைப்பது. viii. 100/1906/III.

Q 23 : 22

**சேஷையர், வெளியனூர் & வரதராஜ உடையார், புதுவை.**

525. i. எல்லையம்மனுகிய ரேணுகாதேவி சரித்திரம் ; ii. மினர்வா அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1905 ; iv. உ.ப. 32 ; v. 22 × 14 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. மாரியம்மன் என்று வழங்குகிற மருதரசு படவேடு எல்லையம்மனுகிய ரேணுகாதேவி சரித்திரம் என்பது இதன் முழுப் பெயர். வடமொழி நூலைப் பின்பற்றியது. 24 சிறு சிறு அத்தியாயங்கள் கொண்டது. viii. 130/1905/III.

Q23 : 22

**முனியாண்டி சேர்வைகாரர், ந. க., இராமநாதபுரம்.**

526. i. சிவ சுப்பிரமணியக் கடவுளின் மீது ஸ்கந்த விலாசம் [பதிகம் பஜனை கீர்த்தனைகள் முதலியன]; ii. கணபதி விலாச அச்சுக் கூடம், இராமநாதபுரம்; iii. 1909; iv. உ.ப. + செ.மூ.ப. 1–17; v. 21×14 செ.மீ.; vi. ..........; vii. முருகன் சூரபத்மன் முதலிய அசுரர்களோடு போரிட்டு ஜயந்தன் முதலிய தேவர்களின் சிறையை மீட்டுவித்து, வெற்றி பெற்று, மயில் உரு எடுத்த சூரபத்மன்மீது ஆரோகணித்துத் தேவர்களோடு செந்திநகர் சென்ற வரை உள்ள சரித்திரம் தரப் பெற்றிருக்கிறது. இராமநாதபுரம் முகவையூரணி வடகரையில் எழுந்தருளியிருக்கும் சிவ சுப்பிரமணியக் கடவுள் ஆலயத்தில் வருடநதோறும் நடந்து வருகிற ஸ்கந்த ஷஷ்டி உத்ஸவத்தில் நடக்கும் ஸ்கந்த யுத்தத்திற்குரிய வசனம் மட்டும் சுருக்கமாய் உள்ளது. viii. 513/1909/III.

Q23 : 2291

**வடமலையப்ப பிள்ளையன்**

527. i. மச்ச புராணம்: முதல் பதிப்பு; ii. சண்முகம் பிள்ளை, திருமயிலை; மினர்வா அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1900; iv. செ.மூ.எ. 5009; v. 24×17 செ.மீ.; vi. 2–8–0; vii. வடமொழியில் உள்ள மச்ச புராணத்தை ஆராய்ந்து தமிழில் செய்யுட் காவியமாக இயற்றப்பெற்றது. இது பூருவ காண்டம், உத்தர காண்டம் என்ற இரு பெரும் பிரிவுகளுடையது. பூர்வ காண்டத்தில் 114 அத்தியாயங்களும் உத்தர காண்டத்தில் 58 அத்தியாயங்களும் உள்ளன. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை எழுதிய ஆராய்ச்சி முகவுரையும் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதலியோர் பாடிய சிறப்புப் பாயிரங்களும் நூலின் முதற்கண் அணி செய்கின்றன. viii. 56/1901/II.

Q22 : 225

**வரதராச பண்டிதர், அ., காசி.**

528. i. சிவராத்திரி புராணம்: மூலமும் உரையும்—முதலாவது சஞ்சிகை; ii. வெ. நா. ஜூபிலி அச்சுக் கூடம், சென்னை; iii. ஜூன், 1902; iv. செ.மூ.உ.ப. 60; v. 21×13 செ.மீ.; vi. ........; vii. சிவராத்திரியின் மகிமை உரைக்கும் புராணத்தின் முதலாவது சஞ்சிகை. கடவுள் வாழ்த்தும் பாயிரப் பகுதியும் முடிந்து, சிவராத்திரி உற்பவச் சருக்கத்தில் 19 பாடல்கள் வரை உரையோடு அமைந்துள்ளது. இது யாழ்ப்பாணம், நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் செய்த உரையைக் கொண்டுள்ளது. viii. 129/1902/III.

Q23 : 2291

529. i. சிவராத்திரி புராணம் : மூலமும் உரையும்—இரண்டாவது சஞ்சிகை; iii. ஆகஸ்டு, 1902; iv. செ.மூ.உ.ப. 61—120; v. 23×14 செ.மீ. ; vii. இரண்டாவது சஞ்சிகையாகிய இதில் சிவ ராத்திரி உற்பவ சருக்கம் 20-ஆம் பாடல் முதல் 80-ஆம் பாடல் வரையில் உள்ளன. இதன் உரையாசிரியர் யாழ்ப்பாணம், நா. கதிரைவேற் பிள்ளை என்பவர் ஆவார். viii. 130/1902/III.

Q23 : 2291

530. i. சிவராத்திரி புராணம் : மூலமும் உரையும்; ii. கோ. ஆறு முக செட்டியார் ; சச்சிதானந்தா பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ. ப. + செ.மூ.ப. 48 ; v. 20×13 செ.மீ.; vi. ........; vii. சிவராத்திரி புராணம் சஞ்சிகையாக வெளிவருவதில் இது முதலாவது. பாயிரமும், உற்பவ சருக்கமும் இதில் உள்ளன. மா. நமச்சிவாயம் பிள்ளை இயற்றிய அரும்பிரயோக உரையும் வசனமும் இதில் உள்ளன. viii. 36/1909/II.

Q23 : 2291

531. i. சிவராத்திரி புராணம்: இரண்டாம் பதிப்பு; மூலமும் உரை யும்; iii. 1909 ; iv. உ.ப +செ.மூ.ப. 49-97 ; vii. சஞ்சிகை யாக வரும் இந்நூலின் இரண்டாவது சஞ்சிகை. மா. நமச்சி வாயம் பிள்ளை இயற்றிய அருமபிரயோக உரையும் வசனமும் இதில் உள்ளன. மான்மியச் சருக்கம், சுகுமாரச் சருக்கம் ஆகி யவை இதில் உள. viii. 37/1909/II.

Q23 : 2291

532. i. சிவராத்திரி புராணம்: மூலமும் உரையும்—மூன்றும் சஞ் சிகை; iii. 1909 ; iv. செ.மூ.உ.ப. 97-144; vi. 0-4-0 ; vii. சஞ்சிகையாக வெளியிடப் பெற்றுவரும் இப்புராணத்தின் மூன் றும் சஞ்சிகை. மா. நமச்சிவாயம் பிள்ளை என்பார் இயற்றிய அரும்பிரயோக உரையும் வசனமும் இடம் பெற்றுள்ளன. viii. 345/1909/III.

Q23 : 2291

533. i. சிவராத்திரி புராணம் : மூலமும் உரையும்—நான்காம் சஞ்சிகை; ii. கோ. ஆறுமுக செட்டியார்; விவேகாநந்தா பிரஸ், சென்னை; iii. 1909; iv. செ.மூ.உ.ப. 145–184; v. 19×13 செ.மீ.; vi. ........ ; vii. சஞ்சிகையாக வெளியிடப்பெறும் இப்புரா ணத்தின் நான்காம் சஞ்சிகை. மா. நமச்சிவாயம் பிள்ளை என் பார் இயற்றிய அரும்பிரயோக வுரையும் வசனமும் இடம் பெற் றுள்ளன. viii. 401/1909/III.

Q23 : 2291

534. i. சிவராத்திரி புராணம் ; ii. .......... ; iii. 1909 ; iv. உ.ப. 185 முதல் 232 வரை ; v. 19×13 செ மீ.; vi. ....; vii. சஞ்சிகையாக வெளிவரும் இந்நூல் ஒரு பகுதி. viii. 334/ 1909/IV.

Q23 : 2291

535. i. சிவராத்திரி புராணம் : மூலமும் உரையும்; ii. கோ. ஆறுமுகம் செட்டியார்; சச்சிதாநந்தா பிரஸ், ஆர். விவேகாநந்தா பிரஸ் & கோல்டன் பிரஸ்; iii. 1910 ; iv. செ.மூ.உ.ப. 233—310; v. 20×14 செ.மீ.; vi. ....... ; vii. சிவராத்திரி விரதத்தின் மகிமையை விளக்கும் செய்யுட் புராணம் இது. சஞ்சிகையாக வெளியிடப் பெற்றுவரும் இப்புராணத்தின் ஒரு பகுதி. இதில் கண்மாட பாதச் சருக்கம் 28-ஆம் பாடல் தொடங்கி சாலிகோத்திரச் சருக்கம் முடியவுள்ளது. மா. நமச்சிவாயம் பிள்ளை என்பார் இயற்றிய அரும்பிரயோக உரையும் வசனமும் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 227/1910/IV.

Q23 : 2291

**வேலாயுத பண்டிதர்**

536. i. சைவபுராணம் என்று வழங்குகிற சிவ மகா புராணம்—முதல் புத்தகம் ; ii. நாச்சி முத்து முதலியார் ; பிரண்ட்ஸ் அசோசியேஷன் அச்சாபீஸ், கோயம்புத்தூர்; iii. 1909; iv. செ.மூ.எ. 1174; v. 21×14 செ மீ.; vi. 3–0–0 ; vii. சிவபெருமானைக் குறித்த புராண வரலாறுகள் பல அமைந்துள்ளன. ஞான சங்கிதை, தர்ம சங்கிதை என இருபெரும் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் முறையே 78 அத்தியாயங்களும் 21 அத்தியாயங்களும் உள்ளன. viii. 288/1909/I.

Q23 : 2291

**வேலாயுத முதலியார், தொழுவூர்—மொ.து.**

537. i. மார்க்கண்டேய புராணம்—வசன காவியமும் அரும்பத விளக்கமும்: இரண்டாம் பதிப்பு; ii. வே. திருநாகேஸ்வர முதலியார், தொழுவூர் & அண்ணாமலை முதலியார், சிறுமணவூர் ; ஆயுர்வேத அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. உ.ப. 88+163+44 ; v. 21×14 செ.மீ.; vi. 1-8-0 ; vii. இது பதினெண் புராணங்களுள் ஒன்று. வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப் பெற்றது. வடமொழி நூலிலுள்ள 133 அத்தியாயங்களில் இருபத்து நான்கு அத்தியாயங்களே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. மார்க்கண்டேயர் வரலாறும் நூல் முகப்பில் தரப்பெற்றிருக்கிறது. ஈற்றில் இந்நூலாசிரியர் தொழுவூர் வேலாயுத முதலியாரின் வரலாறு விரிவாக உள்ளது. நூலுள் எடுத்தாண்ட மேற்கோட் பகுதிகளுக்கு விளக்கமும் தரப் பெற்றிருக்கிறது. viii. 123/1909/III.

Q23 : 2291

## 294.552—பிரம்ம சமாசம்

**நாராயண அய்யர், ப, & சுப்பிரமணிய அய்யர், வி. என்.**

538. i. சுகிர்தம் பயக்கும் வாழ்நாள் முறை ; ii. விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை; iii. 1910; iv. உ.ப. 14; v. 17×10 செ.மீ. ; vi. ........; vii. மதுரைப் பிரமஞான சபையாரின் 29-ஆவது வெளியீடு. வாழ்க்கையில் பின்பற்றவேண்டும் நல்வழிகளைப் போதிப்பது. viii. 688/1910/II.

Q29M2

539. i. மடங்கள், மடாதிபதிகள், அவர்களின் கடமை ; ii. ...... ; iii. 1910; iv. உ.ப. 20 ; v. 22×14 செ.மீ.; vi.......... ; vii. மதுரைப் பிரமஞான சங்கத்தாரால் வெளியிடப் பெற்றது. இது 27–ஆவது வெளியீடு. ஹிந்து மடங்களையும் மடாதிபதிகளையும் பற்றிய குறிப்புக்கள் அடங்கியுள்ளன. (The Madura Hall of Theosophy, Tract No. 27). viii. 609/1910/II.

Q29M2

**ஸாம்பசிவ அய்யர், ஜி.—மொ. து.**

540. i. பிரம்மஞான ஸங்கிரகம்; ii. ஸ்காட்டிஷ் பிராஞ்சு பிரஸ், நாகப்பட்டினம் ; iii. 1909; iv. உ.ப. 99; v. 18×11 செ.மீ.; vi. .........; vii. வி. டப்ளியு. லெட்பீடர் இங்கிலீஷில் இயற்றிய நூலின் மொழிபெயர்ப்பு. இதில் பிரம்ம ஞான சாஸ்திரத்தின் கொள்கைகளெல்லாம் சுருக்கமாயும் மிகத் தெளிவாயும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. viii. 325/1909/I.

Q29M2

## 294.554—வைணவ சமயம் : சமய நெறிகள்

**இராஜ கோபால் பிள்ளை, ம.**

541. i. திராவிட வேத விபரீதார்த்த திரஸ்காரம் ; ii. கண்டால அப்பய்ய நாயுடு ; மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1901; iv. உ.ப.+செ.மு.ப. 8+25 ; v. 18×11 செ.மீ.; vi. 0–2–0 ; vii. மாறன் சடகோபன் அருளிய திருவாய்மொழிக்கு மாறுபொருள் கூறுவோர் தம் கூற்றை மறுத்துச் செம்பொருள் உரைப்பது. viii. 170/1901/IV.

Q22 : 4

542. i. **தனியன் புஸ்தகம்;** ii. சாமண்ணு ஸ்ரீநிவாச தாதாசாரியர்; ராமப் பிரசன்னோதய அச்சுக்கூடம், சென்னை; iii. 1902; iv. செ.மூ.ப. 12; v. 18×11 செ.மீ.; vi. 0-2-0; vii. ஸ்ரீமத் நாதமுனிகள் வம்ச பரம்பரை முதலியனபற்றி உரைப்பது. மேலும், திருமண், த்யானசுலோகம், வாக்கிய குருபரம்பரை, மூல மந்த்ரத்யான சுலோகம் முதலியவை உள்ளன. viii. 172/1902/IV.

**Q22 : 4**

**ஸ்ரீசைலநாதய்யர்**

543. i. ப்ரபந்நஜந திருவாராதந க்ரமம்; ii. அப்பு—ஸ்ரீநிவாஸாசாரியார்; ஸ்ரீநிகேதந முத்ராக்ஷரசாலை, சென்னை; iii. 1903; iv. உ. ப. 4+74; v. 18×11 செ.மீ.; vi. 0-4-0; vii. திருமாலுக்குத் திருவாராதனம் செய்யும் கிரமம் பற்றி உரைப்பது; வடமொழியினின்றும் மொழி பெயர்க்கப் பெற்றது. தோத்திரப் பாடல்கள் முதலியன சேர்க்கப்பெற்றுள்ளன. viii. 122/1903/I.

**Q22 : 4**

## 294·554—வைணவ சமயம் : தோத்திரம்

**அரங்கசாமி அய்யங்கார், உ.**

544. i. வான மாமலை ஸ்வாமி மாலை; ii. கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்; கார்டியன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1909; iv. செ.மூ.எ. 30; v. 18×12 செ.மீ.; vi. ......; vii. வானமாமலையில் உள்ள ஜீயர் சுவாமி கலியனிராமாநுச முனிவனைக் குறித்த துதி மாலை. viii. 95/1909/IV.

**Q22 : 417**

**அழகிய மணவாள ராமாநுஜ ஏகாங்கி ஸ்வாமி, திருச்சித்திரகூடம்.**

545. i. திருக்கோவலூர் ஆயனார் திருமாலை; ii. ஸ்ரீ பராங்குச விலாச அச்சுக்கூடம், சிதம்பரம்; iii. 1909; iv. செ.மூ.எ. 3+30; v. 13×11 செ.மீ.; vi. ..........; vii. திருக்கோவலூரில் விளங்கும் பெருமாளாகிய ஆயனாரைக் குறித்த துதி மாலை. viii. 776/1909/IV.

**Q22 : 417**

**இராகவலு இராமானுஜ் தாசர், பூ.**

i. மோக்ஷ சூக்ஷ்ம மென்னும் ஸ்ரீ விஷ்ணு தோத்திர நாமாவளி (தொ. எ. 1302 பார்க்க); ii. ஆ. நம்பி நாயுடு & கூ. மு. யதிராஜுலு நாயுடு; எம்பிரஸ் ஆப் இண்டியா அச்சுக்கூடம்;

iii. 1903 ; iv. செ.மூ.ப. 8 ; vii. *தசாவதார மகிமை, காரண மகிமை, திவ்யதேச மகிமை, தோத்திர மகிமை, திருவரங்க மகிமை, அடிமையின் சிறப்பு, ஆகியவை பற்றி நாமாவளியாய் உரைப்பது.* viii. 13/1903/III.

Q22:417

6. i. *மணவாள மாமுனி மாலை* ; ii. *பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார்; கல்யாண சுந்தரம் முத்திராசாலை, தஞ்சை* ; iii. 1910 ; iv. செ.மூ. எ. 108 ; v. 21×14 செ.மீ. ; vi. 0–1–0 ; vii. *காயத்திரி நூற்றெட்டு என்னும் எண்ணினால் இராமாநுச நூற்றந்தாதியில் 108 பாடல்களை அமுதனார் பாடியது போலவே, இம்மாலை பாடிய பக்தரும் 108 பாடல்கள் பாடியுள்ளார். இவை மணவாள மாமுனிவர் என்னும் ஆச்சாரியாரைக் குறித்த துதி மலர்கள் ஆம். ஆழ்வார் திருநகரியில் கிடைத்த ஒரு பிரதியின் துணைக்கொண்டே இப்பதிப்பினைப் பதிப் பாசிரியர் அச்சிட்டுள்ளார். பதிப்பாசிரியர் பி. ஆர். கிருஷ்ணமாச்சாரியார் இதற்குக் குறிப்புரை எழுதிச் சேர்த்துள்ளார்.* viii. 601/1910/I.

Q22:417

547. i. **கிருஷ்ண நாம கீதாவளி** ; ii. *ஆர். வெங்கடாசலம் அண்டு கோ, மதராஸ் ; கபாலி பிரஸ், சென்னை* ; iii. 1906 ; iv. செ.மூ.எ. 54 ; v. 12×9 செ.மீ. ; vi. 0–0–6 ; vii. *ஸ்ரீ பாகவதத்தின் தசமஸ்கந்த கதாரசத்தைக் காட்டுவது இந்த நாமாவளி. 108 நாமாவளிகள் உள.* viii. 165/1907/I.

Q22:417

i. **கிருஷ்ணஷ்டோத்தர சத நாமாவளி** (தொ. எ. 563 பார்க்க) ; ii. *அரங்கசாமி முதலியார் ; மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை* ; iii. 1899 ; iv. செ.மூ.எ. 108 ; vii. *கண்ணனை அருச்சிப்பதற்குரிய நூற்றெட்டு நாமங்கள் கொண்டது. பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்றது.* viii. 289/1901/IV.

Q22:417

**கோவிந்தராஜ முதலியார், கோ.**

548. i. *ஆழ்வார்கள் உயிர் வருக்க மாலை* ; ii. *செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், சென்னை* ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 1+16+1 ; v. 13×9 செ.மீ. ; vi. .......... ; vii. *ஆழ்வார்களின் புகழைப் பேசி அவர்களை வணங்குவது. பொய்கை யாழ்வார் முதலிய பன்னிரு ஆழ்வார்களைக் குறித்தும் அகர வருக்கம் தொடங்கி ஔகார வருக்கம் ஈறுகப் பன்னிரண்டு துதிப் பாக்கள் உள. நூல் முதலில் 4 காப்புச் செய்யுட்களும் உள.* viii. 297/1905/I.

Q22:417

i. **சதுர்விம்சதி நாம ஸங்கீர்த்தனம்** (தொ. எ. 1302 பார்க்க); ii. ஆ. நம்பி நாயுடு; எம்பிரஸ் ஆவ் இண்டியா அச்சுக்கூடம்; iii. 1903; iv. செ.மூ.எ. 24; vii. திருமாலின் 24 நாமங்களையும் தனித் தனிக் கூறிப் புகழும் தோத்திர மாலை. viii. 13/1903/III.

Q22:417

**சபாபதி முதலியார்**

549. i. வேங்கடேசப் பெருமாள் துதி; ii. வ. லக்ஷ்மண நாயுடு; ஸ்ரீ வைஜயந்தி அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1902; iv. செ.மூ.எ. 3+10; v. 14×11 செ.மீ.; vi. ........; vii. வேங்கடேசப் பெருமாளைத் துதிக்கும் பதிகப் பாமாலை. viii. 267/1902/I.

Q22:417

i. **சரண சங்கீர்த்தன நாமாவளி** (தொ. எ. 1302 பார்க்க); ii. ஆ. நம்பி நாயுடு & கூ. மு. யதிராஜுலு நாயுடு; எம்பிரஸ் ஆவ் இண்டியா அச்சுக்கூடம்; iii. 1903; iv. செ.மூ.ப. 7; vii. நாராயணனின் திருவடியில் சரணம் புகுதல் பற்றிய தோத்திரம். viii. 13/1903/III.

Q22:417

550 i. **திருப்பதி வெங்கடாஜலபதி போற்றி மாலை**; ii. ரா. ராதா கிருஷ்ண நாயுடு; சண்பக லட்சுமி விலாச அச்சுக்கூடம், இராஜமன்னார்குடி; iii. 1910; iv. செ.மூ.எ. 117; v. 22×14 செ.மீ.; vi 0-1-0; vii. திருப்பதி வெங்கடாசலபதி பேரில் பாடிய தோத்திர மாலை ஒவ்வொரு பாடலிலும் போற்றி என்னும் சொல்லை முடிவாகக் கொண்டு பாடியிருத்தலினால் போற்றி மாலை என்று பெயரிடப் பெற்றிருக்கிறது. கோதண்டராமஸ்வாமி பேரில் பாடப் பெற்ற திருத்தாண்டகப் பாடல்கள் 13 நூலின் இறுதியில் உள்ளன. viii. 131/1910/IV.

Q22:417

**திருவண்ண நாதக் கவிராஜர்**

551. i. திருக் குருகூர் மாலை; ii. ஆரியப் பிரகாசினி அச்சியந்திர சாலை, திருநெல்வேலி; iii. 1901; iv. செ.மூ.எ. 1+100+5=106; v. 14×11 செ.மீ.; vi 0-1-0; vii. திருக் குருகூரின் இயல்பும் அங்கு நிகழும் சிறப்புக்களும் திருமால் பெருமையும் நம்மாழ்வாரின் ஏற்றமும் பல படியாகக் கட்டுரைக்கப்பட்டுள்ளன. இம்மாலை வெண்பாவினால் ஆகியது. viii. 71/1901/IV.

Q22:417

**துரை ராமாநுஜ தாஸர்**

552. i. விஷ்ணு நாமாவளியும், ஸ்ரீ விஷ்ணு நாமாமிர்தக் கீர்த்தனையும் ; ii. நாராயணசாமிப்பிள்ளை ; நற்றமிழ் விலாச அச்சியந்திர சாலை ; iii. 1903 ; iv. செ.மூ.ப. 24 ; v. 18×11 செ.மீ.; vi. 0-1-0 ; vii. நாமாவளியில் 123 கண்ணிகள் உள்ளன. அடுத்துவரும் நாமாமிர்தக் கீர்த்தனையில் 18 பாடல்கள் உள்ளன. இவை திருமால் திருப்புகழ்களைப் பேசுகின்றன. viii. 207/1903/II.

Q22:417

**துளசிங்க முதலியார், சு.—மொ. து.**

553. i. ஸ்ரீ ராமகோடி (பஞ்சலட்சம் அடங்கியது) ; ii. சுந்தர விலாச அச்சுக்கூடம் ; iii. 1905 ; iv. செ.மூ.எ. 5 லட்சம் ; v. 25×17 செ.மீ.; vi. 2-0-0 ; vii. ஸ்ரீ ராம் என்னும் நாமம் கோடி எண்ணிக்கை அச்சிடப் பெற்றிருக்கிறது. ஐந்து லட்ச நாமம் அடங்கிய இந்நூலைப் பூசை செய்வதன் பொருட்டு அச்சிட்டிருக்கின்றனர். viii. 7/1905/II.

Q22:417

**தெய்வநாயகப்பெருமாள் நாயுடு**

554. i. திவ்யாராதன மாலை ; ii. சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, தூத்துக்குடி ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 10+4+104+3=121 ; v. 21×13 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. இந்த மாலை ஸ்ரீமத் வானுசலக் கலியனிராமாநுச முனிவர் பேரில் பாடப்பெற்றது. நாங்குநேரி என்றும் தோத்தாத்திரி என்றும் வழங்கும் வானமாமலை மடாலயத் தலைவராக விளங்கியவர் கலியன் இராமாநுச முனிவர். மதுரை அரங்கய்யா முதலிய பல புலவர்கள் இதற்குச் சாத்துக் கவிகள் பாடியுள்ளனர். viii. 461/1910/II.

Q22:417

555. i. நரசிங்கப்பத்து ; ii. ஆர். வி. பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. செ.மூ.எ. 10 ; v. 14×11 செ.மீ. ; vi. ...... ; vii. நரசிங்கப்பெருமாளைக் குறித்த துதிமாலை. இதில் உள்ள பத்துப் பாடல்களுள் முதல் ஒன்பதும் ‘ நரசிங்க ரூபா நமஸ்தே நமஸ்து ’ என்னும் முடிவினைப் பெற்றுள்ளது. இறுதிப் பாடல் இதனை ஓதுவார் பெறும் பயன் பற்றி உரைக்கின்றது. viii. 177/1909/II.

Q22:417

**பத்ராசல ராமதாஸர்**

556. i. சதுர்விம்சதிநாம ராமாயண சூர்ணிகை (ஸ்ரீராமாஷ்டகத்துடன்) ; ii. ஸ்ரீவித்தியா விநோதினி அச்சுக்கூடம், தஞ்சை ; iii. 1906 ; iv. செ.மூ.ப. 3+24=27 ; v. 12×9 செ.மீ. ; vi. 0-0-6 ; vii. 24 தோத்திரங்கள். இவை வடமொழி சுலோகங்களின் தமிழ் எழுத்தில் அமைந்த பதிப்பு. viii. 151/1906/III.

Q22:417

i. ராமாஷ்டகம் (தொ.எ. 556 பார்க்க); iii. 1906; iv. செ.மூ.எ. 1+8; vii. இராமச்சந்திரமூர்த்தியைக் குறித்த துதி; எட்டு சுலோகங்கள் உள; இந்த வடமொழிச் சுலோகங்கள் தமிழ் லிபியில் அச்சிடப்பெற்றுள்ளன. viii. 151/1906/III.

Q22:417

**பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்**

557. i. திருவரங்கத்து மாலை; ii. இராமசாமி நாயுடு, காஞ்சிபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. அக்டோபர், 1903; iv. செ.மூ.எ. 2+112; v. 17×12 செ.மீ.; vi. ......; vii. திருவரங்கப்பெருமானைக் குறித்த தோத்திர மாலை. இது கலித்துறையந்தாதி. viii. 250/1903/IV.

Q22:417

i. திருவரங்கத்து மாலை—மூலம் (தொ.எ. 1696 பார்க்க); ii. கா. ராமசாமி நாயுடு; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. அக்டோபர், 1904; iv. செ.மூ.எ. 2+112; vii. திருவரங்கத்துப் பெருமானைக் குறித்த துதி மாலை. viii. 49/1905/I.

Q22:417

558. i. திருவேங்கட மாலை; ii. இராமசாமி நாயுடு, காஞ்சீபுரம்; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை; iii. ஜூலை, 1903; iv. செ.மூ.எ. 3+100+1; v. 17×12 செ.மீ.; vi. ......; vii. திருவேங்கடத்தின் சிறப்பும், திருவேங்கடேசப் பெருமானின் புகழ்களும் கூறுவது. வெண்பாவினால் ஆகியது. இதன் பிற்பகுதி 51-ஆம் பாடல் தொடங்கி 100-ஆம் பாடல் வரையுள்ள 50 பாடல்களும் சிலேடை வெண்பாக்கள். viii. 128/1903/III.

Q22:417

i. திருவேங்கட மாலை (தொ.எ. 1696 பார்க்க); ii. இராமசாமி நாயுடு; மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை; iii. ஜூலை, 1903; iv. செ.மூ.எ. 3+101; vii. திருவேங்கடத்தின் சிறப்பும் திருவேங்கடநாதரின் புகழும் கூறுவது. இதன் பிற்பகுதி 51-ம் பாடல் தொடங்கிச் சிலேடை வெண்பாக்கள். viii. 49/1905/I.

Q22:417

**பெருமாளய்யங்கார்**

i. ஆஞ்சனேய மாலை (தொ.எ. 1698 பார்க்க); ii. ஸ்ரீ ருக்மணி விலாஸம் பிரஸ்,, மதுரை; iii. 1910; iv. செ.மூ.எ. 16; vii. அநுமானைப் பற்றிய துதி மாலை; ஆஞ்சநேய பஞ்சரத்தின மாலை, ஆஞ்சநேய மாலை என்று இரு சிறு நூல்களாக

உள்ளன. இவற்றுள் முன்னது ஆசிரிய விருத்தத்தாலாகிய துதி மாலை. பின்னது வெண்பா, கலித்துறை, விருத்தம் முதலிய பாடல்களினால் அமைந்த துதி நூல் ஆகும். viii. 540/1910/IV.

Q22:417

i. சடகோப மாலை (தொ.எ. 1698 பார்க்க); iii. 1910; iv. செ.மூ.எ. 1+50; vii. குருகூரில் எழுந்தருளியிருக்கும் சடகோபரைப் பற்றிய துதி மாலை. இதன் ஆசிரியராகிய வேங்கடதாசன் நடமாட முடியாத நிலையில் இருந்தபோது, சடகோபரைத் தரிசிப்பதாக வேண்டிக்கொண்டு மன்மத வருஷம் தை மாதம் 12-ஆம் தேதி முதல் தினம் ஒரு கவியாக விண்ணப்பம் செய்துவர 35 பாடலில் பூரண குணம் பெற்றுத் திருநகரி சென்று ஆழ்வாரைத் தரிசித்தார் என்னும் செய்தி இந்நூலின் தொடக்கத்தில் தரப்பெற்றிருக்கிறது. viii. 540/1910/IV.

Q22:417

i. திருநகரி முதலான திவ்ய தேசத்தெம் பெருமான் விஷயம் (தொ.எ. 1698 பார்க்க); iii. 1910; iv. செ.மூ.ப. 24; vii. ஆழ்வார் திருநகரி, தொலைவில்லிமங்கலம், தென் திருப்பேர், திருக்கோளூர், வரகுணமங்கை, திருப்புளிங்குடி முதலிய திருப்பதிகளில் விளங்கும் பெருமானைப் பற்றிய துதி மாலை. ஸ்ரீவரமங்கைப் பெருமான் உற்சவம், திருக்குறுங்குடி நம்பி உத்ஸவம் பற்றியும் விரிவாகப் பாடியுள்ளார். viii. 540/1910/IV.

Q22:417

i. விஷ்ணு துவாதச நாமமாலை (தொ.எ. 1698 பார்க்க); iii. 1910; iv. செ.மூ.எ. 12; vii. திருமாலின் திருநாமங்களாகிய கேசவன், நாராயணன் முதலிய பன்னிருநாமங்களும் தனித்தனி ஒவ்வொரு பாடலில் அமையப் பாடப்பெற்ற துதி மாலை. viii. 540/1910/IV.

Q22:417

559. i. **மகர நெடுங்குழைக்காதர் பேரில் பாமாலை**; ii. எஸ். கே. ராமகிருஷ்ண அய்யங்கார், அழகியபாண்டிபுரம் & கு. சீ. குழைக்காதய்யங்கார், தென் திருப்பேரை; சாரதா அச்சாபீஸ், பாளையங்கோட்டை; iii. 1910; iv. செ.மூ.எ. 3+100+1=104; v. 21×14 செ.மீ.; vi. 0–2–0; vii. தென் திருப்பேரையில் கோயில் கொண்டருளும் சுவாமி மகரநெடுங்குழைக்காதர் பேரில் பாடப்பெற்றது. இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் இவர் வாழ்ந்தார் என்றும்,

இப்புகடைால் தம்மவர் படும் சிறைத் தண்டனையைப் போக்கினுர் என்றும் முகவுரையில் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். பிற்காலத்திலும் துன்பமுற்றேர் இந்நூற்பாடல்களைப் பாடி உய்தி பெறுகின்றனராம். viii. 387/1910/II.

Q22:417

மணவாள மாமுனிகள்

560. i. உபதேசரத்தினமாலை ; ii. கிருஷ்ணமாச்சாரிய ஸ்வாமி & முத்துக்கிருஷ்ண நாயுடு; செங்கல்வராய நாயக்கர் ஆர்பனேஜ் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1907 ; iv. செ.மூ.உ.எ. 73 ; v. 22×14 செ.மீ. ; vi. ...... ; vii. மணவாள மாமுனிகள் பாடிய இந்நூலுக்கு பிள்ளை லோகார்யஜீயர் அருளிச்செய்த வியாக்கியானமும் பதவுரையும் அமைந்துள்ளன. ஆழ்வார் ஆசாரியர்களின் துதியாக உள்ளது. viii. 102/1908/I.

Q22:417

ராக்கப்பனம்பலம், கி. மூ., கீறனிப்பட்டி.

561. i. தென் திருப்பதி என்கிற அரியக்குடி ஸ்ரீநிவாஸகர் பேரில் பாடிய அரிகுக்ஷ்ம விளக்க உற்சவத் தோத்திரம் ; ii. மீன லோசனி அச்சுக்கூடம், தேவகோட்டை ; iii. 1910 ; iv. செ.மூ.எ. 10+16 ; v. 18×11 செ.மீ. ; vi......... ; vii. அரியக்குடி வாழ் ஸ்ரீநிவாஸகப் பெருமான் பேரில் பாடப் பெற்றவை. இராஜகோபுரத் தெரிசனம் தொடங்கி மேலும் இந்திரன் திக்கு, அக்கினி திக்கு முதலிய திக்குகளில் அவ்விறைவன் தெரிசனம் செய்து புகழ் கூறுவதாக உள்ளது. இதன் பின்னருள்ள சிங்கார நோட்டு என்னும் பகுதியில் அப் பெருமான் அருள் வேண்டிப் பாடிய பாடல்கள் உள. viii. 255/1910/II.

Q22:417

i. ராமாஷ்டோத்தர சதநாமாவளி (தொ.எ. 563 பார்க்க); ii. அரங்கசாமி முதலியார் ; மதராசு ரிப்பன் அச்சியந்திர சாலை, சென்னை ; iii. 1899 ; iv. செ.மூ.எ. 108 ; vii. இராமபிரானை அருச்சிப்பதற்குரிய நூற்றெட்டு நாமங்கள் உள்ளன. பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்றது. viii. 289/1901/IV.

Q22:417

விசலியென்னும் ஸ்ரீவைஷ்ணவர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

562. i. ஆண்டாள் சந்திர கலா மாலை ; ii. மு. வேணுகோபாலசாமி நாயுடு, கோயமுத்தூரைச் சார்ந்த பூளைமேடு ; செங்கல்வராய நாயகர் ஆர்பனேஜ் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 1+3+16+1+1 ; v. 16×13 செ.மீ. ; vi. .......;

vii. பதினாறு செய்யுட்களைக் கொண்ட தோத்திர மாலை. சந்திரனது கலைகள் பதினாறாதலால் 'சந்திர கலா' என்பது பதினாறென்னும் தொகையினைக் குறித்து நின்றது. ஆண்டாளின் அருட் புகழை ஓதுவது. viii. 165/1904/II.

Q 22:417

563. i. **விஷ்ணு ஸகஸ்ர நாமாவளி**; ii. *அரங்கசாமி முதலியார்; மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை*; iii. 1899; iv. செ.மூ.எ. 1001 ; v: 14 × 11 செ.மீ. ; vi..........; vii. *திருமாலின் திருநாமங்கள் ஆயிரத்தொன்று உள்ளது; அருச்சனைக்கு உதவுவது. பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு பரிசோதிக்கப் பெற்றது.* viii. 289/1901/IV.

Q22:417

**ஸௌமிய நாராயணய்யங்கார்**

564. i. *வடமலைநாதன் சத்திய கிரிநாதர் உஜ்ஜீவந நாயகி தோத்திரப் பாமாலை*; ii. *மீனலோசனி அச்சியந்திரசாலை, தேவகோட்டை*; iii. 1906; iv. செ.மு.ப. 60 ; v. 22 × 14 செ.மீ. ; vi. 0-4-0; vii. *வடமலை மாதவன் மடக்கடிப் பதிகம், சத்யகிரி நாதர் வருகைப் பதிகம், திருமெய்யம் உஜ்ஜீவந நாயகி பேரில் பல சந்தக் கும்மி, ஹரிநாம ஸ்தோத்திரக்கீர்த்தனங்கள் ஆகியவை இதில் அமைந்துள்ளன.* viii. 61/1907/IV.

Q22:417

## 294.554—வைணவ புராணங்கள்

**சுப்பராய ஐயர், சே.—மொ.பெ.**

565. i. *விஷ்ணு புராணம் : முதற் பதிப்பு*; ii. *ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக்கூடம், சென்னை*; iii. 1904 ; iv. செ.மூ.எ. 4446 ; v. 25 × 16 செ.மீ. ; vi. ...... ; vii. *புராணங்களில் சிறந்ததாகப் போற்றப் பெறுவது. தத்துவச் சிறப்புக்கள் கொண்டது. ஆறு அம்சங்களாகிய பெரும் பிரிவுகளையும் 126 அத்தியாயங்களாகிய சிறு பிரிவுகளையும் கொண்டது. இதற்குப் புராண ரத்தினம் என்றும் ஒரு பெயர் உண்டு. இத்தமிழ்ப் புராணம் விருத்த யாப்பில் அமைந்துள்ளது.* viii. 224/1904/IV.

Q22:222

**தேவேந்திர நாத பண்டிதர், செழுமணவை.**

566. i. *ஆஞ்சநேயர் பராக்கிரமம்*; ii. *சி. எஸ். ராமய்யா அண்டு பிரதர்ஸ்; கோல்டன் அச்சியந்திரசாலை, சென்னை*; iii. 1909 ; iv. உ.ப. 4+134 ; v. 22× 14 செ.மீ. ; vi. 0-8-0 ;

vi. இராமபிரானுக்குத் தொண்டனாய் இராமாயண காவியத்தில் புகழ் பெறும் ஆஞ்சநேயரின் வெற்றிப் பிரதாபங்களை எடுத்தியம்புவது. 32 அத்தியாயங்கள் கொண்டது. புராண இதிகாசங்கள் நோக்கித் தொகுத்து எழுதப் பெற்ற நூல். "ஸ்ரீ மகாவீரப்பிரதாப ஆஞ்சநேயர் பராக்கிரமம்" என்பது இந் நூலின் முழுப் பெயர். viii. 25/1909/III.

Q22:222

567. i. **நாகை ஸ்ரீ அழகு சிங்க சுவாமிகள் அவதார கட்டம், ரகசியம்:** இரண்டாம் பாகம்; ii. நாகேஸ்வர அய்யர்: ஜோதிர் தரங்கணி பிரஸ், திருத்தருப்பூண்டி; iii. ஜனவரி, 1910; iv. செ. மூ. ப. 8; v. 20×14 செ.மீ; vi. ........; vii. ஆதிமாதர்களான ஸ்ரீ லட்சுமி, பார்வதி, சரஸ்வதி, காயத்திரி, யோகீசுவரி என்னும் ஐந்து தாயர்களும் அண்டாண்டங்களையெல்லாம் சுற்றிப் பார்த்து ஜீவர்கள் படும் துயரம் சகியாமல், அவைகளுக்கு நற்கதி வேண்டிப் பகவானைப் பிரார்த்திப்பதாக உள்ளது. இது நாகை அழகு சிங்க சுவாமிகளைப் பற்றிய புராணம். viii. 651/1910/I.

Q22:222

## 294·592—புனித நூல்கள்—உபநிடதம்

568. i. **தைதரீயோபநிஷத் திராவிட பாஷ்யம்**; ii. கு. அநந்தாசாரியார்; மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை; iii. 1898; iv. உ.ப. 143: v. 25×16 செ.மீ.; vi. ........; vii. இந் நூற்குச் சங்கராசாரியர், ரங்கராமாநுஜாச்சாரியார் செய்தருளிய பாஷ்யத்தின் மொழி பெயர்ப்பு. viii. 212/1901/II.

Q2:24

**பிச்சுக் குருக்கள்**

569. i. உபநிடத சாரம்; ii. சரஸ்வதி விலாச அச்சுக்கூடம், மாயவரம்; iii. 1909; iv. செ.மூ.உ.எ. 48; v. 22×14 செ.மீ.; vi. .......; vii. இதன் ஆசிரியருக்கு ஐங்கரதாசன் என்னும் ஒரு பெயரும் உண்டு. குரு சீடனுக்கு உபதேசிப்பதாகக் கூறுவது. முப்பத்தாறு தத்துவங்களின் உண்மையை விளக்குவது. பாடல்களுக்கு உரையும் தரப்பெற்றிருக்கிறது. viii. 188/1901/I.

Q2:24

678. i. **பால போதனுமுறை—சிவிக்ஸ்** ; ii. தாம்ஸன் கம்பெனி ; மினர்வா பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 102 ; v. 18×13 செ.மீ; vi. . . . ; vii. இது உபாத்தியாயர்களின் உபயோகத்திற்காக இயற்றப் பெற்றது. இதனை இயற்றியவர் செங்கற்பட்டு ஜில்லா உத்திரமேரூர் ரேஞ்சு ஸ்கூல் சூபர்வைசராவார். இதில் உள்ள செய்திகளை உபாத்தியாயர் தெரிந்துகொண்டு மாணவர்க்குக் கற்பித்தல் முறையாகும். viii. 420/1908/III. W:5

## 320·954—இந்திய அரசியல்

**அரவிந்த கோஷ்—மொ. து.**

679. i. தற்கால நிலைமை ; ii. இந்தியன் ஸ்டீம் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 32 ; v. 18×13 செ.மீ.; vi. 0-2-0 ; vii. நாட்டின் நிலைமை குறித்து 1908-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மகாஜன வாடியில் செய்த உபந்நியாசத்தின் மொழி பெயர்ப்பு; viii. 21/1908/II. W.44

680. **இந்தியா—அதன் அரசியலும், வருங்கால நிலையும்** ; ii. சுதேச மித்திரன் பிரஸ், சென்னை; iii. 1905 ; iv. உ.ப. 31 ; v. 18× 13 செ.மீ.; vi. 0–1–6 ; vii. இங்கிலாந்தில் பிரசுரமாகும் "ரெவியூ ஆப் ரெவியூஸ்" என்ற மாதாந்திரப் பத்திரிகையில் "வரப் போகிற மனிதர்கள் வரப்போகின்ற விவகாரங்களைப் பற்றிச் சொல்வது" என அப்பத்திரிகாசிரியர் தொகுத்துப் பிரசுரித்திருக்கும் வியாசங்களில் ஒன்றாகும் இது. இதன் தமிழ் மொழி பெயர்ப்பே இந்நூல். viii. 5/1905/IV.

W.44

681. **இந்தியா ஆட்சியைப் பற்றி இருவர் அபிப்ராயம்** ; ii. சுதேச மித்திரன் பிரஸ், சென்னை; iii. 1906; iv. உ.ப. 58 ; v. 19×12 செ.மீ.; vi. 0–2–6; vii. . . . ; viii. 98/1907/I.

W.44

682. **இந்தியா கவர்மெண்டில் திருத்தங்கள்**; ii. சுதேசமித்திரன் ஆபீஸ்; இந்தியா ஸ்டீம் பிரிண்டிங் பிரஸ், சென்னை ; iii. 1908; iv. உ.ப. 220 ; v. 18× 13 செ.மீ.; vi. 0–12–0 ; vii. இந்தியா ராஜாங்கத்தின் அமைப்பையும் அதிலுள்ள குணதோஷங்களையும் அறிய உதவும் நூல். பார்லிமெண்டில் லார்ட் மார்லியின் பேச்சும், சூரத் காங்கிரசின் தலைவர் பேச்சும் கோகலே முதலாயினோர் அதிகாரப் பிரிவினையைப் பற்றிப் பேசிய பேச்சும் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தரப்பெற்றிருக்கின்றன. சிம்லா திருத்தப் பிரேரேபணைகள் பற்றிப் பம்பாய் பிரஸிடென்ஸி சபையின் அபிப்பிராயங்களும் தரப்பட்டுள்ளன. viii. 338/1908/ III.

W.44

683. i. **காங்கிரஸ் பிரசங்கங்கள்—1906** ; ii. சுதேசமித்திரன் பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. உ.ப. 156 ; v. 18×12 செ.மீ.; vi. 0–8–0 ; vii தாதாபாய் நௌரோஜியின் சரித்திரமும் அவர் 1906 ஆம் ஆண்டு காங்கிரஸில் ஆற்றிய பிரசங்கமும், டாக்டர் பிஹாரிகோஷின் பிரசங்கமும் அடங்கியுள்ளன. viii. 51/1907/II.

W.44

**குப்புசாமி முதலியார், கல்குளம்.**

684. i. காங்கிரஸ் மகாசபை ; ii. ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 69; v. 19×13 செ.மீ.; vi. 0–4–0 ; vii. காங்கிரஸ் மகா சபையின் தொடக்கம் முதல் 16-ஆம் காங்கிரஸ் சபை வரையில் உள்ள சபை நிகழ்ச்சிகள் முதலிய விருத்தாந்தங்கள் அடங்கியுள்ளன. viii. 166/1902/IV.

W.44

685. i. **கூடலூர் முனிசிபாலிடியின் பிரபாவம்** ; ii. நீமா பிரஸ், திருப்பாப்புலியூர் ; iii. 1907 ; iv. செ.மூ.எ. 1+50+2 ; v. 21 × 14 செ.மீ; vi. . . . ; vii. கடலூர் நகர சபையின் வரலாறும் சிறப்புக்களும் கூறுவது. இதனைச் சுப்பராயலு ரெட்டியார், பி.எ., பி.எல்., அவர்கள் நடத்தி வந்தனர். viii. 349/1907/IV.

W.44

**கோகலே, கோபாலகிருஷ்ண:**

686. i. பிரஸிடென்ஷியல் அட்ரெஸ் [தலைமை உரை]; ii. சுதேசமித்திரன் பிரஸ்; iii. 1905; iv. உ.ப. 68; v. 19×13 செ.மீ.; vi. 0-6-0; vii. 1905-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் காசியில் கூடிய 21-வது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் மகா சபையில் அக்கிராசனம் வகித்த கனம் கோபாலகிருஷ்ண கோகலே செய்த தலைமைச் சொற்பொழிவின் தமிழ் மொழிபெயர்ப்பு இந்நூல். viii. 341/1906/I.

W.44

**சங்கரலிங்கம் பிள்ளை, அ.**

687. i. காங்கிரஸ் மகாசபை; ii. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்; வி. என். ஜூபிலி பிரஸ், சென்னை; iii. 1901; iv. உ.ப. 23+107; v. 19×13 செ.மீ; vi. 0-8-0; vii. 15-16 ஆம் காங்கிரஸ்களின் நடவடிக்கைகள் அடங்கியுள்ளன. இந்நூலின் ஆசிரியர் சுதேசமித்திரனின் உதவிப் பத்திராதிபராவர். viii. 61/1902/I.

W.44

**சுந்தரையர், வி.**

688. i. ராஜ்ய பரிபாலனமும் தேசாபிமானமும்; ii. ஸ்ரீநிவாஸவரதாசாரி, சென்னை; எஸ். வி. அண்டு கம்பெனி; iii. 1908; iv. உ.ப. 19; v. 21×14 செ.மீ.; vi....; vii. ராஜ்ய பரிபாலனம் பற்றியும் தேசாபிமானம் பற்றியும் விவரிப்பது. viii 436/1908/III.

W.44

**நடேச பிள்ளை, மாயவரம்.**

689. i. சுதேசியவுணர்ச்சியும் அன்னியச் சாமான் விலக்கலும்; ii. சண்முகம் அண்டு கம்பெனி; மகாலட்சுமி விலாச அச்சுக்கூடம்; iii. 1907; iv. உ.ப. 126; v. 18×11 செ.மீ.; vi. 0-5-0; vii. சுதேசியம் பற்றிப் பலரும் அறியும் வண்ணம் எழுதப் பெற்றது. அன்னியப் பொருள்களை விலக்குவதன் அவசியம் பற்றியும் கட்டுரைக்கின்றனர். viii. 200/1907/III.

W.44

**பரமஹம்ஸ பால சுப்பிரமண்ய பிரம்மசுவாமி**

690. i. காங்கிரஸ் கீதை; ii. பரமஹம்ஸ பால சுப்பிரமணிய பிரம்ம சுவாமி; ஆனந்தா அச்சுக்கூடம், சென்னை; iii. 1908; iv. உ.ப.+செ.மூ.ப. 46; v. 10×7 செ.மீ.; vi....; vii. சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபையின் 23-வது கூட்டத் தொடரைப் பற்றியது. இங்கிலாந்து கவர்மெண்டார் பேப்பர் என்ற சஞ்சயன் மூலமாகத் தெரிந்துக் கொள்வதாகப் பாடப் பெற்றது. viii. 118/1908/I.

W.44

**பானர்ஜி, சுரேந்திரநாத் முதலியோர்.**

691. i. சுதேசியமும் சுதந்திரமும்; ii. சுதேசமித்திரன் ப்ரஸ், சென்னை; iii. 1907; iv. உ.ப. 164; v. 18×13 செ.மீ; vi. 0–8–0; vii. பாபு சுரேந்திரநாத் பானர்ஜி, பால கங்காதர திலகர் முதலிய தேச பக்தர்கள் செய்த பிரசங்கங்களின் கோவை. ஆங்கில மூலத்திலிருந்து தமிழாக்கம் பெற்றது. viii. 86/1908/II.

W.44

**விஸ்வநாத அய்யர், வி. எஸ்.**

692. i. பாண்டவர்களின் இராஜாங்க முறைமை; ii. எட்வர்டு பிரஸ், திருவாரூர்; iii. பிப்ரவரி, 1910; iv. உ.ப. 12; v. 19×12 செ.மீ.; vi. . . . ; vii. பாண்டவர் நாளில் நிலவிய அரசியலின தன்மைகளை எடுத்துரைப்பது. பாரதக் கதை நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்து எழுதப் பெற்றது. இது எழுதிப் படிக்கப்பெற்ற சொற்பொழிவுக் கட்டுரை. viii. 650/1910/I.

W.44

## 330—பொருளாதாரம்

### 332·4—பணம்

**இரத்தினசபாபதி அடியார், சி., கூடலூர்.**

693. i. சிக்கன நூல்—அஃது பணஞ் சேர்க்கும் வழி; ii. ஸ்வாமிநாதன் பிரஸ், சென்னை; iii. 1906; iv. உ.ப. 3+22; v. 18×12 செ.மீ.; vi. 0-2-0; vii. பணத்தைச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்து வைக்கவேண்டும் என்பதை நூலாதாரங்கள் பல காட்டி விளக்குகின்றது. viii. 1/1906/III.

X61

### 338·0954—தொழில் முறை

**ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டி. ஆர்.—மொ. து.**

694. i. இந்தியக் கைத்தொழில் முயற்சி; ii. டி. கோதண்டராம ஐயங்கார்; கல்யாண சுந்தரம் பவர் பிரஸ், தஞ்சை; iii. ஜூன், 1907; iv. உ. ப. 215; v. 19×13 செ. மீ.; vi. 1–0–0; vii. கிலின் பர்லோ என்பவர் எழுதிய "இண்டஸ்டிரியல் இந்தியா" என்னும் நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இளைஞரும் முதியோரும் தெரிந்துகொள்ள வேண்டிய பல செய்திகள் இதில் உள்ளன. பத்து அத்தியாயங்கள் கொண்டது. viii. 140/1907/III.

X

## 342·42—இங்கிலாந்து அரசியல்

**ரெங்கசாமி அய்யர், எம். வி., மதுரை.**

695. i. ஆங்கில அரசியல் ; ii. விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1909 ; iv. உ. ப. 175 ; v. 16×12 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. எலிமெண்டரி வகுப்புக்களுக்காக இயற்றப் பெற்றது. 'ஸிவிக்ஸ்' அல்லது ஆங்கில அரசியல் பற்றிய புதிய பாடத்திற்காக இயற்றப்பெற்றது. 19 அத்தியாயங் களில் தேசத்தின் ஆட்சி முறையை விளக்குகிறது. viii. 346/1909/II.

W. 61

696. i, ஆங்கில அரசியல்—இரண்டாம் பாகம் ; iii. 1909 ; iv. உ. ப. 93—175 ; v. 16×13 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. ஆங்கிலேயர் தேசத்தைப் பல இலாகாக்கள் மூலம் ஆண்டு வந்த முறைமையினையும், அந்தந்த இலாகா செய்து வந்த வேலையை யும் விவரித்து உரைக்கின்றது. இதில் 9-ம் அத்தியாயம் காட்டிலாகா தொடங்கி 19-ம் அத்தியாயம வியாபாரமும் கைத் தொழிலும் வரையில் 11 அத்தியாயங்கள் உள. viii. 470/1909/ II.

W.561

697. i. ஆங்கில அரசியல் : இரண்டாம் பதிப்பு ; iii. 1910 ; iv. உ. ப. 196 ; v. 16×12 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. இந்தி யாவில் ஆங்கில துரைத்தனத்தார் செய்த அரசியல் முறைமை பற்றி விவரிக்கும் நூல். பல்வேறு இலாகாக்கள் பற்றியும் அவற்றின் தொழில் முறை முதலியன பற்றியும் விளங்க உரைக்கின்றது. பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான செய்திகள் பல இதில் உள்ளன. viii. 537/1910/II.

W.561

## 343·0954—கிரிமினல் சட்டம்

i. **அடிதண்டனை ஆக்ட்—1864–ம் வருடத்து 6–வது ஆக்ட்** (தொ. எ. 698 பார்க்க) : இரண்டாம் பதிப்பு ; iii. 1904 ; iv. உ. ப. 7 ; vii ...... ; viii. 150/1905/I.

Z44,7,15

i. **இந்தியன் பீனல் கோட்—1860-ம் வருத்து 45-வது ஆக்ட்** (தொ. எ. 698 பார்க்க): இரண்டாம் பதிப்பு ; iii. 1904; iv. உ. ப. 183 ; vii. 23 அத்தியாயங்கள் உள்ளன. அடிக்குறிப் பாகப் பல விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. viii. 150/1905/I.

**Z44,7,15**

i. இந்து தேசத்து சாட்சி ஆக்ட்—1872-ம் வருடத்து 1-வது ஆக்ட் (தொ. எ. 698 பார்க்க) : இரண்டாம் பதிப்பு ; ii. பாலு சகோதரர்கள் ; ஷாம்ராக் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. உ. ப. 77 ; vii. 11 அத்தியாயங்கள் உள. viii. 150/1905/I.

Z44, 7,15

698. i. கிரிமினல் கோட் கிரிமினல் புரோஸிஜர் கோட் போன்ற சட்டங்கள் : இரண்டாம் பதிப்பு ; ii. பாலு சகோதரர்கள் ; ஷாம்ராக் அச்சுக்கூடம், சென்னை ; iii. 1904 ; iv. உ. ப. 4+663+7 ; v. 25×16 செ. மீ. ; vi. 5-0-0 ; vii. நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் கிரிமினல் சட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 150/1905/I.

Z44, 7, 15

i. கிரிமினல் புரோஸிஜர் கோட் (தொ. எ. 698 பார்க்க) : இரண்டாம் பதிப்பு ; iii. 1904 ; iv. உ. ப. 216+145+35 ; vii. 46 அத்தியாயங்கள் உள. பிற்பகுதி ஷெட்யூலில் பல சட்ட திட்டங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. viii. 150/1905/I.

Z44, 7, 15

கிருஷ்ணமாச்சாரியார், கே. ஆர்.

699. i. கிரிமினல் வியவஹார சங்கிரஹம் : முதற் பதிப்பு ; ii. தாம்ஸன் கம்பெனி ; மினர்வா ப்ரஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ. ப. 388 ; v. 25×17 செ. மீ. ; vi. ........ ; vii. இதில் இந்தியன் பீனல் கோட், கிரிமினல் புரோஸிஜர் கோட், சாட்சியச் சட்டம், அடிதண்டனை ஆக்ட்டு, சிறுவர்களைச் சீர் திருத்துவதற்கான ஆக்ட்டு, முதலியவைகளும் ஜெயில் ரூல்கள் பிராதுகள், மனுக்கள் இவைகளுக்கெல்லாம் மசோதாக்களும் அடங்கியுள்ளன. தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் கிரிமினல் சட்டங்கள், கோர்ட்டு நடவடிக்கைகள் முதலியவற்றைத் தெரிந்து கொள்ளும் வகையில் இயற்றப்பெற்றது. viii. 35/1909/II.

Z44, 7, 15

சர்மா, எஸ். கே., பாலக்காடு.

700. i. புதிய சிவில் ப்ராக்டிஸ் என்னும் புதிய ஸிவில் ப்ரொஸிஜர் கோட் : முதல் பதிப்பு ; ii. பிரண்ட்ஸ் அஸோஸியேசன் லிமிடெட், கோயம்புத்தூர் ; iii. 1909 ; iv. உ. ப. 123 ; v. 22×14 செ. மீ. ; vi. 0-12-0 ; vii. இது 1903-வது வருஷத்திய 5-வது நம்பர் ஆக்ட். பழைய ப்ரொஸிஜர் கோட் செக்ஷன்களுடன் தமிழில் தயாரிக்கப்பட்டது இந் நூல். viii. 139/1909/II.

Z44,7, 15

## 347·2—நில உரிமை

**சுப்பிரமணியய்யர், வி.**

701. i. நில ஆக்ரமிப்பு சட்டம்—சென்னை 1905 வருடத்து 3-வது ஆக்ட்; ii. சென்ட்ரல் பிரஸ், ஈரோடு; iii. 1908; iv. உ. ப. 38; v. 21×14 செ. மீ.; vi. 0–4–0; vii. சர்க்கார் நிலத்தைப் பிறர் ஆக்கிரமிப்பதிலிருந்து தடுப்பதற்காக ஏற்பட்டது இச் சட்டம். சட்டங்களைக் குறித்து வியாக்கியானமும் தரப்பெற்றிருக்கிறது. viii. 167/1908/III.

Z 44,2

## 347.6—இந்து சட்டம்

**அப்பண்ணு சாஸ்திரி, வி. பி., உடுமலைப்பேட்டை.**

702. i. ஹிந்து லா; ii. என். கே. எஸ். பிரஸ், ஈரோடு; iii. 1905; iv. உ. ப. 218; v. 21×14 செ. மீ.; vi. 1–?–0; vii. ஹிந்துக்களின் குடும்ப முறை சொத்து, சுதந்திரம் முதலியவைகளைப் பற்றிய சட்டங்களைத் தொகுத்து உரைப்பது. இதில் விவாகம், சந்தானம், சுவீகாரம், பிதுரார்ஜித சுயார்ஜித வகைச் சொத்துக்கள், தாயபாகம், ஜீவனாம்சம் முதலியவற்றைப் பற்றி செய்திகளை விவரிப்பது. 17 அத்தியாயங்கள் கொண்டது. viii. 173/1905/IV.

Z44, 2

## 349·54—இந்தியச் சட்டம்

**சங்கர நாராயண பிள்ளை, பி என்., பரமக்குடி.**

703. i. குடிச் சட்ட விளக்கம்; ii. ரங்கநாதம் அண்டு பிரதர்ஸ் பிரஸ்' மதுரை; iii. 1908; iv. உ. ப. 50; v. 21×14 செ. மீ.; vi. 0–8–0; vii. சென்னபட்டணம் பூஸ்திதிகளிலுள்ள 1908-ம் வருஷத்து 1-வது ஆக்ட் யாவருக்கும் நன்ருய் விளங்கும்படி எழுதப் பெற்றது. இது 17 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு விளக்கம் தரப்பெற்றிருக்கிறது. viii. 349/1909/III.

Z44

704. i. தமிழ் ரிவின்யு சட்ட தீபிகை; ii. எம். எல். வி. பிரஸ், சென்னை; iii. 1909; iv. உ. ப. 116; v. 21×14 செ. மீ.; vi. 1–0–0; vii. சென்னை ராஜதானியிலுள்ள கிராம முனிசீப்பு, மணியக்காரர், கர்ணம் முதலிய ரிவின்யூ உத்தியோகஸ்தர்களுக்கும் ரயத்வாரி மிராசுதார், ஜமீன்தார், மிட்டாதார், இனும்தார், சுரோத்திரியம்தார், பாளையம்தார் முதலியவர்களுக்கும் இராம உத்தியோக பரீக்ஷை கொடுப்பவர்களுக்கும் சகல பூஸ்திதியுடையவர்களுக்கும் உபயோகமாகும்படி இயற்றப்பட்டது. 1822-ம் வருடத்து 9-வது ஆக்டு தொடங்கிப் பத்துப் பகுதிகளாக இது உள்ளது. viii. 691/1909/III.

Z44

**நடேச பிள்ளை, ஏ., திருவாரூர்.**

705. i. இந்து குடும்ப கடன்கள் ; ii. எட்வர்ட் அச்சுக்கூடம், திருவாரூர் ; iii. 1904 ; iv. உ. ப. 70 ; v. 21×15 செ. மீ. ; vi. 0-8-0 ; vii. இந்துக்கள் தங்கள் சொத்துக்களை வீண் விவகாரங்களில் செலவிடாதிருக்க வழி காட்டுவது. இந்து குடும்பக் கடன்களைப் பற்றியும், அநேக ஜாரியான தீர்ப்புகள் பற்றியும் எடுத்துரைப்பது. viii. 181/1904/II.

Z44

706. i. இந்து தர்மகர்த்தா ; ii. விக்டோரியா பாண்டியன் அச்சுக்கூடம், ஆணிக்காரன் சத்திரம் ; iii. 1904 ; iv. உ. ப. 42 ; v. ........ ; vi. 0-4-0 ; vii. இந்துக்களின் தேவாலயங்கள், மடங்கள், சத்திரங்கள் முதலியவற்றின் சொத்துக்களைப் பரிபாலிப்பதற்காக ஏற்பட்டிருக்கும் தருமகர்த்தாக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகள் அடங்கியுள. 1863-ம் வருட 20 ஆக்ட் விவரமும், சென்னை, பம்பாய், அலகாபாத், கல்கத்தா முதலிய ஹைக்கோர்ட்டுகளில் ஏற்பட்டிருக்கும் தீர்மானங்களும் சுருக்கித் தமிழில் புத்தக வடிவில் தரப்பட்டுள்ளது. viii. 145/1904/I.

Z44

**மகாலிங்க ஐயர், ஏ., தஞ்சாவூர்.**

707. i. 1902-ம் வருஷத்திய சிவில் விவகார விஷயங்களில் அனுசரிக்கவேண்டிய விதிகள் [இங்கிலீஷ் பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது] ; ii. செயிண்ட் ஜோசப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிறுப்பள்ளி ; iii. 1903 ; iv. உ. ப. 25+122+104 ; v. 21×14 செ மீ. ; vi. 1-8-0 ; vii. சிவில் விவகாரம் பற்றிய சட்டம் ஆங்கில மொழியினின்றும் மொழி பெயர்த்துத் தரப் பெற்றுள்ளது. அனுபந்தப் பகுதியில் பல நமூனாக்கள் முதலியன இடம் பெற்றுள்ளன. viii. 100/1903/III.

Z44

**முத்துசாமி அய்யர்**

708. i. விவகார தீபிகை [சிவில்] ; ii. ஸ்ரீ நிகேதன முத்திராக்ஷர சாலை ; iii. 1903 ; iv. உ. ப. 96+35 ; v. 21×14 செ. மீ. ; vi. ........ : vii. ஸ்டாம்பு விஷயங்கள், ரிஜிஸ்டர் விஷயங்கள், கோர்ட்டு கட்டணத்தைக் குறித்த விஷயங்கள், கால நிர்ணய சட்ட விஷயங்கள், இன்கம்டாக்ஸ் ஆக்ட், நிவிர்த்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த விஷயங்கள் என்னும் செய்திகள் உள்ளன. அனுபந்தமாக மாதிரி நமூனாக்கள் பலவும் தரப்பட்டுள்ளன. viii. 259/1903/II.

Z44

709. i. விவகார தீபிகை [சிவில்] ; iii. நவம்பர், 1905 ; iv. உ. ப. 115 ; viii. 181/1905/IV.

Z44

**710.** i. **லா ரிப்போர்ட் & வேதாந்தம்**—[பிரம வித்தை] ; ii. பாதர் அண்டு கோ., மதுரை ; பி.வி.பி. பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 147 ; v. 14×11 செ. மீ. ; vi. 0-6-0 ; vii. ஹைகோர்ட்டுகளில் நீதிபதிகள் செய்யும் தீர்மானங்களும், சீமையிலுள்ள பிரிவி கவுன்ஸிலில் செய்யப்பெறும் தீர்மானங்களும், அப்போதைக்கப்போது அரசாங்கத்தார் செய்யும் சட்டங்களும் மற்றும் சட்ட சம்பந்த விளக்கங்களும் கொண்டது இந்தச் சட்டப் பத்திரிகை. இதனோடு வேதாந்தம் பற்றிய ஒரு பகுதியும் உள்ளது. viii. 570/1910/IV.

Z44

**லோகநாதன், எம்.ஏ., தொ.து.**

**711.** i. **சிவில் கிரிமினல் சட்ட மஞ்சரி** [வால்யம் I] ; ii. மெஸர்ஸ் என். ராதாகிருஷ்ண அண்டு கோ., மினர்வா அச்சியந்திரசாலை ; iii. 1907 ; iv. உ.ப. 162 ; v. 22×14 செ.மீ. ; vi. .... ; vii. ஏழு அத்தியாயங்களில் அரசியலாரின் பல சட்டங்கள் தொகுத்துக் காட்டப்பெற்றுள்ள நூல். பொது மக்களும் தெரிந்துகொள்ளும் வகையில் பல உதாரணங்கள் காட்டிச் சட்டங்கள் விளக்கப்பட்டுள்ளன. viii. 201/1907/IV.

Z44

**வில்வபதிச் செட்டியார், தி.சி., இராயவேலூர்.**

**712.** i. **வாய்ப்பூட்டுச் சட்ட மறுப்பு** ; ii. தி.சி. வில்வபதி செட்டியார் ; சுதேசமித்திரன் ப்ரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ.ப. 80 ; v. 17×12 செ.மீ. ; vi. 0-8-0 ; vii. அரசாங்கத்தார் இயற்றியுள்ள 'வாய்ப்பூட்டுச் சட்டத்தின்' விளைவுகள் பற்றி விளக்குவது. இச் சட்டம் குறித்து கோபாலகிருஷ்ண கோகலே, டாக்டர் ராஷ் விகாரி கோஷ் முதலியோர் தெரிவித்துள்ள அபிப்பிராயங்களும் இதன்கண் தொகுக்கப்பட்டுள்ளன. இது ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதாயினும் நல்ல நடையில் அரசாங்க விஷயங்களை இவர் தெளிவுற விளக்கியிருக்கிறார். சில செய்திகளை விளக்குமாறு நூலிறுதியில் அமைத்துள்ள குறிப்புகளும் பொருள் விளக்கத்திற்கு அவசியமாகவுள்ளன. நூல் முதலில் "இரக்கமே இந்தியாவுக்குத் தேவை" என்னும் தலைப்பில் மங்கள வசனப் பாடல் ஒன்று கலிவெண்பாவில் உள்ளது. இதில் தேசிய இயக்கத்தின் அக்கால நிலை விளக்கப்பட்டிருக்கிறது. viii. 294/1908/II.

Z44

**வெங்கடரமண ஐயர், எஸ். எஸ்., சென்னப்பட்டணம்.**

**713.** i. **நீதி விவாத மஞ்சரி** எனும் தமிழ் சட்ட புஸ்தகம்—1-ம் பாகம் ; ii. ஜி. ராமசுவாமி செட்டி பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப 35+404 ; v. 22×15 செ.மீ. ; vi. 2-8-0 ; vii. 1860 வருஷத்து 45-வது ஆக்ட் இந்தியன் பீனல் கோட் 1872 வருஷத்து 1-வது ஆக்ட் இந்து தேசத்து சாட்சி சட்டம் 1864 வருஷத்து 6-வது ஆக்ட் அடி தண்டனைச் சட்டம் ஆகியவை அமைந்துள்ளன. viii. 249/1902/I.

Z44

**ஸ்ரீநிவாஸாச்சாரியார், பி. வி.**

714. i. கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்பெஷல் டெஸ்ட் மானியல் : இரண்டாவது பதிப்பு ; ii. இந்தியா பிரிண்டிங் வொர்க்ஸ், சென்னை ; iii. 1907 ; iv. உ. ப. 231 ; v. 22×14 செ.மீ. ; vi. 1–8–0 ; vii. கிராம உத்தியோகஸ்தர்களின் வேலை முறை, அவர்கள் கவனிக்க வேண்டிய காரியங்கள் முதலியன பற்றி விவரிப்பது. இறுதியில் பல வகைப்பட்ட நமூனுக்களும் இடம் பெற்றுள்ளன. viii. 62/1907/IV.

Z44

## 349·54 [1]—முகமதிய சட்டம்

**சுப்பிரமணிய அய்யர், ஆர்.—மொ. து.**

715. i. முகமதியன் லா ; ii. பிரிஸிடென்ஸி பிரஸ் ; iii. 1903 ; iv. உ.ப. 118 ; v. 21×14 செ.மீ. ; vi. 2–0–0 ; vii. இங்கிலிஷ் சட்டங்களிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப் பெற்றது. viii. 288/1904/I.

Z(Q7)

## 352—இராச்சிய அரசாங்க பரிபாலனம்

### 352·2—போலீஸ் இலாக்கா

**கிருஷ்ணசாமி ஐயர், எம்.**

716. i. கிராமப் போலீஸ் என்னும் தலையாரிகளுடைய வினு-விடைப் புஸ்தகம் ; ii. ரெயித்பி அண்ட் கோ., சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 151 ; v. 14×11 செ.மீ.; vi. . . . , vii. கிராமப் போலீஸ் பற்றி இவ்வாசிரியர் எழுதிய பெரு நூலின் சுருக்கம், வினு-விடை முறையில் அமைந்துள்ளது. 170 வினுவிடைகள் உள. viii. 162/1901/II.

Z,193

717. i. வில்லேஜ் போலீஸார் ; ii. ரெயித் பி அண்ட் கம்பெனி, சென்னை; iii. 1901 ; iv. உ.ப. 218+20 ; v. 22×14 செ.மீ; vi. . . . . ; vii. வில்லேஜ் போலீஸ் விதிகளும் வில்லேஜ் போலீஸ் வினு–விடையும் அமைந்துள்ளன. இந்நூல் பிறப்பதற்குண்டான ஏது பற்றி முகவுரையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் கிராம மாஜிஸ்டிரேட்டு தெரிந்துகொண்டு நடக்க வேண்டிய கற்பனைகள் தரப்பட்டுள்ளன. viii. 163/1901/II.

Z,193

## 355·54—இராணுவப் பயிற்சி

பொன்னுசாமிபிள்ளை—மொ. து.

718. i. 1905-ம் வருஷத்திய கம்பைண்ட் ட்ரெய்னிங் ; ii. ஏ. ஆர். மேஜர் நெதர் சோல் துரை ; ஹாம்ராக் பிரஸ், சென்னை ; iii. 1907 ; iv. உ.ப. 390 ; v. 13×11 செ.மீ. ; vi. 1–4–0 ; vii. போர் வீரர்களுக்குரிய நடைமுறை விதிகளும் பயிற்சி விதிகளும் பற்றி உரைப்பது. ஏழு அதிகாரங்களாகப் பாகு படுத்தப்பெற்றுள்ளது. viii. 170/1907/III.

MV41

719. i. இன்பன்ட்ரி ட்ரெய்னிங் ; ii. ம. கிருஷ்ணசாமி நாயுடு ; ஸ்ரீ ஹரி ப்ரஸ், சென்னை ; iii. 1904 ; iv. உ.ப. 494 ; v. 13×11 செ. மீ. ; vi. 1–8–0 ; vii. துப்பாக்கி சுடும் கலை பற்றி விவரிப்பது. பட்டாளச் சிப்பாய்களின் பயிற்சிக்கு உதவுவது. viii. 235/1904/I.

MV41

720. i. மஸ்கெட்ரி ரிகுலேஷன் ; ii. ஸ்ரீ ஹரி ப்ரஸ் ; iii. 1903 ; iv, உ.ப. 224 ; v. 14×11 செ.மீ. ; vi. .... ; vii. 1903-ம் ஆண்டு அக்டோபர் 31-ம் தேதி வரையில் பிரசுரமான திருத்தங்கள் அடங்கியுள்ள புத்தகம்; பட்டாளச் சிப்பாய்களுக்கு உபயோகமானது. viii. 234/1904/I.

MV41

யூஸுப்கான் ஸாயபு—மொ. து.

721. i. இன்பன்டிரி ட்ரெய்னிங்—பார்ட்–I ; ii. மெமோரியல் ப்ரஸ், சென்னை ; iii.1905 ; iv. உ.ப. 63 ; v. 12×9 செ.மீ. ; vi. .... ; vii. பட்டாளம் சிப்பாய்களின் பயிற்சிக்காக இயற்றப்பெற்றது. viii. 92/1905/III.

MV41

722. i. பைனிட் பைடிங் அண்ட் பிஸிகல் ட்ரெய்னிங்: முதற் பதிப்பு ; ii. மிமோரியல் அச்சியந்திரசாலை, சென்னை; iii. 1907 ; iv. உ.ப. 43 ; v. 12×8 செ.மீ. ; vi. .... ; vii. 88-வது பட்டாளத்து ஸுபேதார் முஹம்மத் காலிப ஸாயபு துலுக்கில் மொழி பெயர்த்ததை 88-வது பட்டாளத்து 2471-ம் நெ. லான்ஸ் நாயக் யூஸுப்கான் ஸாயபால் தமிழில் பிரசுரிக்கப்பட்டது. viii. 82/1907/I.

MV41

## 371·3—போதனு முறை

**ஆழ்வார் அய்யங்கார், வி எஸ்.**

723. i. இண்டர் கார்டன் போதனை: முதற்பதிபபு ; ii. காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 176 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. இப்புத்தகம் தொடர்முறைப் போதனைக்கு ஏற்ப இயற்றப்பெற்றது. இதனுள் ஐந்து பெரும் பிரிவுகள் உள. இவ்வகைப் போதனையில் இணையக்கூடிய இயற்கை அறிவு, பலவகைப்பட்ட தொழில்கள், சித்திரம் வரைதல் முதலிய பாடங்களை நனகு விளக்குவதற்கு ஏற்ற கருவியாய் உள்ளது. பாடங்களுக்கு முதலில் தரப்பெறும் முன்னுரை பாட அமைப்புக்களை விளக்கமாகக் கூறுகின்றது. விளையாட்டிற்கு ஏற்ற இசைப் பாடல்கள் சிலவும் இதில் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இயற்கைப் பாடங்கள் யாவும் வின்செண்டு டி. குர்ஷி என்பவர் ரூரல் பாடசாலைகளுக்கென்று எழுதிய பொருள்பாடப் புஸ்தகங்களை அனுசரித்து எழுதப்பெற்றனவாம். viii. 268/1910/I.

**T : 33**

**கிருஷ்ணசாமி அய்யர், வி. எஸ்., கயத்தாறு.**

724. i. நவீனபோதனு முறைப் பாடங்கள்; ii. விவேகபானு அச்சியந்திர சாலை, மதுரை ; iii. 1910 ; iv. உ.ப. 43; v. 17×12 செ.மீ.; vi. 0–2–0 ; vii. எலிமெண்டரி பாடசாலைகளில் பாலர் வகுப்பு, முதல் வகுப்பு மாணுக்கர்களின் உபயோகத்தின் பொருட்டு இயற்றப்பெற்றது. ஆறு கதைகள் உள்ளன. இக்கதைகளை நடத்தவேண்டிய முறை பற்றி உபாத்தியாயர்களுக்குரிய குறிப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொது அறிவு, அரசியல், இயற்கைப் பாடம், கணிதம் முதலியவற்றைச் சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பொருத்திக் காட்டிக் கற்பிக்கும் முறைகளையும் விளக்குவது. viii. 240/1910/III.

**T : 33**

**கில்லிங்ஹாம், ஸி. எல்.**

725. i. இந்திய இண்டர் கார்ட்டன் ; ii. லாங்மன்ஸ் க்ரீன் அண்ட் கம்பெனி ; லாரன்ஸ் அசைலம் பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 118 ; v. 19×13 செ.மீ. ; vi. 0–12–0 ; vii. போதனு முறை பயிலும் ஆசிரியருக்கும் பிறருக்கும் உபயோகமானது. இண்டர் கார்ட்டன் என்பது பாடம் கற்பித்தற்குரிய ஒரு முறையே யாகும். விளையாட்டை மையமாகக் கொண்டது இந்தப் போதனை முறை. இங்கே காட்டப்பெற்ற மாதிரிகளில் சூழ்நிலைக்கு ஏற்ற வண்ணம் ஆசிரியர்கள் பாட முறைகளை அமைத்துக்கொள்

ளுதல் வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். 23 அத்தியாயங்கள் கொண்டது இந்நூல். இந்நூலுள் அமைந்த பாடங்களின் அட்டவணையும் முதலில் தரப் பெற்றிருக்கிறது. viii. 268/1910/IV.

T : 33

**கோபால அய்யங்கார், சி., தஞ்சாவூர்.**

726. i. இந்திய கிண்டர்கார்ட்டன் போதனை முதற் பதிப்பு ; ii. மணியா அண்டு கோ., தஞ்சாவூர் ; கல்யாணசுந்தரம் பவர் பிரஸ், தஞ்சாவூர்; iii. 1907 ; iv உ.ப. 181 ; v. 18×13 செ.மீ. ; vi. 1–0–0 ; vii. கிண்டர் கார்ட்டன் வகுப்புப் போதனை பற்றிய நூல். கிண்டர் கார்ட்டன் பற்றிய விளக்கமும் சித்திரம் வரைதல், குச்சி வைத்தல் முதலிய கை வேலைகள் பற்றிய விளக்கங்களும உள்ளன. குழந்தைகளுக்கு ஏற்ற கதைகளும் அவற்றைக் கற்பிக்கும் முறைகளும் கூறப்பட்டுள்ளன. viii. 122/1907/III.

T : 33

**சண்முகம் பிள்ளை, கே. பி.**

727. i. பொருட்பாடங்கள்—இரண்டாம் வகுப்பு: முதற்பதிப்பு ; ii. வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1903; iv. உ.ப. 48 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. இது இரண்டாம் வகுப்பிற்கு உரியது. 20 பொருட் பாடங்கள் தரப்பட்டுள்ளன. உபாத்தியாயருக்கு வேண்டிய சில குறிப்புக்கள் முதற்கண் தரப்பட்டுள்ளன. viii. 118/1903/IV.

T : 33

728. i. பொருட் பாடங்கள்—மூன்றும் வகுப்பு : முதற் பதிப்பு ; iii. 1905 ; iv. உ.ப. 4 ; v. 18×13 செ.மீ.; vii. இது மூன்றும் வகுப்புக்காக இயற்றப் பெற்றது. 20 பாடங்கள் உள. இவற்றைக் கற்பிப்பதற்கு உதவும் சில உபாத்தியாயர்கள் குறிப்புககளும் கொடுக்கப்பெற்றுள்ளன. viii. 119/1903/IV.

T : 33

**துரைசாமி அய்யங்கார், பி. வி.**

729. i. கிண்டர் கார்டன் போதனு முறை ; ii. கணேஷா பிரஸ், சென்னை ; iii. 1909 ; iv. உ.ப. 62 ; v. 16 × 13 செ. மீ. ; vi. 0–3–0 ; vii. விளையாட்டாகக் கல்வி கற்றுக்கொடுக்கும் கிண்டர் கார்டன் முறை பற்றிய விளக்கம் தருவது இந்நூல். பிரோபெல் என்னும் பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட கிண்டர் கார்டன் கொடைகள் என்னும் தொழில்களையும் அவற்றின் உபயோகங்களையும் செவ்வனே விளக்கி உரைப்பது. வகுப்புக்களுக்கு ஏற்ற பொருட்பாட அட்டவணையும் சேர்க்கப்பெற்றிருக்கிறது. viii. 337/1909/IV.

T : 33

**நமச்சிவாய முதலியார், சி. ஆர்.**

730. i. பொருட்பாடங்கள்: இரண்டாம் பதிப்பு; ii. ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. உ.ப. 8+38 ; v. 17×13 செ.மீ.; vi. 0–1–6 ; vii. பாலர் முதல் வகுப்புகளுக்காக எழுதப் பெற்ற பொருட் பாடங்கள் அமைந்துள்ளன. பொருள் வகை, பிராணி வகை, மர வகை, உலோக வகை, ஆகியவை பற்றிய 28 பாடங்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளன. viii. 354/1902/I.
T : 33

731. i. பொருட் பாடங்கள்; iii. 1902 ; iv. உ. ப. 50 ; vi. 0–2–0 ; vii. இரண்டாம் வகுப்புக்காகச் செய்யப்பெற்ற பொருட் பாடங்கள். பொருள் வகை, பிராணி வகை, மர வகை, உலோக வகை என்னும் நான்கு வகைப்பட்ட 20 பொருட் பாடங்கள் உள்ளன. படங்களுடன் விளக்கப்பெற்றுள்ளன. சி. ஆர். என். வரிசையில் 12-ம் புத்தகம். viii. 355/1902/I.
T : 33

732. i. **நவீன போதனு முறை பாடங்கள்** ; ii. வி. எஸ். கிருஷ்ண சாமி அய்யர்; விவேகபானு அச்சியந்திரசாலை, மதுரை ; iii. 1910 ; iv. உ.ப. 72 ; v. 16×13 செ.மீ. ; vi. 0-3-0 ; vii. அரசியல் பற்றிய சிறு நூல். எலிமெண்டரி பாடசாலைகளில் 2-வது வகுப்பு மாணவர்களின உபயோகத்தின்பொருட்டு எழுதப்பெற்றது. உபாத்தியாயர்களுக்குரிய குறிப்புக்கள் முதற் கண் தரப்பெற்றுள்ளன. வினவிடை முறையில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. பாடல்களும் சிற்சில இடையே இடம் பெற்றுள்ளன. viii. 607/1910/II.
T : 33

**நெல்லையப்ப அய்யர், டி. எஸ்.**

733. i. பொருள் பாடம்—முதற் பாகம் : முதற் பதிப்பு ; ii. காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1908 ; iv. உ. ப. 34 ; v. 18×12 செ.மீ ; vi. 0–2 0 ; vii. பாலர் முதல் வகுப்புகளுக் குரியது ; 20 பாடங்கள் உள ; தக்க படங்களும் இடம் பெற் றுள்ளன. போதனு முறையில் பயிற்சி பெறுவோருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் உபயோகமானது. viii. 219/1908/I.
T : 33

734. i. பொருள் பாடம்—இரண்டாம் பாகம்: முதற் பதிப்பு ; iii. 1908 ; iv. உ. ப. 46; v. 18 × 13 செ. மீ. ; vii. 20 பாடங்கள் உள. பனிரண்டு படங்களும் இடம் பெற்றுள்ளன. பாடம் நடத்தவேண்டும் முறை முதலியன பற்றி விவரிப்பது. போதனு முறை பயிலுவோருக்கும் ஏனைய போதகாசிரியர் களுக்கும் உபயோககரமானது. viii. 220/1908/I.
T : 33

**பிராண்டர் அம்மாள்**

735. i. இந்திய சிசு போதன முறை ; ii. மாக்மில்லன் அண்டு கம்பெனி ; எஸ். பி.஌ி. கே. பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. உ. ப. 123 ; v. 18 × 13 செ.மீ. ; vi. 0–8–0 ; vii. முதல் வகுப்பிற்குரிய கதைகளும் பொருட்பாடங்களும் தொழில்களும், பாட்டுகளும ஆட்டங்களும் அடங்கியுள்ளன. ஆசிரியர்களுக்கு ஏற்றதொரு வழிகாட்டி. viii. 258/1901/II.

**T : 33**

736. i. இந்திய சிசு போதன முறை—மூன்றும் பாகம்; iii. 1902 ; iv. உ.ப. 7+166 ; vii. இது இரண்டாம் வகுப்பிற்குரியது. கதைகளும், பொருட்பாடங்களும், தொழில்களும், பாட்டுக்களும், ஆட்டங்களும் அடங்கியுள்ளன. viii. 282/1902/I.

**T : 33**

**ராம ராவ், எஸ்.**

737. i. பொருள் பாடப் புத்தகம் ; ii. யூனியன் பிரஸ், சேலம் ; iii. 1901 ; iv. உ. ப. 46 ; v. 14 × 11 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. முதல் ஸ்டாண்டர்டுக்கு உரியது. 19 மாதிரிப் பாடங்கள் உள்ளன ; அனுபந்தப் பகுதியும் உள்ளது. viii. 261/1902/I.

**T : 33**

## 371·73—உடற் பயிற்சி

**சுப்பிரமணிய அய்யர், எல்.**

738. i. பாலரெக்ஷக தேக அப்பியாச விளக்கம் : முதற் பதிப்பு ; ii. பிரண்ட்ஸ் அஸோஸியேஷன் பிரஸ், கோயமுத்தூர் ; iii. 1907 ; iv. உ.ப. 87 ; v. 19×11 செ.மீ. ; vi. 0–6–0 ; vii. சிறு குழந்தைகள் எளிதில் கற்றுக்கொள்ளும் உடற்பயிற்சி முறைகள் பற்றி விளக்கும் நூல். viii. 266/1907/IV.

**T : 6**

**சுப்பிரமணிய அய்யர், கே. ஆர்., திருச்சிறைப்பள்ளி.**

739. i. டிரில் அண்டு ஜிம்னாஸ்டிக்ஸ் எக்ஸர்ஸைஸஸ்—பாகம்-3 ; ii. செயிண்ட் ஜோசப் காலேஜ் ப்ரஸ், திருச்சிராப்பள்ளி ; iii. 1905 ; iv. உ.ப. 94 ; v. 19×18 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. லோயர் செகண்டரி வகுப்புக்களுக்கு உபயோகமாக இயற்றப் பெற்றது. viii. 172/1905/III.

**T : 6**

740. i. டிரில் அண்டு ஜிம்னாஸ்டிக்ஸ்—முதற் பாகம்: நான்காம் பதிப்பு; ii. செயின்ட் ஜோஸப்ஸ் காலேஜ் பிரஸ், திருச்சிராப் பள்ளி; iii. 1906; iv. உ. ப. 58; v. 19×13 செ. மீ.; vi. 0-3-0; vii. மாணவர்களுக்கு உடற்பயிற்சி கற்பிப்பதற்கு உதவுவது. இதில் பிரைமரி, செகண்டரிப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு ஏற்ற பயிற்சிகள் அடங்கியுள்ளன. viii. 190/1906/I.

T : 6

741. i. மூன்றுவது, நான்காவது வகுப்புக்களுக்குக் கற்பிக்கும்படியான கவாத்தும் கஸரத்தும்: ஐந்தாம் பதிப்பு; ii. கே. ஆர். சுப்பிரமணிய அய்யர்; செயிண்ட் ஜோசப் இண்டஸ்டிரியல் பிரஸ், திருச்சினுப்பள்ளி; iii. 1910; iv. உ.ப. 54; v. 19×13 செ.மீ.; vi. 0-4-0; vii. இது சென்னை புதிய வித்தியா சட்டத்திற்கு இணங்க அச்சிட்டுப் பிரசுரம் செய்யப் பட்டிருக்கிறது. புகைப்பட உருவங்கள் பல சேர்க்கப்பட்டிருக் கின்றன. இதில் உள்ள பயிற்சிகள் மூன்றுவது நானகாவது வகுப்புக்களுககுக் கற்பிக்கும்படியான கவாததும் கஸரத்தும் ஆகும். பயிற்றும் ஆசிரியர்களுக்கு உதவியான குறிப்புக்களும் கொடுககப்பெற்றிருக்கின்றன. viii. 656/1910/III.

T : 6

## 372·3—இயற்கைப் பாடம்

**சுவாமிநாதன், என்.**

742. i. இயற்கை அறிவு—தாவர நூல்: முதற் பதிப்பு; ii. குமாரசுவாமி நாயுடு; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1910; iv. உ.ப. 46; v. 18×13 செ.மீ.; vi. 0-4-0; vii. இயற்கையறிவு சம்பந்தமாகத் தாவர நூலும் தோட்ட வேலையும் குறிதது எலிமெண்டரி பாடசாலைகளில் கற்கும் முறைமையினை விளக்குவது. சிற்சில படங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. உபாததியாயர்களுக்கு உபயோகமான குறிப்புக் களும் கொடுக்கபபட்டிருக்கின்றன. viii. 389/1910/II.

LM

# 400—மொழியியல்

## 428·64—ஆங்கிலம்—தமிழ்ப் பாடப் புத்தகம்

**மார்ஸ்டன், ஈ.**

743. i. கிங் ரீடர்ஸ்—கிங் பிரிமியர்; ii. மாக்மில்லன் கம்பெனி; எஸ். பி. ஸி. கே. பிரஸ், சென்னை; iii. 1909; iv. உ.ப. 47; v. 18×12 செ.மீ.; vi. 0-3-0; vii. ஆங்கிலமும் தமிழும் கலந்து தரப்பெற்ற நூல். ஆங்கில எழுத்து, சொல், தொடர் ஆகியவற்றைப் படிப்பதற்கு உதவியாகத் தமிழிலும் அதன் பொருள் குறிக்கப்பெற்றிருக்கிறது. viii. 364/1909/IV.

P 31,9

**வெங்கடராம ஐயர், கே.**

**744.** i. மான்யூல் ஆப் டிரான்ஸ்லேஷன் : நான்காம் பதிப்பு ; ii. ஜி. எஸ். மணியா அண்டு கோ, தஞ்சாவூர் ; கல்யாண சுந்தரம் பவர் பிரஸ், தஞ்சாவூர் ; iii. 1907 ; iv. உ.ப. 143+32 ; v. 19×12 செ.மீ. ; vi. ........ ; vii. தமிழி லிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப் பயிறசியளிக்கும் நூல். முதற்கண் வாக்கிய இலக்கணம் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன. மொழி பெயர்ப்பில் நேரும் பொதுப் பிழைகள் குறித்து ஏழாவது அத்தியாயம் விவரிக்கிறது. இறுதி அத்தியாயத்தில் மெட்ரிக்குலேஷன் பரீட்சை, அப்பர் செகண்டரிப் பரீட்சைகளுக்குக் கொடுக்கப்பெற்ற வினாத் தாள்களும் இணைக்கப் பட்டுள்ளன. viii. 288/1907/III.

**P31,9**

## 494·8112—எழுத்து—சொல் இலக்கணம்

**குணவீர பண்டிதர்**

**745.** i. நேமிநாத மூலமும் உரையும் ; ii. ரா. இராகவையங்கார்; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை ; iii. 1903 ; iv. செ.மூ. உ.எ. 97 ; v. 21×14 செ. மீ. ; vi. 0–10–0 ; vii. இது செந்தமிழ்ப் பிரசுரத்தில் ஆறுவது. இந்த இலக்கணம் எழுத்து, சொல் பற்றி வெண்பாவினால் அமைந்தது. தொல் காப்பியத்தை முதலாகக் கொண்டு அதன் நெறிமுறையை அடியொற்றியது. இந் நூலுரையாசிரியரைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை. viii. 128/1904/III.

**P31, J : 2**

**பவணந்தி முனிவர்**

**746.** i. நன்னூல் மூலமும் விருத்தியுரையும் ; ii. ஆறுமுக நாவலர், யாழ்ப்பாணத்து நல்லூர் & சதாசிவப் பிள்ளை ; வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ.உ.ப. 328+8 ; v. 21 × 13 செ.மீ. ; vi. 1–12–0 ; vii. நன் னூலுக்குத் திருநெல்வேலி சங்கர நமச்சிவாயப் புலவரால் செய்யப்பட்டுத் திருவாவடுதுறை யாதீனத்துச் சிவஞான சுவாமி களால் திருத்தப்பட்ட விருத்தியுரை உள்ளது. ஆறுமுக நாவலர் பரிசோதித்தபடி சதாசிவப் பிள்ளையால் பதிப்பிக்கப்பெற்றது. viii. 71/1903/I.

**P31, J : 2**

**747.** i. நன்னூல் மூலம் ; ii. மகராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1903 ; iv. செ.மூ.எ. 462 ; v. 12×18 செ.மீ. ; vi. 0–1–6 ; vii. ஒவ்வொரு சூத்திரத்தின் தலைப்பிலும்

அதனதன் கருத்து தமிழிலும், இங்கிலீஷிலும் எழுதப்பட்டிருப்பதோடு, சர்வகலாசாலைப் பரீட்சைகட்கு வேண்டிய சூத்திரங்கள் இன்னின்ன என்றும் காட்டப்பட்டிருக்கின்றன. viii. 269/1903/IV.

**P31, J:2**

**748.** i. நன்னூற் காண்டிகையுரை : ஐந்தாம் பதிப்பு ; ii. கணேச அச்சுக்கூடம் ; iii. 1906 ; iv. உ.ப. 248 ; v. 22×14 செ.மீ.; vi. ......; vii. காண்டிகை உரையினை நன்கு விளக்கியும் பல விஷயங்கள் சேர்த்தும், அரிய உதாரணங்கட்குப் பொருள் எழுதியும் புதுப்பிதது எழுதப்பெற்றது. இவ்வுரையினை ஆக்கியோர், வை. மு. சடகோப ராமாநுஜாச்சாரியாரும், சே. கிருஷ்ணமாச்சாரியாரும் ஆவர். viii. 218/1906/I.

**P31, J:2**

**749.** i. நன்னூல் மூலம் [நன்னூல் மூலமும் யாப்பருங்கலக்காரிகை மூலமும்] ; ii. சுவாமிநாத பண்டிதர், யாழ்ப்பாணத்து வண்ணை நகர் ; சைவ வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னப்பட்டணம் ; iii. 1908 ; iv. செ.மூ.எ. 462 ; v. 12×8 செ.மீ.; vi. 0–2–0 ; vii. எழுத்து, சொல் பற்றிய இலக்கணங்களை வகுத்துரைப்பது ; எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாகவும், ஒவ்வொன்றும் பல இயல்களாகவும் பாகுபடுத்தப் பெற்றுள்ளன. மெட்ரிகுலேஷன், எப்.ஏ., பி.ஏ. பரீட்சைகளுக்குப் படிக்கவேண்டிய சூத்திரங்கள் அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளன. viii. 466/1908/IV.

**P31, J:2**

## 494·8112—யாப்பிலக்கணம்

**அமிர்தசாகரர்**

750. i. யாப்பருங்கலக்காரிகை ; ii. வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.ப. 188 ; v. 21×13 செ.மீ.; vi. 1–0–0 ; vii. யாப்பிலக்கணம் பற்றிய இந்நூல் செய்யுட்களின் இயல்புகளையும், வகைவழிகளையும் தெளிவாக விரித்துரைப்பது. இதற்கு யாழ்ப்பாணத்துச் 'சுன்னாகம்' அ. குமாரசுவாமிப் பிள்ளை இயற்றிய புத்துரை அமைந்துள்ளது. viii. 389/1908/II.

**P31, J:2**

i. யாப்பருங்கலக்காரிகை மூலம் (தொ. எ. 749 பார்க்க); ii. சுவாமிநாத பண்டிதர்; சைவ வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னை பட்டணம்; iii. 1908; iv. செ.மூ.எ. 60; vii. யாப்பிலககணத்தைக் கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் தருவது. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. viii. 466/1908/IV.

P31, J:2

**கலியாணசுந்தர முதலியார், பூவை.**

**751.** i. செய்யுளிலக்கணம், கத்தியரூபம்: இரண்டாம் பதிப்பு; ii. கொ. லோகநாத முதலியார்; மனோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை; iii. 1902; iv. செ.மூ.ப. 71; v. 21×14 செ.மீ.; vi. 0–8–0; vii. உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களில் செய்யுள் இலக்கணத்தை வசன நடையில் விவரித்து உரைப்பது. ‘பாட்டியல்’ பகுதியும் நூலின் இறுதியில் உள்ளது. viii. 130/1903/I.

P31, J:2

**சரவணப்பெருமாள் ஐயர், திருத்தணிகை.**

**752.** i. யாப்பிலக்கணம்; ii. ஈ. ரத்னவேலு முதலியார்; பண்டித மித்திரா பிரஸ்; iii. 1900; iv. செ.மூ.எ. 67; v. 20×14 செ.மீ.; vi. ........; vii. யாப்பிலக்கணத்தை வினு–விடை முறையில் விளக்குவது. 67 வினு–விடைகள் உள. இது யாப்பிலக்கணம் கற்கப் புகுவார்க்கு மிகவும் உபயோகமாகும் முதல் நூல். viii. 95/1901/I.

P31, J:2

**பத்மநாப ஐயர், கோயம்புத்தூர்.**

**753.** i. நன்னூல் யாப்பதிகாரம்: முதற் பதிப்பு; ii. லிட்டரரி சன் பிரஸ், கோயம்புத்தூர்; iii. 1905; iv. செ.மூ.உ.ப. 111; v. 13×11 செ.மீ.; vi. ........; vii. 69 சூத்திரங்களில் யாப்பிலக்கணம கூறுவது. சூத்திரமும் உரையுமாக இயற்றப் பெற்றது. செய்யுளிலக்கணம் கற்பார்க்கு உதவும். viii. 69/1905/I.

P31, J:2

**முத்துவீரவுபாத்தியாயர், பூஞ்சோலை.**

**754.** i. திருப்போரூர் முருகக் கடவுள் வெண்பா மாலை; ii. எம்.ஒய். முருகேசம் பிள்ளை; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை; iii. 1906; iv. செ.மூ.எ. 1+100+2=103; v. 21×14 செ.மீ.; vi. ..........; vii. வெண்பாவின் விகற்பங்களுக்கெல்லாம் இலக்கியமாக அமைந்தது. திருப்போரூர் முருகனைக் குறித்த தோத்திரமாலையாக இது உள்ளது. viii. 328/1906/II.

P31, J:2

**விசாகப்பெருமாளையர், திருத்தணிகை.**

755. i. யாப்பிலக்கணம் ; ii. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை ; ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1906 ; iv. உ.ப. 7+46 ; v. 18×12 செ.மீ. ; vi. 0–2–0 ; vii. விசாகப் பெருமாளையர் இயற்றிய இலக்கணச் சுருக்கம் நூலில் காணும் யாப்புப் பற்றிய இலக்கணம் இதில் தனிப்படப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. ஆசிரியர் இயற்றிய பால போதவிலக்கணத்தில் நூதனமாகக் காணப்படும் உதாரணச் செய்யுட்களும் தக்க இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. viii. 101/1906/III.

**P31, J:2**

**வைத்தியநாத தேசிகர், திருவாரூர்.**

756. i. இலக்கண விளக்கம் : செய்யுளியல் ; ii. சி. வை. தாமோதரம் பிள்ளை ; வெ. நா. ஜூபிலி. அச்சுக்கூடம், சென்னை ; iii. 1900 ; iv. செ.மூ.உ.ப. 72 ; v. 20×13 செ.மீ.; vi. 0–8–0; vii. ஐந்து இலக்கணமும் கூறும் பெரு நூலாகும் இலக்கண விளக்கம். இப்பொருளதிகாரத்தின் மூன்றுவதான செய்யுளியல் உரையுடன் உள்ளது. இது 1902-ம் வருடத்துப் பி. ஏ. பரீட்சைக்கு உபயோகமாக வெளியிடப்பெற்றது. viii. 204/1901/I.

**P31, J:2**

## 494·8112—பாட்டியல் நூல்கள்

**குணவீர பண்டிதர் முதலியோர்**

757. i. பாட்டியற் கொத்து—மூலமும் உரையும் ; ii. சென்ன கேசவலு நாயுடு ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.ப. 32 ; v. 18×13 செ.மீ. ; vi. 0–6–0; vii. இதன்கண் குணவீர பண்டிதரின் வச்சணந்திமாலை, சம்பந்த மாமுனிவர் இயற்றிய வரையறுத்த பாட்டியல், பரஞ்சோதி முனிவர் இயற்றிய சிதம்பரப் பாட்டியலின் பொருத்த இயல், மரபியல், நவனீட்டரி பத்தன் என்னும் நவநீதனார் இயற்றிய நவநீதப் பாட்டியல் ஆகியவை உரையுடன் தரப்பட்டுள்ளன. viii. 157/1909/II.

**P31, J:2**

**குணவீர பண்டிதர்**

i. வச்சணந்திமாலை என்னும் வெண்பாப் பாட்டியல் (தொ.எ. 757 பாக்க) ; ii. சென்னகேசவலு நாயுடு ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ·மூ.உ.ப. 56 ; vii. முதன் மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என்னும் மூன்று பகுதிகள் கொண்டது. வெண்பாவாலாகியது. இதன் உரையை இயற்றினார் இன்னார் என்பது தெரியவில்லை. viii. 157/1909/II.

**P31, J:2**

758. i. வெண்பாப் பாட்டியல்—மூலமும் உரையும் [வரையறுத்த பாட்டியல்] ; ii. ்.இரத்தினவேலு முதலியார் ; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை ; iii. 1900 ; iv. செ.மூ.உ.எ. 23+48+31=103; v. 16×13 செ.மீ.; vi. 0-2-0 ; vii. முதன் மொழி இலக்கணமும், பிரபந்தங்களின் இலக்கணங்களும் அமைந்துள்ளன. viii. 91/1901/I.

P31, J:2

**சங்கத்துச் சான்றோர்**

759. i. பன்னிரு பாட்டியல் ; ii. ரா. இராகவையங்கார் ; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை ; iii. 1904 ; iv. செ.மூ.எ. 358 ; v. 22×14 செ.மீ. ; vi. 0-4-0 ; vii. ......; viii. 543/1908/IV.

P31.J:2

**சம்பந்த மாமுனிவர்**

i. வரையறுத்த பாட்டியல் (தொ. எ. 758 பார்க்க); ii. ஈ. இரத்தினவேலு முதலியார்; பண்டித மித்திர யந்திரசாலை, சென்னை ; iii. 1900 ; iv. செ.மூ.உ.எ. 10 ; vii. செய்யுட்குரிய முதற் சொல்லை வரையறுத்து உணர்த்துவது. viii. 91/1901/I.

P31, J:2

i. வரையறுத்த பாட்டியல் (தொ. எ. 757 பார்க்க) ; ii. சென்ன கேசவுலு நாயுடு ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.எ. 9 ; vii. 'சம்பந்தப் பாட்டியல்' என்றும இதற்குப் பெயர் உண்டு. முதன் மொழிக்கு உரிய எழுத்துக்களை வரையறுத்துக் கூறுவது. உரையியற்றினர் பெயர் தெரியவில்லை. viii. 157/1909/II.

P31, J:2

**நவநீதனர்**

i. நவநீதப் பாட்டியல் (தொ.எ. 757 பார்க்க) ; ii சென்னகேசவலு நாயுடு ; சச்சிதானந்த அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1908 ; iv. செ.மூ.உ.எ. 22 ; vii. முதன் மொழிப் பொருத்த இயல் பற்றிய செய்திகள் மட்டும் உள்ளன. இதன் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. viii. 157/1909/II.

P31, J:2

**பரஞ்சோதி முனிவர்**

i. சிதம்பரம் பாட்டியலின் பொருத்தவியல், மரபியல் (தொ. எ.757 பார்க்க); ii. சென்னகேசவலு நாயுடு ; சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை; iii. 1908 ; iv. செ.மூ.உ.ப. 19 ; vii பொருத்த இயல், மரபியல் பகுதிகள் உள. இது விருத்தப் பாவினாலாகியது. இதற்கு உரை இயற்றினர் பெயர் தெரியவில்லை. viii. 157/1909/II.

P31, J:2

## 494·8112—அணியிலக்கணம்

**கபாலமூர்த்திப் பிள்ளை, மதுரகவிப் புலவர்.**

i. சித்திரகவிப் புஞ்சம் (தொ. எ. 1380 பார்க்க) ; ii. வாணி நிகேதன அச்சுக்கூடம், வேலூர் ; iii. 1902 ; iv. செ. மூ. ப. 2 ; vii. விநாயகர் முதலியோர் துதியாகப் பல சித்திரக்கவிகள் உள்ளன. சில பாடல்களுக்குப் பட விளக்கமும் உள்ளன. viii. 147/1902/I.

P31, J:2

**சண்முகம் பிள்ளை, அ., சோழவந்தான்.**

760. i. மாலை மாற்று மாலை மூலம் ; ii. கந்தசாமிக் கவிராயர் ; தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை ; iii. 1903 ; iv. செ.மூ.எ. 30 ; v. 21×14 செ.மீ.; vi. 0–4–0 ; vii. 'மாலை மாற்று' என்னும் சித்திரக கவி 30 கொண்டது இம்மாலை. ஆசிரியர் அறுவகைப் பகையும், அறுவகை நாடி, அன்பென்னும் நார் கொண்டு நிரல்படத் தொடுத்து ஆறுமுகக் கடவுளின் அடிமலர்க் கண்ணே அணிவித்த பிரபந்தமாகிய மாலை. நூல் முழுமைக்கும் சேற்றூர் சமஸ்தான வித்வான் விவேகபாநு பத்திராதிபர் எம். ஆர். கந்தசாமிக் கவிராயர் எழுதிய உரை உள்ளது. viii. 111/1903/IV.

P31, J:2

**தண்டி**

761. i. தண்டியலங்காரம் ; ii. அ. குமாரசுவாமிப் பிள்ளை ; வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்ன பட்டணம் ; iii. 1903 ; vi. செ. மூ. ப. 173 ; v. 20×13 செ. மீ. ; vi. 1–0–0 ; vii. இந்நூலின் உரை சுன்னாகம் அ. குமாரசுவாமிப் பிள்ளையால் புதுக்கப் பெற்றது. அருஞ்சொற் பொருள் கோளும் ஈற்றில் உள்ளது. viii. 275/1903/IV.

P31, J:2

**விசாகப்பெருமாளையர், திருத்தணிகை.**

762. i. அணியிலக்கணம் ; ii. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை ; ரிப்பன் அச்சியந்திரசாலை, சென்னை ; iii. 1906 ; iv. உ. ப. 8+68 ; v. 18× 13 செ. மீ. ; vi. 0–4–0 : vii. 'சந்திராலோகம்' என்னும் வடமொழி நூலைப் பின்பற்றி எழுதப் பெற்ற நூல். உவமை முதல் ஏது ஈறுக நூறு அணிகளின் இயல்புகள் எடுத்துக் காட்டுகளுடன் விவரிக்கப்பட்டுள்ளன. பதிப்பாசிரியரின் பதிப்புரை அணி இலக்கண வரலாற்றை விளங்க அறிவிப்பதோடு விசாகப் பெருமாளையரின் வாழ்க்கையும், தமிழ்த் தொண்டும் பற்றிய குறிப்புக்களையும் தெரிவிக்கின்றது. அணி அகராதியில் அணிகளுக் குரிய வடமொழிப் பெயர்களும் தரப்பட்டுள்ளன. viii. 102/1906/III.

P31, J:2

## 494.8112—பொது இலக்கண நூல்கள்

**அரசஞ்சண்முகனார், சோழவந்தான்.**

763. i. பாயிர விருத்தி ; ii. வா. கோபாலசாமி ரகுநாத ராஜாளியார் ; ஸ்ரீவித்தியா விநோதனி முத்திராக்ஷரசாலை, தஞ்சை ; iii. 1905 ; iv. உ. ப. 246 ; v. 22×14 செ. மீ. ; vi. 2–0–0 ; vii. தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதலாவது பகுதியாகிய பாயிர விருத்தி. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரப் பகுதிக்குரிய விரிவுரை. viii. 286/1905/III.

P31, J:2

**யோசேப் முன்ஷி, ஏ.**

764. i. திராவிட இலக்கிய சித்தாந்தத் தீபிகை ; ii. எஸ். பி. ஷி. கே. பிரஸ், சென்னை ; iii. 1902 ; iv. செ. மூ. ப. 168 ; v. 18×13 செ. மீ. ; vi. .... ... ; vii. தமிழ்ச் சொற்களின் உண்மைப் பொருள் சிதைவுருமல் காணுதற்கு வகை யுரைப்பது. நிகண்டு சூடாமணி, குறள், நைடதம நூல்களி னின்று எடுத்துக்காட்டுகள் தந்து விளக்கப்பட்டுள்ளன. இலக்கியத்தில் உண்மைப் பொருள், விளக்கம், திராவிட எழுத்து வழுவமைதி ஐக்கியம் ஆகியவை பற்றி உரைப்பது. viii. 136/1902/IV.

P31, J:2

## 494.8113—தமிழ் அகராதி

**இரத்தினவேலு முதலியார், ஈக்காடு.**

765. i. சிறப்புப் பெயரகராதி ; ii. பண்டித மித்திர யந்திர சாலை, சென்னை ; iii. 1908 ; iv. உ. ப. 740 ; v. 22×14 செ. மீ. ; vi. ........ ; vii. தமிழ் இலக்கிய நூல்கள் முதலியவற்றி லும், இதிகாச புராணாதிகளிலும் பயின்றுள்ள சிறப்புப் பெயர் களைத் தொகுத்து விளக்கக் குறிப்புக்களுடன் ஆசிரியர் அமைத் துள்ளார். இந்நூலில் ஊர்கள், மலைகள், நாடுகள் முதலிய வற்றைப் பற்றிய விளக்கங்களும் உள்ளன. முதலில் சேர்க்காது விடுபட்ட பெயர்களைக் குறித்து அநுபந்த அகராதி ஒன்றும் ஈற்றில் உள்ளது. தமிழ் நூல்களைக் கற்பார்க்கு இது ஓர் துணை நூலாகும். viii. 249/1908/IV.

P31, J:4

**இராமநாத முதலியார், பி.**

766. i. தமிழ் பெயரகராதி ; ii. கோல்டன் பிரஸ், மதராஸ் ; iii. 1909 ; iv. உ. ப. 1000+622 ; v. 25×17 செ. மீ. ; vi. ........ ; vii. காஞ்சிபுரம் வித்வான் இராமசாமி நாயுடு

முதலிய சில வித்வான்களின் உதவியால் தொகுக்கப்பெற்றது. பெயரகராதி, பொருளகராதி என்னும் இரு பெரும் பகுதிகள் இதில் உள. முந்திய அகராதிகளை விடவும அரிய நூல்களி லிருந்து எடுத்துச் சேர்த்த சொற்கள் இதில் பலவாம். இதில் இலக்கணப் பிரயோகம், இலக்கியப் பிரயோகம், சாஸ்திரப் பிரயோகம் முதலியன பொருந்தும் அளவாக விளக்கமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பழைய அகராதிகளில் காணப்படும் பதங்களுக்கு மேல் பதினாயிரத்து முந்நூற்று நாற்பத்தேழு புதிய பதங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. viii. 388/1909/IV.

P31, J:4

## 494.8114—நிகண்டு

**சிதம்பர கவிராயர், திருநெல்வேலி.**

767. i. உசித சூடாமணி நிகண்டு ; ii. சி. சாமிநாத பிள்ளை ; வித்தியாபாநு முத்திராசாலை, கோயமுத்தூர் ; iii. 1903 ; iv. செ.மூ.உ.எ. 192+5+131=328 ; v. 13×11 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. தேவ சரித்திரத் தொகுப்பு முதற் கொண்டு உதாரண வொழிவு என்ற உசிதப் பொருள் அலங்காரத் தொகுப்பு ஈறாக 18 தொகுப்புக்கள் உள்ளன. உவமானங்களை எடுத்துக் கூறுவதில் இந்நூல் இரத்தினச் சுருக்கம், உவமான சங்கிரகம் என்னும் நூல்களை விடவும் அதிகமாகக் கூறுகின்றது. viii. 101/1903/II.

P31, J:4

**மண்டல புருடர்**

768. i. சூடாமணி நிகண்டு : மூன்றும் பதிப்பு ; ii. ஆறுமுக நாவலர் அண்டு சாமிநாத பண்டிதர் ; சைவ வித்தியாநு பாலன யந்திரசாலை, சென்னைப் பட்டணம் ; iii. 1908 ; iv. செ.மூ.உ.எ. 1196 ; v. 20×13 செ. மீ. ; vi. ........ ; vii. சூடாமணி நிகண்டின் பன்னிரு தொகுதிகளும் உரையுடன் தரப்பட்டுள்ளன. உரை அவ்வப்பாட்டின் கீழ் அமையுமாறு செய்து பதிப்பித் துள்ளார். viii. 385/1908/III.

P31, D: 4x5,1

## 494.8115—இலக்கணம்—பாடப் புத்தகம்

**சண்முகம் பிள்ளை, கே. பி.**

769. i. ஹேண்டு புக் அப் டமில்—ஜெனரல் : முதற் பதிப்பு ; (A Hand Book of Tamil) ; ii. காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1901 ; iv. உ. ப 96 ; v. 18×13 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. நன்னூலின் இயல் அமைப்பு முறையில் பாகுபாடு செய்து எளிய நடையில் அமைந்த இலக்கண நூல். viii. 329/1902/I.

P31, J:2

**சுந்தரேச பாரதியார், எஸ்.**

770. i. நூதன பாலர் இலக்கணம் ; ii. லாங்மன்ஸ் கிரீன் அண்டு கோ. ; எஸ். பி. ஸி. கே. பிரஸ், சென்னை ; iii. 1903 ; iv. உ. ப. 25 ; v. 19×13 செ. மீ. ; vi. . . . . . . . . . . . ; vii. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், சொற்றொடரதிகாரம் என்னும் மூன்று பெரும் பகுதிகளில் இளைஞர்க்கு ஏற்ற வகையில் எளிய முறையில் இலக்கண விதிகளைத் தருவது ; எடுத்துக் காட்டுகளும் அப்பியாசங்களும் அமைந்துள்ளன. viii. 155/1903/IV.

P31, J:2

**செல்லப்ப சாஸ்திரியார், டி. வி.**

771. i. தமிழ் இளைஞர் இலக்கணம் ; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு கம்பெனியார், சென்னை; ஆனந்தா ஸ்டீம் பிரஸ், சென்னை; iii. 1906 ; iv. உ. ப. 31 ; v. 18×12 செ. மீ. ; vi. 0–1–6 ; vii. பிரைமரி வகுப்புகளுக்கு உரிய சிற்றிலக்கணம். எழுத்தியல், சொல்லியல், புணரியல், சொற்றொடரியல் என்னும் நான்கு இயல்கள் உள்ளன. பயிற்சி வினாக்களும் இடையிடையே அமைந்துள்ளன. viii. 108/1906/IV.

P31, J:2

772. i. தமிழ் சிறுவர் இலக்கணம் ; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு கோ, சென்னை ; iii. 1906 ; iv. உ. ப. 82 ; v. 18×12 செ. மீ. ; vi. 0–4–0 ; vii. முதல் மூன்று பாரங்கட்கு உரிய இலக்கண பாடங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. 337 விதிகளில் சுருக்கமாகக் கூறும் நூல். viii. 302/1907/I.

P31, J:2

773. i. தமிழ் சொற்றொடர் ஆக்கம் ; ii. டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு கோ, கபாலி பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ.ப. 206 ; v. 19×13 செ. மீ. ; vi. 0–8–0 ; vii. இந்நூல் இக்காலத்து மாணாக்கர்கட்கு மிகவும் உபயோகமானது. ஆங்கிலத்திலுள்ள பற்பல சொற்றொடராக்கப் புத்தகங்களின் போக்கை நன்கு கவனித்து, அவற்றுள் தமிழ் மொழிக்கு ஏற்ற பொருளை மேற்கொண்டு தெளிவாக விளக்கிக் காட்டப்பெற்றிருக்கிறது. வாக்கியங்களின் அமைப்பு தொடங்கி கடிதம் எழுதுதல் ஈறாக ஏழு அத்தியாயங்களாகப் பாகுபாடு செய்யப்பெற்றிருக்கிறது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் முதலில் மாதிரியும் பின்பு அப்பியாசமும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 96/1910/IV.

P31, J:2

774. i. **தமிழ் இலக்கணச் சுருக்கம் :** முதற் புத்தகம் ; ii. கிறிஸ்டியன் லிட்ரேச்சர் சொசைட்டி ; எஸ். பி. சி. கே. பிரஸ், வேப்பேரி, சென்னை ; iii. 1906 ; iv. உ. ப. 34 ; v. 16×11 செ. மீ. ; vi. .......... ; vii. 110 விதிகளில் தமிழ் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறுவது. அங்கங்கே அப்பியாசங்களும் அமைந்துள்ளன. viii. 30/1906/III.

**P31, J:2**

**தானியல் ஜேசுதாஸ், கரூர்.**

775. i. தமிழ் ஆசிரியன் அல்லது தமிழ் இலக்கணமும் பாஷையும் ; ii. டாக்டர் டிசில்வியாஸ் ஸ்டாண்டர்டு பிரஸ், திருச்சிருப்பள்ளி ; iii. 1901; iv. உ. ப. 248+38; v. 16×11 செ. மீ.; vi. 0-8-0; vii. 245 வினுக்களும் விடைகளுமாக இலக்கணம் அமைந்துள்ளது. பிற்சேர்க்கையாக லோயர் செகண்டரி பரீட்சைக் கேள்விகளும் கொடுக்கப்பட்டுள்ளன. viii. 101/1903/III.

**P31, J:2**

**திருச்சிற்றம்பலம் பிள்ளை, .ச, கோயமுத்தூர்.**

776. i. பாலபோதினி ; ii. க. சுப்பிரமணிய முதலியார் ; வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடம் ; iii. 1900 ; iv. உ. ப. 84 ; v. 14×10 செ. மீ. ; vi. .......... ; vii. சொல்லதிகாரம், எழுத்ததிகாரம் என்னும் இரண்டு அதிகாரங்களில் தமிழ் மொழி இலக்கணம் சுருக்கமாகக் கூறுவது. பிரைமரிப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக இயற்றப்பெற்றது. viii. 11/1901/II.

**P31, J:2**

**நமச்சிவாய முதலியார், கா.**

777. i. சொற்றொடர் ஆக்கம் ; ii. வி. குமாரசாமி நாயுடு & ஸன்ஸ், சென்னை ; காக்ஸ்டன் பிரஸ், சென்னை ; iii. 1910 ; iv. உ. ப. 112 ; v. 18×11 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. எலிமெண்டரி, செகண்டரி பாடசாலைகளுக்கு உபயோகமாகும்படி இயற்றப் பெற்றது. வாக்கிய அமைதிகள், நிறுத்துக் குறிகள், கதை எழுதல், கதைப் பெருக்கம், விவரம் எழுதல், கடிதம் எழுதல் ஆகியவை பற்றித் தனிதனி அத்தியாயங்கள் உள. இவற்றைப் போதித்தற்குத் துணை செய்யும் குறிப்புக்கள் இறுதியில் தரப்பட்டுள்ளன. viii. 474/1910/I.

**P31, J:2**

**மகாலிங்க ஐயர்**

778. i. இலக்கணச் சுருக்கம் : இரண்டாம் பதிப்பு ; ii. சூரிய நாராயண சாஸ்திரி, சென்னை ; தாம்ஸன் கம்பெனி, மினர்வா அச்சுக்கூடம் ; iii. 1901 ; iv. உ. ப. 108 ; v. 19×13 செ.மீ.; vi. 0–2–0 ; vii. தமிழ் இலக்கணம் பற்றிச் சுருங்கச் சொல்லி

விளங்க வைத்தலாக உள்ளது. எழுத்து, சொல் பற்றிய இலக்கணங்களோடு யாப்புப் பற்றிய இலக்கணங்களும் உள்ளன. viii. 207/1901/II.

**P31, J:2**

**முத்துசாமிப் பிள்ளை, பி. எஸ். டி.**

779. i. இலக்கணப் பிரயோக விளக்கம் : முதற் பதிப்பு ; ii. கே.டி. பால்; மினர்வா ஸ்டீம் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை ; iii. 1905; iv. உ. ப. 8+107 ; v. 22×14 செ. மீ. ; vi. 0–6–0 ; vii. இதனுள் வாக்கியச் சேதன விலக்கணம், சொல்லிலக்கணம், சொன்முடிப்பிலக்கணம், பதப் புணர்ச்சியிலக்கணம், பொருட் புணர்ச்சியிலக்கணம், பகுபத முடிபிலக்கணம், வினைவிகற்ப விலக்கணம், எழுத்திலக்கணம் முதலிய எண்வகை இலக்கணங்கள் அடங்கியிருக்கின்றன. அனுபந்தப் பகுதியில் வல்லினம் மிகுமிடங்கள் வல்லினம் மிகா இடங்கள், ரகர றகர பேதங்கள், ல, ள, ழ எழுத்துக்கள் மாறுதலால் வரும் பேதங்கள் வட மொழிப் பதங்களின் சந்தி இயல்பு ஆகியவை விளக்கப் பெற்றுள்ளன. viii. 114/1905/I.

**P31, J:2**

**முருகேச முதலியார், மையூர்.**

780. i. இளைஞர் இலக்கண வினு விடை : இரண்டாம் பதிப்பு ; ii. எம். எல். வி. பிரஸ், சென்னை ; iii. 1902 ; iv. உ. ப. 39 ; v. 14×10 செ. மீ.; vi. 0–1–0 ; vii. பிரைமெரி பாடசாலைகளில் கல்வி கற்கும் 3-வது, 4–வது வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றது. ஒரு வாக்கியத்திலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள், பெயர்ச் சொல், வினைச்சொற்களைத் தமிழில் மிகத் தெளிவாய்ச் சிறுவர்கள் அறிந்து கொள்ளும்படி மிகச் சுலப மான நடையில் இயற்றப்பட்ட இளைஞர் இலக்கண வினுவிடை. viii. 145/1902/I.

**P31, J:2**

781. i. இளைஞர் இலக்கண வினு விடை : மூன்றும் பதிப்பு ; ii. மினர்வா பிரஸ், சென்னை ; iii. 1903 ; iv. உ. ப. 40 ; v. 13×10 செ மீ. ; vi. 0–1–0; vii. மூன்றுவது நான்காவது வகுப்பு மாணவர்களுக்காக இயற்றப் பெற்றது. அப்பியாசங்களும் தரப்பட்டுள்ளன. viii. 53/1903/II.

**P31, J:2**

**ராமஸ்வாமி அய்யங்கார், எஸ். வி.**

782. i. தமிழ் இலக்கண நூலாதாரம் ; ii. இந்தியன் பிரிண்டர்ஸ்; பிரிசிடன்ஸி பிரஸ், சென்னை ; iii. 1905 ; iv. உ. ப. 72 ; v. 18×12 செ. மீ. ; vi. 0–3–0 ; vii. பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வகையில் எழுதப்பெற்ற சிற்றிலக்கண நூல். viii. 141/1905/II.

**P31, J:2**

**வாசுதேவ முதலியார், பி.**

783. i. தமிழ் இலக்கணம் (The Lower Secondary Tamil Grammar with excercises); ii. வைஜயந்தி பிரஸ், சென்னை; iii. 1902; iv. உ. ப. 194; v. 16×12 செ. மீ.; vi. 0–4–0; vii. லோயர் செகண்டரிப் பாடசாலைகளின் உபயோகத்திற்காக இயற்றப் பெற்றது. எழுத்து, சொல் பற்றிய இலக்கணங்கள் எளிய முறையில் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. viii. 130/1902/I.
P31, J:2

**வேங்கடசாமி ஐயர், மோசூர்.**

784. i. இரண்டாம் இலக்கணம்: முதற் பதிப்பு; ii. மாக்மில்லன் கம்பெனி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1903; iv. உ.ப. 144; v. 18×13 செ. மீ.; vi. 0–4–0; vii. அப்பர் பிரைமரி பாடசாலைகளுக்காக இயற்றப் பெற்றது. பற்பல பயிற்சிகளும் எடுத்துக் காட்டுகளும் உள்ளன. எளிய முறையில் இலக்கண பாடத்தை விளக்கி உரைப்பது. viii. 314/1903/III.
P31, J:2

785. i. தமிழ் இலக்கணம்: முதற் பதிப்பு; ii. மேக்மில்லன் கம்பெனி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1906; iv. உ. ப. 256; v. 18×12 செ. மீ.; vi. ..............; vii. லோயர் செகண்டரி பாடசாலைகளின் உபயோகத்திற்காக இயற்றப் பெற்றது. எடுத்துக் காட்டுக்களின் மூலமாக இலக்கணச் செய்திகளை விளக்குவது. viii. 246/1908/I.
P31, J:2

786. i. விகுதி விளக்கம்; ii. எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1909; iv. உ. ப. 32; v..........; vi. 0–1–6; vii. பெயர் விகுதிகளையும் வினைச் சொற்களின் விகுதிகளையும் அகராதி வரிசையில் உதாரணங்களுடன் விளக்கும் நூல். viii. 637/1909/IV.
P 31, J:2

# 494·8118 தமிழ் கற்க உதவும் நூல்கள்

## 494·81186—பாடப் புத்தகங்கள்

**அப்துல் காதர் சாகிபு, கு. வாணியம்பாடி—தொ. து.**

787. i. ஷாகிரின் நூதன அரிச்சுவடி என்னும் முதற் பாடம்; ii. எம். அப்துல் காதர் சாயிபு; முகம்மதியா பிரஸ், வாணியம்பாடி; iii. 1910; iv. உ. ப. 80; v. 14×11 செ. மீ.; vi. 0–2–0; vii. தமிழ், அரபி, பார்ஸி, உருது வாக்கியங்கள் இதில் உள்ளன. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து எழுத்து மொழிகளர்த்தம், நீதி மொழிகளின் அர்த்தம், இக்மின்

ஹகிம் தமது பிள்ளைகளுக்குச் செய்த நஸீஹத், உருது, பார்ஸி, அரபி முனாஜாத்துக்கள் முதலியன அடங்கியுள்ளன. இதை முஸ்லீமான ஜனங்கள் ஒவ்வொருவரும் ஜேபில் வைத்துக் கொண்டு முடிவு வரையில் பார்ப்பது அவசியம் என்று முகப்பில் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். viii. 476/1910/IV.

P31,9

788. i. அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்; ii....... ; iii. 1904; iv. உ.ப. 173—270; v. 22×14 செ.மீ.; vi. .. .. ..........; vii. அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம், புலவர் புராணத்தில் வில்லிபுத்தூரார் பிள்ளைப் பெருமாளைய்யங்கார் சருக்கங்கள் ஆகியவற்றிற்கு உரை நூல். viii. 207/1904 /III.

P31,9

**அனவரத விநாயகம் பிள்ளை, எஸ்.**

789. i. தமிழ்ப் பாடப் புத்தகம்; ii. சி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ், சென்னை; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1910; iv. உ. ப.+செ. மூ ப. 141+40; v. 18×12 செ. மீ.; vi. 0–8–0; vii. இது பள்ளிப் பிள்ளைகளுக்கான பாடப் புத்தகம். வாசக பாடத் திரட்டு என்றும், செய்யுட் பாடத் திரட்டு என்றும் இரு பகுதியாக உள்ளது. செய்யுட்களுக்கு அரும்பத உரையும் தரப் பெற்றிருக்கிறது. வசன பாடங்களில் முதல் இருபதும் ஜன விநோதினிப் பத்திரிகையைத் தழுவி எழுதியனவாகும். எஞ்சிய இறுதிப் பாடங்கள் நான்கும் தொகுப்பாசிரியர் அனவரத விநாயகம் பிள்ளையால் எழுதப்பெற்றனவாகும். viii. 782/1910/IV.

P31, 9

790. i. ரீடிங்ஸ் இன் தமிழ்; ii. ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்; காக்ஸ்டன் பிரஸ், சென்னை; iii. 1910; iv. உ. ப.+ செ. மூ. ப. 124; v. 19×13 செ. மீ.; vi. 0—6—0; vii. பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற வாசகத்திரட்டும் செய்யுள் திரட்டும் அடங்கிய நூல். வாசக பாடங்கள் ஜன விநோதினி, மூன்றும் பால பாடம், ஓர் அணு வாசக வரிசை, கா. நமச்சிவாய முதலியார் பாடப் புத்தகங்கள், சிறந்த ஆங்கிலேயர்கள் என்னும் புத்தகங்களிலிருந்து எடுக்கப் பெற்றனவாகும். செய்யுட் பகுதியில் ஔவையார் பாடல்கள், திருக்குறள், நாலடியார், தாயுமானவர் பாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 25 வாசக பாடங்களும் 15 செய்யுட் பாடங்களும் இடம்பெற்றுள்ளன. viii. 57/1910/IV.

P31,9

791. i. **ஆறும் வாசக புத்தகம்**: நான்காம் பதிப்பு; ii. கிறிஸ்டியன் லிட்டரேச்சர் சொஸைட்டி; எஸ். பி. சி. கே. பிரஸ், சென்னை; iii. 1907; iv. செ. மூ. உ. ப. 108; v. 19×13 செ. மீ.; vi. 0–3–0; vii. இரண்டாம் பாரத்திற்கு உரியது. 37 உரை நடைப் பாடங்கள் நளச் சக்கரவர்த்தியின் சரித்திரம் என்னும் உரை நடை நூலிலிருந்து ஒரு சிறு பகுதி சேர்க்கப்பட்டிருக்கிறது. நீதி வெண்பா, நீதி நெறி விளககம், அற நெறிச் சாரம் நூல்களிலிருந்து 69 பாடல்கள் திரட்டப்பட்டுள்ளன. viii. 258/1908/IV.

P31,9

**ஆறுமுக நாவலர்**

